# கார்த்திகேசு சிவத்தம்பி

## இலக்கியமும் வாழ்க்கையும்


நேர்காணல்

தி. ஞானசேகரன்



தமிழினி பதிப்பகம்

112, Bickley Street,

# கார்த்திகேசு சிவத்தம்பி
## இலக்கியமும் வாழ்க்கையும்


| | | |
|---|---|---|
| நேர்காணல் | : | தி. ஞானசேகரன் |
| வெளியீடு | : | தமிழினி பதிப்பகம் |
| முதற் பதிப்பு | : | ஆகஸ்ட் 2005 |
| உரிமை | : | ஆசிரியர், 'ஞானம்' சஞ்சிகை |
| பக்கங்கள் | : | viii + 160 |
| அச்சுப்பதிப்பு | : | யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்,<br>கொழும்பு 13, இலங்கை.<br>தொலைபேசி : +94 11 2330195, 2478133. |
| விலை | : | ரூபா 250/= |
| விநியோகம் | : | பூபாலசிங்கம் புத்தகசாலை<br>இல. 202, 340, செட்டியார் தெரு,<br>கொழும்பு 11, இலங்கை. |


# Karthigesu Sivathamby
## Literature and Life


| | | |
|---|---|---|
| Interview by | : | T. Gnanasekaran |
| Published by | : | Thamilini Pathipakam<br>112, Bickley Street,<br>London SW 17 9NE<br>U.K.<br>TEL: 0044 208 6824494<br>FAX: 0044 208 6829922 |
| First Edition | : | August 2005 |
| Copyrights | : | Editor, Gnanam Magazine |
| Pages | : | viii + 160 |
| Printers | : | Unie Arts (Pvt) Ltd.,<br>48B, Bloemendhal Road,<br>Colombo 13, Sri Lanka.<br>Tel: +94 11 2330195. |
| Price | : | Rs. 250/= |
| Distribution by | : | Poobalasingham Book Depot<br>No. 202, 340, Sea Street,<br>Colombo 11, Sri Lanka. |

# பதிப்புரை

நம்மவர் நூல்கள் நம்மவராலேயே வெளியிடப்படட வேண்டும் என்ற ஒரு பிடிவாத உணர்வுடன் ஆரம்பிக்கப்பட்டதுதான் 'தமிழினி பதிப்பகம்'. இதில் இலாப நோக்கம் எள்ளளவும் இல்லை.

2004 மார்கழியில் அத்திவாரமிடப்பட்ட இந்த நோக்கில் அதே மார்கழியில் ஏற்பட்ட ஆழிப்பேரலையின் அழிவுகளுடன் கூடிய சம்பவங்களைக் கோவையாக்கி "கடல் அனர்த்தம்" நூல் தமிழினி பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. உலகிலேயே 26.12.2004 "கடல் அனர்த்தம்" சம்மந்தமாக வெளிவந்த முதலாவது நூல் என்ற பெருமையும் இந்த நூலுக்கே உண்டு.

இவ்வகையில் இரண்டாவதாக தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தன் பெரும் பங்கினை இன்றும் வகித்துக் கொண்டிருப்பவரும், தமிழ் பேராசிரியருமான திரு.கா. சிவத்தம்பி அவர்களுடைய நேர்காணலை பதிப்பிக்கின்ற அரும் பெரும் பாக்கியமும் கிடைத்துள்ள காரணத்தால் அரும்பிலேயே தனது எதிர் காலத்தை தமிழினி பதிப்பகம் ஆழக்கால் ஊன்றி நிற்கும் என்ற நம்பிக்கை ஒளிக்கீற்று தென்படுகின்றது.

மூன்றாவது நூலாக இலங்கைத் தமிழ் முஸ்லீம் அறிஞர்கள் சம்மந்தமான நூல் வெளிவரவுள்ளது என்ற நல்ல செய்தியையும் தெரிவிக்கின்றோம்.

ஈழத் தமிழர்களால் எதுதான் முடியாது? என்பதனை உறுதிப் படுத்தவே எனது இந்தக் கன்னி முயற்சி.

பலர் பல்வேறு வகையான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார்கள். கருத்துக்களை தெரிவிப்பதுடன் நின்று விடுகின்றனர். அவர்களுக்குள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் எனக்கு விளங்குகின்றது.

அவர்கள் எனக்கு நூல் விநியோக விடயத்தில் உதவினால் அவர்களது நோக்கமும் நிறைவேறும் என்று திடமாக நம்புகின்றேன்.

இது தவிர, 'ஞானம்' சஞ்சிகை ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரன், உதவிக்கரம் நீட்ட வந்த தம்பி ஸ்ரீதரசிங் பூபாலசிங்கம், யுனி ஆர்ட்ஸ் நிறுவன அதிபர் பொ. விமலேந்திரன் ஆகியோருக்கும் இந்நூலின் அட்டையை அலங்கரிக்கும் பேராசிரியரின் நிழற்படத்தைத் தந்துதவிய தினக்குரல் பிரதம ஆசிரியர் திரு. வீ. தனபாலசிங்கம் அவர்களுக்கும் என் இதய நன்றிகள்.

"இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்று கூறி உங்களிடமிருந்து விடைபெறும்

அன்பன்
*"தமிழினி" குலேந்திரன்*

தமிழினி பதிப்பகம்
**06.08.2003**

# முன்னுரை

ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையை 2000 ஆம் ஆண்டு ஜூன் முதல் வெளியிட்டு வருகிறோம். இது ஒரு சிறுசஞ்சிகை என்ற வகையில் இதில் வெளிவருகின்ற விடயங்கள் யாவும் காத்திரமானவையாகவும் கலை இலக்கிய விடயங்களை வெளிக்கொணர்பவையாகவும் அமைதல் வேண்டும். இன்றைய வெகுசனச் சஞ்சிகைகளின் ஆக்கிரமிப்புச் சூழலில், காத்திரமான இலக்கியத் தரத்தினைப் பேணுவதற்கு பேரறிஞர்களினதும் மூத்த கலை இலக்கிய வாதிகளினதும் நேர்காணல்களைப் பெற்று அவற்றின் மூலம் அவர்களது கருத்துக்களையும் அறிவுரைகளையும் அநுபவங்களையும் பல்வேறுபட்ட கலை இலக்கியச் சிந்தனைகளையும் வாசகர்களுக்கு அளித்தல் இதற்கான ஒரு வழிமுறையாக அமைகிறது.

கடந்த ஐந்து வருட காலத்தில் ஞானம் சஞ்சிகையின் இரண்டொரு இதழ்களைத் தவிர ஏனைய இதழ்கள் யாவற்றிலும் இத்தகைய நேர்காணல்கள் இடம்பெற்றுள்ளன. கவிஞர்கள், கதாசிரியர்கள், புலம்பெயர்ந்த படைப்பாளிகள், பெண்நிலை வாதிகள், இதழாசிரியர்கள், கலைஞர்கள், பேராசிரியர்கள் எனப் பலதிறத்தினரது நேர்காணல்கள் ஞானத்தில் இடம்பெற்று வந்துள்ளன. இந்த நேர்காணல்கள், மாறுபட்ட இலக்கியக் கருத்துநிலை கொண்டோரையும் அவரவர் நிலைநின்று தத்தமது கருத்துக்களை எடுத்துரைப்பதற்கு வழிசமைத்தன. ஒவ்வொருவரும் தத்தமது கருத்துக்களை முழுமையாக வெளிக்கொணரும் வண்ணம் வினாக்கள் தொடுக்கப்பட்டன. இந்த நேர்காணல்கள் காணப்பட்டோரின் ஆளுமைகள் முழுமையாக வெளிக்கொணரச் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

சிலரது நேர்காணல்கள் பல வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தின. அவற்றையும் ஞானத்தில் வெளியிட்டோம். பல்வேறு கருத்து நிலைகளும் வெளிவர ஊக்குவித்தோம். பல நேர்காணல்கள் இலக்கிய ஆர்வலர்களுக்கும் இலக்கிய மாணவர்களுக்கும் பயன்மிக்கதாக அமைந்தன என்பதை வாசகர் கடிதங்கள் மூலம் அறியக் கூடியதாக இருந்தது.

இந்த நேர்காணல்கள் அநேகமாக ஒரு இதழில் அல்லது இரண்டு இதழ்களில் வெளிவரக்கூடியவையாக அமைந்தன.

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களை நான் நேர்காணலுக்கு அணுகியபோதும் இரண்டு அல்லது மூன்று இதழ்களில் வெளிவரக் கூடிய

முறையிலேயே அவரது நேர்காணலை அமைப்பது என எண்ணியிருந்தேன். ஆனால் நேர்காணலை ஆரம்பித்து நடத்திக் கொண்டிருந்த போதுதான் அறிவுச்சுரங்கம் ஒன்றை நான் அகழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பதை என்னால் உணரமுடிந்தது. கூடியவரை அச்சுரங்கத்திலிருந்து அதிகமாகப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் என்னுள் துளிர்த்தது.

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி இன்றைய ஈழத்து இலக்கியப் புலத்தின் முன்னணி அறிஞர். பழந்தமிழ் இலக்கணம், இலக்கியம், நவீன இலக்கியம், தமிழ் நாடகம், இலக்கிய வரலாறு, தமிழர் பண்பாடு, அரசியல், தொடர்பாடல் ஆகிய துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டவர். முற்போக்கு இயக்கத்திலும் அதன் செயற்பாடுகளிலும் பெரும் பங்காற்றியவர். தலை சிறந்த விமர்சகர். தமிழ்நாடு அரசினால் திரு. வி. கல்யாணசுந்தரனார் விருது அளிக்கப்பட்டுக் கௌரவம் பெற்றவர். வித்தியோதயப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்.

அவரிடம் நீண்டதொரு நேர்காணலைப் பெற்று ஞானம் வாசகர்களுக்கு அளிக்க வேண்டும் என்ற எனது விருப்பத்தைப் பேராசிரியரிடம் தயக்கத்துடன் தெரிவித்தேன். அவர் அப்போது சுகவீனமுற்று வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அந்நிலையிலும் பெரும் மனதுடன் எனது வேண்டுகோளுக்கு அவர் சம்மதித்தார். இந்த நேர்காணலைப் பெறுவதற்காக அவரது இல்லத்திற்கு நான் பலதடவை செல்ல வேண்டியிருந்தது. அவ்வேளைகளிலெல்லாம் அவர் எனக்கு நேரம் ஒதுக்கித் தந்து என்னுடன் பெரிதும் ஒத்துழைத்தார்.

பேராசிரியரிடமிருந்து இந்த நேர்காணல் மூலம் வெளிக்கொணரப்படும் விடயங்கள் கருத்துக்கோவையாக இருந்து விடாது அவரது மனவுணர்வுகள் வெளிக் கொணரப்படவேண்டும் என்பதில் நான் கவனஞ்செலுத்தினேன். அவரது அகத்தரிசனத்தைத் துல்லியமாக வெளிக்கொணர வேண்டும் என்பதிலே கண்ணுங்கருத்துமாக இருந்தேன். இதன்காரணமாக, எதிர்வாதங்களை முன்வைத்தல், ஐயங்களைக் கிளப்புதல், உணர்வுகளைச் சீண்டுதல் போன்ற சில சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அப்போதெல்லாம் பேராசிரியர் மிகவும் நிதானமாகவும் பொறுமையாகவும் மனந்திறந்து பேசியிருக்கிறார்.

பேராசிரியர் ஞானத்துக்கு அளித்த இந்த நேர்காணல் தனித்துவமானது. முன்னர் வெளிவந்த அவரது நேர்காணல்களிலிருந்து வேறுபட்டது. வேறு நேர்காணல்களில் சொல்லியிராத பலவிடயங்களை இந்த நேர்காணலிலே

பேராசிரியர் சொல்லியிருக்கிறார். அவரது வாழ்க்கைப் புத்தகத்தில் இதுவரை திறக்கப்படாத பக்கங்கள் சில இந்நேர்காணலிலே திறக்கப்பட்டிருக்கின்றன. பேராசிரியரின் இளமைப்பருவம், அவரை உருவாக்கிய பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள், பல்கலைக்கழகங்களிலும் வெளிநாடுகளிலும் அவர் பெற்ற அனுபவங்கள், முற்போக்கு இயக்கத்தில் அவரது செல்வாக்கு, விமர்சன முறையில் அவர் ஏற்படுத்திய மாற்றங்கள், ஊடகத்துறையிலும் கலைத்துறையிலும் அவரது பங்களிப்பு, பிற்பட்ட காலத்தில் முற்போக்கு நிலையில் அவரில் ஏற்பட்ட கருத்து மாற்றங்களுக்குரிய காரணங்கள் இப்படிப் பல விடயங்கள் இந்நேர்காணலில் இடம்பெற்றுள்ளன. பேராசிரியரின் அறிவுப் புலத்தின் ஆழத்தையும் பரந்த தேடல் அனுபவத்தையும் இந்த நேர்காணலில் தரிசிக்கலாம். பேராசிரியரது வாழ்க்கையின் பல பக்கங்களைத் தொட்டுச் செல்லும் இந்நேர்காணல் ஓரளவுக்கு அவரது வாழ்க்கைச் சரிதம் போன்றும் அமைந்துள்ளது எனலாம்.

ஈழத்து நவீன இலக்கியத் துறையின் பிதாமகர்களில் ஒருவராக விளங்கும் பேராசிரியர், கடந்த ஐம்பது வருட காலப்பகுதியில் ஈழத்து இலக்கியப் போக்கில் நிகழ்ந்த மாற்றங்கள், வளர்ச்சிப் போக்குகள், எழுச்சிகள், முரண்பாடுகள் என்பவற்றையெல்லாம் அநுபவ அடிப்படையில் இங்கே வெளிப்படுத்தியிருக்கிறார். அவரது சிந்தனை நேற்று, இன்று, நாளை என முக்காலத்தையும் ஊடறுத்துச் செல்கிறது. இவையாவும் நமக்கு வரலாற்றுப் பதிவுகளாகின்றன.

இந்த நேர்காணல் ஞானத்தில் தொடராக வெளிவந்தபோது பல்கலைக்கழக மட்டத்திலும் இலக்கிய ஆர்வலர்கள் மட்டத்திலும் பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்த நேர்காணல் தொடரை நூல்வடிவில் வெளிக்கொணரவேண்டும் எனப் பலர் ஆலோசனை வழங்கினர்.

நமது இலக்கியப் படைப்பாளிகளுக்கும், ஆர்வலர்களுக்கும், பல்கலைக்கழகத்தினருக்கும் வழிகாட்டியாக அமையும் தகைமை பெற்ற இந்த நேர்காணலை தமிழினி பதிப்பகத்தினர் நூல்வடிவில் வெளிக் கொணர்வது ஞானத்திற்குப் பெருமை சேர்ப்பதாக அமைகிறது.

***தி. ஞானசேகரன்***
**06.08.2005**

3-B, 46வது ஒழுங்கை,
கொழும்பு – 06.
தொலைபேசி – 011–2586013

# பேராசிரியரின் குறிப்புரை

நண்பர் திரு. ஞானசேகரன் அவர்கள் தாம் நடத்தும் ஞானம் சஞ்சிகைக்காக என்னுடன் நடத்திய நேர்காணல் இன்று நூல் உருவாக வெளிவருவதற்கு நான் அவருக்கு கடமைப்பட்டுள்ளேன். 1970கள் முதல் பலதடவைகள் பல சஞ்சிகைகளிலும் செய்தித்தாள்களிலும் இலக்கியம், சமூகம், அரசியல் பற்றிய விடயங்கள் தொடர்பாக நேர்காணல்கள் மூலம் எனது கருத்துக்களைக் கூறுவதற்கான தேவையும் வாய்ப்பும் இருந்து வந்துள்ளன. அவற்றின் ஒரு தொகுதியாக 'சிவத்தம்பியின் நேர்காணல்கள்' என மக்கள் பதிப்பகம் பொறுப்பாளர் முனைவர் மே. து. ராசுகுமார் ஒரு நூலைக் கொண்டுவந்துள்ளார்.

இந்த நேர்காணல் சற்று வித்தியாசப்பட்டது என்று கருதுகிறேன். இப்பொழுது பின்னோக்கிப் பார்க்கும் பொழுது இந்த நேர்காணலானது என்னுடைய இலக்கியப் பரிச்சயம், இலக்கிய ஈடுபாடு, ஆர்வம், கலை உலகத் தொடர்புகள் வளர்ந்த முறைமையினையும் அந்த வளர்நிலைகளில் செய்யக்கூடியனவாக இருந்த சில விடயங்கள் பற்றியும் இவற்றுக்கு மேலாக இன்று ஏறத்தாழ 50 வருட கால இலக்கிய ஈடுபாட்டுக்குப் பின்னர் என்னுடைய அறிவுத் துணிவின்படி, எண்ணத் துணிவின்படி ஏற்பட்டுள்ள என்னுடைய கருத்து மாற்றங்கள் சிலவற்றையும் இதிலே பதிவு செய்துள்ளேன். அந்த அளவில் இது ஒரு முக்கியமான இலக்கிய ஆவணமாக என்னைப் பொறுத்தவரையில் அமைகிறது என்பதே என்னுடைய அபிப்பிராயமாகும். இதனுள் என்னுடைய இளமைக்கால வளர்ச்சியினையும் அதற்கான பின்புலத்தையும் கூட காணலாம் என்று கருதுகிறேன். ஈழத்து இலக்கிய பரப்பில் நமது தலைமுறையினர் ஈடுபட்டிருந்த காலத்திற்குரிய சமூக புலமைப் பின்புலங்களை இந்த நேர்காணலில் வெளிக்கொணர ஓரளவுக்காவது உதவியிருப்பின் அந்த நன்றி திரு. ஞானசேகரன் அவர்களைச் சென்றடைதல் வேண்டும். இந்த நேர்காணலைச் செய்து இதிலே பெறப்பட்ட விடயங்களை வெளிக்கொணர்வதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொண்ட ஞானம் சஞ்சிகைக்கும் அதன் ஆசிரியருக்கும் என்னுடைய நன்றி உரித்தாகுக.

***கார்த்திகேசு சிவத்தம்பி***

**04.08.2005**

# 1

***தி.ஞா: தமிழ் இலக்கியம், சமூகம், பண்பாடு, தமிழ் இலக்கிய விமர்சனம் ஆகிய பல்வேறு துறைகளில் பணியாற்றியுள்ளீர்கள். இந்தப் பின்னணியில் நீங்கள் உங்களை எவ்வாறு இனங்காண்கிறீர்கள்?***

**கா.சி :** என்னுடைய விசேட ஆய்வுத்துறைகளென நீங்கள் சொன்னவற்றை உள்ளடக்கி நான் இவற்றை நான்காகப் பிரிப்பது வழக்கம். 1)தமிழரின் சமூக இலக்கிய வரலாறு. 2) தமிழரிடையே பண்பாடும் தொடர்பாடலும். 3) தமிழ் நாடகம் 4) இலக்கிய விமர்சனம்.

உண்மையில் இவை எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கக்கூடிய ஒரு நிலைமை வந்ததற்குக் காரணம், எனக்குத் தமிழ் இலக்கியத்திலும் தமிழ் சமூகத்திலும், தமிழ் சமூக வரலாற்றிலும் அதனால் அதனுடைய பண்பாட்டிலும் உள்ள ஈடுபாடுதான். ஒரு சமூகத்தைப் பார்க்கும்போது அதனுடைய பண்பாட்டினை எவ்வாறு புரிந்துகொள்ளவேண்டும் என்ற நோக்கினை ஒட்டுமொத்தமாக முற்றுமுழுதாகப் பார்க்கவேண்டுமென்பது என்னுடைய மார்க்ஸிய தாடனம் காரணமாக, மார்க்ஸியத்தில் இருந்த ஆர்வம் காரணமாக அவ்வாறு பார்க்கின்ற ஒரு தன்மையொன்று ஏற்பட்டது. சமூக நிலைகொண்டு அதனுடைய அடித்தள நிலையிலிருந்து பார்க்கிற தன்மை வளர்ந்தது என்று கருதுகிறேன். இதனால் உண்மையில் என்னுடைய ஆய்வு ஈடுபாடு என்று சொல்கிறவற்றில் இந்த நான்கையும் நான் உள்ளடக்குவேன்.

தி.ஞா : ***முதலில் உங்களது நாடகத்துறை ஈடுபாடு பற்றிக் கூறுங்கள்?***

**கா.சி. :** நாடகம் எனக்கு நீண்டகாலமாக என்னுடைய ஒரு ஈடுபாட்டுத் துறையாக இருந்தது. அதில் நான் இரண்டு நிலைகளில் பங்கு பற்றியுள்ளேன். ஒன்று நடிகனாக - அந்த நாடகம் சம்பந்தப்பட்ட கலைஞனாக. பிரதானமாக நடிகனாக மேடையில், வானொலியில் நான் நடித்திருக்கிறேன். அதனைத் தொடர்ந்து நான் ஒரு நாடக நெறியாளனாகத் தொழிற்பட்டிருக்கிறேன். அது பின்னர், அதனூடாக நாடகத்தின் வரலாறுபற்றி பார்க்கிற ஒரு தன்மையொன்று வந்தது. தமிழ் நாடகவரலாறு ஒரு சுவாரஸ்யமான விடயம். தமிழ் நாடக வரலாறுபற்றி நிறையப் பேசப்படுகிறது. ஆனால் பண்டைய காலத்து ஒரு தமிழ் நாடகமும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஏறத்தாழ 13ஆம், 14ஆம் நூற்றாண்டுவரையில் நாடகத்தைப்பற்றிப் பேசுகிறார்கள்; நாடகம் கிடைக்க வில்லை. இதற்கான ஆய்வு செய்யப்புறப்பட்டபோது அதிஷ்டவசமாக, மிக மிக அதிஷ்டவசமாக பேராசிரியர் ஜோர்ஜ் தோம்சனின் கீழ் பணிசெய்கின்ற ஒரு பெரிய வாய்ப்புக் கிடைத்தது. இந்த நாடகம் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன - நாடகத்தைக் காணவில்லை என்பதற்கான காரணத்தைக் காண முற்பட்டபொழுது, அந்தச் சமூகத்தில் ஏதோ பிரச்சினை இருப்பது தெரிந்தது. ஏனென்றால் கிரேக்க சமூகத்தில் அதனுடைய ஆரம்ப காலத்திலேயே, நாடகம் இருக்கிறது - அந்த நாடகங்களைப் பற்றிப் பேசுகிறார்கள். அந்த அளவுக்கு நாடகங்களும் இருக்கின்றன. தமிழுக்கு மாத்திரம் ஏன் இல்லை என்கிற பொழுது, அது கிரேக்க சமூகத்திற்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் உள்ள வளர்ச்சிக் கட்டத்தில் உள்ள வித்தியாசம். இன்னுமொரு சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால் அண்மைக்காலத்தில், குறிப்பாக 19ம்,20ஆம் நூற்றாண்டில் நாடகம் வளர்ந்தமைக்கான சான்றுகள் தமிழ் நாட்டில் நிறைய உள்ளன. தி.மு.க.வின் நாடகங்கள், அவற்றின் பின்னர் வந்தவை. சுதந்திரப் போராட்ட காலத்தில் இருந்த நாடகங்கள்.

அப்போ, இந்த சமூகத்தில் ஏதோ பிரச்சினை இருக்கிறது என்று ஆராயப்புறப்பட்டு அந்த சமூகத்துக்கும் கலைக்கும் உள்ள தொடர்பு எத்தகையது? என்பதுபற்றி ஆராயவேண்டிய தேவை ஏற்பட்டது. அந்தத் தேவை காரணமாக, அதனூடாகப் பார்க்கும்போது உண்மையில், நான் Development of Tamil drama up to the 6th century அல்லது 9th century என்று எழுத ஆரம்பித்த நான், கடைசியில் Drama in ancient Tamil society என்ற நிலைக்கு மாறி, அந்தப் பழைய தமிழ் சமுதாயத்தில் எவை எவை இருந்தன? ஏன் அவை நாடகங்களைப் பேணவில்லை என்கிற விஷயத்தைப்பற்றி ஆராய்ந்து, கடைசியில் படிப்படியாக ஒரு நாடகம்

பற்றிய ஆய்வும் ஈடுபாடும் அதே நேரத்தில் சமூக வரலாறு பற்றிய ஈடுபாடும் எனக்கு வந்தன.

***தி.ஞா : நாடகம் பற்றிய ஆய்வில் ஈடுபட்டபோது உங்களுக்குச் சமூக வரலாறுபற்றிய ஆய்வில் ஈடுபடவேண்டிய தேவை ஏற்பட்டது என்றா கூறுகின்றீர்கள்?***

**கா.சி :** அந்த சமூக வரலாறு பற்றிய ஈடுபாடு எனக்கு ஒரு மிக மிக முக்கியமான விடயமாக வந்தது. ஏனென்றால் உண்மையில் இன்னும்தான் தமிழ் மக்களுக்கு ஒரு சமூக வரலாறு எழுதப்படவில்லை. நான் இப்படிச் சொல்வதைச் சிலர் தவறாக எண்ணக்கூடும். பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி, கே.கே.பிள்ளை போன்றவர்கள் எல்லோரும் வரலாறு எழுதியிருக்கிறார்கள். அவர்கள் தமது வரலாற்று நூல்களில் Social history of Tamils என்று எழுதியிருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்றால், சமூகத்தில் காணப்பட்ட சடங்குகள், விளையாட்டுக்கள் பல்வேறு விடயங்கள் என்று பார்த்தார்களே தவிர அந்தச் சமூகம் எவ்வாறு இயங்கிற்று? அந்தச் சமூகத்தினுள் நிலவிய உறவுகள் யாவை? சுருக்கமாகச் சொன்னால் பண்டைத் தமிழ்ச் சமூகத்தினுடைய சமூகவியல் யாது? What was the sociology of the ancient Tamil society? - அது இன்னும் எழுதப்படவில்லை. அது தொட்டம் தொட்டமாக, அண்மைக் காலத்தில் பல்லவர், சோழர், விஜயநகர காலத்திற்கு நிறைய வேலைகள் நடந்திருக்கின்றன. பொருளாதார வரலாறு ஓரளவுக்கு வந்துவிட்டது. ஆனால் சமூக வரலாறு என்று வரவில்லை. சாசனவியல்பற்றி படித்தவர்கள் மூலமாக அது ஓரளவுக்கு வந்துவிட்டது. குறிப்பாக கரஷிம் மூலமாக Inscription பற்றிப் படிக்கும்போது அது வந்துவிட்டது. ஆனால் துரதிஷ்டவசமாகச் சமூகவரலாறு வரவில்லை. இந்த விடயம் பற்றி ஆராய வேண்டியதேவை எனக்கு ஏற்பட்டது. இதில் நான் முக்கியமாக எனது இரண்டு கட்டுரைகள்பற்றிச் சொல்லவேண்டும். 1) நான் திணை பற்றி எழுதியது. திணைக்கான விளக்கம் தொல்காப்பியத்தில் இல்லை. திணையை Define பண்ணவேயில்லை. அடிக்கடி எனது மாணவர்களுக்குச் சொல்வதுபோல, இந்தப் பூவினால் இந்த நிலம் பெயர்பெற்றது என்று சொல்கிறேன். இது ஏன் என்று கேட்காதீர்கள். ‘கேட்பார்க்கு விடையின்மை காண்க’ என்று - “கடாயினார்க்கு விடையின்மை காண்க” என்று நச்சினார்க்கினியார் மிகத் தெளிவாகச் சூத்திரத்திலே கூறியுள்ளார். ஆனால் இராகவஐயங்கார் ஓரிடத்தில் கூறுகின்றார், இந்தப் பூக்களுக்கும் நிலங்களுக்கும் தொடர்பு இருப்பதாக. தனிநாயகமும் அதையெடுத்துக் கொஞ்சம் சொல்கிறார். ஏனெனில் அவர் Anthropology படித்தவர்.

நிலத்திற்கும் அந்த நிலங்களுக்குரிய ஒழுக்கங்களுக்குமுரிய தொடர்பு பற்றிச் சொல்லப்படுகிறது. ஏன் குறிஞ்சியில் மாத்திரம் புணர்தல்? மருத நிலத்திற்கு மாத்திரம் ஊடல்? முல்லையில் மாத்திரம் இருத்தல்? ஏன் மற்ற நிலங்களில் இவை இல்லையா? மற்ற இடங்களில் புணர்தல் இல்லையா, மற்ற இடங்களில் புருஷனுக்காகப் பெண்சாதி காத்திருப் பதில்லையா?- பிரச்சினை என்னவென்றால், இவை ஒவ்வொன்றும் அந்த அந்த நிலங்களில் ஆண் - பெண் உறவில் இருந்த இந்த இந்த அம்சங்கள்தான் முக்கியமானதாக அல்லது பிரச்சினைகளைத் தருவனவாக அமைந்தன. Problemetic என்று சொல்வார்கள். வெறும் பிரச்சினைகள் அல்ல. அந்தப் பிரச்சினைகளின் மையம். அப்படிப் பார்க்கிறபொழுது ஒன்று தெளிவாக வந்தது என்னவென்றால், அந்தக் குறிஞ்சிநிலச் சமுதாயத்தில் குடும்பம் தொடக்க நிலை. அங்கு அரசு போன்ற விசேட சமூக நிறுவனங்கள் வளரவில்லை. பொருளாதார விருத்தி கிடையாது. அங்கு உணவைத் தேடுதலே தவிர உணவை உற்பத்தி செய்தல் இல்லை. ஆகக்கூடியது அவர்கள் செய்தது தினைச் செய்கைதான். அத் தினைப்பயிர்ச்செய்கைகூட சேனைப் பயிர்ச்செய்கை போன்று செய்யப் பட்டது. அதாவது இந்த வருடத்தில் ஓரிடத்தில் செய்தால் அடுத்த வருடம் அதைவிடுத்து வேறிடத்தில் செய்யப்பட்டது. அந்தத் தினைப்புனம் காக்கப் பெண்கள் போவார்கள். அந்தக் கதைதான் வள்ளி திருமணம். மருத நிலத்திலும் பார்க்க இந்த நிலத்து மக்கள் குறைந்த மட்டச் சமூகத்தினர். அந்தச் சமூகத்தில் ஆண்- பெண் உறவில் உள்ள பிரதானமான அம்சம் ஒன்றாகுதல் - ஒன்றாக இருத்தல்- புணர்தல் (Joining together) அங்கு வடிவாகச் சொல்லப்படுகிறது, புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ” என்று.

முல்லைக்கு அப்படியல்ல. முல்லையில் ஒரு குடும்பம் இருக்கிறது. கணவன் வேலை செய்கிறான். அவன் அரச கருமத்திற்காகப் போகலாம் அல்லது மாடு ஆடு மேய்ப்பதற்காகப் போகலாம். அங்கு ஒரு குடிசை இருக்கிறது. அதனைச்சுற்றி ஒரு கொல்லை இருக்கிறது. அங்கு ஒரு குடும்பம் தொடங்கியாகிவிட்டது. சிறிய அளவில் விவசாயம் செய்யப்படுகிறது. அந்த நேரத்தில் புருஷன் இரண்டு காரணங்களுக்காக வெளியே போகிறான். ஒன்று வேந்தனுடைய கடமை அல்லது ஆநிரை மேய்த்தல். இப்பவும் வன்னியில் ஆநிரை மேய்த்தலுக்குப் போய்வரு வதுண்டு. அந்த நேரத்தில் இந்தப் பெண் வீட்டில் இருந்து, அந்த வீட்டைச் சுற்றியுள்ள கருமங்களை அவள் பார்த்தல். உலகம் முழுவதிலுமே விவசாயம் முதன் முதலில் பெண்களால்தான் ஆரம்பிக்கப்பட்டது. உலகப் பொதுவானவற்றையெல்லாம் சேர்த்துப் பார்க்கும்பொழுது முல்லை தெளிவாகிறது. இவற்றை வைத்துக்கொண்டு, ‘The social origins of Tinai concept’ என்று நான் முதலில் எழுதி வாசித்த கட்டுரையை, தென்

இந்தியாவில் ‘Social Scientist’ என்ற சஞ்சிகை”Early South Indian society and its economy - the problem of Tinai” என்ற தலைப்பில் வெளியிட்டது. அந்தக் கட்டுரை இன்று வரைக்கும் வரலாற்று ஆசிரியர்களால் ஓரளவு பேசப்படுகிறது. செம்பகலக்ஷ்மி, சுப்புராயுலு போன்ற இந்தத் துறையில் ஈடுபட்டவர்களால் பேசப்படுகிறது. எனது பெற்றோர் செய்த புண்ணியம், எனது ஆசிரியர்களின் ஆசீர்வாதம் காரணமாக எனக்கு அந்தப் பெருமை கிடைத்தது. இதேமாதிரி இன்னொரு சுவாரஸ்யமான விடயம் ஒன்று செய்தேன், அது தனித்தமிழ் இயக்கத்தின் அரசியல் பின்னணி பற்றியது. அதில் நான் முதலில் எழுதியது The politics of a literary style.

இதேமாதிரி நான் சமூக வரலாற்றில் படிப்படியாக ஈடுபட்டு வந்தேன். நண்பர் கைலாசபதி ‘நாடும் நாயன்மாரும்’, ‘பேரரசும் பெருந்தத்துவமும்’ எழுதிய அதேகாலப்பகுதியில், நான் ‘இயக்கமும் இலக்கியமும்’ என்று ‘தேனருவி’யில் இலக்கிய வரலாறு முழுவதையும் மார்க்ஸியத்தின் பின்புலத்தில் சொன்னேன். அந்த நேரத்தில் அதில் நான் ரெம்பக் கற்றுக் குட்டித்தனமான விஷயங்களையும் சொல்லியிருக்கிறேன். ஆனால், PhD. செய்யிற நேரத்தில்தான் எங்களை நாங்கள் திருத்திக் கொள்கிற தன்மை ஏற்பட்டது. இதில் பல ஆழமான விஷயங்கள் உண்டு. நாங்கள் Federalism என்று சொல்கிறோம். அதனை நிலமானியம் என்று சொல்கிறார்கள். உண்மையில் தமிழ்நாட்டு Federalism நிலமானியம் தானா? அதாவது நிலத்தை மானியமாகக் கொடுத்ததா? அப்படிக் கொடுத்த சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. அப்படிக் கொடுத்தால் அந்த நிலமெல்லாம் அரசனுக்குச் சொந்தம். ஒரு அரசனின்கீழ் வரும் ஆள்புலம் எல்லாம் அவனது நிலமாக இருப்பதில்லை. கிளார்கள் எனப்படுவோர் தத்தம் பகுதிக்கு உரியவர்களாக இருப்பார்கள். வேந்தர்களின் கீழ் வரும் மன்னர்கள் தங்களுடைய நிலத்தைத் தாங்களே ஆண்டனர். இவை நமது பிரதேசத்தில் Fuedalism தொழிற்பட்ட முறைபற்றிப் பல பிரச்சினைகளைக் கிளப்பின. காணி, ஆட்சி நிலம் என்று சோழர் ஆட்சிக் காலத்தில் வழக்கில் இருந்தது. காணி என்ற சொல்லுக்குக் கருத்து அளக்கப்பட்ட நிலம். காணி என்பது ஒரு அளவுகோலின் வழியாக வந்த பெயர். காணி நிலம் என்று சொன்னால், காணி அளக்கப்பட்டது, நிலம் அளக்கப்படாதது. இப்படிப் பார்த்துக்கொண்டு போகும்போது தென்னாட்டினது வரலாறு மிகவும் ஆழமானது. அதைப்பற்றி இன்னும் எவருமே செய்யவில்லை. இதை அடிப்படையாக வைத்துத்தான் The organisation of political authority in ancient Tamil Nadu என்று அரசின் தோற்றம்பற்றி, வரலாறுபற்றி பார்த்தேன். அதனைத் திருக்குறளை மையமாக வைத்துப் பார்த்தேன். அப்படிப் பார்க்கும்போது, மன்னன் என்ற

சொல்லுக்கும் அரசன் என்ற சொல்லுக்கும் இறை என்ற சொல்லுக்கும் கோ என்ற சொல்லுக்கும் வேந்து என்ற சொல்லுக்கும் இடையில் வித்தியாசங்கள் உண்டு. ஆனால் நாங்கள் இவற்றைச் சொல்லும்போது ஒரே கருத்தில் சொல்கிறோம். இந்த மாதிரியான பிரச்சனைகளை நான் பார்க்கவேண்டிய தேவை இருந்தது.

படிப்பிக்கிற காலத்தில், அருணகிரிநாதர் தாயுமானவர், குமரகுருபரர் போன்றவர்களுடைய பக்திக்கும் நால்வர் காலத்துப் பக்திக்கும் இடையில் ஏதாவது வேறுபாடு உண்டா? அதன் அடிப்படை யாது? என்பவற்றை யெல்லாம் ஆராய்ந்து, 'தமிழின் இரண்டாவது பக்தியுகம்' என்றொரு கட்டுரை எழுதினேன். இந்த அம்சம்தான் பின்னர், யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல், சமூக வரலாறு போன்ற பல விடயங்களைச் செய்யவேண்டி வந்ததற்கும் காரணமாய் அமைந்தது.

தி.ஞா : ***தொடர்பியல் பற்றிய ஈடுபாடு ஏற்படக் காரணமாக இருந்த பின்னணியைக் கூறுங்கள்?***

**கா.சி. :** 1973,74 இல் களனி வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தில் தொடர்பியல் (Communication) படிப்பிக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. கைலாசபதியும் நானும் செய்தோம். அவர் யாழ்ப்பாணம் சென்றதும் முழுப் பொறுப்பையும் பொறுப்பேற்றுச் செய்யவேண்டிய கடமை எனக்கிருந்தது. ஏற்கனவே வானொலியுடனான தொடர்பு நிறைய இருந்தது. பத்திரிகை இயங்குவது பற்றிய ஒரு பரிமட்டமான அறிவும் இருந்தது. இதை வைத்துக்கொண்டு தொடர்பியல் எவ்வாறு உள்ளது? அது எமது சமூகத்துள்ளும் எங்கள் பண்பாட்டுள்ளும் எவ்வாறு தொழிற்படும் Culture and Communication எவ்வாறு இருக்கும் என்பது பற்றியும் நான் பல கட்டுரைகள் எழுதினேன். இதனால்தான் Tamil film as a medium of political communication என்பது பற்றி எழுதினேன். எம்.ஜி.ஆர். உடைய பாடல்கள் ஏன் முக்கியமானவை என்பது பற்றியெல்லாம் சொன்னேன். அதுமட்டுமல்ல நாடக நடிகர்கள் அரசியல் வாதிகளாகவும் இருக்கிறதுக்கான தொடர்பியல் காரணங்கள்பற்றி அமெரிக்க சஞ்சிகை ஒன்றிற்கு எழுதினேன். politicians as players அது 1971ஆம் ஆண்டிலேயே எழுதியது. அதனை தி.மு.க. மொழிபெயர்த்துப் போட்டது. அந்தக் கட்டுரைகள் தொடர்பியல் துறையில் உள்ளவர்களால் இன்றுவரைக்கும் பேசப்படுகிறது. இக்கட்டுரைகள் எல்லாம் ஆங்கிலத்தில் வந்தவை. அதன்பின்பு ஏன் தமிழ் சினிமா நாடகத்திலும் பார்க்க முக்கியமானது? தமிழ்நாட்டில் சினிமா ஏன் முக்கியத்துவத்தைப் பெற்றது? என்பதற்கான விவாதங்கள் எல்லாம் அதில் இருந்து பிறந்தன. எப்படி எம்.ஜி.ஆர்.

தமிழ்நாட்டில் உள்ள சகலருக்கும் பொதுவான ஒரு தலைவனாக மாறினார்? தமிழ்ச் சமுதாயத்திற்கு இவரால் ஏதாவது பலன் உண்டா? என்.டி.ராமராவ் தலைவனாக வந்தார். இது தென் இந்திய சமுதாயம் முழுவதற்கும் ஏற்புடையதாக இருந்தாலும் வட இந்தியாவுக்கு வரவில்லை. இந்த விடயங்களையெல்லாம் விவாதித்தோம். இதில் ஆராய்வது படிப்பித்தலுக்கு உதவியாக இருந்தது. இப்படி ஒன்றுக்கொன்று ஆதரவாக அமைந்தது. இது பண்பாடும் தொடர்பியலும் பற்றி நான் செய்த வேலைகளில் சில.

***தி.ஞா. : இலக்கிய விமர்சனத்துறையில் தங்களது பங்களிப்புப் பற்றிக் கூறுங்கள்***

**கா.சி. :** இலக்கிய விமர்சனம் சம்பந்தமாக நீண்டகாலமாக எனக்கு ஆர்வம் உண்டு. ஆரம்பத்திலே நாடகத்தில் ஆர்வம் இருந்தது. அது பின்பு எனது நண்பர்கள் - குறிப்பாக கைலாசபதி அவர்களுடைய நட்புக் காரணமாக இலக்கியத்தில் ஈடுபாடுகொள்ள ஆரம்பித்தேன். இருவருக்கும் மார்க்ஸியத்திலே இருந்த ஈடுபாடு காரணமாக மார்க்ஸியக் கோட்பாட்டை இலக்கியத்தில் வைத்துச் செய்தோம். மற்றது முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஆரம்பகாலத்தில்- அது மீட்டெடுக்கப்படுகிற காலத்தில், 1954ல் நாங்கள் அதில் முக்கிய பணிபுரிந்தோம். 1956ல் நான் ஸாஹிராவுக்கு வந்த காலம் முதல் ஏறத்தாழ 70வரை மிகத் தீவிரமாகத் தொழிற்பட்டோம். அப்போது இலக்கியம் பற்றிய ஆய்வு, இலக்கிய வரலாறு பற்றிய ஆய்வு வந்தவுடன் இலக்கிய விமர்சனம் பற்றிய ஆய்வு மிக முக்கியமானதாக இருந்தது. குறிப்பாக முற்போக்குக் குழுவைச் சார்ந்தவர்களுடைய இலக்கியத்தை நியாயப்படுத்துவது. உதாரணமாக சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், இலங்கையர்கோன், வைத்திலிங்கம், பண்டிதமணி ஆகியோர் சிறுகதை எழுதியபோது கோபப்படாத ஈழத்துத் தமிழ் அறிஞர்கள், டானியலும் ஜீவாவும் எழுதியவுடன் கோபித்தார்கள். இது சிறுகதையல்ல 'சிறுகத்தை' என்று சொன்னார்கள். இந்த வடிவே இலக்கியத் திற்கு உரியதல்ல என்றார்கள். இவர்கள் தமது பாஷையை எழுதியபோது, 'இழிசனர் வழக்கு' என்றார்கள். உரைகளில் இழிசினர் வழக்கு என்றுதான் இருக்கிறது. அதனை மாற்றி இழி**ச**னர் வழக்கு என்று சொல்ல அதனால் பெரும் சண்டையெல்லாம் நடந்தது. இன்னொரு விடயம் என்னவென்றால், இலங்கையில் மாத்திரமல்லாது தமிழ் நாட்டிலும் இந்த விஷயம்பற்றி நாங்கள் பேசவேண்டிய தேவை ஏற்பட்டது. உதாரணமாக சரஸ்வதி மூலம் வந்த எழுச்சி மணிக்கொடி குழுவினரை முன்னுக்குக் கொண்டுவர அந்த மணிக்கொடி குழுவினருக்குள்ளே இருந்த முரண்பாடு க.நா.சு, செல்லப்பா ஆட்கள் தனியொரு சஞ்சிகை தொடங்கவேண்டிய தேவை

ஏற்பட்டு 'எழுத்து' சஞ்சிகை தொடங்கியது. கருத்து வித்தியாசம் ஏற்பட்டாலும் அவர்கள் மிகவும் நியாயமாக நடந்துகொண்டார்கள். கைலாசபதியினுடைய ஒரு கட்டுரை பற்றி எழுத்து சஞ்சிகையில் க.நா.சு. மிக மோசமாக எழுதிவிட்டார். நான் அதனை எதிர்த்து ஒரு விமர்சனம் எழுதினேன். தமிழ்நாடு சம்பந்தப்பட்ட நான் எழுதிய முதலாவது மிகமுக்கியமான கட்டுரை அதுதான். அந்தக் கட்டுரையை நான் இங்குள்ள புதுமை இலக்கியத்தில் எழுதினேன். 'பொருளும் விமர்சனமும்' என்ற தலைப்பில் எழுதினேன். செல்லப்பா ஒரு பெரிய மனுஷன். அந்தக் கட்டுரையை எழுத்து சஞ்சிகையில் மீள்பிரசுரம் செய்து அதனை விமர்சித்தார். 'விமர்சனச் சிந்தனைகள்' என்ற எனது நூலில் அந்தக் கட்டுரை சேர்க்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து படிப்படியாக ஆரம்பித்து மார்க்ஸியவாதம் சம்பந்தமாக ஈடுபாடு ஏற்பட்டது. அந்தக்காலத்தில் தொ.மு.சி.ரகுநாதனுடன் ஏற்பட்ட தொடர்பு மிக முக்கியமானது. அவர் எனக்கும் கைலாசபதிக்கும் நிறைய உத்வேகம் தந்த ஒரு மனிதர். இலக்கிய விமர்சனம் தொடர்பாக இங்கும் தமிழகத்திலும் தொழிற்பட்டோம்.

இலக்கிய விமர்சனம் என்பது ஏதோ நவீன இலக்கியத்தில் செய்யப்படுகிற விடயம்தான் என்கிற ஒரு அபிப்பிராயம் இருந்தது. அந்த அடிப்படையிலேதான் அப்போது புத்தகங்கள் எல்லாம் எழுதப்பட்டன. மதிப்புக்குரிய பேராசிரியர் வரதராஜன், பிற்காலத்தில் ஞானசம்பந்தன் போன்றோர் இலக்கியங்கள் பற்றி எழுதிய நூல்களில் இக்கருத்து மேலோங்கி நிற்பதைக்காணலாம். வரதராஜன்கூட எழுதும்போது நாவல் சிறுகதை பற்றித்தான் எழுதுவார். இந்தமாதிரியான எண்ணக் கருத்துக்களுக்கு எதிராக எழுதவேண்டிய தேவை எமக்கிருந்தது. திரும்பிப் பார்க்கும்போது சிரமமாகவும் இருக்கிறது. ஞானசம்பந்தனுடன் எல்லாம் ரெம்ப 'லடாய்' படவேண்டிய காரணம் இருந்தது. நான் ரெம்பக் காத்திரமான சில வசனங்களைக்கூடப் பாவித்து விட்டேன். அவர் Plot என்பதற்கு சூழ்ச்சி என்று சொன்னார். 'சூழ்வு' என்று சொல்லியிருந்தால் அது சரி. சூழச்சி என்று சொன்னால் அது பிழை. 'கதைப்பின்னல்' என்ற சொல்தான் பயன்படுத்தப்படவேண்டும் என்று நான் எழுதினேன். 'கதைப்பின்னல்' என்பது புதுமைப்பித்தனுடைய சொல். அதையே பாவிக்கவேண்டும் என்று நான் சொன்னேன். எல்லோரும் 'கரு' என்பார்கள். Plot வேறு, கரு வேறு.

நாங்கள் விமர்சனத்துறையில் செய்த மிக முக்கியமான விடயம் என நான் கருதுவது, பழைய தமிழ் இலக்கியத்தையும் நவீன தமிழ் இலக்கியம் போன்ற ஒரு விமர்சன நெறிக்குள் கொண்டுவந்தது. நவீன காலத்துக்கு முற்பட்ட இலக்கியங்களை அப்படிப் பார்த்தோம். 'திருவாசகம் காட்டும் மணிவாசகர்' இதில் எதைக்கூறினேன் என்றால், மணிவாசகரை

ஒரு கவிஞனாக. 'மதமும் கவிதையும் என்ற நூலிலும் இது கூறப்படுகிறது. Religion and poetry இல், சுந்தரருடைய, சம்பந்தருடைய, மாணிக்க வாசகருடைய கவித்துவத்தை மறந்து அவற்றை வெறும் பாராயணமாகக் கொள்ளக்கூடாது என்று கூறியுள்ளேன். மேல்நாட்டில் அப்படிப் பார்ப்பதில்லை. Northrop Frye என்பவர் Bible as Literature என பைபிளை ஓர் இலக்கியமாகப் பார்க்கிறார். குறானின் வாசகங்களில் இருக்கும் திறன்பற்றி எத்தனையோ ஆசிரியர்கள் எழுதியிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஸஹிராவில் இருந்த காலத்தில் அசீஸ் போன்றவர் களுடன் இருந்த தொடர்பு காரணமாக, அவர்கள் குறானைப் பற்றிப் பேசுகிறபொழுது, குறான் எப்படி அரபு இலக்கியத்திற்குத் தளமாக அமைந்திருக்கிறது என்பதைப் பற்றிப் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். நான் மாணிக்கவாசகரைத் தளமாகக்கொண்டு, நம்மாள்வாரைத் தளமாகக்கொண்டு பார்த்திருக்கிறேன். நம்மாள்வருக்காவது வைஷ்ணவர் களிடையே ஒரு பாரம்பரியம் இருக்கிறது; படிகள் எழுதுகிற மரபு இருக்கிறது. எங்களுக்கு அந்தக்காலத்தில் தேவாரம் திருவாசகத்திற்கு உரைகள் எழுதுகிற மரபே இருக்கவில்லை. இப்படிப்பார்ப்பது ஒன்று. மற்றது பழைய தமிழ் இலக்கியங்களுக்கு ஒரு சமூக விமர்சனம் செய்கிறது. உதாரணமாக நான் திணை பற்றி எழுதியது . கைலாசபதி, 'நாடும் நாயன்மாரும்', 'பேரரசும் பெருந்தத்துவமும்' பற்றி எழுதியது. அதை வைத்துக்கொண்டு நான், 'சைவசித்தாந்தத்தில் சமூக நோக்கு' எனச் சிறிது வித்தியாசமாகச் செய்துள்ளேன் - இப்படியாக நாங்கள் நவீன காலத்துக்கு முற்பட்ட இலக்கியங்களையும் விமர்சனத்துக்கு ஆட்படுத்தினோம்.

உண்மையில், சினிமாப் பாடல்களை வரன்முறையான கவிதை என்று அக்காலத்தில் ஒருவரும் கொள்வதில்லை. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் வரவோடுதான் ஒரு மாற்றம் ஏற்பட்டது. உடுமலை நாராயணகவியிடம் இது ஏற்கனவே இருந்தது. மற்றவர்களுக்கெல்லாம் அது வெறும் சாகித்தியம்தான். 'திரை தந்த கவிதை' என்று நான் முதலில் பேசினேன். எனக்கு அறிவிப்பாளர் எஸ்.பி.மயில்வாகனத்துடன் உறவு இருந்தது. அவருடன் அடிக்கடி கதைப்பேன். 'விதானையார் வீடு' நாடகத்தில் நான் விதானையாராக- 'அப்பு'வாக நடித்தேன். இரண்டரை வருடம் நடந்த நாடக நிகழ்ச்சி அது. நாடகத்தில் நடித்த காலத்தில் மயில்வாகனத்துடன் உறவு அதிகமாகியது. மயில்வாகனம் 'திரை தந்த கவிதை' பற்றி Indian beam இல் செய்யும்படி வேண்டினார். சிலகாலத்தின் பின்னர், திரைப்பாடல்களில் இருந்த கர்நாடக இசையின் அடிப்படைகள் பற்றி முதன் முதலில் எஸ்.கே.பரராசசிங்கம் பேசினார். இன்று எல்லோருமே பேசுகிறார்கள். அதன் பிறகு இலங்கை வங்கியின் நிகழ்ச்சி ஒன்றில் - இதயரஞ்சனியில் அவர் மிகவும் விஸ்தாரமாகச் செய்தார். இந்த மாதிரியான

பல்வேறு துறைக்குள் போகக்கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தன. விமர்சனம் என்பது வெறுமனே நாவல்களையும் சிறுகதைகளையும் பார்க்கிறது அல்ல. பழந்தமிழ் இலக்கியங்களையும் கொண்டுவரவேண்டும். இந்தியாவில் வானமாமலை செய்திருக்கிறார். அவருக்கும் ஒரு நீண்டகால ஈடுபாடு இருந்தது. ரகுநாதனுக்கும் நீண்டகால ஈடுபாடு இருந்தது. இதெல்லாம் ஒன்றாக வந்து சேர்ந்தது. ரகுநாதனின் சமுதாய இலக்கியம் பற்றிய கட்டுரைத்தொகுதியில் வந்த பஞ்சலட்சண திருமுக விலாசம் பற்றிய கட்டுரைகள் (இது தினகரனில் வந்தது). இதேமாதிரித்தான் வானமாமலை ரகுநாதன் ஆகியோருடன் தொடர்பு இருந்தது. எனது திணை பற்றிய கட்டுரையை வானமாமலை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்தார். அவரும் ஆ.சிவசுப்பிரமணியமும் கட்டுரையை மொழி பெயர்த்தார்கள். 'திணைக் கோட்பாட்டின் சமூக அடிப்படை' என மொழிபெயர்த்தார்கள். தமிழ்ச் சினிமாவிற் கவிதை பற்றிய தொடர் இளங்கீரனின் மரகதம் சஞ்சிகையில் 1961ல் வந்தது. விமர்சனம் என்பது வெறுமனே நவீன இலக்கியத்துக்கு உரியதானது என்ற கருத்தில் இருந்த நிலையை நாங்கள் மாற்றி அமைத்தோம்.

எனக்கு இலக்கிய விமர்சனத்தில் ஈடுபாடுள்ள சிங்கள நண்பர்கள் இருந்தார்கள். குறிப்பாக காலஞ்சென்ற ஏ.ஜே.குணவர்த்தனா, சாள்ஸ் அபெயசேகர ஆகியோருடன் எனக்குப் புலமைத் தொடர்பு உண்டு. ஆங்கில இலக்கிய விமர்சனம் பற்றிய தொடர்பு நிறைய இருந்தது. அவர்களுள் A. J. கனகரட்ணாவும் ஒருவர். பல நண்பர்கள் ஏ. ஜே. கனகரட்ணாவை ஒருபுறமாகவும் கைலாசபதியையும் என்னையும் மறுபுறமாகவும் இருதுருவப்படுத்தி வைத்துப் பார்க்கிறார்கள். சமீபத்தில் ஒருவர் எங்களுக்குள் யார் பெரியவர் என்று எழுதியதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் ஏ.ஜே.கனகரட்னாவுக்கும் எங்களுக்கும் குறிப்பாக எனக்கு ஓர் ஆழமான அடிப்படையான சினேகம் நீண்டகாலமாக உண்டு. அதை நாங்கள் வெளிக்காட்டிக் கொள்வதில்லை. எனது சில புத்தகங்களுக்கு 'புறூப்' கூட அவர் பார்த்து உதவியிருக்கிறார். இதெல்லாம் அந்த அந்தப் புத்தகங்களிலேயே குறிப்பிட்டுள்ளேன். நாங்கள் புத்தகங்களைப் பரிமாறிக் கொள்வதுண்டு. சித்தார்த்தன் பேரின்பநாயகம் போன்றோருடனும் உறவு இருந்தது. அதுமாத்திரமல்லாமல் எனது சொந்த வாசிப்பு என்று உண்டுதானே. அதன் காரணமாக என்னுடைய தேடல்தளமாக ஆங்கிலத்தில் அவ்வக்காலத்தில் வருகிற சிந்தனை மரபுகள்பற்றி ஆழமாகப் பார்க்கிற ஒரு தன்மை இருந்தது. குறிப்பாக 60, 70 களில் ஏற்பட்ட வளர்ச்சிகள் பற்றியது. அதனாலேதான் நாங்கள் நவீனத்துவம், பின்நவீனத்துவம் பற்றியெல்லாம் பேசவேண்டி இருந்தது. 92,93 இல்

அமைப்பியல் வாதம், பின்நவீனத்துவம் இவைபற்றி முதல் தடவையாக அறிமுகம் செய்து யாழ்ப்பாணத்தில் பேசியபோது, சொக்கன் போன்ற நண்பர்கள் இப்படியெல்லாம் பார்க்கலாமா என்று என்னுடன் சண்டை பிடித்தார்கள். இந்தத் தொடர்புகள் காரணமாக நாங்கள் இவற்றைச் செய்யக்கூடியதாக இருந்தது. ஆங்கில அறிவை தளமாக வைத்துக்கொண்டு இலக்கிய விமர்சனத்தை செய்கின்ற தன்மை இருந்து வந்துள்ளது. இந்தத் துறையில் ஒரு அடிப்படை விஷயம் வருகிறது. சுருங்கச் சொல்வதானால் ஆங்கிலத்தில் கூறுவார்கள் Multi disciplinary approch என்று. என்னைப் பொறுத்தவரையில் அதுதான் தொழிற்பட்டது.

தி. ஞா : ***இந்த Multi disciplinary approch தான், பல்வேறுதுறைகளில் தாங்கள் திறமையாக இயங்குவதற்கு ஏதுவாக இருந்தது என்று கொள்ளலாமா?***

**கா.சி. :** பல்துறைச் சங்கம ஆய்வு என்று இதைச் சொல்லலாம். அதாவது சமூகவியல், பொருளாதாரம், வரலாறு, இலக்கியம், மொழியியல் இவற்றையெல்லாம் சேர்த்து இயங்குதல். பொருளாதாரம் தெரியாமல் நீங்கள் குறிஞ்சியைப் பார்க்க முடியாது. ஆனால் குறிஞ்சியோ இலக்கியம். பின்பு நாடகத்தை இன்னும் கொஞ்சம் ஆழமாகப் பார்க்கிற தேவை ஏற்பட்டது. வித்தியானந்தனுடன் சேர்ந்து வேலை செய்தது. அதன் பின்பு ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால் நாடகத்தை க.பொ.த. உயர்தர வகுப்பிற்குப் பாடமாக்கியது. தம்மஜாகொட என்ற நாடகக் கலைஞர்தான் அதனை முதலில் தொடங்கியவர். அவர் சிங்களத்தில் தொடங்கும்போது தமிழிலும் நாங்கள் செய்யவேண்டும் என என்னைக் கேட்டுக் கொண்டார். நான் சண்முகலிங்கத்தோடு தொடர்புகொண்டு இருவரும் அதனைத் தொடக்கிவைத்தோம். இப்போது பல்கலைக் கழகத்திலும் நாடகம் ஒரு பாடமாக இருக்கிறது. சிங்களப் பல்கலைக் கழகத்தில் செய்யாத ஒரு விஷயத்தை நாங்கள் முதலில் செய்தோம். தமிழ் நாட்டில் ஒரு பல்கலைக்கழகத்திலும் முதல் பட்ட வகுப்பில் நாடகத்தை ஒரு பாடமாகப் படிப்பிக்கிறதில்லை. இப்போதுதான் பாண்டிச்சேரியில் எம்.ஏ.க்கு பாடமாக வைத்திருக்கிறார்கள். அதற்கு முன்னர் 85, 86இல் நாங்கள் Undergraduate courseற்கு வைத்திருந்தோம். எப்படி அதற்குப் படிப்பிக்கிறது என்பது ஒரு பெரிய விடயமாக இருந்தது. அதற்குப் பெரிய உதவியாக இருந்தவர் குழந்தை சண்முகலிங்கம். 75 அல்லது 80 வீத பங்களிப்பு அவருடையது. நாங்கள் இருவரும் சேர்ந்து செய்தோம். இப்படிப் பல்வேறுதுறைகளில் இயங்க வேண்டிய தேவை இருந்தது. இந்த Multi disciplinary approch ஒரு காரணமாக அமைந்தது.

சுருக்கமாகச் சொன்னால், மனிதனை ஒரு சமூக ஜீவனாக, மற்றைய மனிதர்களோடு உறவு கொண்டவனாக, அந்த உறவுகளுக்கு வேண்டிய தொடர்பாடல் முறைகளை வளர்த்துக் கொண்டவனாக பார்க்கின்ற முறைமை பற்றிய ஒரு தேடல் படிப்படியாக வளர்ந்து வந்தது. அதை நான்தான் செய்தேன் என்று சொல்ல முடியாது. பல நண்பர்களின் உதவி, பல வாய்ப்புக்களின் உதவி. இந்த வகையில் நான் பெரிய அதிஷ்டசாலி என்றுதான் சொல்வேன். எனக்கு வாய்த்த நண்பர்கள் நல்ல நண்பர்கள். எனக்கு வாய்த்த ஆசிரியர்கள் மிகப் பெரிய ஆசிரியர்கள். கல்வி என்பது கொடுத்தால் குறைவுறாது இன்னும் வளரும் என்பதை எனது ஆசிரியர்கள் எனக்குச் சொல்லித் தந்தார்கள். தெரியாது என்றால் தெரியாது என்று சொல்லவேண்டும். தெரியாததைத் தெரிகிற மாதிரி காட்டிக்கொள்ளவும் கூடாது. இந்த இரண்டு விடயத்தையும் நான் என்னுடைய ஆசிரியர்களிடம் படித்தேன். அவர்களுடைய ஆசி, எனது நண்பர்களின் உதவி, சாதனங்கள் ஊடகங்களின் வாய்ப்பு இவை எல்லாவற்றாலும் இந்தத் துறைகளில் நான் தொழிற்படக்கூடியதாக இருந்தது. ஆனால் இவை எத்தகைய காத்திரமானவை, எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தின, இவற்றினுடைய தாக்கங்கள் எந்தளவுக்குச் சரியானவை என்பது பற்றிய முடிவுகளுக்கு நான் வரவிரும்பவில்லை. இந்த இந்த விடயங்களில் ஈடுபட்டோம் என்பதை மாத்திரம் சொல்ல முடியுமே தவிர இவை பற்றிய மதிப்பீடுகள் காலத்துக்குக் காலம் மாறலாம். அது காலத்தின் தேவைகளையும் காலத்தின் உணர்வுகளையும் பொறுத்த விஷயம்.

❑ ❑ ❑

# 2

***தி.ஞா. : உங்களது வளர்ச்சியில் யார் யார் முக்கியமானவர்களாக நீங்கள் கருதுகிறீர்கள்?***

**கா.சி.:** என்னுடைய ஆளுமை வளர்ச்சியில் நான் நான்கு அம்சங்களை பிரதானப்படுத்தவேண்டிவரும்.

1. நான் பிறந்துவளர்ந்த குடும்பச் சூழல். என்னுடைய பெற்றோர் உறவினர் சம்பந்தப்பட்ட நிலை.
2. என்னுடைய ஆசிரியர்கள்.
3. என்னுடைய நண்பர்கள்.
4. என்னுடைய கருத்துக்களை எதிர்ப்பவர்கள்.

என்னுடைய குடும்பத்தில், எனது தாயார் ஒரு கிராமத்துப் பெண் - கரவெட்டியைச் சேர்ந்தவர். அவர் நெஞ்சாலேதான் பேசுவார். தலையால் பேசுவது குறைவு. Out Spokeness - எதையும் மனதைத் திறந்து பார்க்கின்ற தன்மை - எதையும் தாராளமாகப் பார்க்கவேண்டும் என்கின்ற தன்மை - எம்மிடம் இல்லையென்றாலும் அவரிடம் கொடுத்தால் நல்லாயிருக்கும் என்று ஆதங்கப்படுகின்ற தன்மை - இவையெல்லாம் எனக்கு அம்மாவிடமிருந்து வந்தது. நிச்சயமாக அம்மாவின் குணங்கள் நிறைய என்னிடம் இருக்கிறது - எதற்கும் அந்தரப்படுவது - Tension ஆகிறது - சத்தம் போடுகிறது - பிறகு சந்தோஷப்படுகிறது இவையெல்லாம் அம்மாவிடமிருந்துதான் எனக்கு வந்ததென்று நினைக்கிறேன். இப்போது எனக்கு வயது 71 ஆகிறது. அம்மா என்று சொல்லும்போது குழந்தைமாதிரி நான் உருகிவிடுகிறேன்.

என்னுடைய தகப்பனார் ஒரு பண்டிதர். சைவப்புலவர். ஒருமுறை அவர் வித்துவான் சோதனை எடுப்பதற்கு பண்டாரகமையிலிருந்து புறப்பட்டு வந்தார். அந்த வித்துவான் சோதனை இந்தியாவில் இருந்து நடத்தப்படுவது. விவேகானந்தா சபையில் நடக்கவிருந்தது. அந்த வேளை நான் பாணந்துறை வைத்தியசாலையில் சுகமில்லாமல் படுத்திருந்தேன். அன்றிரவு எனது நிலை சிறிது மோசமாகியிருந்தது. எனது தகப்பனார் என்னைப் பார்த்துவிட்டு, சோதனை எடுப்பதற்குச் செல்லவில்லை. அதற்கென்று புறப்பட்டுவந்தவர் சோதனை எடுக்கவில்லை. கார்த்திகேசு சிவத்தம்பி என்று நான் தொடர்ந்து எழுதுவதற்கு இவைகளெல்லாம் வேர். அவர் அந்தமாதிரியான ஒரு மனிதர். வெளியில் எதனையும் காட்டிக்கொள்ளமாட்டார். சோமசுந்தரப்புலவரிடமும் கணேசையரிடமும் நவனீதகிருஷ்ணபாரதியாரிடமும் படித்தவர். தானாகவே படித்து மேல்நிலைக்கு வந்தவர். பண்டிதர் பரீட்சை எழுதியவர். அவருக்கு இலக்கணத்தில் தாடனம் அதிகம். செய்யுள் இயற்றலில் விசேஷமான திறமை உள்ளவர்; பல பரிசில்கள் பெற்றவர். தமிழாசிரியராக - தலைமை ஆசிரியராக இருந்தவர். அவரிடமிருந்துதான் எனக்குத் தமிழைப்பற்றிய ஆர்வம் ஏற்பட்டது என நினைக்கிறேன். பக்தி இலக்கியம் பற்றி ஈடுபாடுகூட அவருக்குள்ளால் தான் எனக்கு வந்ததென்று நான் நம்புகிறேன். தகப்பனாருடைய இலக்கிய ஆர்வம் அல்லது எதையும் படிக்கவேண்டும் என்ற முனைப்பு எனக்கு வந்திருக்கிறது.

என்னுடைய தகப்பனாரின் தகப்பனார் சிறுவயதிலேயே காலமாகி விட்டார். ஆனால் எனது தகப்பனாருடைய சிறிய தகப்பனார் சிதம்பரப்பிள்ளை பக்கத்திலேயே இருந்தவர். கிராமியக் கலைகள் பற்றிய ஈடுபாடு அவருக்கு அதிகம் இருந்தது. எங்களது கோயிலில் சூரன் ஆட்டுவது அவர்தான். அவர் பணத்துக்காக எதனையும் செய்வதில்லை. அதனால் அவருக்கு எங்கள் கிராமத்தில் மரியாதையும் இருந்தது. காவடிக்கு முள்ளுக்குத்துவதில் அவர் கைதேர்ந்தவர். அதனைத் தொழிலாகக் கொண்டவர்களே அவரிடம் வந்து அதுபற்றிக் கதைப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஊர்க்காரியங்களுக்கு முன்னுக்கு நிற்பது போன்ற விஷயங்களில் அவருடைய செல்வாக்கு அதிகம் இருந்தது. அது காலப்போக்கில் என்னிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சிதம்பரப்பிள்ளை என்பவரிடமிருந்து நான் பெற்றுக்கொண்டது அதிகம். அதையும் மறுக்க இயலாது. - இது என்னுடைய குடும்பப்பின்னணி. அம்மா வழியில் இரண்டு பேர் முக்கியமானவர்கள். ஒருவர் என்னுடைய தாய்மாமன் வேலுப்பிள்ளை பொன்னையா. அவர் கோபக்காரர் என்பது உண்மை. ஆனால் பயங்கரமாகக் கிண்டலடிப்பார். இன்னொருவர் அம்மாவழிச் சிறியதகப்பன் கந்தையா ஆறுமுகம். நக்கல் பேச்சுக்கு

அவருடைய பேச்சுத்தான் உதாரணம். என்னிடத்துள்ள காசிய உணர்வின் நதிமூலம் அவர்கள். இவர்களைவிட எனது S. S. C. படிப்புவரை நான் கவனமெடுத்துப் படிப்பதற்கு வேண்டிய சூழலை வீட்டில் ஏற்படுத்தித்தந்த எனது தங்கைமார் பரமேஸ்வரி, யோகேஸ்வரி, ராஜேஸ்வரி, புவனேஸ்வரி என்று நான்கு தங்கைமார். இவர்களை மறக்கமுடியாது. எனது அக்கா சின்னவயதிலே காலமாகிவிட்டார். பராசக்தி எனும் பெயர். அவர் என்னில் அதிக அன்பு வைத்தவர் என அம்மா சொல்லுவார்.

**தி.ஞா. : *உங்களது ஆளுமையை வளர்த்த ஆசிரியர்களைப் பற்றிக் கூறுங்கள்....?***

**கா.சி. :** சின்னவயதில் கரவெட்டியில் உள்ள மாணிக்கவாசக வித்தியாலயத்தில் படித்தேன். நான் பள்ளிக்கூடத்திற்குப் போகுமுன்னர் எனக்கு தமிழ் சொல்லித் தந்தவர் ஷம்ஸுடீன் என்ற முஸ்லிம் ஆசிரியர். அப்பொழுது எனது தகப்பனார் ஹனமுல்லையில் ஆசிரியராக இருந்தார். இங்குதான் பிற்காலத்தில் தமிழ் அறிஞராக வந்த M. M. உவைஸ். எனது தகப்பனாரிடம் தமிழ் படித்தார். அவரே இதைச் சொல்லியுள்ளார்.

என்னுடைய ஆளுமையை வளர்த்த ஆசிரியர்கள் - என்னிடம் ஏதோ வொன்று இருக்கிறது என்பதை உணர்ந்து, தட்டி வளர்த்தார்கள். இவனிடமிருந்து ஏதாவது வரும் என்று முதலில் நினைத்து என்னை வளர்த்தவர் விக்னேஸ்வரா கல்லூரி அதிபராக இருந்த கே.சிவப்பிரகாசம். அந்தக்காலத்தில் நாங்கள் பல பிரச்சினைகள், மோதுதல்கள், விளையாட்டுத் தனங்கள், குதியன்குத்துதல்... இதன் காரணமாக முந்திய அதிபர் எங்களைத் தனி வகுப்பில் வைத்திருந்தார். சிவப்பிரகாசம் சேர் வகுப்புக்கு வந்தவுடன் சொன்னார், “இந்தப் பள்ளிக்கூடத்தில் இதுதான் மோசமான வகுப்பு” என்று. பின்னர் ‘நீடாளி உலகத்து’ என்ற பாரதக் காப்பு செய்யுளை எழுதிவிட்டு, “நான் உங்களிடம் கொஞ்சம் தமிழ் படிக்கலாம் என்று உத்தேசம்” என்று சொன்னார். உங்களுக்குத் தமிழ் படிப்பிக்கப்போகிறேன் என்று அவர் கூறவில்லை. எனக்கு இன்றைக்கும், “நான் உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் கேளுங்கள்” என்று சொல்வதற்கு நெஞ்சுக்குள் ஒரு மாதிரியாக இருக்கும். “உங்களோடு சேர்ந்து நான் படிக்கிறேன்” என்று சொல்லுவேனே தவிர நான் உங்களுக்குப் படிப்பிக்கிறேன் என்று சொல்ல நா தடக்கும். இதற்குக் காரணம் சிவப்பிரகாசம் சேர் அன்று சொன்னது. அவர்தான் என்னிடம் ஆங்கில ஆர்வத்தை வளர்த்து நிறைய வாசிக்கச் செய்து, ஆங்கிலக் கவிதைகளில் இரசனை ஏற்படுத்தி, ஆங்கிலத்தில் எழுதவைத்தவர். அதேநேரத்தில் தமிழிலும் ஆர்வத்தை ஊட்டியவர்.

இதற்கு அனுசரணையாக வேறும் சில ஆசிரியர்கள் இருந்தார்கள். வாசுதேவன்பிள்ளை என்ற ஒரு சரித்திர ஆசிரியர் இருந்தார். அவர் இந்தியாவுக்குப் போகும்போது ஒரு கறுப்புநிறக் கொப்பியைத் தந்துவிட்டுப்போனார். அது அவருடைய குறிப்புகள் அடங்கிய கொப்பி. “சிவத்தம்பி, இதை நீ பார். என்றோ ஒருநாள் நீ இதனைப் பயன் படுத்துவாய். இதனை வைத்துக்கொள்” என்று சொல்லித்தந்தார். அந்தக் கொப்பி நீண்ட காலமாக என்னிடம் இருந்தது. வீடுகள் மாறும் போதுதான் அது தொலைந்தது.

நான் எஸ்.எஸ்.சி. படித்தபின் ஸஹிராக் கல்லூரிக்கு வந்தேன். அங்கு வந்தபின்பு எல்லா ஆசிரியர்களுமே முக்கியமானவர்களாக இருந்தனர். கமால்தீன் என்பவர் எங்களுக்கு மிகவும் உதவியாக இருந்தார். தன்னை ஓர் ஆசிரியராக அவர் கருதவில்லை. எம்மை நண்பராகவே கருதினார். சண்முகரத்தினம் என்ற ஆசிரியரோடும் நல்ல உறவு இருந்தது. அஸீஸ் உடைய ஆளுமை மிக முக்கியமானது. அவர் நல்ல ஆசிரியர் அல்ல. ஆனால் நல்ல மனிதர். எங்களைத் தட்டிக்கொடுத்து வளர்த்துவிட்டவர். ஸஹிராவுக்கு வந்ததன் பின் எனக்கு வானொலித்தொடர்பு, பொதுத் தொடர்பு எல்லாம் இருந்தது. அதற்கெல்லாம் வழிகொடுக்கிறமாதிரி கொஞ்சம் அகலப்பண்ணின தன்மை, ஸஹிரா ஆசிரியர்களுக்கு உண்டு. அந்தக் காலத்தில் எனக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்கள் எச்.எம்.பி.முஹைதீன், சிவகுருநாதன் ஆகியோர். அவர்களுடன் நான் கூடப்படித்தேன். சிவராஜா, குகப்பெருமாள், ஷிப்லி காஸிம், சமீம் எல்லோரும் ஒன்றாகப் படித்தோம்.

பல்கலைக்கழகத்திற்குப் போகிறபொழுது கைலாசபதியின் நட்புக் கிடைத்தது. பல்கலைக்கழகத்தில் எப்படியோ வித்தியானந்தனுடைய பார்வைக்குள் வந்தேன். அது நாடகம் நடிப்பதனாலேதான் வந்தது. ஏற்கனவே வானொலி நாடகங்களில் நடித்திருந்தேன். அதனால் நாடகம் நடிப்பதில் பிரச்சினை இருக்கவில்லை. ‘உடையார் மிடுக்கு’ நாடகம்தான் முதலில் நடந்தது. கண்டி திரித்துவக் கல்லூரியில் அது அரங்கேற்றப்பட்டது. அத்தோடு பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் கண்ணுக்குள் நான் அகப்பட்டேன். வித்தியானந்தனால் என்னுடைய ஆளுமை விருத்திபெற்றது. தகப்பனாக, வழிகாட்டியாக - Guide philosopher and friend என்று சொல்லலாம். சமஸ்கிருதத்தில் ‘கடாட்சம்’ என்று சொல்வார்கள் - கடைக்கண்பார்வை. அந்தக் குருகடாட்சம் எனக்குக் கிடைத்தது.

வித்தியானந்தன் எனக்கு மிக முக்கியமானவர். எனது ஆளுமையின் விருத்தியில் பங்கேற்றவர். எனது கல்யாணத்தைக் கூட பேராசிரியரையும் வித்தியானந்தனையும் வைத்துத்தான் செய்தேன். பெண்பார்த்து சரியென்று

சொன்னவுடன், நான் வித்தியானந்தனிடம்தான் முதலில் சொன்னேன். பேராசிரியர்தான் (க. கணபதிப்பிள்ளை) வந்து கொடியைத் தூக்கித் தரவேண்டும் - நீங்கள்தான் தரவேண்டும் என்று கேட்டேன். அந்தளவுக்கு எங்களை வளர்த்துவிட்டார்கள். வித்தியானந்தன் இல்லையென்றால் நான் இந்தளவிற்கு வந்திருக்கவும் முடியாது.

பேராசிரியர் செல்வநாயகம் அவர்களுடைய அறிவுப்புலமையை நான் நேசித்தவன்; இரசித்தவன். அவர் சில சமயம் எங்களுக்கு எதிராகவும் பேசுவார். எங்களை 'நக்கல்' செய்வார். நான் பல்கலைக்கழகத்தில் சித்தியடைந்தபின் என்னுடன் நல்ல உறவு வைத்துக்கொண்டார். தன்னுடைய புத்தகங்களை எனக்கு அனுப்பும் அளவிற்கு என்னை ஒரு மனிதனாகக் கணித்துக்கொண்டார். அதை நினைக்கும்பொழுது இன்றைக்கும் புல்லரிக்கிறது. ஒரு முறை அவரது விரிவுரை - இலக்கிய விமர்சனம் நடந்தது. நானும் கைலாசபதியும் அதற்குப் போகவில்லை. அவர் எங்களோடு கொழுவல். நாங்கள் வித்தியரோடு போய்விட்டோம். இதைப்பற்றி அவர் பேராசிரியரிடம் முறைப்பட்டிருந்தார். "சிவத்தம்பியும் கைலாசபதியும் இனிமேல் என்னுடைய வகுப்புக்கு வரவேண்டாம்" என்று சொல்லியிருந்தார். நாங்கள் பேராசிரியரை அன்று மாலையில் சந்தித்தபோது, "டேய், அவர் கோபத்திலை இருக்கிறார்; அவரோடை போய்க் கதையுங்கோ" என்று சொன்னார். நாங்கள் உடனே போனோம். அவரோடு கதைப்பதற்குப் பயம். தட்டுத் தடுமாறிச் சொன்னோம். "சேர் வகுப்புக்கு வரவில்லை, மன்னிச்சுக் கொள்ளுங்கோ" என்றோம். அவர் ஏசிப்போட்டுக் கடைசியில் சொன்னார், "வகுப்பில் ஆர்வம் உள்ளவர்கள் என்று நான் கணித்திருக்கும் சிலபேர் வகுப்புக்கு வரவில்லை என்றால் கோபம்தானே வரும்". எங்களுக்குப் பால் வார்த்த மாதிரி இருந்தது. பயபக்தியாக வெளியில் வந்து, உண்மையில் நாங்கள் ஒருவருக்கு மேலால் ஒருவர் பாய்ந்தோம். அவ்வளவு சந்தோஷம். இதைக்கூறியபோது வித்தியர் ஏங்கிப்போனார். அவரும் எங்களுக்கு முக்கியமானவர். தாரமும் குருவும் தலைவிதி என்பார்கள்.

ஆசிரியர்களில் பேராசிரியர் ஹேமச்சந்திர ராய் என்பவருடைய செல்வாக்கும் மிக முக்கியமானது. நான் பல்கலைக்கழகத்தில் தென்னிந்திய வரலாறுதான் செய்தேன். அங்கு ஹேமச்சந்திர ராய் படிப்பித்த முறைமைகள் முற்றிலும் புதுமையானவை. அவர் ஒரு கடல்; சமுத்திரம். அவர் குறிப்புகள் தருவதில்லை. அவரிடம் படித்தது இன்றும் எனக்கு உதவியாக இருக்கிறது. தமிழ்நாட்டு வரலாறு பற்றி நான் செய்ததற்குக் காரணம் நான் அவரிடம் படித்த சரித்திரம்தான். அவருடைய வகுப்புக்கு கைலாஸும் வருவார். நாங்கள் அவரிடம் நிறையப் பெற்றுக் கொண்டோம். அதனாலேதான்,

நாங்கள் எழுதுகின்ற இலக்கிய வரலாற்றுக்கும் மற்றவர்கள் எழுதுவதற்கும் ரெம்ப வித்தியாசங்கள் இருக்கிறது. தமிழை நாங்கள் வெறுமனே தமிழ்நாட்டிலல்லாது இந்தியச் சரித்திரத்தின் ஒரு பகுதியாகப் பார்க்கிற ஒரு பார்வை எமக்கு வந்தது. தமிழ்நாட்டு வரலாற்றை தமிழ் நாட்டிற்குள் நின்று பார்ப்பதற்கும், தமிழ்நாட்டின் வரலாற்றை தென்னிந்தியாவிற்குள் நின்றுபார்ப்பதற்கும், தமிழ்நாட்டு வரலாற்றை அகில இந்தியாவில் நின்று பார்ப்பதற்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. நாங்கள் தென்னிந்திய வரலாற்றை அனைத்திந்தியப் பின்னணியில் படித்தவர்கள்; பார்த்தவர்கள். அது ராய் மூலமாக வந்தது.

போராசிரியர் தொம்சன் எனக்கு முக்கியமானவர். தொம்ஸன் இப்படிச் செய், அப்படிச்செய் என்று ஒருபோதும் சொல்லமாட்டார். அப்படிச் சொல்வது தவறு என்று கருதுபவர் அவர். நான் அவருடன் வேலை செய்வதற்குத் தொடங்கி நான்கைந்து மாதங்களின் பின்னர், நான் படித்த புத்தகங்களின் தரவுகளை, சமூக வாழ்க்கையைப் பற்றிக் கவனிக்காமல் நாடகத்தைப் பற்றி மாத்திரம் - நாடகத்தில் என்ன இருக்கிறது? நாடகத்தைப் பற்றிப் பேசுபவர்கள் யார்? சம்பந்தப்படுபவர்கள் யார்? போன்றவற்றையெல்லாம் தொகுத்துக்கொண்டு சென்றேன். பின்புபார்த்தால் ஆறு மாதங்களுக்குப் பின், நான் படித்த புத்தகங்களைத் திரும்பவும் Index பண்ண வேண்டி ஏற்பட்டது. படிப்பிப்பதில் ஒரு நுட்பம் இருக்கிறது. தக்ஷிணாமூர்த்தி என்கின்ற தத்துவம் இருக்கிறதல்லவா - தக்ஷிணா மூர்த்தம் வாய் திறந்து சொல்வதில்லை. கையாலேதான் காட்டுவார். 'சிவத்தம்பி, இதைப்படி' என்று சொல்வதில்லை. நாங்கள் வெள்ளிக்கிழமைகளில் 11 மணிக்கும் 12 மணிக்குமிடையில்தான் சந்திப்போம். அவர் தேநீர் அருந்திவிட்டு வருவார். நான் அந்தந்தக் கிழமைகளில் செய்த வேலைகளை அவருக்குச் சொல்லவேண்டும். எனக்கு என்னென்ன சந்தேகங்கள் இருக்கின்றன என்று சொல்லவேண்டும். எந்தெந்தப் பகுதிகளைப் படித்தேன். அதில் இப்படியொரு பிரச்சினை இருக்கிறது, இது இப்படியிருக்கலாமா என்றெல்லாம் கேட்பேன். அவர் கேட்டுக்கொண்டே இருப்பார். ஒன்றுமே பேசமாட்டார். ஒரு நாள் நான் எனது பல சந்தேகங்களைக் கூறி அதனை எப்படி எழுதுவது என்று தெரியவில்லை. அதனால்தான் உங்களிடம் கேட்கிறேன் என்று சொன்னேன். பேசாமல் இருந்தார். அவருடைய முகத்தில் ஈயாடவில்லை. எழும்பி 'கோட்'டைப்போட்டுக்கொண்டு போய்விட்டார். அதைப் பார்த்தபோது எனக்குப் பயம் வந்துவிட்டது. நான் நினைத்தேன், இன்றுடன் PhDயும் சரி எல்லாஞ்சரி என்று. பயந்து அந்தரப்பட்டுப்போனேன். அவருடைய மருமகனை எனக்குத் தெரியும். அவர் கிரேக்க இனத்தைச் சேர்ந்தவர். தொம்சனின் இரண்டாவது மகளைத் திருமணஞ் செய்தவர். நான் மிகவும் கவலையோடு இருக்கும்பொழுது அவர் வந்தார். அவரிடம் நான் விஷயத்தைச் சொன்னேன். அப்பொழுது அவர், "இந்த வெள்ளைக்காரர்கள் எல்லோரும்

இப்படித்தான்" என்று கூறி என்னைத் தேற்றிவிட்டு தனது மாமனாரிடம் சென்று, நான் கவலை அடைந்திருப்பதைப் பற்றிக் கூறியிருக்கிறார். அதற்கு தொம்சன், "அந்தப் பிரச்சினை சிவத்தம்பியால் தீர்க்கப்படவேண்டியது. தமிழ் மூலத்துடன் சம்பந்தப்பட்டது. தமிழ் மூலம் தெரியாமல் நான் வழிகாட்ட முடியாது" என்று கூறினாராம். அந்தத் தெளிவு வருவது பெரிய விஷயம்.

ஒரு ஆசிரியன் அப்படித்தான் இருப்பான். அவர் வாய்திறந்து சொல்வது மிகவும் குறைவு. நாங்கள் சொல்வதற்கு எதற்குத் தலையசைக்கிறார், எப்படித் தலையசைக்கிறார் என்பதைக் கொண்டுதான் எங்களுக்கு என்னவென்று தெரியவரும். ஆசிரியரின் பணி, செவியில் பிடித்து நாலு அடி அடித்துத் திருத்துவதல்ல. பேராசிரியர் செல்வநாயகம் ஒருபோதும் எங்களது விடைத்தாள்களைத் திருத்தியது கிடையாது. திருத்துவதெல்லாம் வித்தியானந்தன்தான். பேராசிரியர் கணபதிப்பிள்ளை யாராவது வாசிப்பதைக் கேட்டுவிட்டுத்தான் புள்ளிகள் இடுவார். இப்படியாக ஆசிரியர்களிடமிருந்து நான் கற்றுக்கொண்டது ஒரு வகையானது.

ஒரு நல்ல ஆசிரியன் கற்பிக்கும்போதுதான் படிப்பான். மாணவர் களுக்குப் படிப்பிப்பதற்காகப் படிப்பான். மாணவர்களிடம் இருக்கிறது ஒரு குணம் என்ன தெரியுமா - நாங்கள் எந்தப் பகுதி சுலபமானது என்று நினைத்து ஆழமாகப் பார்க்காமல் போகிறோமோ, யாராவது ஒரு மாணவன் அதிலேதான் ஒரு கேள்வி கேட்பான். தெரியாததைத் தெரியாது என்று சொல்லவேண்டும். பார்த்துவிட்டு வந்து சொல்கிறேன் என்றுதான் சொல்லவேண்டும். அல்லது பின்னேரம் வீட்டுக்கு வா, இரண்டு பேருமாய்ப் பார்ப்போம் என்று சொல்ல வேண்டும். எனது ஆளுமை விருத்தியில் மாணவர்களுடைய பங்கு முக்கியமானது. எங்களுடைய மாணவர்களும் எங்களை வளர்த்தார்கள். மாணவர்களால், தான் வளரவில்லை என்று சொல்கிறவன் ஆசிரியனே அல்ல; கேட்கிற கேள்விகள் அப்படியானவை. ஸஹிராவிலே என்னுடைய மாணவர்களாக இருந்தவர்களால் அந்த அநுபவம் கிடைத்தது. ஜமீல், அமீர்அலி ஆகிய இருவரும் இப்படியானவர்கள். இன்று பெரியவர்களாகிவிட்டார்கள். வித்தியோத யாவில் சிங்களவர்களுடன் படிப்பித்தேன். 'தென்னிந்தியாவில் பௌத்தம்' என்ற தலைப்பில் படிப்பிக்கவேண்டியிருந்தது. அத்தோடு அவர்களுக்குத் தமிழ் படிப்பிக்கவேண்டியும் இருந்தது. அங்கு பௌத்த ஆகமம் விசேட பிரிவுக்கு இரண்டு வருடம் படிப்பித்தேன். சிவஞானசித்தியார் பரபக்கத்தில் உள்ள பௌத்தம் பற்றிய பகுதிகளை விளங்கப்படுத்த வேண்டியிருந்தது. நான் சைவசித்தாந்தம் படித்திருக்கவில்லை. பௌத்தத்தில் நான்கு வகையுண்டு. அதில் சௌத்தாந்திரியம் பற்றி எங்களுக்கு என்ன

சொல்லப்பட்டிருக்கிறதென்பதை அந்த மாணவர்களுக்கு சொல்லிக் கொடுக்கும்படி என்னைக் கேட்டிருந்தனர். அது எனக்குச் சவாலாக இருந்தது. மாணவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதற்காக நான் படிக்கவேண்டியிருந்தது.

**தி.ஞா. :** ***உங்களை எதிர்த்தவர்களும் உங்களை வளர்த்ததாகக் கூறினீர்களே...!?***

**கா.சி. :** இதை நான் ஒரு வரட்டுத்தனமாகக் கூறவில்லை. அவர்களால் நான் சில விடயங்களைக் கூடுதலாகப் படிக்கவேண்டியிருக்கிறது. அவர்கள் என்னைப் பற்றி ஒன்றைக் கூறும்போது அதைப்பற்றி நான் கூட ஆராயவேண்டியிருக்கிறது. நான் யாருடன் வாதாடுகிறேனோ அவர்களும் என்னை வளர்த்தார்கள்.

மற்றவர்களுடன் எதிர்த்து சம்வாதம் செய்கிறபோது, அவர்களும் விஷயம் தெரிந்தவர்கள்தான். பண்டிதர் இளமுருகன், பண்டிதர் நடராஜா இவர்கள் எல்லோரும் சில்லறை ஆட்கள் அல்ல. இளமுருகன் எனது தந்தையாரின் ஆசிரியர் நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் மகன். எனது தந்தையாரின் வகுப்புச் சகபாடி. இளமுருகன் எனது ஐயாவுக்கு ஒருமுறை எழுதினார். 'முற்போக்குக்காரர்களுக்கு எதிராக நாங்கள் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஒரு கூட்டம் கூடுகிறோம்', அதற்கு வரும்படி அழைப்பு விடுத்தார். பண்டிதர்களை அழைத்திருந்தார். அழைப்பிதழில் இன்னார் இன்னார் பேசுகிறார்கள் என்று போடப்பட்டிருந்தது. எனது பெயரும் அதில் இருந்தது. ஐயா கூட்டத்துக்குப் போகவில்லை. 'நீங்கள் அழைப்பிதழில் குறிப்பிட்ட ஒருவர் எனது மகன்' என்று ஐயா இளமுருகனாருக்குப் பதில் அனுப்பியிருந்தாராம்.

ஒரு முறை, 'அசையாத குட்டை நீரல்ல மரபு' என்று நான் எழுதினேன். இளமுருகனார் சொன்னார், 'அசையாத குட்டை நீரன்று மரபு' என்றிருக்க வேண்டும். 'அல்ல' என்று இருக்கக்கூடாது. ஒருமைக்கு 'அன்று'தான் வரும். பன்மைக்குத்தான் 'அல்ல' வரும். அதை நான் இன்றுவரைக்கும் மறக்கவில்லை. அவர்களிடம் படித்ததை மறக்க முடியாது. இலக்கணப் பிழை பிழைதானே! நான் அதற்காக இலக்கணம் படித்தேன்.

அவர்களுக்கு வந்த பிரச்சினை என்னவென்றால், அவர்கள் தொல்காப்பியத்தை, நன்னூலை தங்களுடையது என்று நினைத்துக்கொண்டிருக்க, நாங்களும் தொல்காப்பியத்தை, நன்னூலை எடுத்துக்காட்டிக் கையாளும்பொழுது சிக்கல் ஏற்பட்டது. ஆங்கில மரபில் நாங்கள்

எழுதவேண்டிய தேவைகள் ஏற்பட்டன. மற்றவர்களுடன் எதிர்த்து வாதாட வேண்டிய தேவையும் இருந்தது. தெளிவு இல்லாமல் வாதாட முடியாது. ஆகையால் எங்களுடைய எதிரிகளும் எங்களை வளர்த்தார்கள் வளர்க்கிறார்கள்- நான் இதனைக் கிண்டலாகச் சொல்லவில்லை.

**தி.ஞா.: *உங்களுடைய ஆளுமை வளர்ச்சியில் நண்பர்களது பங்கு எத்தகையதாக இருந்தது?***

**கா.சி.:** நண்பர்களில் என்னுடைய ஆளுமை வளர்ச்சிக்குரிய நண்பர்கள் என்று சிலரைச் சொல்லவேண்டும். ஆளுமை இரண்டு வகையானது. சமூக ஆளுமை, மற்றது அறிவுப்புலமை.

விஸ்வலிங்கம் என்றொரு நண்பன் இருந்தான். அவன் கெட்டிக்காரன்; நல்லவன். அவனாலேதான் எனக்கு வெளியுலகம் தெரியவந்தது. கைலாசபதியினுடைய செல்வாக்கு எனக்கு ரெம்பப் பெரியது. கைலாஸ் இல்லாதிருந்திருந்தால் நான் ஒருவேளை முழுமையாக நாடகத்திலேயே நின்றிருப்பேன். கைலாஸினாலேதான் நான் இலக்கியத்திற்கு வந்தேன். அதனை நான் ஒத்துக்கொள்ளவேண்டும். கைலாஸின் நட்பு அதற்குக் காரணமாக இருந்தது. 52ஆம் ஆண்டிலிருந்து ஏறத்தாழ 72, 73வரை கைலாசபதியுடன் எனக்குப் பலமான உறவு இருந்தது. குறிப்பாக 52 லிருந்து 67வரையும் மிகநெருங்கிப் பழகினோம். அதன்பின்புதான் ‘அப்படி இப்படியாய்’ போனது - Chineses wing ஓடுதான்.

எனக்குப் பல்கலைக்கழகத்தில் படிக்கிற காலத்தில் நல்லைநாதன் என்று எனது அறை நண்பன் இருந்தான். நான் உத்தியோகம் பார்க்கத் தொடங்கியபின் கதிர்காமநாதன் என்ற நண்பர் கிடைத்தார். கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரின் வளர்ச்சியில் கதிர்காமநாதனுடைய பங்கு மிகப் பெரியது. அவர் இப்போது அவுஸ்திரெலியாவில் இருக்கிறார். அவர் இல்லை என்றால் நான் பல விடயங்களைக் கைவிட்டிருப்பேன். நான் ஏதாவது கூட்டங்களுக்குப் போகாமல் விட்டால், அவர் ஏசுவார். ஒருவருக்கு ஒன்று செய்வதாகக் கூறிவிட்டுச் செய்யாமல் விட்டால் அவர் ஏசுவார். - He had a great influence on us.

கொழும்புக்கு வந்தபிறகு Social scientist association இல் இருந்த குமாரி ஜயவர்த்தனா, சாள்ஸ் அபயசேகர, நியூட்டன் குணசிங்க ஆகிய இந்த மூன்றுபேரும் என்னில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். மார்க்ஸியத்தை நான் அவர்களோடு சேர்ந்து தெளிவுபடுத்திக் கொண்டேன்.

என்னுடைய மனைவி பல்கலைக்கழகத்தில் படித்தவர் அல்லர். அவர் ஒரு வர்த்தகப் பின்னணியைச் சேர்ந்தவர். திருமணம் நடக்கும்போது அவரது தந்தையார் காலமாகிவிட்டார். பிற்காலத்தில் அவரே எனது வீட்டை நிர்வகித்தார். அதனால் எனக்கு எந்தக் கவலையும் இல்லாது நான் வேலை செய்யக் கூடியதாக இருந்தது. என்னோடு நன்றாகக் கதைக்கின்ற - ஆனால் என்னை விரும்பாத நண்பர் ஒருவர் என்னைக் கேட்டார், "எப்படி இவ்வளவு காலத்தில் இவ்வளவையும் எழுதினாய்?" என்று. உண்மையில் வீட்டுச்சூழல்தான் அதற்குக் காரணம். அதற்காக எனது மனைவிக்கு நான் மிகவும் கடமைப்பட்டவன்-Thank God பிள்ளைகளும் அந்தச் சூழலுக்குள் வளர்ந்தபடியால் ரெம்பப் புரிந்துணர்வு உள்ளவர்கள். நான் ஒரு வகையில் அதிஷ்டசாலி என்றுதான் கூறவேண்டும்.

நான் மனந்திறந்து ஒன்று சொல்கிறேன். நான் செய்தது General Degree தான். சரித்திரம், பொருளாதாரம், தமிழ் படித்தேன். அதில் எனக்குக் கிடைத்தது. 3rd class தான். நண்பர்களும், உறவுகளும், ஆர்வங்களும் உந்துதல்களும் இருந்ததால்தான் நான் ஒரு சிரேஷ்ட பேராசிரியராக இளைப்பாறினேன். இது எனது தாய் தகப்பன் செய்த புண்ணியம், நண்பர்களுடைய நல்வாக்கு. எனக்குத் தெய்வ நம்பிக்கை உண்டு. இல்லாமல் இல்லை. ஏன் என்றால் நான் பண்டிதருடைய, சைவப்புல வருடைய மகன். அந்தப் பின்னணியில் இருந்து வந்தவன். சந்நதி கோயிலையும் தச்சந்தோப்புக்கோயிலையும் நான் மறந்து விட்டேன் என்று சொல்லமுடியாது. 'தன்னெஞ்சு அறிவது பொய்யற்க' - இருக்கு... எல்லாருக்கும் இருக்கு.... இதுகளால் நான் அதிஷ்டசாலி என்பேன்.

அமெரிக்க சஞ்சிகை ஒன்றில் என்னைக் கேட்டார்கள், உங்களுடைய குறிக்கோள் என்ன என்று. நான் சொன்னேன் "உழைப்பு ஊதியத்தைத்தரும் - I worked, worked and worked" நான் படிக்கிற காலத்தில் செய்யுள் இயல் படிக்கவில்லை. எனக்கு யாப்பு இலக்கணம் அதிகம் தெரியாது. நான் பதிப்பித்த புத்தகம் ஒன்றை என்னுடைய நண்பன் சொக்கன் விமர்சனம் செய்தபோது, "யாப்பு பிழையாக இருக்கிறது. சிவத்தம்பிக்கு யாப்புத் தெரியாது" என்றார். நான் தொழிலிருந்து ஓய்வு பெற்ற பின், கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றேன். கடைசி ஒன்றரை வருடம் அங்கு மாணவர்களுக்கு தொல்காப்பியம் - செய்யுள் இயல் கற்பிக்க வேண்டியிருந்தது. நான் உண்மையைச் சொல்கிறேன். செய்யுள் இயல் நான் படித்தது அங்கேதான்! அதைவைத்துக்கொண்டு தொல்காப்பியர் கவிதைக்கோட்பாடு பற்றி ஒரு கட்டுரை எழுதினேன்; ஒரு விரிவுரை செய்தேன். தொல்காப்பியத்தைப் பற்றி சில சில கருத்துக்கள்

வைத்திருக்கிறேன். அவையெல்லாவற்றையும் இந்தியாவிலுள்ள நான் மதிக்கிற பேராசிரியர்கள் மேற்கோள் காட்டுவதை நான் பார்த்திருக்கிறேன். அசை, சீர், அடி என்பவற்றையெல்லாம் எப்படிப் பார்க்கவேண்டும் என்பதுபற்றி எனக்கு வித்தியாசமான கருத்து உண்டு.

மற்றது தொல்காப்பியர் பற்றி அடிப்படையான விஷயங்கள் பற்றி கேள்வியெழுப்பியிருக்கிறேன். தொல்காப்பியருடைய மாணவர்கள் யார்? தொல்காப்பியர் யாருக்காக எழுதினார் - இந்தப் பிரச்சினைகள் தீராதா? இவை நானாகக் கண்டு பிடித்தவை அல்ல. ஆங்கில விமர்சனம் படிக்கும்போது இது வந்தது. வாசிப்பவன்தான் கருத்துக்களை உண்டாக் குகிறான். தொல்காப்பியம் தமிழின் பழமையைச் சொல்வதற்காக எழுந்த நூல் என்கிறார்கள். ஆனால் அப்படியல்ல. தொல்காப்பியம் பழமையைச் சொல்லவில்லை; விபரிக்கிறது. தொல்காப்பியர் யாருக்கு விபரித்தார். தொல்காப்பியரின் மாணவர்கள் யார். இந்தக் கேள்வியைக் கேட்கும்போது அதனது காலம் காண்பது சுலபம். அதனை விளங்கிக்கொள்வது சுலபம். நான் பொருளதிகாரம் தான் படிப்பித்தேன். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அகற்றிணையியல், பொருட்திணையியல் என்பனவற்றை யெல்லாம் மாணவர்களுக்குப் படிப்பித்தேன். செய்யுளியல் நான் படிப்பிக்கவில்லை. எங்களுக்கெதிராக, பண்டிதர் போராட்டத்தில் நின்ற ஒருவரின் மகள் என்னிடம் தொல்காப்பியம் படித்தாள். அவர் என்னிடம் ஒருநாள் சொன்னார், "ஆராய்ச்சிக் கட்டுரை விஷயமாக மகள் தொல்காப்பியம் வேணுமென்கிறாள். இந்த உரைகள் எல்லாம் எப்படி அவளுக்கு விளங்கும்?" என்று என்னிடம் கூறினார். இப்படியானவர்களையும் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

படிப்பு என்பதை நான் ஒரு தொடர்ச்சியான செயல்முறை என்றுதான் பார்க்கிறேன். மார்க்ஸியத்தையும் அப்படித்தான் பார்க்கிறேன். மார்க்சியத்தை ஒரு கரைபோட்ட வேட்டியாக - அந்தக்கரைக்குமேல் வேட்டியில்லை என்று சொல்லுமாற்போல் நான் பார்க்கத் தயாராக இல்லை. மார்க்ஸியத்திற்கு ஒரு எதிர்காலம் இல்லையா? சீனப் புரட்சி, சோவியத் புரட்சி என்பன முடிந்தபின் ஓர் எதிர்காலம் இல்லையா? - இருக்கிறது என்றுதான் நான் நினைக்கிறேன். ஏனெனில் மனித அசமத்துவங்களை, அந்த அசமத்துவத்தினால் ஏற்படும் சுரண்டல் முறைகளை மார்க்ஸியத்தைத் தவிர தெளிவாகச் சொன்ன தத்துவம் இதுவரையில் இல்லை. இதனைச் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும். அந்த நாட்டிலிருந்த மார்க்ஸியம் மாதிரித்தான் எல்லா நாட்டிலும் அது செயற்படும் என்று அர்த்தமல்ல. ஒரு சுவாரசியமான விடயம். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு காலத்தில்

தமிழும் சிங்களமும் வேண்டும் என்று சொன்னது. அதன்பிறகு எல்லாம்மாறி சிங்களம் மட்டுமென்று வந்தது. இந்த வருடத்தில் கட்சியின் மொழிக்கொள்கையாக, பி.கந்தையா 56ஆம் ஆண்டு பேசிய பேச்சை பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். அதாவது சிங்களத்திற்கும் தமிழிற்கும் சம அந்தஸ்து வேண்டும் என்று சொல்கிறார்கள். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு அந்தக் கட்சியில் இருக்கிறவனை, நான் மார்க்ஸியவாதி என்ற பெயரோடு கத்துகின்றவனை எப்படிக்கருதுவது? அந்த நேரத்தில் யேசு சொன்னதுதான் எனக்கு ஞாபகம் வரும். - Oh Lord forgive them for they do not know what they do - ஆண்டவரே இவர்களை மன்னிப்பாயாக! ஏனென்றால் இவர்கள் தாங்கள் செய்வது என்னவென்று தெரியாதவர்கள்.

என்னுடைய ஒரேயொரு விருப்பம் என்னவென்று சொன்னால் இந்த மகிமை குன்றாமல் நான் போய்விடவேண்டும். அதுதான் பெரிய ஆசை. ஒரு புதிய விஷயம் வருகிறபொழுது, அந்தப் புதிய விஷயத்தைத் தெரிகின்ற இரண்டாவது மூன்றாவது ஆளாக நான் இருக்கக்கூடாது. அந்தத் துறையில் உள்ளவர்களுக்கு தெரிகின்ற அதேவேளையில் எனக்கும் தெரிந்ததாக இருக்கவேண்டும். நான் பழசை ஒதுக்கவில்லை. பழசில் காலூன்றிக்கொண்டு நான் மேலே வரவேண்டும். மரபுபற்றிப் பேராசிரியர் உரையிலே சொல்கிறார் - ‘காலமும் வழக்கும் திரிந்தவிடத்து - திரிந்தனவற்றிற்கேற்பவோர் மாற்றம் செய்தல்’. இவற்றையெல்லாம் நாங்கள் மறக்கமுடியாது.

❑ ❑ ❑

# 3

***தி.ஞா. : உங்களது குடும்பப் பாரம்பரியத்தில் இருந்து ஆளுமையின் சிலகூறுகள் உங்களுக்கு வந்திருப்பதாகக் கூறினீர்களே. முற்போக்குப் பார்வையில், பாரம்பரியத்தில் இருந்து இவையெல்லாம் வந்தன என்பதை ஏற்க முடியுமா?***

**கா.சி. :** அது ஒரு முக்கியமான கேள்வி. இந்தக்கேள்வி கேட்டதற்கு மிக்க நன்றி.

நான் சிறுவனாகக் கரவெட்டியில் வளரும்போது அங்கேயுள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளைக் காண்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எங்களுடைய சமூகம் 'கரையார்' சமூகம். சிலர் 'மீனவர்கள்' என்று சொல்வார்கள். கரையார் என்று சொல்வது நல்லதுபோல எனக்குப்படுகிறது. கரையார் சமூகத்தைப்பற்றி கரவெட்டியில் உள்ள சிக்கல் என்னவென்றால், அது தாழ்த்தப்பட்ட சமூகம் அல்ல. ஆனால் உயர்ந்ததும் அல்ல. வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் அது உயர்ந்ததாகக் கருதப்படும். யாழ்ப்பாணத்தில் கொக்குவில், தெல்லிப்பளை போன்ற இடங்களில் அது தாழ்ந்ததாகக் கருதப்படுவதே இல்லை. கரவெட்டியில் அந்த சமூகத்திற்கு ஒரு பொருளாதாரப்பிடி - ஒரு Economic Hold இல்லை. அதனால் அவர்கள் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். உயர்ந்தவர் களாகக் கருதப்படவில்லை. ஆனால் எந்தவிதச் சமூகத் தடை நிலையும் இல்லாத ஒரு நிலைமை. வேளாளருடன் அவர்கள் ஒன்றாகக் கருதப்படு வதில்லை. இதனை அவதானிக்கின்ற தன்மை எனக்கு இருந்தது; அது முக்கியமானது.

மற்றது, நான் வளர்ந்து வந்தபோது சமூக ஏற்றத்தாழ்வுகள் காரண

மாகக் காணப்படுகிற சமூக அநீதிகளைக் காண்கிற வாய்ப்பு இருந்தது. நான் மார்க்ஸியத்தில் ஈடுபடவேண்டி வந்ததற்கான ஒரு நிகழ்வினைச் சொல்கிறேன். அதை நான் என் சீவியத்தில் மறக்கவேமாட்டேன். எனக்குப் 14,15 வயதில், நாங்கள் - நண்பர்கள் நெல்லியடிச் சந்திக்குச் சென்றுவருவோம். அங்கு பலரும் வருவார்கள். இப்படியிருக்கும்போது எங்களுடன் படித்து, படிப்பெல்லாவற்றையும் விட்டு சண்டித்தனமாகத் திரிந்த ஒருவன் இருந்தான். அவனுக்கு காங்கேயன் என்று பெயர். அவன் ஒருநாள் தெருவில் எதிர்ப்பட்டு "சிவத்தம்பி வா, நீ இண்டைக்கு என்னோட வாறாய்" என்று என்னை அழைத்தான். அவனுக்கு நல்ல வெறி. அவனை என்னால் தவிர்க்கவும் முடியவில்லை. என்னுடைய வீட்டைத் தாண்டித்தான் அவன் செல்லவும் வேண்டியிருந்தது. நாங்கள் நடந்து வரும்பொழுது எதிரே பனையேறுகின்ற நளச்சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் தனது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். அப்பொழுதுதான் தொழில் முடித்துக் குளித்துவிட்டு நின்றார் போலத் தெரிந்தது. அது பொழுதுபடும் மைம்மல் நேரம்.

"கள்ளிருக்கோ?" என்று காங்கேயன் அண்ணை கேட்டான்.

"தம்பி, இப்பதான் எல்லாம் வித்து முடிஞ்சுது. என்னட்டை இல்லை ராசா...." என்று அவர் பதில் சொன்னார்.

"என்ன பகிடி விடுகிறியோ?" என்று கேட்டுக்கொண்டே, காங்கேயன் நேராக அந்தத் தொழிலாளியின் வீட்டினுள் சென்றான். வடமராட்சியில் ஒரு வழக்கம் உண்டு. இரவுச் சாப்பாட்டை முற்றத்தில் வைத்துச் சாப்பிடுவார்கள். இதில் சாதி குறைந்தது கூடியது என்றில்லை. நிலச்சுவாந்தர்கள் - உடையார் - மணியகாரர் போன்றவர்களைத் தவிர, இந்த வழக்கம் வேளாளரிலும் இருக்கிறது. கோவியரிலும் இருக்கிறது. கரையார் ஆட்களிலும் இருக்கிறது. அந்தத் தொழிலாளியின் மனைவி சாப்பிடுவதற்கு ஆயத்தமாக முற்றத்தில் சாப்பாட்டைக் கொணர்ந்து வைத்திருந்தாள். காங்கேயன் அவர்களது வீட்டினுள் சென்று எல்லா இடங்களிலும் ஆராய்ந்தான். நான் அவனது கையைப் பிடித்து "வா போவோம்" என்று இழுத்தேன். அவன் என்னை உதறிவிட்டு அங்கிருந்த சோற்றுப்பானையையும், கறிச்சட்டியையும் நிலத்திலே போட்டு உடைத்தான். அந்த பெண் பெரிதாகக் குழறி அழுதாள். நான் உண்மையாகச் சொல்லுகிறேன். அந்த ஏக்கத்திலிருந்து - அதனுடைய தாக்கத்திலிருந்து நான் இன்றைக்கும் விடுபடவில்லை. அந்தத் தொழிலாளி என்னைப்பார்த்து "வாத்தியாற்றை மேன், அவரைப் பிடியுங்கோ" என்று கெஞ்சியது எனது மனதைப் பிழிந்தது. நான் என்ன செய்யமுடியும்? That was the biggest shock of my life.

அதன் பின்பு இச்சம்பவம் நடந்த காலத்தில் எங்களுடைய ஊரில்

இடதுசாரியாக இருந்த வி. மகாலிங்கம் என்பவரது வீட்டில் தர்மகுலசிங்கம் - ஜெயம் வந்து மார்க்ஸிய வகுப்பு நடத்தினார். இரண்டாவது கிழமை நான் அந்த வகுப்புக்குச் சென்றேன். அங்கு பல விடயங்கள், ஒடுக்குமுறை போன்ற சொற்கள் எனக்குத் தெரியவந்தன. இரண்டு வகுப்புகளுக்குத்தான் நான் சென்றேன். அந்த வகுப்புகள் பின்னர் ஒழுங்காக நடைபெறவில்லை. ஐந்தாறு பேர்தான் வகுப்பில் இருந்ததாக ஞாபகம்.

அதன் பிறகு பி.கந்தையா தேர்தலில் நின்றார். 47ஆம் ஆண்டு என நினைக்கிறேன். அப்போது நான் எஸ்.எஸ்.ஸி.கூடப் படிக்கவில்லை. தேர்தலில் கத்துவதற்காக நான் சென்றேன். அதிலிருந்து பி.கந்தையாவுடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவரிடம் படித்தது இன்னொரு விதம். கொம்யூனிஸ்ட் என்பதற்காக மக்கள் அவருக்கு வாக்களிக்கவில்லை. கரவெட்டியான் என்பதற்காகத்தான் எல்லோரும் வாக்களித்தார்கள். அவர் ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது, "என்னை எல்லோரும் கொம்யூனிஸ்ட் என்று சொல்கிறார்கள். தெய்வத்தில் நம்பிக்கை இல்லாதவன் என்று சொல்கிறார்கள். சமஸ்கிருதத்தில் 'தத் பிரஹ்மம்' என்றுதான் சொல்லப்படுகிறது. அதன் கருத்து 'அது பிரம்மம்' என்பது. சமஸ்கிருதத்தில் 'அது' என்றுதான் சொல்லப்படுகிறது. 'அவன்' என்று சொல்லப்படவில்லை" என்று பேசினார். அதனைக் கேட்டபோது, என்ன இந்த மனுஷன் தேர்தல் கூட்டத்தில் இதையெல்லாம் பேசுகிறாரே என்று சிரிப்புத்தான் வந்தது. அவர் எல்லோரையும் தாறுமாறாக ஏசுவார். அவரிடம் நான் ஏச்சுவாங்கியிருக்கிறேன். நான் மாத்திரமல்ல எம்.ஸி.சுப்பிர மணியத்தைக்கூட அவர் ஒரு தடவை "போடா" என்று ஏசினார். அவருக்கு தேர்தல் வேலை செய்பவர்களையே அவர் ஏசுவார். அவரிடம் நான் வரன்முறையாகப் படிக்கவில்லை. அவரிடம் ஏதாவது கேட்டால், ஆறுதலாக இருக்கும் போது பதில் கூறுவார். அதனாலும் எனக்கு மார்ஸியம் பற்றிய ஆர்வம் ஏற்பட்டது. அவர் பின்னர் கொழும்புக்கு வந்தபின், சனிக்கிழமைகளில் அவரைப் போய்ச் சந்தித்து உரையாடுவேன்.

நான் ஸாகிராவில் படிக்கும்போது, எச்.எம்.பி.முஹைதீன் என்ற ஒரு நண்பர் கிடைத்தார். அவர் ஒரு பெரிய கம்யூனிஸ்ட்; முக்கியமான ஆள். மிகவும் கெட்டிக்காரர். அவராலேதான் எனக்குக் கட்சித்தொடர்பு ஏற்பட்டது.

அதன்பிறகு படிப்படியாக கைலாசபதியின் உறவு வந்தது. நானும் கைலாசபதியும் இலக்கியத்தில் மார்க்ஸியம் பற்றிப் பேசத்தொடங்கினோம். அங்கிருந்து முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திற்குப் போனோம். என்னுடைய மார்க்ஸியத்தின் தோற்றம் வளர்ச்சி இப்படியாகத்தான் இருந்தது. பல்கலைக்கழகத்தில் அதைப்பற்றிச் சிறிது தெளிவுபெற்றேன்.

மார்க்ஸியத்தை எப்படிப் பார்ப்பது, அதனை ஒரு Methodology ஆக

எப்படிப் பயன்படுத்துவது என்ற தெளிவு தொம்ஸனுடன் வேலை செய்தபோது தான் எனக்கு ஏற்பட்டது.

மற்றது நண்பர்களுடன் நான் செய்த விவாதங்கள். குமாரி ஜெய வர்த்தன, நியூட்டன் குணசிங்க போன்ற மார்க்ஸியத்தின் முக்கியமானவர்களுடன் அளவளாவியமை, அவர்களுடன் செய்த விவாதங்கள் போன்றவற்றினில் இருந்து நான் மார்க்ஸியத்தில் பலவற்றைக் கற்றுக்கொண்டேன். பிற்காலத்தில் அ.வைத்திலிங்கத்துடன் ஏற்பட்ட நட்பு - அவர் மார்க்ஸியம் பற்றி அதிகம் பேசமாட்டார். ஆனாலும் ஒரு விஷயத்தை எப்படிப்பார்க்கவேண்டும் என்பதில் அவரிடம் நிறைய ஆளுமை இருந்தது. என்னுடைய மார்க்ஸியப்போக்கிற்கு இப்படியான தடயங்கள் மிக முக்கியமானதாக அமைந்தன.

**தி.ஞா. : *அப்படியானால் உங்களுடைய ஆளுமை, பாரம்பரியத்தில் இருந்து வந்ததோடு மார்க்ஸியப்பார்வையிலும் சேர்ந்துதான் வந்தது என்று சொல்கிறீர்களா?***

**கா.சி. :** ஆமாம்; அது உண்மை. இதில் உள்ள சிக்கல் என்னவென்றால் நான் பாரம்பரியத்தில் இருந்தும் விடுபடமுடியவில்லை. என்னில் உள்ள பிரச்சினையே அதுதான். ஏனென்றால் என்னுடைய பாரம்பரியம் எனக்கொரு சுமையாக அமையவில்லை. சிலருடைய வாழ்க்கையில் இளமைக்கால நினைவுகள் சுமையாக மாறமுடியும். அவர்கள் ஏதாவது பாராபட்சமான வாழ்க்கைக்கு உட்பட்டு அல்லது வேறு ஏதாவது சிக்கல்களுக்குள் அகப்பட்டிருந்தால், அது அவர்களுக்கு ஒரு தண்டனையாக அமையும். அதை அவர்கள் திரும்பிப் பார்க்க விரும்பாமல் இருக்கலாம். ஆனால் எனக்கு அப்படியிருக்கவில்லை. அதனால் எல்லாவற்றையும் பார்க்கவேண்டிய தேவைகளை மறக்காத ஒருவனாக நானிருக்கிறேன் என்று சொல்லலாம்.

பிற்காலத்தில், பண்பாட்டியல் கற்கை (Cultural studies) என்றொரு பாடம் வந்தது. அதனை Richard Hoggart என்பவர் தொடக்கிவைத்தார். அவர் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராக இருந்தவர். Uses of Literacy என்ற பிரபலமான நூலை எழுதியவர். அவர் Centre of contemporary cultural studies என்ற நிறுவனத்தில், நாவல்கள், ஊடக நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு சமூகவரலாற்று விமர்சனம் செய்தவர். இலக்கியங்களுக்கும் பண்பாட்டுக்கும் உள்ள தொடர்பு, ஊடகங்களுக்கும் பண்பாட்டுக்கும் உள்ள தொடர்பு பற்றியெல்லாம் பொதுப்படையாக ஆராய்ந்தார். அவருடைய பிரிவில் Stuart Hall என்பவர்

வேலை செய்தார். அவர் ஒரு நீக்கிரோ ஆங்கிலக் கலப்பு. மேற்கிந்தியப் பின்னணியில் இருந்து வந்தவர். நான் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற காலத்தில் அவரைச் சந்தித்திருக்கிறேன். அவர் பிற்காலத்தில் பெரிய அறிஞராகிவிட்டார். பிரித்தானிய திறந்த பல்கலைக் கழகத்தில் அவர் சமூகவியல் பேராசிரியரானார். உண்மையில் அவர் ஆங்கிலப் பேராசிரியராக இருந்தவர். பின்னர் சமூகவியல் பேராசிரியராக வந்தார். இது அவரது Multi Deciplanary approach இனால் ஏற்பட்டது. இந்த Multi Deciplanary approach ஒருவரை எந்த நிலைக்குக் கொண்டுசெல்லும் என்பதை இதிலிருந்து உணரலாம். அவர் பண்பாட்டியல் கல்வியைத் தொடர்ந்து செய்தார். சமூகவியலை மார்க்ஸியத்தோடு சேர்த்து அவர் பண்பாட்டு ஆய்வு செய்தார். அதில் பண்பாட்டுக்கும் சமூகத்துக்கும் உள்ள தொடர்பு, அதில் அரசியல் எவ்வாறு இணைகிறது போன்ற விடயங்கள் இருந்தன. இவற்றுள் சில விரும்பக்கூடியதும் இருக்கும், விரும்பக்கூடாததும் இருக்கும். இப்படியாக ஆய்வுசெய்கின்ற முறைமையை அந்தச் சிந்தனைப் பள்ளி வழியாகவும் நான் பெற்றுக்கொண்டேன். இதனை இங்குள்ளவர்கள் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

**தி.ஞா. : *இங்குள்ளவர்கள் என்று யாரைச் சொல்கிறீர்கள்? முற்போக்காளர்களையா?***

**கா. சி. :** முற்போக்குவாதிகளை மட்டுமல்ல எல்லோருமே பெற்றுக்கொள்ள வில்லை என்றுதான் சொல்வேன். ஒரு பல்கலைக்கழகத்தில் பண்பாட்டியல் (Culture Stadies) என்ற பாடத்தைக் கற்பிப்பதாக நான் கேள்விப்பட்டேன். ஆனால் நான் முன்னர் சொன்ன பண்பாட்டியல் பற்றிய கருத்துக்கள் எதுவுமின்றியே அவர்கள் இப் பாடத்தை நடத்துவதாக நான் கேள்விப்பட்டேன். தமிழகத்தில் இது இன்னும் வந்துசேரவில்லை. மார்க்ஸ், வேலுசாமி போன்ற ஒரு சிலருக்கு மட்டுமே இதில் பரிச்சயம் உண்டு என்பதை அவர்களுடன் நான் கலந்துரையாடியபோது அறிந்து கொள்ளமுடிந்தது.

இந்தப் பண்பாட்டியற் கற்கை உண்மையில் Multi Deciplanary approach உள்ளால் வளர்ந்த ஒரு பாடம். உதாரணமாக ரஷ்யாவில் கம்யூனிஸம் வந்தபோது, அங்கு ஏற்பட்ட அநுபவங்கள், சீனாவில் ஏற்பட்ட அநுபவங்கள், வங்காளம் - கேரளாவில் ஏற்பட்ட அநுபவங்கள் மூலம் இதனைக் காணலாம். இந்தச் சீனக் கம்யூனிஸமும், ரஷ்யக் கம்யூனிஸமும் எங்கே வித்தியாசப் படுகிறது என்று பார்த்தால், நான் நினைக்கிறேன் - Chinese culture, Slavonic culture involvement. அந்த ஸ்லாஷ

பண்பாட்டுக்குரிய சில பண்புகள் ரஷ்ய கம்யூனிஸத்தையும் தாக்கியுள்ளன. சீன நாட்டினுடைய பண்புகள், மரபுகள், பாரம்பரியங்கள் ஆகியன கம்யூனிஸத்தை உள்வாங்கிய முறையினாலும் நடைமுறைப்படுத்திய முறையினாலும் செயற்படுத்திய முறையிலும் இதைக் காணலாம். உதாரணமாக Thoughts of Lenin என்று எவரும் சொல்வதில்லை. ஆனால் Thoughts of Mase Tung என்று சொல்வார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், சீனப்பாரம்பரியத்தில் ஒருவருடைய சிந்தனை என்று சொல்வதுதான் மரபு. அதேபோன்று கான்பூசியஸ் உடைய Thoughts தான். கான்பூசியஸ் உடைய சிந்தனை என்று சொல்வதில்லை. சீனாவில் அடிக்கடி சொல்வார்கள், Running dogs of Capitalism என்று. முதலாளித்து வத்திற்குப் பின்னால் செல்பவர்களை அதனுடைய 'ஓடும் நாய்கள்' என்று சொல்வார்கள். சீன நிலச்சுவாந்தர்கள் தமது வயல்களினூடாகச் செல்லும்போது அவர்களின் பின்னால் அவர்களது நாயொன்று ஓடிக்கொண்டு போகும். அதனாலேதான் முதலாளித்துவத்திற்குப் பின்னால் செல்பவர்களை அவர்கள் 'ஓடும்நாய்கள்' என்று சொல்வார்கள். இப்படிப் பார்க்கும்போது பண்பாட்டிற்கு ஒரு பங்கு இருக்கிறது. அதிலிருந்து விடுபடுவது மிகவும் கஷ்டம். ஏனென்றால் அது Condition behaviour. அது எம்முடன் வந்து கலக்கலாம் கலக்காமல் விடலாம். பிரான்ஸிற்கு ஒரு சிந்தனை மரபு. அதுபோல் இங்கிலாந்தில் ஒரு சிந்தனை மரபு. இங்கிலாந்தில் ஒரு எழுதப்பட்ட அரசியல் யாப்பு இல்லை. ஆனால் அந்த நாட்டின் அரசியல் நடைமுறை மிகச்சிறப்பாக அமைந்துள்ளது. அது அரசியல் கலாசாரத்தின் பலம். இந்தியாவில் கூட பலமுறை முயற்சித்த போதும் அங்கு சரியாக அமையவில்லை. சுதந்திரப் போராட்டத்தின் ஞாபகம் இருக்கும்வரை இருந்த இந்தியாவிற்கும், சுதந்திரப்போராட்ட ஞாபகம் மறைந்த பின் மாநிலங்களாக இருக்கும் இந்தியாவிற்கும் இடையில் எவ்வளவோ வித்தியாசங்கள் உள்ளன. பண்பாடு என்பதில் ஊடகங்களின் முக்கியத்துவம் - வானொலி, சினிமா, தொலைக்காட்சி இவைகளெல்லாம் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இலக்கியங்களில் எவற்றை விரும்புகிறோம், எவற்றை வாசிக்கிறோம் என்பதெல்லாம் பண்பாட்டுக் கல்வியின் ஒரு பகுதிதான்.

இந்தப் பண்பாட்டியற் கற்கையில் இரண்டு வகையுண்டு. ஒன்று மார்க்ஸியத்தை ஏற்றுக்கொள்வது. மற்றது மார்க்ஸியத்தை ஏற்றுக் கொள்ளாதது. அமெரிக்காவில் மார்க்ஸியத்தை ஏற்றுக்கொள்ளாத பண்பாட்டுக் கல்வி இருக்கிறது. இதில் என்ன பிரச்சினை என்றால், பண்பாட்டியற் கற்கையை படிப்பவர்கள் பின்நவீனத்துவத்தை சேர்த்துக்கொள்வதா வேண்டாமா என்ற விவாதம் அங்கு நடந்தது. அந்த விவாதத்தில் இவையெல்லாம் தெளிவாகின. என்னைப் பொறுத்தவரையில்

இந்தப் பண்பாட்டியற் கற்கை ஒரு முக்கியமான துறையாக வந்தது. அரசியல், பண்பாடு, பொருளாதாரம், வரலாறு இவையெல்லாம் சேர்ந்து ஒரு பண்பாட்டுக்கோலத்துக்குள்ளால் வரும். நாங்கள் Pop cultureஐ இங்கு எடுக்கிறோம். கோவில் வீதியிலேதான் இது நடைபெறுகிறது. கோவில் வீதியல் பாடும்போது அவர்கள் சீர்காழியினதும், சௌந்தரராஜனி னதும் பாடல்களைப் பாடிவிட்டு, பின்னர் சினிமாப் பாடல்களுக்குப் போய்விடுவார்கள். எங்களால் Pop songs எல்லா இடங்களிலும் பாட முடிவதில்லை. இது நின்று கொண்டு பாடுபவர்களுக்குத்தான் உசிதமானது. கர்நாடக சங்கீதக்காரர்களுக்கு இது பொருத்தமில்லை. கர்நாடக சங்கீதக்காரர்கள் இருந்துபாடவேண்டும். நான் ஒருமுறை W.D. அமரதேவாவிடம் சொல்லியிருக்கிறேன் "நீங்கள் நின்று பாடக்கூடாது, இருந்துதான் பாடவேண்டும்" என்று. இதனை எப்படி விளங்கிக் கொள்வது. உலகப்பொதுவாகவும் இருக்கிறது - அதற்குள் வித்தியாசமும் இருக்கிறது. இவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்ளுகிறோம்.

இன்று நாங்கள் எல்லோருமே நீள்காற்சட்டை போடுகிறோம், பெண்கள் கவுண், சுரிதார் அணிகிறார்கள். இதனால் எங்களுடைய அடையாளங்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்பட்டதாக நாங்கள் நினைப்பதில்லை. இப்படியான விடயங்களெல்லாம் பண்பாட்டுக்கல்விக்குள் வரும். இதில் சில முரண்பாடுகள் வரலாம்.

நான் தஞ்சாவூரில் 1982ஆம் ஆண்டு இருக்கும்பொழுது, இப்பொழுது முக்கியமான எழுத்தாளராகக் கருதப்படும் பொ.வேலுசாமி என்னிடம் கேட்டார் -"என்ன நீங்கள் 'முருகா, முருகா' என்று அடிக்கடி சொல்கிறீர்கள்" என்று. இது என்னுடைய தகப்பனார், பேரனார், என்னுடைய தாய்மாமன் வழியாக வந்த விடயம். அவர்கள் அடிக்கடி 'வேலாயுதம்' என்பார்கள். நானும் 'வேலாயுதம்' என்று சொல்லுவேன். என்னுடைய பேரன் கேட்கிறான், "வேலாயுதம் யார்?, அடிக்கடி கூப்பிடுகிறீர்கள்" என்று. நான் முருகா முருகா என்று சொல்வதைப் பார்த்து தஞ்சாவூரில் வேலுசாமி கேட்டார், "என்ன பெரிய மார்க்ஸிஸ்ற் என்றெல்லாம் பேசுகிறீர்கள்; நீங்கள் எல்லாவற்றிற்கும் 'முருகா' என்கிறீர்களே!" என்று. அதற்கு நான் சொன்னேன், "எனக்கு வயிற்றுக்குள் குத்தினால், 'மார்க்ஸே' என்று கத்தவா?". ஒருவர் பிள்ளையாரே என்பார். இன்னொருவர் அம்மனே என்பார். இந்த வளர்ச்சிகளை நாங்கள் பார்க்கவேண்டும். இவற்றைப் புரிந்து கொள்ளவேண்டும். ஒருவருடைய பின்னணியைக் கவனிக்க வேண்டும். இயன்றளவு புத்திபூர்வமாகவும் தொழிற்பட வேண்டும். நாங்கள் **வேர்களிலிருந்து அறுந்தவர்களாகவும்** இருக்கமுடியாது. இந்தப் போக்கிலே போகிறதுக்கான ஒரு நிலையை அந்தக் கண்ணோட்டத்தை

வளர்த்தெடுக்க வேண்டும். அதனை எங்களுடைய சமூக வாழ்க்கையினுடைய இலட்சியமாகக் கொள்ளவேண்டும். "ஆறுகள் பின்னோக்கிப் பாய்வதில்லை" என்று ஒரு வரலாற்று ஆசிரியன் கூறியதை பண்டாரநாயக்காவும் சொன்னார். ஆனால் ஓடுகிறபொழுது எல்லாம் சங்கமிக்கத்தான் செய்யும். அந்தப் பல்சங்கமத்தில் ஒரு தெளிவு இருக்க வேண்டும். அந்தச் சங்கமத்தில் தெளிவு என்னிடம் இருக்கிறதா தெரியவில்லை. ஆனால் சங்கமம் நிச்சயமாக இருக்கிறது.

**தி.ஞா. : *இந்தப் பண்பாட்டு வேர்கள், பண்பாட்டு சங்கமத்திலிருந்து இலகுவில் விடுபடமுடியாது எனத் தாங்கள் கூறுகிறீர்கள். இப்படிப் பார்க்கும்போது தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லப்படுகிறவர்களும் அவர்களுடைய பண்பாட்டு அம்சங்களிலிருந்து விடுபட முடியாதவர்களா? தாங்கள் தமிழரிடையே பண்பாடும் தொடர்பாடலும் சம்பந்தமாக ஆய்வுகளை மேற்கொண்டவர் என்பதனால் இக்கேள்வி......***

**கா.சி. :** அதாவது அந்தப் பண்பாட்டு அம்சங்களிருந்து அவர்கள் விடுபட முடியாதிருப்பதனாலும், ஆனால் அந்தப் பண்பாட்டு அம்சங்கள் அவர்களைத் தனிமனிதர்கள் என்ற வகையிலும் - குழுமம் என்ற வகையிலும் வைத்திருக்கின்றது என்பதன் காரணமாகவும் அவர்களுடைய போராட்ட இலக்குகள் எல்லாமே அவர்களுடைய சமத்துவ இலக்குகள்தான். யாழ்ப்பாணத்தில் நடந்த தாழ்த்தப்பட்ட மக்கள் சம்பந்தமான போராட்டத்தில், அவர்கள் தங்களுக்கு காணிவேண்டும் என்றோ நிலம்வேண்டும் என்றோ கேட்கவில்லை. தாங்கள் லோன்றி வைப்பதற்கும் சலூன் வைப்பதற்கும் பட்டினத்தில் இடம்வேண்டும் என்று கேட்கவில்லை. கோவில்களுக்குள் நுழைய வேண்டுமென்றுதான் முதலில் கேட்டனர். எல்லோருமே தங்களது சாதியில் இருந்து விடுபட விரும்புவதில்லை. அந்தச் சாதிகாரணமாக ஏற்றத்தாழ்வுகள் இருப்பதைத்தான் விரும்புவதில்லை. நாங்கள் ஒவ்வொருவருமே, நாங்கள் வாழுகின்ற எங்களுடைய இனசன உறவுகளுடன்தான் வாழ விரும்புவோம். அதற்காக நாங்கள் அடக்கப்படுவதையும் விரும்புவதில்லை. இந்தப் போராட்டங் களின் சின்னங்களிலிருந்தே அவர்கள் தமது பண்பாட்டு நிலையிலிருந்து விடுபடமுடியாமல் இருப்பதும் எத்தகைய விடுபாட்டை விரும்புகிறார்கள் என்பதும் தெரியவருகிறன. தங்களைச் சமமானவர்களாகக் கருதப்படாத விடயங்களில், தங்களைச் சமமானவர்களாகக் கருதும்படி கேட்கிறார்கள். அதற்காக அவர்கள் தங்களுடைய வழக்கங்களை, நம்பிக்கைகளை விட்டுவிடுவார்களா? தமது இனசன பந்து உறவுகளை விட்டுவிடுவார்களா? அப்படி விடுவதில்லை. இது எங்களுக்கு மாத்திரமல்ல இந்தியச் சமுதாயத்திற்குள்ளும் இருக்கிறது.

இதில் ஒரு அடிப்படையான வரலாற்று உண்மையை நாம் அறிந்து கொள்ளல் வேண்டும். ஏறத்தாழ நமது சமூக உருவாக்கம் (Social formation) தோன்றிய காலம் முதலே சாதி அமைப்பும், வளங்களுக்கான பெறு வழிகளும்( Access to resources) சமனற்றதாக இருந்து வந்துள்ளன. இந்தச் சமனற்ற தன்மை காரணமாக ஏறத்தாழ நாங்கள் குழும நிலைப் பண்பாடுகளை உருவாக்கிவிட்டோம். ஆனால் காலனித்துவம், பின்காலனித்துவம் ஆகியவை எங்களுடைய அடையாளங்களை மாற்றியுள்ளன. இந்தப் படிநிலைப் பண்பாட்டிலிருந்து (Hierarchical culture) நாம் வேறு மட்டங்களுக்குச் சென்றுள்ளோம், இந்தியர்களாக, தமிழர்களாக, சீக்கியர்களாக. இந்த மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் நமது மரபு வழிப்பண்பாடு நாம் மாற இடம் தரவேண்டும். ஆனால் அந்தந்தப் பண்பாடுக்குள்ளே உள்ள ஒடுக்கு முறை அம்சங்கள் இதற்கு இடம்தராததால் (காரணம்: சமூகப் பொருளாதார அமைப்பு முற்றிலும் மாறாத தாலேயே) நாம் புதிய மட்ட நிலைகளுக்கு மாற்றுருப் பெறுகின்ற பொழுது நமது பாரம்பரியப் பண்பாட்டின் ஒடுக்கு முறை அம்சங்கள் தெரியவரும். சமூக மாற்றித்தினூடாக இவை நடந்துகொண்டே இருக்கும். சிலவேளைகளில் இது பெரும் சிரமமாகவும் இருக்கலாம்.

தமிழகத்தை எடுத்துக் கொண்டால் சுதந்திரப் போராட்டத்தினூடேயும், சுதந்திரப் போராட்டத்திற்குப் பின்வந்த வளர்ச்சியினூடேயும் இந்த மாற்றங்களையும், மாற விரும்பாமையையும் காணலாம். பிராமணர், பிராமணரல்லாதார் என்ற பிரிவினையை இவ்வாறுதான் விளங்கிக்கொள்ள வேண்டும். இந்தியா சுதந்திரம் பெற்று ஏறத்தாழ 50 வருடங்களுக்குப் பின்னர்தான் இந்தியாவின் அடிநிலை மக்களிடையே சமூக ஜனநாயக (Social Democracy) பிரக்ஞை ஏற்பட்டுள்ளது. தலித் எழுச்சியை இவ்வாறாகத்தான் விளங்கிக்கொள்ளவேண்டும்.

**தி.ஞா. : *இவர்களது குணாதிசயங்களில் மாற்றங்கள், விடுபடல் போன்றவை ஏற்படுமா?***

**கா.சி. :** குணாதிசயங்கள் படிப்படியாக மாறும். அவரவர்களுடைய பொருளாதார வசதிக்கேற்ப அந்த நிலைமைகள் மாறும். அதற்குரிய பொருளாதார நியாயத்தை மாற்றினால், நிலைமை மாறும். மாறிய பொருளாதாரச் சூழலுக்குகேற்பச் செயற்படுவர். அதற்கேற்ப சமூக உறவுகளைக் கொண்டாடுவர். அதற்கேற்ற வாழ்க்கை முறைகளை வைத்திருக்க விரும்புவர். பொருளாதாரச் சூழல் மாறும்பொழுது எமது அபிலாசைகள் மாறுகின்றன. ஆனால் அதனை இந்தச் சமூகம் தடுக்கிறபோது அவர்கள் இந்தச் சமூகத்திற்கு எதிரானவர்களாகக்

கிளம்புகிறார்கள். இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களைப் பொறுத்தவரையில் சாதிவித்தியாசமே இல்லை. எழுத்தாளர்களிடையே எல்லா இடங்களிலும் ஒரு சமத்தவம் இருக்கிறது. இது நிச்சயமாக யாழ்ப்பாணத்தில் 50,60 களில் ஏற்பட்ட எழுத்தாளர் மலர்ச்சி இயக்கத்துடன் வந்த விடயம். எங்களுடைய சமூகம் ஒரு புரட்சிவந்த சமூகமல்ல. புரட்சிவந்த சமூகம் என்பதன் கருத்து என்னவென்றால் முந்திய ஒரு பொருளாதார முறையிலிருந்து இன்னொரு புதிய பொருளாதார உறவு முறைக்கு போவதற்கான - அந்தப் பொருளாதார முறைகளுக்கேற்ற அதிகார அமைப்புகளை- அதற்கேற்ற ஆளணிகளை புதுக்கக்கொண்டுவருவதான ஒரு மாற்றத்திற்கான பெயர்தான் Revolution - புரட்சி. எங்களுடைய சமூகத்தில் அந்தமாதிரியான புரட்சி ஏதும் ஏற்படவில்லை. அவ்வாறான புரட்சி ஏற்பட்டதாகக் கருதப்பட்ட சீனாவிலும், ரஷ்யாவிலும், ஹங்கேரியிலும் கூட அதற்கு முன்பிருந்த வழக்காறுகள் மிகப்படிப்படியாகத்தான் மாறின. அந்தப் பொருளாதார அமைப்பு மாறி அந்தப் பொருளாதார அமைப்பின் காரணமாக ஏற்படுகின்ற சூழல்கள் மாறுகிறபோது, அதற்கேற்ற ஒரு அதிகார அமைப்பு முறை - Power Structure வருகிறபொழுது - அந்த அமைப்பு முறைக்கான திருப்தி ஏற்படுகிற போதுதான் அது சரியாக வரும். அதில் எங்கேயோ ஒரு சிறிய பிரச்சினை இருந்ததால்தான் 1917இல் தொடங்கியது 1988இல் விழுந்தது. அந்தப் பிரச்சினை காரணமாகத்தான் 47, 48 இல் வந்த சீனப்புரட்சியில் இவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டன.

Internal Dimension என்கிற ஒன்று இருக்கிறது. அது மாறிக்கொண்டே வரும். படிப்படியாகத்தான் மாறும். அது சகல விஷயங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தும். உங்களுடைய உடை, மொழி, போன்றவற்றிலும் பாதிப்பை ஏற்படுத்தும். யாரைப்பார்த்து Sir என்று சொல்வது? அதற்காகத்தான் Comrade என்று வைத்தார்கள். எல்லோருக்கும் பொதுவான ஒரு சொல் - தோழர். இவ்வாறாக அமைப்புமுறை - அதிகார முறை மாறுகிறபொழுது சொற்கள் மாறும், மொழிமாற்றம் ஏற்படும். இந்தமாதிரியான மாற்றங்கள் எங்களுடைய சமூகத்தில் ஏற்படவில்லை. ஆனால் அடிப்படையில் பொருளாதார மாற்றங்கள் ஏற்படுகின்றன. கல்வி, சுயமொழிக்கல்வி போன்றவற்றின் காரணமாக சகலரும் படிக்கின்றார்கள். படித்தபடியால்தான் உத்தியோகங்கள். உத்தியோகத்தினாலே தான் சமூக அந்தஸ்து ஏற்படுகின்றது. அதனால் சமூகம் மாறுகின்றபொழுது - அடிநிலையில் உள்ளவர்கள் மேலுக்கு வருகிறபொழுது படிப்படியாக அந்த அம்சங்கள் மாறும்; திடீரென்று மாறாது. அந்தமாற்றம் பொதுப்படையானதாக இருக்கவேண்டும். அதற்கு அரசியல் திசைநோக்கி, அரசியல் முகம்நோக்கி ஒரு சமூக முகம் நோக்கி அதனை வளர்த்துக்கொண்டு செல்லவேண்டும். இல்லாவிடில் ஆபத்து ஏற்படும். ஏனென்றால் குறிப்பாக இந்திய

சமூகங்களில் - இலங்கையிலும் கூட ஒரு பிரச்சினை இருக்கிறது. என்னவென்றால், இந்தச் சமூகங்கள் பொருளாதாரம் மாற, அந்தஸ்து மேல்நிலைப்பட அவர்கள் மேல்நிலையில் உள்வர்கள் பின்பற்றுகின்ற பண்பாட்டு நியமங்களைப் பின்பற்றுவார்கள். அன்னமார்கோயில் வைரவர் கோயிலாக மாறும். வைரவர் பிள்ளையாராக மாறுவர். அன்னமார் கோயிலுக்கு விளக்கு வைத்தவர், வைரவருக்கு விளக்கு வைக்க இயலாது. வைரவருக்கு விளக்கு வைத்தவர் பிள்ளையாருக்கு வைக்க இயலாது. இந்தமாதிரியான மாற்றங்கள் படிப்படியாக வரும். நாங்கள் எல்லோரும் எங்களுடைய அந்தரங்கமான உறவுகளை இனசனங்களோடு வைத்துக்கொண்டு வெளியால் புழங்குகிறபோது அப்படிப் பார்ப்பதில்லை - கந்தோரில் பார்ப்பதில்லை. பஸ்ஸில் பார்ப்பதில்லை. முன்னர் பஸ்ஸில் பார்க்கப்பட்டது அதனால் சண்டை நடந்தது. முன்பெல்லாம் எனது குடும்பத்தவர் ஒருவர் பஸ்ஸில் போய்வந்தால், வேட்டியெல்லாம் தோய்த்துக் குளிப்பார். துடக்கு என்கின்ற ஒரு நம்பிக்கை - Sense of pollution என்கிற ஒரு நம்பிக்கை எங்களுடைய சமூகத்தில் இருக்கிறதல்லவா - அது தண்ணீரால்தான் வரும் தண்ணீரால்தான் போகும். இவையெல்லாம் படிப்படியாக மாறிக்கொண்டு வரும். உடுப்புகளை எடுத்துக்கொண்டால், என்னுடைய அம்மாவிற்கு சட்டை போடுகிற ஆக்களைக் காட்டமுடியாது. என்னுடைய பாட்டி (வளர்த்த அத்தை) சொல்வார், "அவள் சட்டைக்காரி- அப்படித்தான் பேசுவாள்" என்று. அவவுக்குத்தெரியாது அவவுடைய பூட்டப்பிள்ளைகள் எல்லோரும் இப்பொழுது சட்டைக்காரிகள்தான்! இவைகளெல்லாம் இப்பொழுது கட்டாயம் மாறும். அந்த மாற்றத்தை நாங்கள் பிரக்ஞைபூர்வமாக மேற்கொண்டு செல்லவேண்டும். அதற்கொரு அரசியல் திசைநோக்கி வேண்டும். அவ்வாறு முன்னே செல்வதுதான் முற்போக்கு. அதற்குவேண்டிய Poltical direction கொடுப்பதுதான் மார்க்ஸியம். மாறாதோ என்று கேட்டால் மாறாமல் விடாது. ஆனால் திடீரென்று மாறாது. படிப்படியாகத்தான் மாறும். முந்தினதையும் இல்லை யென்று சொல்லாமல் இப்ப இருக்கிற மாற்றத்தையும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருக்கவேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒரு புகழ்பெற்ற மொழியியற்துறைப் பேராசிரியர் ஒருவர், இன்று இந்தோனேசியா நாளைக்கு இந்தியா என்று திரிகின்ற ஒரு மனிதர் இருக்கிறார். அவருடைய வீட்டில் அவரது தாயாரின் பெரிய படம் இருக்கிறது. தாயின் படத்தைப் பார்த்தபோது சட்டைகிடையாது - வெறும் தாவணி மாத்திரம்தான் போட்டிருந்தார். அவர்கள் சொல்லப்பட்ட கைக்கோள முதலியார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நான் படத்தைப் பார்த்து மிகவும் சந்தோசமடைந்தேன். "இது அம்மாவின் படந்தான்" என்று

அவர் எனக்குக் கூறினார். நான் சொன்னேன் "அம்மாவின் படம் என்பதிலும் பார்க்க இது குறிப்பிட்ட காலத்தின் வரலாறு" என்றேன். அப்போ மாறாது என்று எதையும் சொல்ல முடியாது.

இதைத்தான் கட்டிடக்கலையில் உள்ள சொல்லைக் கடன்வாங்கி கீழ்க்கட்டுமானம், மேல்கட்டுமானம் என்று கம்யூனிஸத்தில் சொல்வார்கள். உண்மையில் இப்போது அவற்றைக்கூட மார்க்ஸியவாதிகள் ஏற்றுக்கொள்வதில்லை. Ravan Williams என்பவர் சொன்னார், 'மேல் கட்டுமானமும் தாக்கும், கீழ்க்கட்டுமானமும் மேல்கட்டுமானத்தைத் தாக்கும்'. ஒன்றின் அடிப்படையாக ஒன்று வளர்த்தெடுக்கப்படுமென்றால் அந்த வளர்க்கப் பட்டதும் எங்களைப் பாதிக்கும்.

திருநாவுக்கரசு நாயனார் 'குலம் பொல்லேன் குணம் பொல்லேன் குடியும் பொல்லேன்' என்று சொல்கிறார். நாங்கள் சாதியொழிப்பு வேண்டுமென்றால் அந்தத் தேவாரத்தைத் தூக்கியெறிவதா? அதனைப் புரிந்துகொள்ள அல்லவா வேண்டும். அவர் தம்முடைய மனநெகிழ்வுகளைச் சொன்னதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதனை நான் நம்புகிறேனோ என்றால் இல்லை. அதனையெல்லாம் மாணவர்களுக்குந்தான் படிப்பிக்கிறேன்.

'நிலத்தளவே ஆகுமாம் நீராம்பல்; தான்பெற்ற குலத்தளவே ஆகுமாம் குணம்' என்றார் ஔவையார். அப்பொழுது இருந்த சமுதாயத்திற்கு அது சரியாக இருந்தது. இப்போது மாறிக்கொண்டு வருகிறது. காரணம் என்ன வென்றால் நாங்கள் சகலருக்கும் பொதுவான மானுடத்தில் கவனத்தைச் செலுத்துகிறோம். இது சும்மா வந்ததல்ல. இதில் ஒரு ஜனநாயக மரபு இருந்தது. அந்த ஜனநாயகம் அரசியல் ஜனநாயகமாக இருந்தது. பின்புதான் சமூக ஜனநாயகமாக மாறியது. ரஷ்யாவில் அந்தக் கட்சிக்குப் பெயர் Social democrets. எங்களுக்கு உண்மையில் சமூக ஜனநாயகம் ஏற்படவில்லை. அரசியல் ஜனநாயகம்தான் வந்துள்ளது. சமூக ஜனநாயகம் வரும்; அது படிப்படியாகத்தான் வரும். ஆனாலும் சமூகத்தில் சில வகைபாடுகள், Statification- ஒரு படிநிலை ஆக்கங்கள் இல்லாமல் போகாது. மனிதத்துவத்தை நோக்கிய முன்னேற்றத்தில் இவையெல்லாம் இல்லாமல் போகும்.

❑ ❑ ❑

# 4

தி.ஞா. : ***தாங்கள் பல பல்கலைக்கழகங்களில் பணியாற்றியுள்ளீர்கள். இலங்கையிலும் இந்தியாவிலும், அமெரிக்காவிலும், உள்ள பல்கலைக்கழகங்களில் பணியாற்றியுள்ளீர்கள். அக்காலகட்டங்களில் தாங்கள் பெற்ற அநுபவங்கள், தங்களது வளர்ச்சிக்கு எவ்வாறு துணைநின்றன?***

**கா.சி. :** நான் PhD. செய்ததன் பின்னர் 70ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் இவ்வாறு பல பல்கலைக்கழகங்களில் பணியாற்றுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. அதுவும் வித்தியோதராவில் இருக்கும்போது ஏற்படவில்லை. யாழ்ப்பாணத்திற்குப் போய், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூன்று வருடங்கள் வேலை செய்துவிட்டு வந்தபின்னர்தான் எனக்குக் Sabbatical leave கிடைத்தது. அதனைப் பயன்படுத்தி நான் சென்றேன். உண்மையில் இவ்வாறு பல பல்கலைக்கழகங்களுக்குப் போவதனால் ஒருவருடைய அநுபவம் விருத்தியடைகின்றது. அது மாத்திரமன்றி நமது துறையில் உள்ளவர்களை அல்லது நமது துறைசார்ந்தவர்களை, பல்வேறு அறிஞர்களை, ஆராய்ச்சி மாணவர்களைக் கண்டு பேசுவதற்கும், அவர்களுடன் நண்பர்களாகப் பழகுவதற்கும் வாய்ப்பு ஏற்படும். அதுமாத்திரமன்றி வேறுபலருடைய நட்புகளும் இதனடியாகத் தோன்றுவதற்கான வாய்ப்பும் இருக்கிறது.

தமிழ்நாட்டில் 1981ம்ஆண்டு தமிழ்ப்பல்கலைக்கழகம் தொடங்கியவுடன், அங்கு துணைவேந்தராகப் பேராசிரியர் வி.ஐ.சுப்பிரமணியம் இருந்தார். அவருடன் 1966ஆம் ஆண்டிலிருந்தே எனக்கு உறவு இருந்து வந்தது. அவர் இரண்டு பேராசிரியர்களையும் இரண்டு சிரேஷ்ட ஆய்வாளர்களையும்

தமிழகத்துக்கு வெளியே இருந்து அழைத்திருந்தார். அவர் அழைத்த பேராசிரியர்களில் ஒருவர் வரவில்லை. வந்தவர்களில் ஒருவர் இந்தியப் பல்கலைக்கழகங்களில் இலக்கிய - சமஸ்கிருத துறைகளிலே மிகவும் பெயர்பெற்றவரான எஸ்.எம்.காத்ரே. அவர் சமஸ்கிருதப் பேராசிரியர்; மொழியியல் அறிஞர். இந்தியாவைப் பொறுத்தவரையில் அவர்தான் மூலபாட திறனாய்வு என்று சொல்லப்படுகின்ற, பாடஆய்வியலினுடைய மூலபிதா என்று சொல்லலாம். நான் தஞ்சாவூருக்குச் சென்று அங்கு ஆறு மாதம் பணியாற்றினேன். பேராசிரியர் வி. ஐ. சுப்பிரமணியம் எனக்கு ஒருபணி தந்தார். "நீர் எதைப்பற்றி இங்கு ஆய்வுசெய்யப் போகிறீர்?" என்று என்னிடம் வினாவினார். நான் பல்வேறு விடயங்களை எழுதிக்கொண்டு சென்றேன். அதைப் பார்த்துவிட்டு, அதில் நிறைய வேலை செய்யவேண்டிவரும் போல் இருக்கிறது எனக் கூறி, ஆறு மாதத்திற்குள் முடிக்கக்கூடியதான தமிழோடு சம்பந்தப்பட்ட ஓர் ஆய்வினை நான் செய்வதையே அவர் விரும்பினார். நான் கூறினேன், "தமிழில் இலக்கிய வரலாறு என்ற பாடம் எவ்வாறு வளர்ந்துள்ளது -அதனூடாக நாங்கள் அறிவதற்கு ஏதாவது வாய்ப்புகள் உண்டா? ஏதாவது புதிய விஷயங்கள் தென்படுகின்றனவா? என்று பார்ப்போம். அதனை நான் செய்யலாம் "என்றேன். 'தமிழில் இலக்கிய வரலாறு' என்கின்ற ஆராய்ச்சியை நான் அங்கு செய்தேன். அதனைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் முதலில் ஆங்கிலத்தில் பிரசுரித்தது. Literary history in Tamil எனும் தலைப்பில் நான்கு கட்டுரைகளை நான் வாசித்து, அது சம்பந்தப்பட்ட அறிஞர்களை அழைத்து ஒரு பெரிய கருத்தரங்கு நடத்தி, அதில் ஏற்பட்ட வாதங்களை அடிப்படையாகக் கொண்டு அக்கட்டுரைகளை மீள் பரிசோதனை செய்து, அதன் பின்னர் பிரசுரஞ் செய்தேன். இன்று 'தமிழில் இலக்கிய வரலாறு' என்ற அந்த நூல் தமிழகத்திலும் இலங்கையிலும் உயர்நிலை மாணவர்களுக்கு உதவுகிற ஒரு நூலாக இருக்கிறது. நான் PhD. க்குப் பிறகு செய்த ஒரு முக்கியமான வேலைகளில் ஒன்றாக இதனைக் கருதுகிறேன். இதனைச் செய்கின்றபோது நான் பல்வேறு பல்கலைக்கழகங்களுக்குச் சென்றேன். பல்வேறு தமிழ்க் கல்லூரிகளுக்கும் சென்றேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் என்னை இரண்டு வாரம் விருந்தினராக அழைத்திருந்தார்கள். அப்போதுதான் பேராசிரியர்கள் அகஸ்தியலிங்கம், எஸ்.டி.சண்முகம் போன்றவர்களை நண்பர்களாகப் பெறும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அந்த நட்பு இன்றுவரையும் தொடர்ந்து வருகிறது. அதுமாத்திரமன்றி தமிழ்த் துறையிலிருந்த ஆறு. அழகப்பன் என்பவரோடு நாடகம் பற்றியெல்லாம் உரையாடினேன். அந்த நாட்களில், மாணவராக இருந்தவர்தான் தி.மு.க.வில் போக்கு வரத்து அமைச்சராக இருந்த பொன்முடி. அப்படியான உறவுகளெல்லாம் எனக்கு ஏற்பட்டன. பாண்டிச்சேரி French Institute க்கு வி. எச். சுப்பிரமணியம் அவர்கள்

என்னைப்பற்றிச் சிபார்சு செய்து ஒரு கடிதம் அனுப்பினார். அங்கு ஒருவாரகாலம் அவர்களது செலவில் தங்குவதற்கு அனுமதி கிடைத்தது. அங்கு கிடைத்த அனுபவம் மிகப் பெரியது; மறக்க முடியாதது. அங்கு அற்புதமான நூலகம் இருந்தது. எமது பழந்தமிழ் நூல்கள்- குறிப்பாக சமய நூல்கள் எல்லாவற்றறையும் பிரெஞ்சிற்கு மொழிபெயர்த்திருக்கிறார்கள். சங்க இலக்கியம் பற்றிய அகராதிகளில் பிரஞ்சு மொழியில் உள்ள ஒரு அகராதிதான் இன்றும் சிறப்பானதாக விளங்குகிறது. அது இரண்டு பாகங் களைக் கொண்டது. அங்குள்ள அறிஞர்களுடன் பேசிப்பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. கோபால் ஐயர் என்பவருடன் பேசிப்பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அத்துடன் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உள்ள அறிஞர்கள் ஆர்.எம். சுந்தரம், வெள்ளை வாரணனார் நம்பியாரூரன், சுந்தர சண் முகனார், ஏ. எஸ்.ராமன், ராம நரசன், முருகரத்தினம், வரலாற்றுத் துறைப் பேராசிரியர் சுப்பராயுலு, மொழியியல் துறையில் முக்கியத்துவம் உள்ள பேராசிரியர் அரங்கன், வையாபுரிப்பிள்ளையுடன் கடமையாற்றிய மு. சண்முகம்பிள்ளை போன்ற பலருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. சிலம்பொலி செல்லப்பன் அங்கு பதிவாளராக இருந்தார். இவர்கள் எல்லோரையும் சந்திப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. அதனால் அறிவு மிக மிக வளமாகப் பெருகிற்று என்று சொல்லலாம். அந்தக் கால கட்டத்திலேதான், அ. மார்க்ஸ், பொ. வேலுசாமி போன்றவர்கள் தினமும் என்னைச் சந்தித்து அளவளாவினார்கள். பிற்காலத்தில் அவர்கள் தமிழ் நாட்டில் முக்கியமான எழுத்தாளர்களாக, விமர்சகர்களாக - என்னுடன்கூடக் கருத்து வித்தியாசம் கொண்டு விஷயங்களை விவாதிக்கிறவர்களாக மாறி இருப்பது எனக்குப் பெருமையாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறது.

இந்தக் காலகட்டத்திலேதான் நான் மடங்களைப் பார்த்தேன். தருமபுரம் ஆதீனம் ஆகியவற்றில் ஒருநாள் முழுவதும் தங்கியிருந்து அங்குள்ள நடைமுறைகள் யாவற்றையும் பார்த்தேன். அவை பெரிய அனுபவம். அவர்கள் தமிழ் படிக்கிற முறைமை, அதனைச் சொல்கின்ற முறைமை, தமிழ் வளர்க்கிற முறைமை இவையெல்லாம் இலங்கையில் முன்னர் நிலவிய எங்களுடைய தமிழ்க் கல்விப் பரம்பரையை ஒத்தது. அதிலிருந்தும் சற்று வேறுபட்டது என்று சொல்வேன். திருவாவடுதுறை ஆதீனம் ஒருமாதிரியும், தருமபுர ஆதீனம் இன்னொரு மாதிரியும் என்று சொல்லலாம். இதன் பின்பு நான் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்திற்குச் சென்றேன். றொமிலா தாப்பர் என்ற வரலாற்றுப் பேராசிரியரின் அழைப்பின் பேரிலேயே அங்கு சென்றேன். இந்திய வரலாற்றுத் துறையில் அவர் ஒரு பிரசித்திபெற்ற பெண்மணி. அவரை நான் கொழும்பில் சந்தித்து அளவளாவியிருக்கிறேன். ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் அவர்கள் என்னை விருந்தினராக இரண்டுவாரம் அழைத்திருந்தனர். அந்தத் தருணத்தில் நான் திராவிட

முன்னேற்றக்கழகத்தின் தோற்றம்பற்றி ஒரு கட்டுரை வாசித்தேன். அப்போதுதான் கே.என்.பணிக்கர் - இராதாகிருஷ்ணனின் மகன் கோபால், செம்பகலக்ஷ்மி பி.சி.ஜயின், மீனாட்சி போன்ற மிகப்பிரசித்தமான வரலாற்று ஆசிரியர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. தமிழ்நாட்டு வரலாறு ஏன் நீலகண்ட சாஸ்திரிக்குப்பின்னர் அனைத்திந்திய மட்டத்தில் எடுபடவில்லை என்பதற்கான காரணங்கள் அவர்களுடன் ஊடாடுகின்ற போதுதான் தெரிய வந்தது. திராவிடக் கட்சிகளின் வளர்ச்சி காரணமாக, குறிப்பாக அதன் செல்வாக்குக் காரணமாக தமிழை முதன்மைப்படுத்தி வரலாறு எழுதமுனையும் பொழுது, அக்கருத்துக்கள் எடுத்துக் கூறும் முறைமையிலும் கருத்துக்களின் தள நிலைகள் பற்றியும் பல்வேறு புலமைப் பிரச்சினைகள் தோன்றின. திராவிடக் கருத்து நிலை அக்காலத்தில் தமிழ்நாட்டின் மதப்பண்பாட்டு வளர்ச்சியினைப் புறக்கணித்திருந்தது. பக்தி இலக்கியங்கள் மதம்சார் இலக்கியங்கள்பற்றி சனவிருப்புவாத (Populist) போக்குகளைக் கொண்டிருந்தது. இதனால் தமிழையும் தமிழ் நாட்டையும் அனைத்திந்தியப் பின்புலத்தில் வைத்துப் பார்க்கும் முறைமையில் ஊறு ஏற்பட்டது. குறிப்பாக பண்டைய தமிழ் நூல்களின் காலம் பற்றிக் கூறப்பட்ட சில கருத்துக்கள் வரலாற்றுணர்வு அற்றனவாகவே இருந்தன. உதாரணமாக தொல்காப்பியம் கி.மு. ஏழாயிரம் வருடத்திற்கு முந்தியது என்று சொல்வது போன்ற கருத்துக்கள்.. இப்படியான கருத்துக்கள் வரலாற்றின் மற்றைய சான்றுகளுடன் இணைவதும் சிரமமாக இருந்தது. ஒன்று வாதிடவும், இரண்டு தங்களுடைய வாதங்களை நிலைநிறுத்தவும் தயங்குகிற - எடுத்து பேசுகிற பேராசிரியர்கள் பலர் இருக்கவில்லை. பாலச்சந்திரன் என்கின்ற ஒருவர் மாத்திரம் Presidency கல்லூரியில் இருந்தார். அவர் நவீன வரலாற்றை மட்டும் செய்தார். பழைய இந்தியாவைப் பொறுத்தவரையில், கே.கே.பிள்ளை கூட அங்கு பெரிய தாக்கத்தினை வடஇந்தியாவில் ஏற்படுத்தவில்லை. அவர்களோடு வாழ்ந்த அந்த இரண்டு வாரகாலமும் மிகச்சிறந்த காலம். அது மாத்திரமல்ல இன்றும்கூட, சிலவேளைகளில், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் படிக்கிற மாணவர்களை - அந்தத் துறையில் படிக்கிற மாணவர்களை எங்களிடம் சென்று அந்த விடயங்களை அறிந்துவாருங்கள் என்று மேலிடத்திலிருந்து அனுப்புவார்கள். நான் சென்னையில் இருக்கின்றபோதெல்லாம் மாணவர்கள் என்னை வந்து சந்தித்தார்கள். அங்குசென்றபின்னர்தான் எனக்குத்தெரியும், நாங்கள் எழுதுவதெல்லாவற்றிலும் நிதானமாக இருக்கவேண்டும் என்பது. நாங்கள் எழுதுவதையெல்லாம் அவர்கள் மிகக் கவனமாக வாசிக்கிறார்கள். என்னுடைய திணைபற்றிய கட்டுரை அவர்களுடைய கண்ணோட்டத்தில் ஒரு முக்கியமான கட்டுரை. அவர்கள் என்னிடம் கேட்ட கேள்விகளுக்கு என்னால் பதில் சொல்லமுடியவில்லை. ஏனென்றால் நான் தமிழ்

இலக்கியத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் அக்கட்டுரையை எழுதினேன். அவர்கள் அதற்குமேலால் பொருளாதாரக் கட்டமைப்புப் பற்றியெல்லாம் கேட்டார்கள்.

நான் திராவிடக்கழகத்தைப்பற்றிய ஆரம்பக்காலம் பற்றிப்பேசினேன். அப்போது, பெரியாருக்கும் மறைமலையடிகளுக்கும் ஏற்பட்ட பிரச்சினைகள் பற்றியெல்லாம் எடுத்துப்பேசினேன். பேசுகிறபொழுது, நல்லவேளையாக, நான் மறைமலையடிகள் எழுதிய பெரியாருடைய பத்திரிகையான குடியரசில் வந்த கட்டுரைகளையும் வாசித்திருந்தேன். பணிக்கர் என்னிடம் கேட்ட கேள்விகளெல்லாமே குடியரசுப் பத்திரிகையில் இப்படி எழுதியிருக்கிறது என்பதுபற்றியதாகவே இருந்தது. நான் அதிலிருந்து ஒன்றைப் படித்துக்கொண்டேன் - இன்னொருவர் எழுதியவற்றை வைத்துக்கொண்டு எக்காலத்திலும் ஒரு தனி ஆராய்ச்சி செய்யக் கூடாது. அவற்றுடன் தொடர்பான மூலநூலை, மூலச்சான்றைப் படிக்கவேண்டும். ஒருவர் சொல்கிறார் என்பதை வைத்துக்கொண்டு நான் ஒரு பெரிய Theory ஐ Develop பண்ணக்கூடாது. ஏனென்றால் அதனை நான் வாசிக்கிறபொழுது இன்னொரு கருத்துவரும். நான் இதனை எனது தமிழிலக்கிய வரலாறு எழுதுகின்றபோதுகூட அவதானித்தேன். என்னுடைய அனுபவம், எனது செல்வாக்கு, எனது கண்ணோட்டம், நான் படித்த ஆசிரியர்களுடைய செல்வாக்கு, எங்களுடைய இலட்சியங்கள், எங்களுக்கிருக்கிற சிந்தனை முறைமை என்பனவற்றிலிருந்து வேறு விடயங்கள் வெளியாகும். அங்கு இருந்த ஒன்பது மாதங்களும் எனக்கு மிகமிகப் பிரயோசனமான காலமென்பேன். எனக்கு ஒரு உலகம் திறந்துவிட்டது என்பதை அறிந்தேன்.

83ஆம் ஆண்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்குச் சென்றேன். P.H.Farmer அப்போது Centre for South Asian Studies நிறுவனத்தின் தலைவராக இருந்தார். அவர்தான் Peasant colonisation in Ceylon, Ceylon a divided nation ஆகிய மிகப்பிரசித்தமான நூல்களை எழுதியவர். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு இலங்கை பற்றிய தகவல்களுக்கான ஒரு சான்றாதாரமாக அவர் இருந்தார். அங்கு நான் திராவிட கழகத்தின் வளர்ச்சிபற்றி Understanding the Dravidian movement என்பது பற்றிச் செய்தேன். அங்கு வேலை செய்தது மிகப்பெரிய அநுபவம். உதாரணத்திற்கு, ‘தமிழகத்தில் முஸ்லிம்கள்’ என்று ஒரு கருத்தரங்கு அங்கு நடந்தது. அதனை ஒரு பெண் நடத்தினார். எல்லாமாக ஐந்தே பேர்தான் அதில் பங்குபற்றினர். நான்கு மணிக்குத் தொடங்கி ஏழு மணிக்கு அக்கருத்தரங்கு முடிந்தது. அவுஸ்திரேலியத் தேசியப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக இருந்தவரும், போல் ஆர் பிறஸ் என்பவரும் அதில் பங்குபற்றினார்கள். நானும் அதில் பங்குபற்றினேன். எங்களைவிட ஒரு மாணவனும் இருந்தான்.

அக்கருத்தரங்கு முடிந்தபின் எல்லோரும் அதனை ஓர் அருமையான கருத்தரங்கு என்று சொன்னார்கள். நாங்கள் 200, 300 பேர் இருந்தால்தான் கருத்தரங்கு என்று நினைக்கின்றோம். அன்று ஐந்தாறு பேருக்குள் நடந்த விஷயங்கள் மிக முக்கியமானவை. அந்தக் கருத்தரங்கை நடத்திய பெண், தான் முஸ்லிம் பெண்களுடன் கலந்துரையாடிமை பற்றியெல்லாம் கூறினார். நான் சொன்னேன், அவர்களுடன் சந்தித்துப் பேசுவதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்காதே என்று. கீழைக்கரை முஸ்லிம்களை எனக்குத் தெரிந்திருந்தது. நான் கீழைக்கரை சமுதாயம் பற்றிக் கூறியபோது அவர்களுக்குப் புதிதாக இருந்தது. ஆனால் அந்தப் பெண்ணுக்கு ஓரளவு விளங்கியது. ஏனென்றால் அவர் அங்கு சென்று ஆய்வு செய்திருந்தார். ஒரு பெண்ணுக்கு அவர்களைப்பற்றி எவ்வாறு தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்ற பிரச்சினை எழுந்தது. அவற்றைப்பற்றி யெல்லாம் மிக விரிவாகக் கதைத்தோம்.

அதுமாத்திரமல்ல, அங்கு எனக்கு Birth of Indian civilisation எழுதிய Raymond Allchin என்பவருடன் தொடர்பு கிடைத்தது. அவர் மிகப்பெரிய தொல் பொருளியல் ஆய்வாளர்களில் ஒருவர். Astrophysics இல் உள்ள மிகப்பெரிய பேராசிரியர் ஒருவர் அங்கு இருக்கிறார். அவர் சக்கர நாற்காலியிலேதான் நடமாடுவார். எழுந்து நடக்கமாட்டார். எலும்புருக்கி நோயால் பீடிக்கப்பட்டிருந்தார். அங்குள்ள நூலகத்துக்குச் சென்றேன். அது மிகப்பெரியது. இலங்கையில் உள்ள புத்தகங்கள் யாவும் அங்கும் இருக்கின்றன. அங்கு பொறுப்பாக இருக்கும் நூலகருடன் கதைப்பதே தனிப்பெரும் அனுபவமாக இருக்கும். எங்களுடைய Centre இல் ஒரு நூலகம் உண்டு. அங்கு ஒரு முக்கியமான விடயத்தைக் கண்டேன். தொண்டமானாறு ஏரியை எவ்வாறு விருத்தி செய்ய வேண்டும் என்ற தகவல்களை ஒருவர் எழுதியிருந்ததைப் பார்த்தேன். அதைவிடச் சுவாரஸ்யமான - ஆஷ் துரையின் கொலை வழக்குப் பற்றிய (பாரதியாருடைய) ஒரு கடிதம் அங்கிருந்தது. அந்த ஆஷ்துரையோடு சமாந்தரமாக இருந்த இன்னொரு Deputy collector தனது தகப்பனுக்கு எழுதிய கடிதங்கள் அங்கிருந்தன. அதில் ஆஷ் கொலைசெய்யப்பட்ட சம்பவம் எழுதப்பட்டிருந்தது. 'மிகவும் ஆர்வத்தோடு ஆஷ் இருந்தார். அப்படிப்பட்டவரை கொலைசெய்து விட்டார்கள்' என்று எழுதப்பட்டிருந்தது. இவையெல்லாம் பெரிய விஷயங்கள். அத்தோடு இந்தியாவில் இருந்த ஜமீந்தார்கள் பற்றிய புத்தகம் ஒன்றினையும் அங்கு பார்த்தேன். அங்குதான் பிரசித்தமான Hobson Jobson என்ற நூலைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அங்குள்ள மாணவர்களோடு பேசுவது ஒரு புதிய அநுபவம். நான் அங்கு இருக்கிற நாட்களில் அவர்களோடு சேர்ந்து சென்ற் ஜோன்ஸ் கல்லூரியின் Dinning fellow ஆக இருந்தேன். அப்போது கேம்பிறிட்ஜ் பல்கலைக்

கழகத்தின் துணைவேந்தர் அங்கு வந்தார் . அவர் என்னைச் சந்தித்தபோது, "நீர் என்ன செய்கிறீர்?" எனக்கேட்டார். Politicization of culture என்ற தலைப்பில் ஆய்வு செய்வதாகக் கூறினேன். அப்போது அவர் அதுபற்றி விரிவாகக் கூறும்படி கேட்டார். அவர் சர்வதேச ரீதியில் சட்டத்தில் பெரிய நிபுணர். அப்படியானவரின் பக்கத்திலிருந்துகொண்டு, நான் திராவிட முன்னேற்றக்கழகத்தைப்பற்றிச் செய்கிறேன் என்று கூறியபொழுது கூனிக்குறுகிப்போனேன். How the concept of culture is politicized என்பதைப் பற்றிக் கேட்டு, இந்த Aspect ஐப் பார்த்தீர்களா, French tradition ஐப் பார்த்தீர்களா?, Spanish tradition ஐப்பார்த்தீர்களா? French tradition எவ்வாறு அதனைப்பாதித்தது என்றெல்லாம் கேட்டார். உண்மையில் அது போதுமே! அது ஒரு கல்லெறிந்த மாதிரித்தான். குளக்கரைக்கு அந்த Ribbles வரவே நான் பலதை அறிந்துவிட்டேன். அந்தமாதிரியான மிகப்பெரிய அநுபவங்கள் எனக்கு ஏற்பட்டன.

இதன் பின்பு Peter Schalk சுவீடிஷ் பேராசிரியரோடு இருந்த உறவுகள் காரணமாக உப்சாலா பலகலைக்கழகத்திற்குச் சென்றேன். அங்கு மூன்று மாதம் Guest Professor ஆக இருந்தேன். அந்தக் காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் உறவுகள் ஏற்படுத்தினேன். அதன் பின்பு அங்கு பத்மநாதன், பேராசியர் வேலுப்பிள்ளை ஆகியோர் சென்றனர். அந்தப் பல்கலைக் கழகத்தில் நான் மாணவர்களுக்குத் தமிழ் படிப்பிக்க வேண்டி இருந்தது. அவர்களுடைய பாஷை சுவீடிஷ். அவர்களுக்கு ஆங்கில அறிவு மிகக் குறைவு. நாங்கள் பேசுகின்ற ஆங்கிலம் அவர்களுக்குப் புரிவதில்லை. நாங்கள் படிப்பிக்கின்ற முறையிலும் அவர்களுக்குப் படிப்பிக்க முடியாது. அங்குள்ள Department of Theology மிக முக்கியமானது. அங்குள்ள Sweedish Church க்கு இந்தியாவில் தொடர்பு இருந்தது. Ruth Walden என்ற பெண்மணி அங்கு தமிழ் படிப்பித்துக் கொண்டிருந்தார். அவருடைய கணவர் ஒரு Church Missonary. அவர் இந்தியாவில் வேலை செய்தவர். அந்தப் பெண் அங்கு என்னை Introducing Tamil Literature என்ற தலைப்பில் ஒரு தொடர் விரிவுரை நிகழ்த்தச் சொன்னார். முன்று நாட்கள் அந்த விரிவுரைகளைச் செய்தேன். அப்போது, அவர்களுக்கு வேண்டிய விஷயங்களையும் எழுதிக் கொடுத்தேன். Scandinavion Institute of Asian Studies என்றொரு நிறுவனம் உள்ளது. அங்கே டென்மார்க், சுவீடன், நோர்வே, பின்லன்ட ஆகிய நான்கு நாடுகளிலும் உள்ள, ஆசிய கல்வி சம்பந்தப்பட்டவர்கள் இருந்தனர். அவர்களுடைய Resercher ஆக மேற்குறிப்பிட்ட நான்கு நாடுகளிலுமுள்ள ஒன்பது பல்கலைக் கழகங்களுக்கு நான் விரிவுரைகளுக்குச் சென்றேன். இவ்வாறு செல்லும் போது, நாங்கள் தலைப்புகள் சிலவற்றை முன்கூட்டியே அவர்களுக்கு எழுதி அனுப்ப வேண்டும். அதில் அவர்கள் விரும்பிய தலைப்பில் பேசும்படி

சொல்வார்கள். நான், Religion & Poetry -The Tamil Experience, எங்களுடைய இலக்கண அமைப்பில் சில விசேடமான அம்சங்கள் ஆகிய தலைப்புகளில் எழுதிக் கொண்டு சென்றேன். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது, Lund பல்கலைக் கழகத்தில் Religion & Poetry - The Tamil Experience, என்ற தலைப்பில் பக்தி இலக்கியம் பற்றிப் பேசினேன். அதில் ஆண்டாளைப்பற்றிப் பேசிய பொழுது அந்த ஆண்டாளின் Language முக்கிமானது என்று கூறினேன். அங்குள்ள ஒருபெண், ஆண்டாளின் கதையைக் கேட்டு, ஆண்டாளைப்பற்றிக் கேட்டு, ஆண்டாளின் அனுபவம் பற்றியெல்லாம் கேட்டாள். அந்தளவுக்கு ஆர்வமுள்ள மாணவர்களை அங்கு சந்தித்தேன். பல்வேறு பல்கலைக்கழகங்களில் உள்ள மிகச்சிறந்தவர்களை, பல்வேறு துறைகளில் உள்ளவர்களையெல்லாம் நான் சந்திக்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் கேட்கிற கேள்விகள், செய்கிற ஆராய்ச்சிகள் எல்லாம் முக்கியமானவை. நாங்கள் எதிர்பார்க்காத விடயங்களையெல்லாம் அவர்கள் படித்திருப்பார்கள்.

சுவீடிஷ் மரபில் பௌத்தத்தைப்பற்றிய ஆய்வுகள் நிறையச் செய்யப்பட்டுள்ளன. இலங்கை, சீனா, தீபெத் போன்ற நாடுகளில் உள்ள பௌத்தத்தைப்பற்றி மிக மிக நுணுக்கமாக ஆராய்ந்திருக்கிறார்கள். அவர்கள் என்னுடன் கதைத்தபோது, எனக்குப் பௌத்தத்தைப்பற்றித் தெரியாது என்று சொல்லவேண்டியிருந்தது. ஆனால் தமிழில் உள்ள பௌத்த நூல்களைப்பற்றிப் பேசுகிறபோது அவர்கள் மிகவும் ஆர்வமாகக் கேட்டார்கள். மணிமேகலையில் உள்ள பௌத்தம் எது? என்று ஒருவர் கேட்டார். 'அறிதொறும் அறிதொறும் அறியாமை கண்டவாறு' என்பது அப்போதுதான் தெரிந்தது. ஒன்றைப் புதுக்கப் படிக்கிற போதுதான், இதனை இப்படியும் பார்க்கலாமே என்று தெரியாமல் இருந்ததே என்று எண்ணத் தோன்றியது. அது பெரிய உந்தல், பல விடயங்களை வாசிக்கத் தூண்டியது. அது ஒரு முக்கியமான அனுபவம்.

நான் 1988ல் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குத் தமிழ்ப் பேராசிரியராக, பேராசிரியர் சஞ்சீவியால் அழைக்கப்பட்டேன். ஆனால் நான் அங்கு சென்றபோது, சஞ்சீவி போய், பொற்கோ வந்திருந்தார். அங்கு நான் தமிழ் நாட்டில் அரச உருவாக்கம் பற்றிச் செய்ய எண்ணியிருந்தேன் அது பெரிய விடயம். ஆறு மாதத்தில் செய்யமுடியாது. அதன் பின்னர் சங்க இலக்கியத்தில், Organisation of Political Authority in Ancient Tamil Nadu, A study of the Terms used for rulers in Sangam literature ஆகியன பற்றியெல்லாம் அங்கு ஆய்வுகள் மேற்கொண்டேன். இறை, கோ, மன்னன், அரசு, வேந்தன், கிழான் இப்படியெல்லாம் பல

சொற்கள் இருக்கின்றன. இதில் கிழானைத் தவிர மற்ற எல்லாம் மன்னனைக் குறிக்கும் சொற்கள் என நினைத்துக் கொண்டிருக்கிறோம். மன்னன்தான் முதன் முதலில் பரந்த நிலப்பகுதியை ஆண்டவன் என நான் நினைக்கிறேன். பொருந்துபவன், இணைபவன்- Man who fits in - என்ற கருத்திலேதான் மன்னன் என்ற சொல்லைப் பார்க்க வேணடும்போல் இருக்கிறது. அதைப்பற்றியெல்லாம் நான் அங்கு ஆய்வு செய்தேன்.

அங்கு இருக்கிறபொழுது தமிழ்நாட்டு அறிஞர்கள் பலரையும் காண்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. சென்னையில் உள்ள எழுத்தாளர்கள் பலருடனும் ஊடாடுகிற விஷயங்கள் ஏற்பட்டன. Hindu பத்திரிகையைச் சேர்ந்த ராம் உடன் தொடர்பு வந்தது.- இலங்கையில் பிரஜைகள் குழுவினைச் சேர்ந்தவன் நான் என்ற தகைமையும் இருந்தது. அத்தோடு பல்கலைக்கழகத்தில் நான் வேலை செய்த துறையைச் சாராத மாணவர்களும் வந்து கேள்வி கேட்பார்கள் அதற்கெல்லாம் பதில் சொல்லியாக வேண்டும. அங்குள்ள கல்லூரிகளுக்கு விரிவுரைகளுக்குக் கூப்பிடுவார்கள் அதற்கெல்லாம் போகவேண்டும்.

❑ ❑ ❑

# 5

**தி.ஞா.:** ***சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றியபின் அமெரிக்காவிற்குச் சென்றீர்கள் அல்லவா? அங்குள்ள பல்கலைக்கழகங்களில் பெற்ற அநுபவங்களைக் கூறுங்கள்....***

**கா.சி.:** நான் அமெரிக்காவில் பல்கலைக்கழகத்திற்குச் சென்றேன். அப்போது நான் சென்னையில் செய்த ஆய்வுக் கட்டுரை தயாராக இருந்தது. அங்கு சென்றபோது, பிரபல பேராசிரியர் George Hart தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். நான் அவருடன் இணைந்து வேலை செய்வதாக இருந்தது. நான் சென்னையில் செய்த ஆய்வுக் கட்டுரையை, அங்குள்ள கேட்போருக்கு ஒருநாள் வாசித்துக் காட்டினேன். ஐந்து பேர்தான் இருந்தார்கள். அதில் ஒரு சமஸ்கிருதப் பேராசிரியரும் இருந்தார். நான் செல்வதற்கு முதன்நாள் அங்கு பூகம்பம் நிகழ்ந்திருந்தது. அந்தச் சமஸ்கிருதப் பேராசிரியர் என்னிடம் கேட்டார், Earth quake க்கு தமிழில் எப்படிச் சொல்வது? என்று. நான் 'பூகம்பம்' என்று சொன்னேன். அவர் உடனே, என்ன உங்களுக்குத் தமிழில் சொல்லே இல்லையா? 'கம்ப' என்பது சமஸ்கிருதச் சொல் அல்லவா! என்றார். உடனே நான், 'நில நடுக்கம்' என்ற சொல் இருக்கிறது என்றேன். அவர் 'கம்ப' என்பதும் 'நடுக்கம்' என்பதும் ஒன்றல்ல -"Gambe and Nadukkam are not the same" என்றார். அதன் பிறகு நான் எப்போதும் ஆங்கிலத்தில் அல்லது சமஸ்கிருதத்தில் இருந்து தமிழ்ப்படுத்தும்போது அச்சொற்கள் சரிசமனான கருத்தைக் கொடுக்கின்றனவா? என்பதைக் கவனிப்பது வழக்கம். அது வேறு கருத்தைக் கொடுக்கிறதா எனப் பார்ப்பதும் வழக்கம்.

அந்தப் பல்கலைக்கழகத்திற்கு கைலாசபதியும் சென்றிருக்கிறார். பேராசிரியர் Hart உடன் பேசும்போதெல்லாம் நவீன இலக்கியம் பற்றியும், பழந்தமிழ் இலக்கியம் பற்றியும் நாங்கள் பேசுவது அவருக்குப் பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. இன்று வரைக்கும் Hart எனது நண்பராக இருக்கிறார். நான் அங்கு வேலை செய்யும்போது, சுமதி ராமசாமி என்ற பிராமணப்பெண் PhD.செய்தார். அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். Richard Freeman என்ற மலையாள scholarஐ திருமணம் செய்திருந்தார். அப்பெண் சென்ற தடவை கொழும்புக்கு வந்தபோது என்னையும் வந்து பார்த்துவிட்டுச் சென்றார். தமிழ்நாட்டில் அவர் பல சந்தர்ப்பங்களில் என்னைப் பற்றி அங்குள்ள அறிஞர்களுக்குக் கூறியிருப்பதாக அறிகிறேன். கலிபோர்னியாவில்தான் பேராசிரியர் எமனோவைக் கண்டேன். Travidian Etimological அகராதியை எழுதியவர்கள் இருவர். ஒருவர் பேராசிரியர் எமனோ. மற்றவர் பேராசிரியர் பறோ. பேராசிரியர் பறோ முன்னர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் கடமை ஆற்றியவர். நான் PhD.செய்யும் காலத்தில் பறோவுடன் கதைத்திருக்கிறேன். எனது பேராசிரியர் தொம்சனுக்குத் தமிழில் தாடனம் இல்லாததால் அவர் பறோவுடன் கதைக்கும்படி கூறுவார். மாதத்தின் கடைசி வெள்ளிக் கிழமைகளில் நான் அவரிடம் போய் கதைப்பேன். அது பெரிய அநுபவம். ஒருமுறை பறோ என்னைத் தேநீர் அருந்த அழைத்துச் சென்றபோது, Senior Common Roomல் ஒருவர் இருந்தார். அவர் ஒரு பேராசிரியர். பறோ என்னைப்பற்றி அவருக்குக் கூறினார். அப்போது அவர், 'நீர் சிங்கள நாடகத்திற்கும் தமிழ் நாடகத்திற்கும் உள்ள ஒற்றுமையைப் பற்றிப் பேசாமல், ஏன் கிரேக்க நாடகங்களைப் பற்றிச் செய்ய வருகிறீர்?' என்ற தொனியில் என்னைக் கேட்டார். நான் கூறினேன், 'தமிழில் நாடகங்கள் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் தகவல்கள் இல்லை. அதனால் நாடகம் வளர்ச்சியடைந்த ஒரு சமுதாயத்தோடு செய்யும்போது மறுமொழி வரும் என்பதாலேயே நான் இங்கு வந்து ஆய்வு செய்கிறேன்' என்று பதில் சொன்னேன்.

பேராசிரியர் எமனோவுக்கு அப்போது வயது 82. திடகாத்திரமாக இருந்தார். அமெரிக்காவில் 70 வயதுதான் ஓய்வு பெறும் வயது. பெரிய பேராசிரியர்கள் 75 - 80 வயதுவரை வேலை செய்யலாம். அவர் 80 வயது வரை வேலை செய்து விட்டு அப்போது ஓய்வு பெற்றிருந்தார். அவர். Toda Love Songs - தொதுவர்களுடைய காதல் பாடல் பற்றிய முக்கியமான ஆய்வுகளை எழுதியவர். இதற்கும் எங்களுடைய அகப்பாடல் மரபுக்கும் தொடர்பு இருக்கிறது. அங்கும் சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார். பக்கத்தில் இருப்பவர்களுக்குத் தவிர, இதில் யார் காதலன் - யார் காதலி என்பது தெரியாது. அவருக்கு முன்பு அவரது இடத்தில் இருந்தவர், ஒரு சமஸ்கிருதப் பேராசிரியர். அப்பல்கலைக்கழகத்தின் அணுவாராய்ச்சித்துறைப் பேராசிரியர் ஒருவருக்கு கடவுளின் விசுவரூபம்

பற்றிய பகவத்கீதை சுலோகத்தை அந்த சமஸ்கிருதப் பேராசிரியர் விளக்கியிருந்தார். அணுக்குண்டு வெடித்தபோது, அதனை அவதானித்த அந்தப் பேராசிரியர், தனக்கு சமஸ்கிருதப் பேராசிரியர் விளக்கிய சுலோகமே - "ஆயிரம் கோடி சூரியப்பிரகாசம்' என்று சமஸ்கிருதத்தில் சொல்லப்படுகின்ற அந்த சுலோகமே ஞாபகம் வந்ததாக, Brighter than thousand suns; என்ற தனது நூலில் விபரித்துள்ளதாகக் கூறியதாக, எமனோ என்னிடம் கூறினார். நாங்கள் வழக்கமாகச் செல்லும் பாதையில், ஒரு அரைவட்ட அமைப்புடைய ஓர் இடம் இருந்தது. அந்த இடத்தைக் காட்டி, இங்குதான் அந்தச் சமஸ்கிருதப் பேராசிரியர் இருந்தார் என எமனோ கூறினார். பேராசிரியர் எமனோவுடன் கதைத்தது பெரிய அநுபவம். மறு நாளும் நான் அவருடன் கதைக்க விரும்புவதாகக் கூறினேன். அவர் அடுத்த நாள் தானாகவே என்னைத் தேடி வந்து விட்டார். எமனோ பெரியமனிதர். அவரை நான் சந்தித்தது பெரும் பாக்கியம்; வரம் என்று சொல்லலாம்.

அந்தக் காலகட்டத்தில் கலிபோர்னியாவில் உள்ள கோவில் ஒன்றில் சூரன்போர் நடந்தது. கந்தஷஷ்டி விரதகாலம். நான் கௌசல்யா என்ற பெண்ணுடன் அந்தக் கோவிலுக்குக் காரில் சென்றேன். கௌசல்யா Hartஇன் மனைவி. அப்பெண் கந்தஷஷ்டி விரதம் இருந்தாள். நானும் அன்று மாமிசம் உண்பதைத் தவிர்த்து அவளுடன் சென்றேன். அங்கு அளவெட்டி சுவாமியுடன் சம்பந்தமுடைய ஒருவர் இருந்தார். அவர்தான் அங்கு பூஜை செய்தார். அது வேறொரு அநுபவம்.

அங்குள்ள நாடகத்துறைக்குச் சென்றேன். திறந்தவெளி அரங்கு - அதில் நாடகங்கள் நடக்கின்ற விதம் இவற்றையெல்லாம் பார்த்தேன். கிரேக்க அரங்கின் மாதிரியை வைத்திருக்கிறார்கள்.

மற்றது, சமஸ்கிருதத் துறையில் இருந்தவர்களோடு நாங்கள் வேலை செய்தது. என்னுடைய சொந்தத் தேடல்களுக்காக நான் போய்ப் பார்த்தது. அமெரிக்காவால் நமது நாட்டில் இருந்து வாங்கப்படுகின்ற நூல்கள் எல்லாம் அங்கிருந்தன. தமிழர் சால்பு, இலக்கிய வரலாறு, கைலாசபதியினுடைய நூல்கள் என்னுடைய ஏழெட்டு நூல்கள் அங்கிருந்தன. Drama in ancient Tamil society அங்கு இருந்தது . அது பெரிய விஷயம்.

பெர்கிலியில் ஏற்பட்ட இன்னுமொரு அநுபவம். நான் சென்ற நேரத்தில் Heinz என்ற ஜேர்மன் பேராசிரியரோடு சேர்ந்து Hart புறநானூற்றுப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். Hynes, ஜூத இனத்தைச் சேர்ந்தவர். அவருக்குச் சமஸ்கிருதம் தெரியும். தமிழும் கொஞ்சம் தெரியும். அவர்கள் இருந்த இடத்திற்கு நான் ஐந்தாறு மாடிப்படிகள் ஏறிச் செல்ல வேண்டியிருந்தது. லிப்ட் இருக்கவில்லை.

நான் அங்கு சென்றபோது ஐந்தாறு பிள்ளைகள் சூழவிருந்தனர். Hart பாட்டைப் பாடுவார். பின்னர் பாட்டின் கருத்தைச் சொல்வார். ஹைன்ஸ் அந்தத் தாளத்தைப் பிடித்துக் கொண்டு அதற்கேற்றமாதிரிப் பாடுவார். நான் ஒருத்தன்தான் அங்கு கறுப்பன். இருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். என்னை அறியாமலே நான் தலை ஆட்டத் தொடங்கிவிட்டேன். ஹைன்ஸும் நானும் நன்கு சினேகிதமாகிவிட்டோம். அடுத்தநாள் ஹைன்ஸ் என்னிடம் வந்தார். வந்து என்னிடம் சொன்னார், "இரவு ஒரு சுவாரஸ்யமான விஷயம் நடந்தது. எனது மகள் கேட்டாள், 'அந்த இந்தியர் நீங்கள் சொல்வதற் கெல்லாம் ஏன் தலையசைத்து இல்லை.. இல்லை என்று கூறினார்?' - Why did that Indian shake his head and said no to everything you said?. நான் அவளுக்குச் சொன்னேன், அவர் இல்லையென்று கூறவில்லை. அவர்கள் ரசிப்பது அப்படித்தான் -That is the way they appreciate என மகளுக்கு விளக்கம் கொடுத்தேன் என்றார். நான் தலையாட்டி ஆகா என்று ரசித்ததை, அவரது மகள் இல்லை என்று கூறி மறுத்ததாகக் கருதியிருக்கிறாள். இந்தமாதியான அநுபவம் எனக்கு பெர்கிலியில் கிடைத்தது.

அதன் பிறகு நான் ஹாவாட் பல்கலைக்கழகத்திற்குச் சென்றேன். அங்கு மூன்று நான்கு நாட்கள்தான் தங்கியிருந்தேன். அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் Anthropologyல் மிகப் பெரிதாகப் போற்றப்படுகின்ற இருவர் அங்கு இருந்தனர். ஒருவர் எஸ்.ஜே.தம்பையா. மற்றவர் நூர் யால்மன். தம்பையா என்னை வரவேற்று, தாய் தனக்கு யாழ்ப்பாணத்தில் சமைத்துத்தந்த வெண்டிக்காய் குழம்பு செய்து தந்தார். நான் ருசித்துச் சாப்பிட்டேன். அவரது மனைவி சிரித்த முகத்துடனேயே இருப்பார். அன்று எல்லோரும் மகிழ்வுடன் உரையாடினோம்.

ஹாவாட் பல்கலைக் கழகத்தில், Theological Institute இல் உள்ள நூலகத்தை நான் சென்று பார்த்தேன். அங்கு மூன்று நான்கு கோவைகள் இருந்தன. திராவிடக் கழகத்தினரால் போற்றப்படும் ஒரு சமூக விஞ்ஞானி, பகுத்தறிவாளி, American Non beliver ஆன இங்கர்சால் பற்றிய தகவல்கள் அங்கு இருந்தன.

அடையாறு பிரம்மஞான சங்கத்தில் இரண்டு விதமான ஆட்கள் இருந்தனர். ஒன்று Olcott ஆட்கள். மற்றது Anni Besant. இந்து மதத்தில் சில குறைபாடுகளை Olcot ஆட்கள் ஏற்றுக் கொண்டனர். - குறிப்பாக பிராமணியம் சம்பந்தப்பட்ட சில எதிர்க்கருத்துக்களை ஏற்றுக் கொண்டனர். அந்த விடயங்கள் எல்லாம் அவற்றுள் இருந்தன. சில கடிதங்களும் துண்டுப் பிரசுரங்களும் பிரசுரிக்கப்படாமல் இருந்தன. அவை முக்கிய மானவை. அவற்றையெல்லாம் பார்க்க முடிந்தது.

அதன் பின்பு விஸ்கொன்ஸின் பல்கலைக்கழகத்தைச் சென்று பார்த்தேன். என்னோடு வேலை செய்த ஒரு பூமிசாஸ்திரப் பேராசிரியர் - ஒரு இலங்கைத் தமிழர் அங்கு இருந்தார். அவருடன் தங்கியிருந்து அங்குள்ளவற்றை யெல்லாம் பார்த்தேன்.

அமெரிக்க விஜயத்தில் எனக்கு மிகமுக்கியமானது பெர்கிலி. ஹாவார்ட்டில் நின்றபோதுதான் ஒன்று தெரியவந்தது. என்னவென்றால் அவர்கள் Theological Instituteஇல் சமயத்தைப்பற்றித்தான் படிப்பித்தார்கள். சமயம் பற்றிப் படிப்பிக்கும்போது, Devotional Aspect and religion என்ற ஒரு கருத்தரங்கு செய்கிறார்கள். அதிலே எங்களுடைய பக்திமார்க்கம் மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. அதில் அவர்கள் தமிழ் மூலத்தைப் பயன்படுத்தி நாயன்மார் ஆழ்வார்களைப் பற்றிப் பார்க்கிறார்கள். அந்த வகுப்பை முதலில் செய்தவர் ஏ.கே. இராமானுஜம். அவர் காலமாகிவிட்டார். அதற்குப் பின்பு யார் செய்வதென்று அந்தரப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த மாணவர்களில் சிலரை நான் சந்தித்தேன். அதில் தென் இந்திய பிராமணப் பையன்கள் இருவர் இருந்தனர். நான் அவர்களுக்கு இலங்கையைப்பற்றி ஒரு விரிவுரை செய்தேன். அந்த விரிவுரைக்குப் பலரும் வந்திருந்தார்கள். இங்கு "Under the bow tree" எழுதிய நூறி ஆல்மன் என்பவரும் வந்திருந்தார். அவரிடம் பேசியபோது அவர்தான் அந்த மாணவர்களைச் சந்திக்கும்படி கூறினார். முன்னர் வீரகேசரி ஆசிரியராக இருந்த சிவப்பிரகாசமும் அங்குவந்து மாலை நேரத்தில் ஒரு விரிவுரை நிகழ்த்தினார். பிரேமதாஸாவின் ஆட்சியில் நிட்சயமாக வேறு சில எதிர்பார்ப்புகள் இருக்கும். கறுவாக்காட்டு எதிர்பார்ப்புகள் இந்த அரசியலில் இருக்காது என்று நான் பேசினேன். அப்போதுதான் அவர் சொன்னார், கனகாலத்திற்குப் பிறகு நீங்கள்தான் கொஞ்சம் நம்பிக்கையூட்டுவதான கருத்துச்சொல்கிறீர்கள் என்று.

அவர்கள் தமிழ்ப் பையன்கள் அவர்களுக்கு தமிழ் ஏன் இவ்வளவு பெரியது - அப்பர், சுந்தரர் என்றால் உயிரை விடுகிறார்களே! என்ன விசயம் அதை எங்களுக்குக் கொஞ்சம் சொல்லுங்கள் என்று கேட்டார்கள். நான் அவர்களுடன், Religion and poetry பற்றிப் பேசும்போது எனக்கு ஒரு முக்கியமான கருத்து ஒன்று வந்தது. எங்களுடைய தேவார திருவாச கங்களை, ஆழ்வார் பாடல்களை இலக்கியங்களாக எழுதவேண்டும். இலக்கியங்களாக விமர்சிக்கவேண்டும் என்பதுதான் அது.

திருஞானசம்பந்தருடைய தேவாரங்களை நான் ஏற்கனவே கவிதைகளாகப் பார்த்திருக்கின்றேன். அது ஒரு முக்கியமான விசயம். என்னுடைய மாணவர் ஒருவர் அதைத் தனது ஆய்வுக் கட்டுரைக்கான பொருளாகக் கொண்டிருந்தார்.

தேவாரமுதலிகளின் ஆளுமைகளைப் பார்க்கும்போதுதான், அந்தப்பாடல்களின் இலக்கியச் சுவை நன்கு தெரியவருகிறது. உதாரணமாக சுந்தரர்,

*“மூளாத் தீபோல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி*
*ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னற்கால்*
*வாளாங்கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே....”*

மூளாத் தீபோல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி - தீ மூளாமல் இருந்தால் என்ன செய்யும் - புகைக்கும், கண்ணுக்குள் குத்தும்- அது எரிக்காது.

ஆளா இருக்கும் அடியார் தங்கள் - இந்த ஆள் என்பதற்குக் கருத்து Person என்பதல்ல - உன்னுடைய ஆள் என்றால் - உனது தனிப்பட்ட அடிமை - வேலையாள் என்பது கருத்து. பல்லவர், சோழர் காலத்தில் இதுதான் கருத்து.

“அல்லல் சொல்லற்கால் வாளாங்கிருக்கும் - பேசாமல் இருக்கிறியே அப்பா, சரி இருந்திட்டுப்போ.” இவ்வாறு எடுத்துக்கூற அவர்கள் திகைத்துப் போனார்கள்.

“கடவுளே, ஆண்டவரே, நாங்கள் உன்னைப்பிரார்த்திக்கிறோம். அல்லது அல்லாஹ்வைப் பார்த்து அல்லாஹ் எங்களுக்கு எல்லாம் தருவாயாக” என்றெல்லாம் உலகத்தில் மதங்கள் பேசும்போது, வாளாதிருப்பின் திருவாரூரில் வாழும் - சரியப்பா, நீ தராவிட்டால் வைத்துக்கொள். நீ வைத்துக்கொள் என்று இறைவனைப் பார்த்துக் கூறும் பாங்கு, கடவுளைக் கிட்டவைத்த பாங்கு. அதுவும் அந்தக் காலத்தில் சிவனையும் அம்மையையும் வைத்துத்தான் பாடப்பட்டது.

‘இரண்டாவது பக்தியுகம்’ என்று நான் எழுதியிருப்பது (15 - 17 நூற்றாண்டுகளை) முருகனையும் அம்மனையும் வைத்துப் பாடப்பட்ட பாடல்கள். எத்தகைய நயமிக்க பாடல்கள்! கடவுளின் பக்கத்தில் நிற்பதுபோன்ற உணர்வினைக் கொடுக்கும் பாடல்கள்.

சகலகலாவல்லி மாலையில் - கோமளமே என்று பாடும்போது உனது பக்கத்திலே நிற்கின்ற உனது மகளை, உனது தங்கச்சியைத் தடவி விடுகிற மாதிரி இருக்கும். அதுமாத்திரமல்ல ஒரு பாடலில் அம்மனுடைய எல்லா நகைகளையும் சொல்லிக்கொண்டு வந்து ‘முத்து மூக்குத்தியும், இரத்தினப் பதக்கமும் முடிந்திட்ட தாலியழகும்’ - அம்மனுடைய கழுத்தில்

முடிந்திட்ட தாலி. ஒரு பெண் தாலி கட்டியிருப்பதைப் பார்த்து சந்தோசப்படக்கூடிய ஆள் யார்? - அந்தப் பெண்ணின் அப்பா அல்லது அம்மா அல்லது சகோதரன். அம்மன் சகோதரி ஆகிறாள். இந்த Source of devotion இருக்கிறதே, இது தமிழில் இருந்துதான் ஆரம்பமாகியது. கடைசியில் சைதன்னியருக்கு சென்றது. இந்த 'ராதா' வழிபாடுகூட தமிழில்தான் தொடங்கியது. தமிழில்தான் முதன் முதலில் கிருஷ்ணனுக்கு ஒரு காதலி இருக்கிறாள் என்ற மரபு இருக்கிறது. 'நப்பின்னை' - "நப்பின்னை பிள்ளாய், நங்காய் எழுந்திடாய்" - நப்பின்னை பற்றி ஆச்சியர் குரவையில் வருகிறது. இந்த நப்பின்னைதான் ராதாவாக மாறியதாக ஏ.கே.மஜூம்தார் என்பவர் கூறுகிறார். நப்பின்னை என்றால், நமக்குப் பின்னே வந்தவள் என்று பொருள். நமது தங்கச்சி. அவளைக் கண்ணனுக்குத் திருமணம் பேசப்பட்டிருக்கிறது. அவர்கள் திருமணம் செய்யவேண்டியவர்கள். எல்லாக்காலத்திலும் அவர்கள் திருமணம் செய்யவேண்டியவர்கள். ராதா எப்போதும் அழகானவள், இளமையானவள். எப்போதும் நெருக்கமானவள், எப்போதும் அருகே இருப்பவள், எல்லாக் காலத்திலும் அவள் கன்னிப் பெண். விரும்பத்தக்கவள். ராதா அப்படித்தான். ராதா Culture கடவுளை அடைவதல்ல முக்கியம் - கடவுளைத்தேடுவதுதான் முக்கியம். This entire thing was opened up. அந்த மாணவர்கள் கேள்வி கேட்கிறார்கள். அதுவும் MIT இல் Engineering செய்கின்ற தமிழ்நாட்டுப் பிராமணப் பையன்கள். அவர்களுக்குச் சிறிது காழ்ப்புணர்வு, சமஸ்கிருதத்தில் இவைகள் இல்லையே என்று. இந்தக் கேள்விகளே தேடல்களுக்கு ஆளாக்கும்.

அதன் பிறகு யப்பான் சென்றேன். ஓனோ என்ற பேராசிரியர் அங்கு கடமையாற்றிக்கொண்டிருந்தார். ஷண்முகதாஸ் வேலை செய்த இடத்திற்கும் சென்றேன். பின்னர் மலேசியா, சிங்கப்பூர் பல்கலைக் கழகங்களுக்கும் சென்றேன்.

நான் கேம்பிரிட்ஜில் இருக்கும்போது, பிரிட்டிஷ் லைபிரரிக்கு லண்டனுக்கு வருவது வழக்கம். அப்போதுதான் மிக முக்கியமான, பிரித்தானியாவில் இருந்த அமெரிக்க அறிஞர் Birturn Stine அவர்களைச் சந்தித்தேன். இவர்தான் தமிழக வரலாற்றில் நீலகண்டசாஸ்திரிக்குப் பிறகு ஒரு முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருந்தவர். அவர் நீங்கள் ஒரு இந்தியரா என்று என்னைப்பார்த்துக் கேட்டார். அவர் ஹாவாயில் இருந்தவர். ஓய்வின்பின் வந்திருந்தார். நான் அவரது புத்தகங்களை வாசித்ததாகக் கூறினேன். அவர் விஜய நகர காலத்தில் உள்ள சதகங்களை முக்கியப்படுத்திக் கூறினார். நான் சொன்னேன், 'எங்களுக்கு சதக இலக்கியங்கள் பெரிதாக இல்லை. நீங்கள் கூறுவது

எல்லாவற்றையும் சதகத்துக்குள் எடுக்கலாமோ தெரியவில்லை என்றேன்.' அவர் உடனே கூறினார். 'நீங்கள் கொஞ்சம் பார்த்திருக்கிறீர்கள். வேறும் சில சதகங்களும் இருக்கின்றன. முழுச் சதகங்களையும் நீங்கள் பார்க்கவேண்டும்' என்றார். "இவற்றையெல்லாம் எழுத வேண்டியது நீங்கள்; நாங்கள் அல்ல" என்றும் கூறினார். Birturn Stine கூறிய அந்தச் சொல் இன்றைக்கும் என்னைவிட்டுப் போகவில்லை. நாங்கள் எழுதவேண்டியவற்றை யாரோ எழுதுகிறார்கள்.

Alf Hytal Bell என்ற அமெரிக்க மானிடவியலாளர் தமிழ் நாட்டிலிலுள்ள திரௌபதி வழிபாட்டுமுறைகள் பற்றி அக்குவேறு ஆணிவேறாகப் பார்த்திருக்கிறார். இது தொடர்பாக நான்கு புத்தகங்களை எழுதியிருக்கிறார். அவர் எழுதிய புத்தகத்தில் காத்தவராயன் பற்றி இருக்கிறது. உண்மையில் காத்தவராயன் பற்றி நான் ஆங்கிலத்தில் எழுதவேண்டும் என்று நீண்ட காலமாக நினைத்திருந்தேன். நான் அவரிடம் கூறினேன், 'உங்கள் முன் நிற்பதற்கு எனக்கு மிகவும் வெட்கமாக இருக்கிறது. நீங்கள் காத்தவராயனைப் பற்றி எழுதியிருக்கிறீர்கள். ஆனால் நாங்கள் இன்னும் எழுதவில்லை' என்றேன். இப்படியாக பல்வேறு பல்கலைக்கழகங்களுக்குப் போவது எங்களைக் கூர்மைப் படுத்தும். எங்களைப் பிறசெல்வாக்கிற்கு ஆட்படுத்தும். அதன்காரணமாக எங்களை விரிவடையச் செய்யும்.

அண்மையில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வருகைப் பேராசிரியராகச் சென்றேன். என்னுடைய பதவி ஓய்வு அங்குதான். இலங்கையில் பதவி ஓய்வு பெற்று அங்குதான் சென்றேன். அங்கு போனபோது ஓர் எழுத்தாளனாகச் செல்வதிலும் பார்க்க நான் ஒரு தமிழறிஞராகவே சென்றேன். நான் பழகியது முழுக்க முழுக்கத் தமிழறிஞர் களுடன்தான். பேராசிரியர்கள் சோ.ந.கந்தசாமி, அகஸ்தியலிங்கம், பொற்கோ, சி.சண்முகம், இளவரசு, இ.சுந்தரமூர்த்தி, தமிழ்அண்ணல், மணவாளன் ஆகியோரோடும் பழகினேன். அதற்கு முன்னர் எழுத்தாளனாக, விமர்சகனாக, ஒரு மார்க்ஸிஸ்ட் ஆக பல இடங்களுக்குச் சென்றிருக்கிறேன். இந்த முறை முற்று முழுதாக ஒரு தமிழ் அறிஞராகச் சென்றேன். என்னுடைய நண்பர் ஒருவர் இதுபற்றி, "உங்களுடைய நட்புகளே மாறிவிட்டன" எனக் கூறிக் குறைப்பட்டார். 'இவர் என்ன எங்களிடம் வந்து பேசுகிறார் இல்லையே. அங்கேயே நிற்கிறார்' என்று குறைப்பட்டார். ஏனென்றால் எங்களுடைய பாரம்பரியங்களையும் சொல்லவேண்டிய தேவை யிருக்கிறது. பேராசிரியர் செல்வநாயகத்திடம் நாங்கள் படித்த முறை, அல்லது அவர் படிப்பித்த முறை இவைகளெல்லாம் அங்கு தெரியாது. நாச்சிமுத்துவுக்கு பேராசிரியர் வேலுப்பிள்ளையைத் தெரியும். நாங்கள் இவற்றைச் சொல்லும் போது அவர் அதனைப் புரிந்துகொண்டார்.

செல்லமணி - மட்ராஸ் கிறிஸ்தவக் கல்லூரியில் உள்ளவர். அவர் தொல்காப்பியம் அகத்திணையியலை மொழி பெயர்த்தவர். அவராலும் புரிந்துகொள்ள முடிந்தது. இப்படிப் பல்வேறு மட்டங்களில் இத்துறைகளில் உள்ள எல்லோருடனும் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

**தி.ஞா. : *தாங்கள் ஒரு கம்யூனிஸ்ட் என்ற வகையில் அல்லது இங்குள்ள ஒரு எழுத்தாளன் என்ற வகையில் வெளிநாடுகளில் நடந்த மகாநாடுகள் சிலவற்றிற்குச் சென்றுள்ளீர்கள். அந்த அநுபவங்கள் பற்றிக் கூறுங்கள்...***

***கா.சி. :*** ரஷ்யாவுக்கு நான்கு தடவைகள் சென்றிருக்கிறேன். மொஸ்கோ பல்கலைக்கழகத்தை ஒரு தடவை சென்று பார்த்தேன். Oriental institute இல் உள்ள தமிழ்ப்பேராசிரியர்களுடன் பேசியிருக்கிறேன். அவர்களுள் ஒருவரை தமிழ் பல்கலைக்கழகத்திலும் பார்த்திருக்கிறேன். அந்திரநோவ் அவர்களை அங்கு கண்டேன். அவர் தமிழ் இலக்கணம் பற்றி நல்ல ஒரு நூல் எழுதியிருக்கிறார். அவரோடு அதுபற்றியெல்லாம் பேசினேன். பின்னர் இந்திய வரலாற்றுடன் சம்பந்தமான ஒருவரைச் சந்தித்துப் பேசினேன். மார்க்ஸிய வரலாற்றின் அடிப்படையில் அலெயேவ் என்பவர் விஜயநகர காலம் பற்றிய ஒரு இளம் விற்பன்னர். அவர் எப்படி விஜயநகர காலம் பிரித்தானிய குடியேற்ற வரலாற்றுடன் இணைகிறது என்பதுபற்றி ஆய்வுகளை மேற்கொண்டவர். அவர் மார்க்ஸியம் பற்றிப் பல விடயங்களைப் பேசினார். நாங்கள்தான் மார்க்ஸியம் பற்றி ஏதோ அதிகம் படித்தவர்கள், தெரிந்தவர்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் அவரோடு பேசும்போது அவர் பல விடயங்களைச் சொன்னார். அப்போதுதான் நான் Lesy Goonawardene எழுதிய சில கட்டுரைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்தேன். அவரோடு பேசும்போது அந்தக் கட்டுரை பற்றிப் பேசினேன். இதைத்தெரிந்திருந்ததனால், தெரியாதவற்றிற்கு 'ஜால்ஜாப்பு' சொல்லமுடிந்தது. கொஞ்சம் தெரிந்திருந்ததால், தெரியாததற்கு அது எங்களது Area அல்ல என்று சொல்ல முடிந்தது. அவர் உடனே தமிழில் இதைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது என்று கேட்பார். அவர் தனது கண்ணோட்டத்தில் தமிழையும் பார்ப்பார். அதிலே கேள்வி கேட்பார். தமிழ் இதைப்பற்றி என்ன சொல்கிறது. தமிழில் இதைப்பற்றி என்ன பார்க்கிறீர்கள். அதில் இப்படி இருக்கிறதா? இருக்கா இல்லையா என்று கேட்கும்போது நாங்கள் பதில் சொல்லவேண்டும். அந்த ஒரு அறிவு உங்களைக் கூர்மைப்படுத்தும். நீங்கள் எதுவும் பேசலாம். அப்போது அவர்கள் வெளியே காட்டிக்கொள்ளமாட்டார்கள்.

British scholars இலும் American scholars இலும் உள்ள குணம் என்னவென்றால், British scholar ஆரம்பத்திலேயே அதிகம் பேசான்.

அவனிடம் நீங்கள் ஒரு சரக்குள்ள ஆள் என்று அவனைக் கணிக்க வைப்பது சிரமம். அவன் கணிசமாகத்தான் நிற்பான். Americans உங்களை ஒரு புலமையாளனாக ஏற்றுக்கொள்வதற்கு, நீங்கள் உங்களை நிரூபிக்க வேண்டும். அவனுடன் பேசுவது எமது அறியாமையை வெளிக்காட்டுவதாக அனேக சந்தர்ப்பங்களில் அமைந்துவிடும். எல்லோரையும் நாங்கள் Impress பண்ணினோம் என்று சொல்லமுடியாது. சிலபேரை Impress பண்ணினோம். அவர்களோடு தொடர்ந்து நட்பு வைத்திருக்கின்றோம். இந்த மாதிரியான விடயங்களெல்லாம் எங்களுக்கு வரும்.

பிறநாட்டு நல்லறிஞர் தொடர்புவேண்டும் என்கிறபோது, அவர்கள் எத்தனையோ விடயங்களைக் கேட்பார்கள். ரஷ்யாவுக்குச் சென்றபோது முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் சென்று அங்கு Afro Asian Writers Conference க்கு 1974இல் சென்றேன். இந்திய பாகிஸ்தானிய முற்போக்கு இலக்கிய பாரம்பரியத்தின் உச்சக்கொம்புகள் எல்லோரையும் பார்த்தேன். பைஸ் அகமட் பைஸ், சஜ்ஜத் சகீர், குபேஷ் குப்தா போன்ற மிகப்பெரிய ஆட்களையெல்லாம் நேராகக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. சைனாவுக்கும் போனேன். சைனா அப்போதுதான் மாற்றம் அடைந்துகொண்டிருந்தது. அங்கு 11 நாட்கள் தங்கியிருந்தேன். Chinese Acadamy of social sciences இல் நான் United nation university delegation ஒன்றுடன் சென்றேன். அங்கு கலாசாரப் புரட்சி எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியது என்பது பற்றிய மிகப்பெரிய காரசாரமான விவாதங்கள் எல்லாம் நடந்தன. நான் ரஷ்ய ஆதரவாளனாக இருந்தேன். ஆனாலும் அந்த சீன சோஷலிஸத் தன்மை மாறுகின்றது என்பதைப் பார்த்தபோது நான் மிகவும் கவலைப்பட்டேன். அதுபற்றி சைனாக்காரர்களோடு பேசினேன். எங்களுடைய ஆட்களுடனும் பேசினேன். இந்தப் பெரிய ஒரு பரிசோதனை வீணாகிறது என்பது எனது கவலையாக இருந்தது. அவர்களுடன் பேசியபோது இன்னொரு நண்பரும் என்னுடன் சேர்ந்துகொண்டார். அவர்கள் எங்களைப்பார்த்து, ‘மாவோவுடைய விதவைகள்’ என எங்கள் இருவருக்கும் பட்டம் வைத்து, நீங்கள் இப்படி அழுதுகொண்டிருக்கிறீர்களே என்று கூறினார்கள். நான் சொன்னேன், எங்களுடைய ஊரில் என்னை எல்லோரும் மாவோக்கு எதிரானவனாகவே பார்க்கிறார்கள். சைனாவில் உள்ள சில விடயங்கள் வேறானவை. அப்படியென்று சொன்னேன். அந்தப் பண்பாட்டின் தன்மைகள் அடிப்படைகளைப் பார்கிறபோதுதான் இந்த விடயங்கள் எல்லாம் தெரியவந்தன. சீனா கம்யூனிஸம் பரவிய பெரிய நாடு. Thoughts of Mase Thung என்ற சிறிய கை நூல்கள் மூலமாகவே தரப்படுத்தப்பட்ட சீன எழுத்து முறைமையும் எழுது முறையும் வந்தது. எழுத்துக்களில், - மாசே துங்கின் எழுத்துக்களோடு தான் சீன மொழியில், சைனா முழுவதும் நியம மொழி வந்தது. அதற்கு முன்னர் சைனாவின் ஒவ்வொரு

பிரதேசங்களிலும் ஒவ்வொரு Dielect . அதனாலேதான் சிறிய புத்தகங்களில் அடித்து ஒவ்வொருவருக்கும் கொடுத்தார்கள். அதுதான் முதல் Standard dielect. இவையெல்லாம் அங்கு சென்றதாலேதான் தெரிய வந்தது. அந்த மட்டத்திலிருந்து நாங்களும் தேவைப்படுவதைப் பெற்றுக்கொள்ளலாம். பாகிஸ்தானுக்கு - லாகூருக்கும் போனபோது முஸ்லிம் பேராசிரியர்கள் சிலர் - இந்தியாவைப்பற்றி ஆர்வம் உள்ளவர்கள் - திராவிட இயக்கம் பற்றி மிகவும் ஆர்வமாகக் கேட்டார்கள். அவர்கள் எங்கெங்கு இந்திய ஒருமைப்பாடு பலவீனமாக இருந்தது என்பதைப் பற்றியெல்லாம் கவனித் திருந்தார்கள். நான் Social concerns of Tamil literture என்ற கட்டுரையை அங்கே வாசித்தேன். ஆனால் அவர்கள் கேட்டதெல்லாம் திராவிட இயக்கம் பற்றி - அதன் பலம் பலவீனம்பற்றி. ஒரு நீண்ட Session லாகூரில் வைத்தார்கள். அப்போதுதான் உருதுப் பாடல்கள் பற்றி அதன் மரபு பற்றி நான் அறிந்தேன். நான் இதனை ரஷ்யாவிலும் கண்டேன். உருது மரபில் கவிதையை இரசிப்பது தனித்துவமானது. எல்லோரும் பாயை விரித்து தலையணையை வைத்துச் சாய்ந்து கொண்டிருப்பார்கள். ஒருவன் பாட மற்றவர்கள் இரசிப்பார்கள். இத்தகைய இரசனை அவர்களுக்கே உரியது. கூக்கா வைத்துக்கொண்டு புகைபிடித்துக்கொண்டு இரசிப்பார்கள். மாறிமாறிப் பாடுவார்கள். தமிழ் இலக்கியத்தை ஒருபோதும் நாங்கள் அப்படி இரசிப்பதில்லை. இங்கு இரசிக்கிறேன் என்று சொல்பவர்கள் எல்லோரும் கொச்சைப்படுத்துகிறார்கள். பட்டிமன்றங்கள், விழாக்கள் - கவிதை சம்பந்தப்பட்டவர்கள் 'ஆஹா ஊகு' என்று இரசிக்கிறார்கள். ஏன் 'ஆஹா ஊகு' என்று இரசிக்கிறார்கள் என்பதற்கு விளக்கம் தெரிவதில்லை.

இவற்றையெல்லாம் நான் மற்றவர்களுக்குச் சொல்வதில்லை. இப்போது எனக்கு எழுபத்தொரு வயதாகிறது. இப்போதுதான் உங்களுக்குத் தொகுத்துச் சொல்கிறேன். உயர் நிலையிலுள்ள ஒரு பெரிய கல்விமானால் ஒரு வசனம் போட்டு இன்னார் எழுதிய இந்தக் கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டது என்று போட்டால் போதும். அந்தக் கட்டுரைக்கு உள்ளளவு சீவியம் அந்தக் கல்விமானுக்கும் இருக்கும். அது சும்மா வராது. பலர் கைலாசபதியை தமது கட்டுரைகளில் மேற்கோள்காட்டுவார்கள். கைலாசபதி இறந்து இன்று 20 வருடமாகிறது. ஆனாலும் அவர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

அறிதொறும் அறிதொறும் அறியாமை கண்டவாறு - இதெல்லாம் தாய் தகப்பன் செய்த புண்ணியம். எங்களது கெட்டித்தனமில்லை. நாங்கள் லீவில் போகிறபோது, இந்த லீவினால் இந்தப் பல்கலைக் கழகத்திற்கு என்ன பயன் கிடைக்கிறது என நீங்கள் கருதுகிறீர்கள் என்று ஒரு கேள்வியிருக்கும். நான் எல்லாக் காலத்திலும் எழுதுவது, 'இதனால் எனது மாணவர்கள் நன்மை அடைவார்கள்' என்று. என்னிடம் எம்.ஏ., பி.எச்.டி. செய்வது ஒரு மிகக் கஷ்டமான விடயம்; ஆபத்தான வேலை

என்று யாழ்ப்பாணத்தில் பலரது அபிப்பிராயம். ஏனென்றால், நான் இழுத்தடிப்பேன். அங்கு இங்கு செல்வேன். அவருக்கு எத்தனை அத்தியாயம் அதனை இப்படியெழுது என்று சொல்லமாட்டேன். அத்தியாயங்களின் பெயர்களைச் சொல்லுங்கோ என்று கேட்டால் நான் சொல்லமாட்டேன். இதனை வாசித்தாயா அதனை வாசித்தாயா என்று கேட்கும்போதே அவர் 'சீ' என்று தப்பியோடி விடுவார். அப்படித் தப்பியோடியவர்கள் ஏழெட்டுப்பேர் இருக்கிறார்கள்.

நான் பிரிட்டிஷ் மியூசியத்திற்கு Greek Section ஐப் பார்க்கப்போனேன். அப்போது தொம்சனிடம் ஒரு கடிதம் கேட்டு வாங்கினேன். அவர், "Mr Sivathamby is working with me on Tamil and Greek Drama" என்று எழுதினார். Working Under me என்று எழுதவில்லை. அதனைப்பார்த்த பின்பு நான் எவருக்கும் Working Under me என்று எழுதுவதில்லை. இதுதான் பிறசெல்வாக்குகளுக்கு, பண்பாடுகளுக்கு Exposed ஆகிறதால் வரும் நன்மை. இந்தியப் பேராசிரியர்களிடம் அல்லது எங்களுடைய கல்விமான்களிடம் கேட்டால் Worked under me என்று தான் எழுதுவார்கள். பல மாநாடுகளுக்குச் சென்றது. சைனா, ஜப்பான், செக்கோசெலவாக்கியா, ஹங்கேரி, ரஷ்யா போன்ற நாடுகளுக்குச் சென்றதால் ஏற்பட்ட அநுபவங்கள் எங்களை அகட்டிப் பார்க்க வைத்தது. நீங்கள் ஒரு விடயத்தில் உங்களை ஒரு நிபுணர் என்று கருதுவதென்றால் அது சம்பந்தமாக எந்தக் கோணத்தில் இருந்து கேட்டாலும் பதில் சொல்வதற்கு தயாராக இருக்கிறீரா என்று பார்க்கவேண்டும். ஒரு விசயத்தைப் பற்றி அத்தனை கோணங்களில் பார்க்கலாம் என்பதற்கு அது ஒரு உதாரணம். பல விதமாகக் கேட்பார்கள். What does Tamil say about it?, How is Tamil reacted to that? என்றெல்லாம் கேட்பார்கள். நாங்கள் அதற்குப் பதில் சொல்லவேண்டும். அது சிலவேளை எமது அறியாமையை வெளிப்படுத்துவதாகவும் இருக்கும். I am not quite sure; may I say this?, we have this problem என்று நாங்கள் சொன்னால், அவன் இன்னும் கூட உதவி செய்வான். எவனையும் குறைத்து மதிப்பிட முடியாது. 'எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்பு இருக்கும்' என்று தெரியாது.

இந்த அநுபவங்களில் இருந்து நான் பெற்றுக்கொண்டது என்னவெனில், 'நான்தான்...., எனக்குத் தெரியும்' என்ற தலைக்கனம் எந்த ஒரு Scholar க்கும் வரக்கூடாது. வந்தால் அன்றோடு அவருக்கு Scholarship இல்லை. இது என்னுடைய மிகத் தாழ்மையான அபிப்பிராயம்.

❑ ❑ ❑

# 6

***தி. ஞா: தமிழக அரசு தங்களுக்கு திரு வி.க. நினைவுப் பரிசினை அளித்துக் கௌரவித்தது. இந்தப் பரிசுபற்றி அப்போது தங்களுக்கு ஏற்பட்ட உணர்வுகள் எவ்வாறிருந்தன?***

**கா.சி:** இது பற்றி 'கரவை யூற்று' என்ற சிறு நூலில், அந்தப் பரிசினை ஏற்று நான் விழாவில் பேசிய உரை இடம்பெற்றுள்ளது. ஏறத்தாழ அதில் எனது முழு நினைவும் தெரிகிறது. ஆனாலும் அந்தச் சம்பவங்களை நான் ஆள்நிலைப்படுத்திச் சொல்கிறேன். அந்தப் பரிசு அறிவிக்கப்பட்ட போது எனது மனைவி வீட்டில் இருக்கவில்லை. அமெரிக்காவில் பிள்ளைகளோடு இருந்தார். நான் இங்கு தனியாக இருந்தேன். அன்று பகல் பன்னிரண்டு மணியளவில் கணேசலிங்கத்தின் மகன் குமரன் தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு பரிசு கிடைத்திருக்கும் செய்தியைக் கூறி வாழ்த்துத் தெரிவித்தார். அன்றைய வானொலிச் செய்தியில் இதுபற்றி அறிவித்திருந்தார்களென நினைக்கிறேன். அதனைக் கேட்டுவிட்டுத்தான் குமரன் எனக்குக் கூறியிருந்தார். அப்போது அதனை நான் ஒரு பெரிய விடயமாகக் கொள்ளவில்லை. பின்னர் இந்தியாவிலிருந்து தமிழ் வளர்ச்சித் துறையைச் சேர்ந்த திரு ராஜேந்திரன் என்னுடன் தொடர்புகொண்டு இதுபற்றிக் கூறினார். எனக்கு உண்மையிலே ஆச்சரியமாக இருந்தது. நான் அவரிடம், என்ன இது? என்ன அரசியல் பின்னணி? என்று கேட்டேன். ஏனெனில் கருணாநிதியை ஒரு கூட்டத்தில் சந்தித்திருக்கிறேன் அதிகம் அளவளாவியது கிடையாது. தமிழ்க் குடிமகனுடன் அனைத்துலக தமிழாராய்ச்சி மன்ற வேலைகள் தொடர்பாகக் கொஞ்சம் பேசியிருக்கிறேன். மற்றது தமிழ்க் கலைச்சொற்கள் மீளாய்வு செய்யும் பணியினைத் தொடங்கிய அரச கரும மொழிகள்

ஆணைக்குழுவின் தலைவர் திரு. சிவதாசன், தொண்டமானுடன் தமிழகம் வந்திருந்தவேளை, நான் அங்கு ஒரு ஒன்றுகூடலை ஒழுங்குசெய்து எல்லோரையும் வரவழைத்து அங்குள்ளவர்களுடன் பேசியிருக்கிறேன். Information Technology சம்பந்தமான கலைச் சொற்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் ஏற்புடையதென, நாங்கள் செய்தவற்றை அவர்கள் ஏற்றுள்ளார்கள். அது நூலாகவும் வெளிவந்துள்ளது. மற்றது, நான் கடைசியாகத் தமிழகம்சென்றபோது அங்குள்ள தமிழ்ப் புலமையாளர் களுடன்தான் அதிகமான நேரத்தைக் கழித்தேன். உண்மையில், நான் எல்லாவற்றிலும் அரசியலைப் பார்ப்பதால், இந்தப் பரிசினையும் என்ன அரசியல் பின்னணி என்றுதான் பார்த்தேன்.

பேராசிரியர்வீ.சி.குழந்தைசாமி என்னுடன் தொடர்பு கொண்டு என்னை வாழ்த்திவிட்டு, "சிவத்தம்பி, இது ரெம்ப நல்லது, இந்தியாவிற்கு வெளியேயுள்ள தமிழ்ப் புலமையாளர்களையும் கௌரவிக்க வேண்டிய தேவை தமிழகத்திற்கு இருக்கிறது என நான் உணர்கிறேன். அதனை இம்முறை செய்தது எனக்குச் சந்தோஷம்" என்றார்.

தி.மு.க. அரசாங்கத்தில் அத்தகைய ஒரு கண்ணோட்டம் இருந்திருக் கும் போலத் தெரிந்தது. ஏனெனில் வீ.சி. குழந்தைசாமி உயர் மட்டத்தில் சம்பந்தப்பட்டவர். எனவே அதுவும் தொழிற்பட்டிருக்கலாம். எல்லாப் பரிசு களையும் தமிழ்நாட்டுக்கு உள்ளேயே வழங்காமல், தமிழகத்திற்கு வெளியேயும் வழங்குவோம் என ஒரு வேளை அவர்கள் யோசித்திருக்கலாம்.

பரிசு வாங்கச் சென்றவேளை இராமர் இளங்கோ என்னைத் தமிழகக் கல்வி அமைச்சர் அன்பழகனுக்கு அறிமுகப்படுத்தினார். அங்கு அரசியல் பிரமுகர்கள் உட்படப் பலர் இருந்தனர். அன்பழகனை நான் சந்தித்தபோது, "நான் உம்மை இப்படி எதிர்பார்க்கவே இல்லைச் சிவத்தம்பி" என்று கூறிச் சிரித்தார். அவர் என்னை ஒரு 'காய்ந்த கருவாடு' போல இருப்பார் எனக் கற்பனை செய்திருக்கலாம் என எண்ணத் தோன்றியது. நான் அவருக்குச் சொன்னேன், "உங்களைப்பற்றியும் நெடுஞ்செழியனைப்பற்றியும் எங்களுக்கு லக்ஷ்மண ஐயா சொல்லித் தெரியும்" என்றேன்.

அவர் உடனே, "லக்ஷ்மணனை உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார்

"அவர் எனது ஆசிரியர்" என்றேன்.

நான் ஸாகிராவில் படித்தாலும் அவரை எனது ஆசிரியராகவே கொண்டிருந்தேன். கைலாசபதியும் றோயல் கல்லூரியில் லக்ஷ்மண ஐயாவிடம் படித்தவர். நாங்கள் இரண்டுபேரும் அவரது வீட்டுக்கும் செல்லும் வழக்கம் இருந்தது.

“லக்ஷ்மணன் உங்களுக்கு ஆசிரியரா? சரி சரி” எனக் கூறிவிட்டு சாவகாசமாக இருந்து வெற்றிலையைப் போட்டுக்கொண்டே என்னிடம் கேட்டார், “ஏன் சிலப்பதிகார காலத்தை நீங்கள் பின்தள்கின்றீர்கள்?” என்று.

அவருக்குள் ஒரு பேராசிரியர் இருக்கிறார் என்பதை நான் அப்போதே கண்டுகொண்டேன். இப்படிப் பார்க்கும்போது, உண்மையான உறவுகள் இல்லாத நிலையில் நான் செய்த வேலைகள் பரிசுத் தேர்வின்போது கணிப்பீட்டைக் கொடுத்திருக்கலாம். பரிசுத் தேர்வுப் பட்டியல் தயாரிக்கப் படும்போது, இத்தகைய எண்ணம் ஏற்பட்டிருக்கலாம்.

அதற்கும் மேலாக, நானும் கைலாசபதியும் செய்த வேலைகள் - குறிப்பாக விமர்சனத்துறையில் செய்த வேலைகள். இன்று என்னையும் கைலாசபதியையும் சேர்த்துக் கூறுவது ஒரு மரபாக வந்திருக்கிறது. இதுவும் இந்த வெளிவருகை வருவதற்குக் காரணமாக இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

நான் தாழ்மையுடன் கூறுகிறேன், இலங்கைப் பல்கலைக் கழகத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சி முறைமை, ஆராய்ச்சிக் கண்ணோட்டங்கள் தமிழகத்து அறிவியல் புலமையாளர்களாகவுள்ள புதிய சந்ததியினருக்கு, அல்லது திராவிடக் கழகத்தில் இருந்தவர்கள் அல்லாத சிந்தனையாளர் களுக்கு எங்களது ஆய்வுக் கண்ணோட்ட முறைமைகள் ஒரு புதிய திசையைக் காட்டியதாக இருக்கலாம். ஏற்கனவே திராவிடக் கழகம் சார்ந்தவர்கள் கூட, தங்களுடைய நாட்டு அறிஞர்களிலும் பார்க்க நாங்கள் தமிழை மிக அகட்டிப் பார்க்கிறோம் என எண்ணுகிறார்கள். இதனை அவர்கள் எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய Theory, நாங்கள் சொல்கிற காலங்கள் போன்றவற்றை அவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவர்கள் எங்களைப் புலமையாளர்களாக ஏற்றுக்கொள்கிறார்கள். எனவே இவைகளெல்லாம் வந்து சேரும்போது, திருக்கோவையாரில் கூறியது போல, காலமும் நேரமும் வந்து சேருகிறபொழுது அந்த நேரத்தில் நடக்கும் என்பதுபோல், அந்த நேரத்தில், ஏதோ எனது தாய்தகப்பன், எனது மனைவி பிள்ளைகள் செய்த நல்ல புண்ணியம், நான் போய் அதற்குள் நின்றேன்.

அப்போ, அது கைலாசபதிக்கு, வித்தியானந்தனுக்கு, கணபதிப் பிள்ளைக்கு, செல்வநாயகத்திற்கு விழுந்திருக்கவேண்டிய ‘சால்வை’ எனக்குக் கிடைத்தது. அந்த உணர்வோடுதான் நான் இதனைப் பார்க்கிறேன்.

Sri Lanka - Japanese Society யினர் 1998 இல் சுதந்திர தினத்தையொட்டி இலங்கையில் சுதேசிய பண்பாட்டு வளர்ச்சிக்கு வேலைசெய்த, அறிஞர்களுக்கு விசேஷ கௌரவம் அளித்தார்கள். கௌரவம் பெற்றவர்களில் நான் மட்டுமே தமிழன். எனது நண்பர்கள் சிலர் அதைப்பற்றி நக்கலாக எழுதினார்கள். சிவத்தம்பி என்ன எழுதியிருக்கிறார்? சிவத்தம்பி அதனை வாங்கியிருக்கக் கூடாது. என்று இலங்கைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆட்களே சொன்னார்கள். அதனை இரகசியமாக எழுதியும் அனுப்பினார்கள். ஆனால், தேர்வுக் குழுவினர் தேர்வு தொடர்பாக அதில் குறிப்பிட்டிருக் கிறார்கள், 'இலங்கையில் உள்ள சிங்கள தமிழ் பண்பாடுகள் பற்றி வெளியுலகில் உள்ளவர்கள் அறியத்தக்கவகையில் தொழிற்பட்டவர்கள் எனக் கருதப்படுபவர்களில் இன்று வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு இந்தக் கௌரவம் அளிக்கப்படுகிறதுஷெ' என்று. உண்மையில், அது கணபதிப்பிள்ளை இருந்திருந்தால் கணபதிப்பிள்ளைக்கும், வித்தியானந்தன் இருந்திருந்தால் வித்தியானந்தனுக்கும் போயிருக்கும். கைலாசபதி இருந்திருந்தால், எங்கள் இரண்டு பேருக்கும் தந்திருப்பார்களோ எனக்குத் தெரியாது. நிச்சயம் கைலாசபதிக்குக் கொடுத்திருப்பார்கள். இவ்வளவு பேரும் இல்லாததால் தெரிவுக் குழுவினருக்கு ஒரு கஷ்டம். அந்த வகையில், இலங்கைத் தமிழ்ப் புலமைப் பயிற்சியின் ஓர் எடுத்துக்காட்டாக, நாங்கள் கொள்ளப்படுகிறோமே தவிர தனியாக சிவத்தம்பிக்காக அல்ல. ஒரு வேளை நான் எல்லோரையும் அணைத்துக்கொண்டு போகிறதன்மை, ஆட்களோடு கோபிக்காமல் இருக்கிற தன்மை ஒரு காரணமாக இருக்கலாம். தூக்கியெறிந்து பேசிறதன்மை இல்லாதது ஒரு காரணமாக இருக்கலாம். அதுவே என்னுடைய பலவீனமாகவும் இருக்கலாம். அடிக்கவேண்டிய வர்களையும் நான் அடிக்காமல் விட்டிருக்கிறேன். இவற்றினால் அது வரலாம். ஆனபடியால் நான் திருவி.க.விருதினை ஒரு மட்டத்துக்குமேல் பெரிதுபண்ண விரும்பவில்லை. ஒவ்வொரு முறையும் இந்த விருதுகள் கொடுக்கப்படும்போது, சண்டைப்படுவார்கள். நல்லகாலம், எனக்கு விருது கிடைத்த வருடம் தெரிவுகள்பற்றி சண்டைப்படவில்லை. அடுத்த வருடங்களிலும் பிரச்சினைப்பட்டார்கள். நான் உண்மையாக , விஸ்வாசமாகச் சொல்கிறேன், நான் இப்பரிசினை மிகப்பெரிய விடயமாகக் கருதவில்லை. ஆனால், இருந்து யோசித்துப் பார்க்கிறபொழுது, அதற்குக் கிடைத்த வரவேற்பினைப் பார்க்கிறபொழுது துச்சமாகவும் கருத என்னால் முடியவில்லை.

எனது நண்பர் பேராசிரியர் பாலகிருஷ்ணன் ஒருமுறை சொன்னார், "நீங்கள், தாமோதரம்பிள்ளை, நாவலர், சிவசம்புப்புலவர் என்று இந்தியாவுக்குப் போனவர்களைத்தானே - இந்தியாவைத்தானே பெரிது பண்ணுகிறீர்கள் அவற்றைப் பற்றித்தானே நீங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்று. அது எனக்கு ஒரு Clue தந்தது போல் இருந்தது. எங்களுடைய பாரம்பரியத்தில், நாங்கள் எங்கு இருந்துதான்

வேலை செய்தாலும் தமிழகத்தில் ஒரு கணிப்பு ஏற்படும்போது எங்களுக்கு ஒரு கௌரவம் ஏற்படுகிறது என்று நான் ஒருமுறை கூறியபோது, வித்துவான் வேலன் எனக்கு எதிராக, “நீங்கள் இப்படிச் சொல்லலாமா?” என ஒரு நீண்ட கடிதம் எழுதியனுப்பினார். ஏன் அப்படிச் சொன்னீர்கள்? நீங்கள் இந்தியாவுக்கு எதிராக இருந்தீர்கள் அல்லவா? (சஞ்சிகை இறக்குமதி பற்றி) பின்பு எப்படி இந்தியாவில் பரிசு வாங்கினீர்கள்? உங்களுக்கு மானம் மரியாதை இல்லையா? என்றெல்லாம் எழுதியிருந்தார். அது ஒரு வாதம் - நான் இல்லையென்று சொல்லவில்லை. அந்தக்கடிதம் வரவில்லையென்று சொல்லமுடியுமா? நான் அதற்கு ஒரு நீண்ட பதில் கடிதம் எழுதிவிட்டு, பின்னர் தேவையில்லை என அதனை அனுப்பாமல் விட்டுவிட்டேன்.

பரிசு வழங்கியபோது அதனை ஏற்று நான் பேசிய பேச்சில், நாவலரைப்பற்றி எதுவும் கூறவில்லையென, நான் இங்கு வந்தபின் ஒரு நண்பர் கூறினார். நான் பேசிய பேச்சில் குறிப்பிட்ட அறிஞர்களின் பட்டியலைப் பார்த்தால் தெரியும், நான் குறிப்பிட்ட எல்லோரும் தமிழ்ப் பேராசிரியர்கள். நாவலரைப்பற்றி இந்தளவுக்குக் கொண்டு வருவது அவருக்கு வீருப்பமா? ஒன்றை நான் கூறுவேன், நாவலரைப்பற்றி இலங்கையில் மிக இறுக்கமான விமர்சனங்களை நான் முன்வைத்திருக்கிறேன். ஆனால் தமிழகத்தில் இருந்தபோது, நாவலரின் இலக்கியப் பணிபற்றி நானே ஒரு கட்டுரை எழுதியிருக்கிறேன். அவருடைய பதிப்புத் துறைபற்றி மிகவும் சிலாகித்து எழுதியிருக்கிறேன். என்னுடைய அபிப்பிராயப்படி, இவர்கள் எல்லோருமே ‘கயிற்றை விட்டு வாலைப் பிடிக்கிறார்கள்’. உ. வே. சாமிநாத ஐயர், சி.வை. தாமோதரம்பிள்ளை இவர்களுக்கு முன்னரே நாவலர் சைவ நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். முதலாம் பதிப்புக்கும் இரண்டாம் பதிப்புக்கும் உள்ள வேறுபாடுகள், அப்பதிப்புகளிலே காணப்படுகின்ற செம்மை - தமிழுக்கு அது முக்கியம்; இலக்கியத்துக்கு முக்கியம். நாங்கள் ஒட்டுமொத்தமாக ஈழத்தின் பாரம்பரியம் என்று பேசும் போது, நான் இங்கு நாவலரை மிகவும் பயங்கரமாகச் சாடியிருக்கிறேன். இல்லையென்று கூறவில்லை. அது இலங்கைச்சூழலில். அவரது சைவமும் தமிழும் பற்றிய, சாதியம் பற்றிய கூற்றுக்கள் இவற்றையெல்லாம் நான் சாடியிருக்கிறேன். ஆனால் தமிழ் இலக்கியத்திற்கு அவர் செய்த பங்களிப்பை நான் மறுக்க மாட்டேன். இதுதான் முக்கியம். நாங்கள், பல ஒன்றுக்கொன்று முரணான விடயங்கள், தரவுகள், தகவல்கள், நிலைப்பாடுகளுக்கூடே ஒரு சமன்பாட்டைக் காண விழைகிறோம். இந்தச் சமன்பாட்டைக் காண்பதற்கு உதவுகின்ற ஒரு பின்புலம்- அதிலிருந்து என்னை அசைக்காமல் வைத்திருக்கின்ற பின்புலம் மார்க்ஸியம்தான். அதன் அணுகுமுறை, அதிலே சொல்லப்படுகின்ற விடயங்கள், வரலாற்றுப் பொருள் முதல்வாதம்-Historical &Dialectical Aspects. மார்க்ஸ்

சொல்வார்,Unity of opposits என்று - இரண்டு எதிர்களின் ஒற்றுமை. அதனை நான் பல இடங்களில் பார்த்திருக்கிறேன்.

ஆனால் ஒன்று, இலங்கைத் தமிழ்ப் புலமையாளருக்கு தமிழகத்தில் ஒரு இடமிருக்கிறது. அது எங்களுடைய காலத்திற்குப் பின் நு.்.மானுக்கு இருக்கிறது என நினைக்கிறேன். எங்களுக்குப் பிறகு நான் நம்புகிறேன், இப்ப உள்ளவர்களில் நு.்.மான்தான். மற்றவர்கள் எல்லோரும் அங்கு போய்வந்து சொல்லலாம், 'நான் வெட்டினேன் விழுத்தினேன்' என்று. நு.்.மானுக்கு மொழியியல் சம்பந்தமான, இலக்கியம் சம்பந்தமான ஒரு அகன்ற பார்வை இருக்கிறது. நு.்.மான் ஒரு கணிசமான ஏற்புடமையுள்ள ஒரு அறிஞராக அங்கு கருதப்படுவார். அவர் அண்ணாமலையில் படித்தபொழுது உள்ள நண்பர்கள், சென்னையில் உள்ள நண்பர்களென நு.்.மானை ஓர் அறிஞராகக் கருதுபவர்கள் இருக்கிறார்கள். நானும் எங்களுடைய தலைமுறைக்குப்பிறகு அடுத்த ஒரு பெரிய தமிழ் Scholor என்று நு.்.மானைத்தான் சொல்வேன். இன்னும் ஒருவருடைய பெயரைச் சொல்ல வேண்டி இருந்திருக்கும். ஆனால் துரதிஷ்டவசமாக அவர் தனது திறமைகளை வேறு துறைகளில் செலுத்திக் கொண்டிருக்கிறார். அதுக்குப் பிறகு எங்களுடைய மாணவர்கள் யார் இருக்கிறார்களோ எனக்குத் தெரியாது. ஆற்றலுள்ளவர்கள் இருக்கிறார்கள். நிறைய இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் ஆற்றலுக்கு இயைந்த அளவு வேலை செய்ய வில்லை. ஆராய்ச்சி என்பது ஒரு நிரந்தர புலமைத் தேடல். அது நாங்கள் செய்யும் வேலைகள் கூடக் கூட அந்த அவா கூடிக் கொண்டே போகும். ஒரு நூலுக்கோ அல்லது ஒரு கட்டுரைக்கோ தரவுகள் சேர்க்கப்படுவதுடன் அது நின்று விடுவதில்லை. Your profession is reserch. குமாரி ஜயவர்த்தனா சொல்வார், If you are a resercher you are twenty four hours a resercher. இப்படிச் சொல்கின்ற அதே வேளையில் எனக்கு மனம் நிறைந்த ஒரு நம்பிக்கை உண்டு. நிச்சயமாக நாளைக்கு ஒருவனோ ஒருத்தியோ இந்த சி.வை. தாமோதரம்பிள்ளை பாரம்பரியத்தை மேலேகொண்டு செல்லப் போகிறார்கள்.

விருது கிடைத்தது சந்தோஷம். ஆனால், அதனை அதிகம் பெரிது படுத்தக்கூடாது. ஏனெனில், இந்தியாவில்- தமிழகத்தில் தி.மு.க ஆட்சி இருந்தால் ஒரு தி.மு.க காரனுக்குக் கொடுப்பார்கள். அ.திமு.க. ஆட்சி இருந்தால், அ.தி.மு.க. காரனுக்குக் கொடுப்பார்கள். அங்கு அந்தமாதிரியான போக்கு உண்டு. இது என்னுடைய உணர்வுகள்.

❑ ❑ ❑

# 7

***தி.ஞா.: தமிழகத்தில் வழங்கிவந்த விமர்சன முறையில் தாங்களும் பேராசிரியர் கைலாசபதியும் ஏற்படுத்திய மாற்றங்கள் எவை?***

**கா. சி:** இது ஒரு சுவாரஸ்யமான விஷயம். என்னவென்றால் நாங்கள் இலங்கையில் இலக்கிய விமர்சனத்தை மேற்கொண்ட பொழுது, தமிழ் இலக்கிய மாணவர்கள் என்கின்ற வகையிலேதான் அந்தத் துறைக்கு வந்தோம். அவ்வேளையில் நாங்கள் மார்க்ஸிய சிந்தனை உள்ளவர்கள் என்ற அடிப்படையிலும் அந்த மார்க்ஸிய சிந்தனையில் தமிழ்இலக்கியம் இணைந்து தொழிற்படுகின்ற முறைமைபற்றி - அதிலேயுள்ள ஊடாட்டம் பற்றி பார்க்கின்ற ஒரு முறைமையைத் தான் நாங்கள் தொடங்கினோம். தமிழ்இலக்கியம் பற்றிய எல்லா விடயங்களையும் ஒட்டுமொத்தமாக நோக்கி அதுபற்றிப் பேசுகிறபோது, எங்களுடைய எழுத்து என்கிறபோது நாங்கள் முதலில் நவீன இலக்கியம் பற்றியும், நவீன இலக்கியத்தில் சமூக நோக்கின் அத்தியாவசியம் பற்றியும் பேச வேண்டிய ஒரு சூழல், குறிப்பாக இலங்கையில் ஏற்பட்டது. அது நாங்கள் சார்ந்திருந்த முற்போக்கு அணியினுடைய தாக்கம். முற்போக்கு அணியுடன் நாங்கள் சேர்ந்தோம். முற்போக்கு அணி எங்களுடன் சேர்ந்து கொண்டது. We found each other. அவர்களைத் தேடிப்போகவில்லை. அவர்களும் எங்களைத் தேடி வரவில்லை. We met & we worked together. அதில் ஞானாவினுடைய (பிரேம்ஜி ஞானசுந்தரம்) பங்கு மிக முக்கியமானது.

இங்கு நாங்கள் தொழிற்பட்டபொழுது, இந்த எழுத்துக்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவதும் இந்த எழுத்துக்களுக்கான ஒரு நியாயப்பாடு இருக்கிறது என்பதனை உலகப் பொதுவான இலக்கிய

விமர்சனங்களிலிருந்து எடுத்துக் காட்டுவதும், தமிழ் இலக்கிய மரபுக்குள் நின்று இவற்றை எதிர்த்துப் பேசுபவர்களுடன் எதிர்வாதம் செய்வதும் எங்களுடைய முக்கிய பணியாக இருந்தது. அதாவது, இந்த இலக்கியங்களுக்கு ஒரு நியாயப்பாடு உண்டு. இழிசினர் பற்றிப் பேசிய போதும், மரபு பற்றிய போராட்டத்தின் போதும் நாங்கள் பேசினோம். ஒட்டுமொத்தமாக ஒரு பெரிய Struggle இனுடைய - அந்தமாதிரியான விவாதத்தினுடைய ஓர் அம்சமாக அது இருந்தது.

இந்த விவாதம் இங்கு நடந்துகொண்டிருந்த பொழுது, இந்தியச் சூழல் மிகவும் சுவாரஸ்யமானதாக இருந்தது. 48,49களில் இந்தியச் சூழல், திராவிட இயக்கத்தினுடைய பெரும் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தது. இந்திய சுதந்திரத்திற்குப் பின்னர் - சுதந்திரம் கிடைத்து விட்டது அதற்குப் பின்னர் எந்த விதமான போக்கு இருக்கவேண்டும் என்பது பற்றி கம்யூனிஸ்ட் கட்சிகள் சிந்தனை செய்து கொண்டிருக்கிற அந்தக் காலகட்டத்தில், 50,51களில் இந்தப் பிரச்சினை இங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. எங்களுடைய எழுத்தாளர்களும் இங்கு வந்த பத்திரிகைகளிலும் பார்க்க தமிழ்நாட்டிலிருந்து வந்த சிறு சஞ்சிகைகளில்- சரஸ்வதியில், சாந்தியில் எழுதுவதில் ஆர்வம் காட்டினர். இதனால் அங்குள்ளவர்களும் எங்களுக்கு நண்பர்களானார்கள். ரகுநாதன் எங்களுடைய நண்பரானார். ரகுநாதனுடைய தாக்கம் மிக முக்கியமானது, விஜயபாஸ்கரனுடைய உறவு - இப்படிப் பலருடைய உறவு எமக்குக் கிடைத்தது. இவர்களுக்குக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் உறவு இருந்ததால், ஜீவானந்தத்துடன் உறவு இருந்தது. நான் ஜீவானந்தத்தைச் சந்திக்க வில்லை. இப்படிப் பார்க்கிறபோது, நாங்கள் தமிழகத்தோடு எம்மை இணைத்துப் பார்க்கிற ஒரு தேவை இருந்தது.

குறிப்பாக இரண்டு விடயங்கள். தமிழ்நாவல் இலக்கியம்பற்றி கைலாசபதி எழுதியது, அகிலனைப்பற்றி கைலாசபதி எழுதிய விமர்சனம், வரதராசனைப்பற்றி காவலூர் ராஜதுரை எழுதிய விமர்சனம் போன்றவை முக்கியமானவை. என்னுடைய தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் முதற்தடவையாக தமிழ்ச் சிறுகதை வரலாற்றை ஏதோ ஒரு அடிப்படையில் பார்க்கின்ற நூலாக அது அமைந்தது. இன்னும் ஒன்று, புனைகதை இலக்கியம் அங்கு படிப்படியாக வளர்ந்து கொண்டிருக்கிற காலம் - அவர்களுடைய கவனத்தை ஈர்த்த காலம். அங்கு வருகின்ற இளந்தலைமுறையினருக்கு இந்த வாதங்கள் விவாதங்கள் மிக முக்கியமானவையாகப்பட்டன. அதற்கு முன்னர் அங்கு இலக்கிய விமர்சனம் அல்லது இலக்கியத் திறனாய்வு என்ற பெயரில் ஞானசம்பந்தன், வரதராசன் போன்றவர்களுடைய நூல்களைத்தான் பயன்படுத்திக்

கொண்டிருந்தார்கள். அவர்கள் இந்தமாதிரியான விமர்சனத்தில் ஈடுபடவில்லை. அவர்கள் பொதுப் படையாகக் கூறினரே தவிர ஆழமாக எழுதவில்லை. எமது எழுத்துக்கள் அங்கு சென்றவுடன் எங்களுக்கான ஒரு வாசிப்புத் தளம் அங்கு ஏற்பட்டது. அந்த வாசிப்புத் தளம் நிச்சயமாக அங்கிருந்த பொதுவுடைமைக் கட்சிகளுடைய கவனத்தின் வழியாகத்தான் எங்களுக்கு வந்தது.

அந்தக்காலகட்டத்தில் நாங்களும் பல்கலைக்கழகத்தில் இருந்தமை யால், அங்குள்ள பல்கலைக்கழக மாணவர்களும் இவற்றினால் கவரப்பட்டார்கள். அந்தத் தேவைகளுக்காக நாங்கள் எழுதியபோது, விமர்சனத்தை ஒரு வரன்முறையான சமூக விமர்சனத்தின் தளங்கள் பற்றி நாங்கள் எழுத ஆரம்பித்தோம். முதலில் அங்குள்ள பேராசிரியர்களில் பெரும்பாலானோர் எங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. மாணவர்கள்தான் ஏற்றுக் கொண்டார்கள். கைலாசபதியையும் என்னையும் அங்கு முதலில் ஏற்றுக் கொண்டவர்கள் மாணவர்கள்தான். Presidency கல்லூரியில் படித்த பாண்டியன், சிதம்பரம், போன்ற மாணவர்களும் அதுபோன்று வேறு இடங்களில் படித்தவர்களும் எங்களை ஏற்றுக் கொண்டார்கள். இவர்களில் நான்கு பேர் முக்கியமானவர்கள். அவர்கள் ‘சிந்தனைச் சுடர்’ என்ற வாசகர் குழு மூலம் கைலாசபதியின் நூலையும் எனது நூலையும் வெளியிட்டார்கள்.

இந்த வரவேற்பு அங்கு ஏற்பட்டதால், ஏற்கனவே எமக்கு அங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சி சார்ந்த அல்லது கம்யூனிஸத் தத்துவம் சார்ந்தவர் களோடு உறவு இருந்தது. ரகுநாதன், ராமகிருஷ்ணன், விஜயபாஸ்கரன் போன்றவர்களோடு இருந்த உறவு. அதன்பிறகு இந்த மாணவர் தளம். இது விரிவடைந்து கொண்டிருந்த வேளையில், அங்குள்ள இலக்கியப் போக்கில் அதிருப்திகொண்ட பிரசுரகர்த்தாக்கள், உண்மையான தமிழ் அபிமானிகள், சில தமிழ் விரும்பிகள் எங்களைப்பற்றி அக்கறை கொண்டார்கள். அவர்களில் ஒரு முக்கியமான ஆளாக நான் கண. முத்தையாவைக் கூறுவேன். கண. முத்தையா போன்ற பிரசுர கர்த்தாக்களுடன் கணேசலிங்கத்திற்கு ஏற்கனவே தொடர்பு இருந்தது. இதேவேளையில் தமிழ்பற்றி வாசிக்கும் ஆங்கிலம் தெரிந்தவர்கள் எங்களுக்கு நண்பர்களானார்கள். இந்த முறையிலேதான் நாங்கள் அங்கு சென்று சேர்ந்தோம்.

சென்று சேர்ந்த பின்னர், முதலாவது இலக்கிய விமர்சனம் அல்லது திறனாய்வு என்பது, ஒரு வரன்முறையான- Integrated Curriculum ஆகப் படிப்பிக்கத் தக்கது. தமிழ் இலக்கியத்தைப் பார்க்கத்தக்கது என்கின்ற

ஒரு நிலைப்பாடு ஏற்பட்டது. பாடத்திட்டத்தின்படி படிப்பிக்க வேண்டிய விடயம் அதற்குள் ஒரு உலகப் பொதுவான Scientific Base இருந்தது. இந்தத் திறனாய்வு முறைமைகள் பற்றி அவர்களுடைய பழைய புத்தகங்களில், மு.வ.வுடைய புத்தகத்திலோ ஞானசம்பந்தனுடைய புத்தகத்திலோ எதுவும் இல்லை.

அப்போது எங்களுக்கு, Integratedஆக நாங்கள் சொல்லக் கூடிய ஒருங்கிணைத்துப் பார்க்கக் கூடிய ஒரு கற்கை நெறியாக அது வெளிவந்தது. அதனால் தமிழ் நாட்டில் பல இடங்களில் எமது பெயர்கள் தெரியவந்தன. எமது நாட்டில் பல்கலைக் கழகங்கள் எல்லாவற்றிலும் ஒரு நேரத்தில், எல்லாமாகத் தமிழ் மாணவர்கள் 2500 பேர்வரைதான் இருப்பார்கள். ஆனால் தமிழ் நாட்டில் அப்படியல்ல. ஒரு மாவட்டத்திலேயே 10,000 முதல் 15,000 மாணவர்கள் வரை இருப்பார்கள். அவர்களிடையே எமது பெயர்கள் தெரிய வந்தன. ஆரம்பத்தில் இந்த மாணவர் மட்டத்திலேதான் எங்களுக்கு வரவேற்பு இருந்தது. பாலாஜி, பாண்டியன், சிதம்பரம் உட்பட நால்வர் சேர்ந்து கூட்டம் ஒழுங்கு செய்து எங்களைக் கூப்பிட்டார்கள். நான் முதலில் சென்றது அப்படியே. பின்னர் கைலாசபதியும் சென்றிருந்தார். விஜயபாஸ்கரன் எங்களுடைய புத்தகங்களைப் போடுவதற்குத் தயாராக இருந்தார். NCBS தயாராக இருந்தது. அது ஒரு முக்கியமான விடயம். அங்கு போனவுடன் மாணவர்களுடைய நிலையில் நாங்கள் Integrated ஆனோம். இதனால் எங்களுடைய நூல்களை அவர்கள் வாசிக்கத் தொடங்கினார்கள். என்னுடைய, தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்-66, கைலாசபதியினுடைய 'தமிழ் நாவல் இலக்கியம்'-67. ஆனால், தமிழ் நாவல் இலக்கியத்தின் தாக்கம் மிகப் பெரிதாக இருந்தது. அந்தக் காலகட்டத்தில் சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், தமிழில் Ph.D எழுதலாம் என்று சொன்னார்கள். அப்போது தமிழகத்தில் இருந்த அரசியல் நிலைமை என்ன வென்றால், - தி.மு.க. ஆட்சி - திராவிடக் கட்சியின் நிலைப்பாடு என்னவென்றால் அவர்கள் சங்க இலக்கிம் பற்றிப் பேசுவார்கள். இடைக்கால இலக்கியத்திற்கு வரமாட்டார்கள். கம்பன், பக்தி இலக்கியம் பற்றிப் பேசமாட்டார்கள். இலக்கணம் பற்றிப் பேசுவதற்கும் ஆழமான ஆட்கள் அங்கு இருக்கவில்லை. படிப்பிப்பதற்கு ஆட்கள் இருந்தார்கள். ஆனால் மாணவர்களுக்குள் போகமாட்டார்கள். நவீன இலக்கியங்கள்தான் செய்வார்கள். நாவல்கள், சிறுகதைகள் பற்றித்தான் ஆராய்ச்சி செய்வார்கள். நாவல் சிறுகதைகள் பற்றிச் செய்வதென்றால், அப்போது எங்களுடைய புத்தகங்களை வாசித்துத்தான் ஆகவேண்டும். எதிர்க்கிறதென்றாலும் இந்த நூல்களை வாசித்துத்தான் ஆக வேண்டும். இந்த நூல்களைப் போல்

வேறு நூல்கள் இருக்கவில்லை. அத்தோடு ஆக்க இலக்கியத் துறையில் எங்களுடைய எழுத்தாளர்களுடைய எழுத்துக்களும் அங்கு பிரசுரமாயிருந்தன.

இந்தவேளையில், மார்க்ஸிஸ ஆராய்ச்சி கொண்ட வானமாமலை குழுவினர் அங்கு குழுவாக இயங்கிக் கொண்டிருந்தனர். நாங்களும் அவர்களும் சமமாக முக்கியமான ஒரு விடயம் செய்தோம். என்னவென்றால் நவீன இலக்கிம் மட்டுமல்லாது, Pre modern literature ஐயும் இப்படியான ஒரு சமூக விமர்சனத்திற்கு உட்படுத்தினோம். அது மிக முக்கியமான விடயம். தனித்தமிழ் இயக்கம் பற்றிய எனது கட்டுரையும், திணைக் கோட்பாட்டின் சமூக அடிப்படைகள் என்ற கட்டுரையும், பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், நாடும் நாயன்மாரும், பேரரசும் பெருந்தத்துவமும் என்ற கைலாசபதியின் கட்டுரைகள் மிக முக்கியமான கட்டுரைகள். அவைபற்றிப் பல பேராசிரியர்கள் என்னுடன் பேசியிருக்கிறார்கள். மறையமலை அடிகள் பிரித்தானிய ஆட்சிக்கு எதிரானவர் அல்லர், அவர் சமஸ்கிருதத்தை வேண்டாமென்றாலும், ஆங்கிலத்தை விரும்பினார் என்ற கருத்துப்பட நான் எழுதிய கட்டுரைக்கு மிகப் பெரிய வரவேற்புக் கிடைத்தது. அதுமாத்திரமல்லாமல், வ.உ.சி., சுப்பிரமணிய சிவா போன்றவர்கள் தங்களுக்குள் ஒரு தனித்தமிழ் இயக்கத்தை நடத்தினார்கள். என்று கூறியபோது மிகப் பெரிய வரவேற்புக் கிடைத்தது. இவற்றினால், Pre contemporary literatureஐ விமர்சிப்பதற்கான ஒரு மரபு தொடங்கியது. கைலாசபதியின் ஒப்பியல் இலக்கியம் போன்ற கட்டுரைகள் முக்கியத்துவம் பெற்றன. கணேசலிங்கம் மூலமாகப் பல நூல்கள் வெளியாகின. இந்த நூல்களுக்குப் பெரும் வரவேற்புக் கிடைத்தது. இரண்டாம் மூன்றாம் பதிப்புகள் வெளியாகின. நவீன இலக்கியத்திற்கு முற்பட்ட இலக்கியங்களையும், நமது பண்டைய, இடைக்கால இலக்கியங்களையம் நாங்கள் சமூக இலக்கிய விமர்சனங்களுக்கு உட்படுத்தினோம். நாங்கள்தான் தனியாகச் செய்தோம் என்று கூறவில்லை. வானமாமலையின் கட்டுரைகள், ரகுநாதனின் கட்டுரைகள் மிக மிக முக்கியமானவை. ஆனால் எங்களுடைய தாக்கம் கணிசமானது. இதனாலேயே எங்களுக்கு ஒரு இடம் அங்கு ஏற்பட்டது.

மற்றது, அங்கு நாங்கள் பல சொற்பொழிவுகள் ஆற்றினோம். அச் சொற்பொழிவுகளைப் பலர் கேட்கவும் அவற்றை நூல்களாக்கவும் வாய்ப்புகள் கிட்டின. முற்போக்கு இலக்கியம் பற்றிய எனது நூல்- இது கோவையில் 74 அல்லது 75 ஆம் ஆண்டில் பேசிய பேச்சு. அதேபோல கைலாசபதியின் சொற்பொழிவுகளும் நூல்வடிவம் பெற்றுள்ளன. CLS நடத்திய கருத்தரங்குகளிலும் நாங்கள் பங்குபற்றினோம். கைலாசபதியினுடைய சமூகமும் சமத்துவமும் பற்றியது. எனது வறுமையும் சாதியமும் பற்றியபேச்சுகள்- இப்படியாக அங்கு ஒரு பரவலான தாக்கம் ஏற்பட்டது.

முதலில் அது எங்களை வெறுமனே நவீன இலக்கிய விமர்சகர் களாகவே கண்டது. அதன்பின்னர்தான், படிப்படியாக இந்த விடயங்களைப்பற்றி ஆராய்கின்ற போதுதான் பண்டைய தமிழ் இலக்கியத்திலும் எங்களுக்குத் தாடனம் இருக்கிறது என்பதை அறிஞர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இதனை வரவேற்ற சில தமிழ் அறிஞர்களின் பெயர்களைச் சொல்லாவிடில் இது பற்றி நான் பூர்த்தி செய்ய முடியாது. உதாரணமாக, முதலில் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்கிய பொழுது, வரவழைக்கப்பட்ட ஆட்களில் ஒரு இலங்கையைச் சேர்ந்தவரும் இருக்க வேண்டுமென என்னை அழைத்தார்கள். அந்தத் தமிழ் பல்கலைக்கழக Senate க்கு ஒரு இலங்கைப் பேராசிரியரும் இருக்கவேண்டு மென வித்தியானந்தன் was appointed member of the university senate. அது பெரிய விடயம். இப்போது ஒருவரும் இல்லை. அவர் தமிழ்ப் பல்கலைக்கழகச் செலவிலேயே அங்கு சென்று வருவார். இந்த விஷயத்தில் வி.ஐ. சுப்பிரமணியம் அதில் முக்கியமான ஆள். அவர்களுக்குத் தெரியும் எனக்கு இந்த விடயங்களில் ஈடுபாடு என்று. இந்த நிலைமை காரணமாக அங்குள்ள பழந்தமிழ் அறிஞர்கள் எம்மை முற்றிலும் புறக்கணிக்கமுடியாத நிலைமை ஒன்று ஏற்பட்டது. சென்னைப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத்தலைவராக இருந்த ந.சஞ்சீவி, அவர் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய ஒரு கற்கை நெறி எம்.ஏ.க்குப் படிப்பிக்கப்படவேண்டுமென விரும்பினார். அவர்தான் என்னைச் சென்னைப் பல்கலைக்கழகத்துக்கு வருகைப் பேராசிரியராக அழைத்திருந்தார். மற்றையவர் மதுரைப் பல்கலைக்கழத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த எம்.சண்முகம்பிள்ளை. நானும் கைலாசபதியும் தொடர்புபடவில்லை என்றாலும் தெ.பொ.மீனாட்சிசுந்தரமும் முக்கியமானவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் அகஸ்தியலிங்கம்பிள்ளை, சே.வை.சண்முகம் போன்றவர்களும் ஈழத்துத் தமிழ்ப் புலமைபற்றி நன்மதிப்புக்கொண்டவர்கள்.

அடுத்த முக்கியத்துவம் என்னவென்றால், எமது கல்வி முறையினால் எங்களுக்கு வந்தது. ஆங்கில இலக்கியத் துறையில், அல்லது பிறநாட்டு இலக்கியத்துறையில் எங்களுக்கு இருந்த பரிச்சயம். துரதிஷ்டவசமாக அது அடுத்த தலைமுறையினருக்கு இல்லாமல் போனது. நாங்கள் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவோம். அங்கே என்னவென்றால், தமிழ்ப் பேராசிரியர் என்றால் ஆங்கிலத்தில் பேச மாட்டார் என்ற அபிப்பிராயம் உண்டு. நான் ஒரு முறை மட்ராஸில் இருந்து தஞ்சாவூருக்கு றயிலில் போனேன். போகும்போது கல்கற்றாவில் இருக்கும் ஒரு கஸ்டம்ஸ் அதிகாரியும் என்னோடு பேசிக்கொண்டு வந்தார். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என என்னிடம் கேட்டார். நான் ஒரு பல்கலைக்கழகப்

பேராசிரியர் என்றேன். அவர் என்னோடு இலக்கியம் பற்றிப் பேசி, ஆங்கில நாவல்கள் பற்றிப் பேசி, அரசியல்பற்றியும் பேசிக்கொண்டு வந்தார். இறங்கும்போது, நீங்கள் என்ன படிப்பிக்கிறீர்கள் என்று கேட்டார். நான் Professor of Tamil என்று கூறினேன். அவர், தமிழா! என்று ஆச்சரியப் பட்டதோடு, But You are speaking Englishஎன்று கூறினார். அங்கு தமிழ்ப் பேராசிரியர்கள் ஆங்கிலம் பேசினால் அவன் நினைப்பான், கல்ரோட்டில் வண்டில் போனமாதிரி. அவருக்குத் பேசத் தெரியாது. தமிழாசிரியர் பற்றி, கமலாம்பாள் சரித்திரத்தில் வருகின்ற தமிழ் ஆசிரியர் ஆடுசாபட்டி அம்மையப்பபிள்ளை போன்ற மனப்பதிவுதான் அங்கு உள்ளவர்களுக்கு. தமிழ் ஆசிரியர்கள் எல்லோரும் தனித்தமிழ் பேசுவார்கள். ஆனால் வேட்டி கட்டமாட்டார்கள். Trouser தான் போடுவார்கள். முனைவர் என்றுதான் சொல்வார்கள்; தமிழ்ப் படுத்துவார்கள். ஆனால் 'டாக்டர்' என்றுதான் போடுவார்கள். ஆங்கில அறிவு அவர்களுக்குப் பெரும்பாலும் குறைவு, English medium என்று சொல்வதெல்லாம் 'கப்சா'. ஆங்கில அறிவு பழைய தலைமுறைக்கு இருந்தது. இன்றைய தலைமுறைக்கு மிகவும் குறைவு. வீ எஸ். சுப்பிரமணியம் சொல்வார், நாங்கள் அங்கு காலூன்றியதற்குக் காரணம், நாங்கள் Western training உள்ள ஆட்கள் என்று. கணபதிப்பிள்ளையாக இருந்தால் என்ன, வித்தியானந்தனாக இருந்தாலென்ன, கைலாசபதியாக இருந்தாலென்ன, சிவத்தம்பியாக இருந்தாலென்ன, வேலுப்பிள்ளையாக இருந்தாலென்ன, நாங்கள், London training, Oxford training, Bermingham training உள்ளவர்கள். அந்த Training அவர்களுக்கு இல்லை. இதுவும் எங்களுக்கு ஒரு பெரிய வாய்ப்பாக இருந்தது.

திரும்பவும் நான் இதனைச் சொல்ல வேண்டும். எங்களுக்கு அங்கு பெருவாய்ப்பாக அமைந்ததற்கான காரணம், அங்குள்ள எங்களுடைய தோழர்கள். அவர்களுடன் நாங்கள் ஊடாடினோம், பேசினோம், கருத்துக்களைப் பரிமாறினோம். CPI, CPM என்று பிரிந்தாலும் எங்களுக்குள் உறவு இருந்தது. CPI இலும் இருப்பார்கள், CPMஇலும் இருப்பார்கள். கல்யாணசுந்தரம் இல்லாமல், நான் எனது Drama in ancient Tamil society நூலைப் போட்டிருக்க முடியாது. நான் அதற்காக ஒருசதம் காசும் கொடுக்கவில்லை. 1981இல் அதற்கு இந்தியப் பணம் 65000 ரூபா முடிந்தது. இவற்றை மறக்க முடியாது. இந்தமதிரியான ஒரு சூழல் காரணமாகத்தான் எங்களுக்கு அங்கு வரவேற்புக் கிடைத்தது. இதற்கு எதிர்ப்பு இருக்கவில்லை என்று நான் கூற மாட்டேன். எதிர்ப்பும் இருந்தது. மார்க்ஸியத்தை எதிர்த்தவர்கள் எதிர்த்தார்கள். 'மார்க்ஸின்-கல்லறையிலிருந்து ஒரு குரல்' என்று வே.சாமிநாதன் எழுதினார். இங்கும் எங்களுக்கு எதிர்ப்பு இல்லாமல்

இல்லை. நிறைய எதிர்ப்பு இருந்தது. நான் பேர்மிங்காமில் படித்தபடியால், ‘இரும்புக் கலாநிதி’ என்று சொன்னவர்களும், எங்களுக்குத் தமிழ் தெரியாது என்று சொன்னவர்களும் இருந்தார்கள். ஒருவர் தனது மனைவிக்குச் சொல்லியிருக்கிறார், “சிவத்தம்பி Ph.D.செய்தது ஏதோ நாட்டுக் கூத்தைப்பற்றி” என்று. அவரது மனைவி ஒரு சங்கீதக்காரி. அவர் என்னுடன் வேலை செய்தவர். அவர் என்னிடம் கேட்டார், ‘ஸேர், நீங்கள் நாட்டுக் கூத்தைப்பற்றித் Thesis செய்தீர்களாம்’ என்று. நான் நாட்டுக் கூத்தைப்பற்றிச் செய்யவில்லை - Ancient Tamil Drama பற்றியெல்லோ செய்தனான் என்றேன். அவர் பின்பு அதனை அவரது கணவனிடம் கூறியிருக்கிறார். அவர் என்னிடம் வந்தபோது கேட்டார், “நீங்கள் என்ன Folk Dramaசெய்யவில்லையா” என்று. இப்படி எங்களைப்பற்றி நிறைய அபிப்பிராயங்கள் இருந்தன. ஏதோ கால ஓட்டத்தில் அவையெல்லாம் மறைந்து நாங்கள் தமிழ் சம்பந்தமாகப் பேசப்படக் கூடியவர்களாக மாறுவதற்கான ஒரு சந்தர்ப்பம் எற்பட்டது.
எங்களது பங்களிப்பு என்று கருதுவது இதுதான்.- Providing scientific basis for literary critisism in Tamil. அதாவது தமிழில் இலக்கிய விமர்சனத்தை அறிவியல் பூர்வமான ஒரு அணுகு முறைக்கு கொண்டுவருவதற்கான ஒரு தளத்தை ஏற்படுத்தியது.

மிகவும் துரதிஷ்டமான காரியம், கைலாசபதி 50 வயதிலேயே காலமானது. 20 வருஷம் இன்னும் இருந்திருந்தால், அவருடைய முதிர்வு இன்னும் கூடியிருக்கும். என்னுடன் பேசிய பல விடயங்கள் மிக உச்சத்திற்குப் போயிருக்கும். காலகஷ்டம் நாங்கள் கைலாசபதியை இழந்தது.

❑ ❑ ❑

# 8

***தி.ஞா. : முற்போக்கு விமர்சகர்கள் எப்போதும் தங்களைச் சூழவுள்ள வட்டத்தினரையே எதற்கும் தட்டிக்கொடுத்து வந்துள்ளனர். மற்றவர்களுடைய எழுத்துக்களை அதிகம் பொருட்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகிறதே...?***

**கா. சி.** : 55,56 களிலிருந்து ஒரு புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டு 60களில் ஒரு உச்ச நிலையை எட்டுகிற வரையில், முற்போக்கு இலக்கிய இயக்கம் ஈழத்தமிழ் இலக்கிய உலகில் செயற்பட்டு வந்தது. இப்போது, பின் நோக்கிப் பார்க்கையில் மறுமலர்ச்சி இயக்கமும் அல்லது எழுத்தாளர் சம்பந்தப்பட்ட வேலைகளும் கணேஷ் 'பாரதி'யைத் தொடக்கியதும் இன்று வரலாற்று நோக்கில் பார்க்கும் போது, மாறிவருகின்ற காலத்தினுடைய தன்மைகளை இந்த இரண்டும் காட்டுகின்றன. மறுமலர்ச்சி இயக்கம் என்பது பாரதியுகத்தை ஈழத்தில் கொண்டு வரவேண்டும் என்பதையும், கணேஷினுடைய 'பாரதி' முற்போக்குச் சிந்தனைகளைக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கிலும் வந்தன. ஆனால் இவை பற்றிய நேரடி உணர்வுகள் இல்லாமலும், காலத்தின் தேவைகளுக்காகவும் கலை இலக்கியத் துறையில் சமூக சிந்தனைப்பட்ட செயற்பாடுகள் நிகழ வேண்டும், செய்யப்பட வேண்டும் என்கின்ற கருத்து அந்தக் காலகட்டத்தில் கட்சிமட்டத்தில் நிலவியது. குறிப்பாக இந்தக் கம்யூனிஸ்ட் இயக்கங்கள், அந்தந்த நாடுகளில் உள்ள பண்பாடுகளோடு இணைந்து தொழிற்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை 50களில் பொதுவாக எடுத்தது. இந்தப் பின்புலத்திலேதான் முற்போக்கு இலக்கிய இயக்கம் படிப்படியாக ஆரம்பித்தது. ஈழத்துக்கு ஓர் இலக்கியப் பாரம்பரியத்தை மீட்டெடுப்பதும்

அந்தப் பாரம்பரியத்தில் காலூன்றி நின்றுகொண்டு இன்றைய சமூகப் பிரச்சினைகளை எழுதுவதும், என்கின்ற நோக்கம்தான் மேல்நிலையில் இருந்தது.

பிற்காலத்தில் நான் நாவலரைப்பற்றிக் கண்டிப்பாகப் பேசினாலும் கூட, புதிதாக வந்த புதுமை இலக்கியம் முதலாவது தொடரில், நான் 'நமது பரம்பரை' என்று நாவலரைப்பற்றி எழுதியிருக்கிறேன். இது நாவலர் வகுத்த பாதை. நாவலர் வகுத்த பாதையிலேயே நாங்கள் போவோமென்று. அது எங்களுக்குத் தேவையாகவும் இருந்தது. ஏனெனில் நாங்கள் வெறுமனே இலக்கிய அநாதைகளல்லர். ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்திற்கு நாவலர் வித்திட்டார் என்கின்ற கொள்கையை அடிப்படையாக வைத்து எழுதினேன். அதனைப் பின்னர் நாவலர் சபையில் உள்ளவர்கள் மீள்பிரசுரம் செய்தார்கள். அது படிப்படியாக வந்து, குறிப்பாக யாழ்ப்பாண சமூக ஒடுக்கு முறைகள் பற்றிப் பேசுகிற, சமூகத்தை அக்குவேறு ஆணிவேறாக எடுத்துக் காட்டுகிற, பிரதிபலிக்கின்ற ஓர் எழுத்து முறைமையாகத் தொடங்கினோம். அக்காலகட்டத்தில் டானியல், ரகுநாதன், ஜீவா, அ.ந. கந்தசாமி போன்ற எழுத்தாளர்கள் படிப்படியாக இயங்கத் தொடங்கினார்கள்.

முற்போக்கு எழுத்தாளர்களின் இந்த எழுச்சி இரண்டு மூன்று நிலைப்பட வந்தது. முதலில் 'ஈழத்து இலக்கியம்' என்ற கோஷம்தான் இருந்தது. எல்லோரும் சேர்ந்து ஒருமைப்பட்ட இலக்கியமாக இருந்தது. ஸாகிரா கல்லூரியில் நடந்த மாநாடு உண்மையில், ஈழத்து இலக்கியம் என்ற அடிப்படையில் நடந்தது. பண்டிதமணி கணபதிப்பிள்ளை, கனக செந்திநாதன் போன்ற எல்லோருமே அந்தக் காலகட்டத்தை அறிமுகப்படுத்தியவர்கள்.

அதன்பிறகு இன்னொரு கட்டம் வந்தது. வருகின்ற ஈழத்து இலக்கியம் எத்தகைய நிலைப்பட்ட இலக்கியமாக இருத்தல் வேண்டும் என்கின்ற ஒரு பிரச்சினை வந்தது. அந்நிலையில் இந்தத் தேசத்தைப் பிரதிபலிக்கின்ற இலக்கியமாக இருக்கவேண்டும் என்கின்ற இரண்டாவது கட்டம் வந்தது. அந்தக் கட்டம்தான் 'தேசிய இலக்கியம்' என்பது. தேசிய இலக்கியத்திற்கு இரண்டு நிலைப்பாடு இருந்தது. ஒன்று இந்த நாட்டில் உள்ள பிரச்சனைகளைச் சொல்லுதல். மற்றது பொதுவுடமைப் பின்புலம் அல்லது சோஷலிசப் பின்புலம் காரணமாக சிங்களவர் தமிழர் என்ற வேறுபாடு இல்லாமல், இலங்கை மக்களை இலங்கை மக்களாகப் பார்த்து, அவர்களுடைய பிரச்சினைகளை எடுத்துக் கூறுவது. இந்தக்கால கட்டத்திலேதான் தேசிய இலக்கியம் என்ற கோஷம் முன்வைக்கப்பட்டது. தேசிய இலக்கியம் பற்றித் தொடர்ந்து ஒரு விவாதம் நடைபெற்றது. தினகரனிலும் எழுதப்பட்டது, புதுமை இலக்கியத்திலும் எழுதப்பட்டது.

எழுதும்போது, இந்தியாவினுடைய தாக்கம் இல்லாது - சென்னை எழுத்தாளர்களுடைய செல்வாக்கிலிருந்து விடுபட்டு நமக்கென ஒரு பாரம்பரியத்தை உண்டாக்க வேண்டும் என்று கூறப்பட்டது. இது நடக்கிறபோது இன்னுமொரு முக்கியமான விடயம் நடந்தது. என்னவென்றால் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு என்கின்ற பிரதேசங்களுடன் மாத்திரம்தான் இருந்த இலக்கிய எழுத்துலகை படிப்படியாக இலங்கையின் மற்றைய தமிழர் வாழகின்ற - தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற மற்றைய பிரதேசங்களை உள்ளடக்கத் தொடங்கிற்று. உதாரணமாக, வன்னியில் சௌந்தரநாயகம், மட்டக்களப்பில் எற்கனவே தமிழ் எழுச்சி சம்பந்தமான எழுத்தாளர்கள் எஸ். டி. சிவநாயகம், இராஜபாரதி, பித்தன் எல்லோரும் அந்தப் பின்புலத்தைச் சார்ந்தவர்கள். மலையகத்து எழுத்து தொடங்கியது. கணேஷ் காலம் போய் என்.எஸ்.எம். இராமையா போன்றோருடைய காலம் தொடங்கியது. முஸ்லிம்களுடைய எழுத்துக்கள் மிக முக்கியமாக வெளிவரத் தொடங்கின. குறிப்பாக இலங்கையின் தென் கோடியிலுள்ள திக்வல்லை கிராமத்திலிருந்து கமால் போன்றவர்கள் வந்தார்கள். இவற்றையெல்லாம் சேர்த்து ஒன்றாக ஈழத்து இலக்கியம் என்கின்ற பண்பு முதற்தடவையாக இந்த முற்போக்கு எழுத்தாளர்களால் கொண்டு வரப்பட்டது. அதுவரை ஈழத்து இலக்கியம் என்று சொன்னால், அது நாவலருடைய பாரம்பரியத்தை- சைவப் பாரம்பரியத்தை அல்லது இங்குள்ள மேலாண்மையுள்ள, மேலோங்கி நின்ற ஒரு பாரம்பரியத்தைத் தான் நாங்கள் குறிப்பிட்டோம். அடுத்த கட்டமாக, 50களிலிருந்து இங்குள்ள தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள சகல எழுத்தாளர்களும் பங்குபற்றுகின்ற ஒட்டுமொத்தமான இலக்கியமாகப் பார்த்தோம். மலையக இலக்கியத்தினுடைய வளர்ச்சி, திக்வல்லை போன்ற முஸ்லிம்களுடைய எழுத்துக்களுடைய வருகை. மட்டக்களப்பிலும் பார்க்க அக்கரைப்பற்றிலேதான் முற்போக்கு எழுத்தாளர்களுக்கு ஒரு தளம் இருந்தது. அப்துல் ஸமது, மருதூர்க் கொத்தன், ஏ.இக்பால் போன்றவர்கள்.

இவர்கள் எல்லோரும் கம்யூனிஸ்ட்டுகள் அல்லர். ஆனால் இலக்கியத்தில் அந்தந்தப் பிரதேசங்களைப் பிரதிபலித்து, எழுத வேண்டும் என்கின்ற ஒரு நோக்கில் எழுதினார்கள். தேசிய இலக்கியம் என்பதற்கு அந்த ஒரு பரிமாணம் உண்டு. இன்னொன்றுதான் இலங்கை என்று சொல்லும்போது சிங்கள மக்களையும் சேர்த்துச் சொல்ல வேண்டும் என்பது. உண்மையில் அந்த தேசிய இலக்கியம் என்கிற நாணயத்தின் ஒரு புறம் சென்னை எழுத்தாளர்களின் செல்வாக்குக்கு உட்படாமல் இருத்தல். அந்த நாணயத்தின் மறுபுறம், இங்குள்ள தமிழ்ப் பிரதேசங்கள் யாவற்றிலும் இலக்கியங்கள் எழுதப்படத் தொடங்குதல். அதற்குள் ஒரு ஊடாட்டத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு ஆளுமை பிரேம்ஜி ஞானசுந்தரத்திற்கு இருந்தது. யார்யார் முன்னுக்கு வருகிறார்களோ யார்யார் இந்த முறையிலே

செல்கிறார்களோ அவர்களை உள்வாங்கிக் கொள்ளுதல் என்பது அதனுடைய நடைமுறையாகும். லக்ஷ்மண ஐயர், பண்டிதமணி, பேராசிரியர் கணபதிப்பிள்ளை, கனக செந்திநாதன், இவர்கள் எல்லோருக்கும் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மேடை அமைத்துக் கொடுத்தது. லக்ஷ்மண ஐயருக்கு கடைசிவரையில் மேடை அமைத்துக் கொடுத்தது.

அதன் பின்பு, படிப்படியாக இந்த எழுத்தாளர்கள் பிரதேசப் பிரச்சினை களை, குறிப்பாக சமூக ஒடுக்கு முறைகளைப் பற்றி எழுதத் தொடங்கினார்கள். அந்த எழுத்துகளுக்கான நியாயப்பாட்டை வழங்குகின்ற ஒரு விமர்சனக் குழு ஒன்று வந்தது. இந்த முற்போக்கு சங்கத்துக்குள்ளால் வந்த விமர்சனத்தைப்பற்றி நீங்கள் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் எங்களுடைய குழுவில் யாராவது கதை எழுதினால், அவர் அந்தக் கதையை வாசிப்பார்- கதை பிரசுரமாகியிருக்காது. அந்தக்கதையை எல்லோரும் சேர்ந்து கலந்துரையாடுவார்கள். பிறகு அதை எழுதியவர் திருத்தி அனுப்புவார். அடுத்த கட்டத்தில் என்ன நடந்ததென்றால், பிரசுரமான கதைகளை வைத்துக்கொண்டு எல்லோரும் சேர்ந்திருந்து பேசுவோம். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது, விவேகானந்தா சபை மண்டபத்தில் பின்னேர வேளைகளில் இப்படிக் கலந்து பேசுவோம். நந்தியின் 'ஊர் நம்புமா?' கதையை நாங்கள் இப்படி Discuss பண்ணினோம். இப்படி, எழுதி, வாசித்து, திருத்தி - திருத்துவதென்றால், அப்படி எழுது, இப்படி எழுது என்று சொல்வதல்ல. இதில் என்ன என்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொல்கின்ற தன்மை இருந்தது. அந்த ஒரு உத்வேகம் வருகிறபோது, இந்தக் கதைகள் எல்லாம் பிரதானமாக இந்தியாவிலேதான் வெளியிடப்பட்டன. சரஸ்வதி, சாந்தி போன்ற பத்திரிகைகளிலேதான் வெளியிடப்பட்டன. இந்த நேரத்தில் - 57ல் கைலாசபதி தினகரன் ஆசிரியரானார். தினகரனின் பின்புலத்தைப் பார்க்கவேண்டும். நாதன் முக்கியமாகத் தன்காலத்தில் தினகரனில் முதன்முதலில் ஈழத்து எழுத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர். அதனை நாங்கள் மறுக்கக் கூடாது. ஆனால், அதனை பண்டிதமணி, பேராசிரியர் கணபதிப்பிள்ளை, போன்றவர்கள் மட்டத்திலேதான் வைத்துக் கொண்டாரே தவிர கீழுக்கு வரவில்லை. கைலாசபதி ஞாயிறு தினகரன் ஆசிரியர் ஆனவுடன் ஈழத்துக் கதைகளைப் பிரசுரிக்கத் தொடங்கினார். ஒரு புதிய தலைமுறை எழுத்தாளர்களை எழுதவைத்தார். அந்தக் காலகட்டத்தில், கைலாசபதிக்கும் எனக்கும் இருந்த தனிப்பட்ட உறவு காரணமாக - அது பல்கலைக் கழகத்தால் வந்தது. இரண்டு பேரும் ஒன்றாக வேலை செய்தோம், ஒன்றாக கதைக்கிறது - அது தனிப்பட்ட உறவு. இந்த முற்போக்கு சங்க உறவினால் அது மேலும் பலப்படுத்தப்பட்டது. நான் அப்போது ருத்திரா மாவத்தையில் இருந்தேன். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் கூட்டம்

நடக்கும். அதற்றுள் ஒரு ஒழுங்கு முறை இருக்கும். படிப்படியாக அது ஒரு Debate உள்ள விடயமாக வந்தது. முதலாவது விடயமாக வந்தது என்னவென்றால், ஈழத்து இலக்கியம் என்கிற விடயம்.

இந்த நேரத்தில் இன்னுமொன்று வந்தது என்ன வென்றால், தென்னிந்தியாவில் இருந்து வருகின்ற வணிகப் பத்திரிகைகளை கட்டுப்படுத்துவது நல்லது என்று சொன்னோம். அப்போது எல்லோரும் இவர்கள் இந்தியாவுக்கு எதிரானவர்கள் என்றார்கள். உண்மையில் இந்தியாவிலுள்ள கணிசமான காத்திரமான இலக்கியவாதிகளுக்கு எங்களில் ஒரு பிடிப்பு ஏற்பட்டதற்குக் காரணம், நாங்கள் இந்தக் கோஷத்தை இங்கு வைத்தது. ரகுநாதனுக்கு ராமகிருஷ்ணனுக்கு எங்களில் ஒரு பிடிப்பு ஏற்பட்டது. 59ஆம் ஆண்டு, நானும் சமீமும் தமிழகத்திற்குச் சென்று திருச்சிக்குப் போனபோது, திருலோக சீத்தாராம் சொன்னார், " நீங்கள் எல்லோரும் இப்படிச் சொல்கிறீர்களாமே, உங்களுக்கு ரெம்பத் துணிவு வேணும்" என்றார். அந்தக் கட்டத்தில் அது மூன்று நான்கு வகையான தாக்கங்களை ஏற்படுத்தியது. ஒன்று. முற்போக்கு எழுத்தாளர்கள் எழுதுகின்றவை இலக்கிய மரபின்பாற் பட்டவையா? என்கின்ற விஷயம் வந்தது. அதற்குக் காரணம் என்னவென்றால், அந்த இலக்கியங்களில் எழுதப்படுகின்ற விஷயங்களும் அவர்கள் கையாண்ட மொழியும்.- இது ஒரு பிரச்சினையைக் கிழப்பியது. இன்னொரு பிரச்சனை வணிக இலக்கியத் தாக்கங்களை எதிர்த்தது- இது அரசியல் பிரச்சனையாகவும் வந்தது. அந்தக்காலத்தில் சமஷ்டிக்கட்சி அதற்கு ரெம்பவும் எதிராக இருந்தது. அவர்கள் நாங்கள் சொல்வதை கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அல்லது சிங்களக் கட்சிகளுடைய நிலைப்பாடாகக் கருதினார்கள். எனக்கு நல்ல ஞாபகம் ஒரு கூட்டத்தில் நான் பேசி முடித்ததும் அமிர்தலிங்கம் பேசினார். அவர் பேசியபோது இதுபற்றி என்னை மிகவும் தாக்கிப் பேசினார். அதற்கு ஒரு அரசியல் தாக்கம் இருந்தது.

மற்றது, இலக்கிய ரீதியாக இந்த இலக்கியங்களின் தன்மை எத்தகையது என்கின்றது பற்றிய ஒரு விஷயம் வருகிற போது, எங்களை அறியாமல், இந்த Realism என்கின்ற கோட்பாடு வருகின்றது- யதார்த்தவாதம். ஈழத்து இலக்கியம், தேசிய இலக்கியம் அத்தோடு யதார்த்தவாத இலக்கியம் என்றும் வரத்தொடங்கியது. யதார்தவாதம் என்று வரத் தொடங்கியபோதுதான் மற்றைய எழுத்தாளர்கள் இதற்கு எதிராகக் கிளம்பத் தொடங்கினார்கள். அந்த நேரத்திலேதான் Socialist Realism, Critical Realism என்பது பற்றியெல்லாம் பேசினோம். இந்த மட்டத்தில் வருகிறபோது, படிப்படியாக முதற்தடவையாக தமிழ் எழுத்தாளர்கள் அவர்களுடைய கருத்து நிலையின் அடிப்படையில்- Ide-

ology இன் அடிப்படையில் பிரிவு படுவதற்கான ஒரு சூழல் எற்பட்டது. இந்தியாவிலும் பொதுவுடமைக் கட்சியின் நிலைப்பாடு திராவிட முன்னேற்றக் கழக இனவாதங்களுக்கு எதிரானதாக இருந்தது. இவை இரண்டுக்குள்ளும் ஒருவித ஒருமைப்பாடு இருந்தது. இந்த ஒரு சூழலுக்குள் வருகிறபோது முற்போக்கு எழுத்தாளர்களின் எழுத்துக்களை நியாயப்படுத்த வேண்டிய தேவை இருந்தது. அவர்களுடைய எழுத்துக்கள் நியாயமானவை என்பதை நாங்கள் இங்கும் நிரூபிக்க வேண்டியிருந்தது. தமிழகத்திலும் நிரூபிக்க வேண்டியிருந்தது. விந்தனின் எழுத்துக்களைப்பற்றி கல்கி ஒரு முறை சொன்னார், நாங்கள் எவ்வளவுதான் தொழிலாளியைப்பற்றி எழுதினாலும் அந்தத் தொழிலாளி எழுதுவது போல் வராது என்று. முதல்தடவையாக யாரைத் தண்ணீர் அள்ள வேண்டாம் என்று சொன்னார்களோ அந்தத் தண்ணீர் அள்ள மறுக்கப்பட்டவனுடைய மகன் எழுதும்போது அது சில ஆத்திரங்களுடன் வரும். சில பாஷைகளோடு வரும். நாங்கள் இதை ஒரு சமூகமாற்றமாக, சமூகப் புரட்சிக்கான ஒரு தளமாகவே கருதினோம். இந்தக் காலகட்டத்தில் கருத்து நிலை அடிப்படையில் அதற்குச் சார்பானவர்கள் ஒரு புறமாகவும் அதற்குச் சார்பில்லாதவர்கள் மறுபுறமாகவும் இருந்தனர். இந்தப் பிரச்சினைக்குள்ளேதான் பொன்னுத்துரை விடுபட்டுப் போனார். பொன்னுத்துரையின் உறவினர்தான் எம்.சி. சுப்பிரமணியம். இதனால் கட்சி சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களோடு பொன்னுத்துரைக்கு முன்னர் உறவு இருந்தது. - டானியல், ஜீவா இவர்களுடன் பொன்னுத்துரைக்கு உறவு இருந்தது. தங்களுடைய இலக்கியங்களை - எழுத்துக்களை இவர்கள் பொன்னுத்துரையுடன் Discuss பண்ணுவார்கள். அதில் ஏதாவது பிழையென்று சொன்னால் திருத்துவார்கள். ஏனென்றால் பொன்னுத்துரைதான் இவர்களுக்குள் முந்தியே படித்தவர். பிற்பட்டகாலத்தில் பொன்னுத்துரையுடன் அவர்களால் வேலைசெய்ய இயலாமல் போனது. ஆரம்ப காலத்தில் பொன்னுத்துரை எங்களது கூட்டங்களுக்கு வருவார். பின்பு வருவதில்லை. Ideology ரீதியாகப் பிரியத் தொடங்கியது. சமூக முன்னேற்றத்துக்கு சார்பாக யார் யார் இருந்தார்களோ அவர்கள் கம்யூனிஸ்ட்டுகளாக இருந்தாலென்ன இல்லாதவர்களாக இருந்தாலென்ன அவர்கள் ஒன்றாக நின்றார்கள். நந்தி, லக்ஷ்மண ஐயர் போன்றவர்கள் நம்முடன் நின்றார்கள். ஒரு காலகட்டம் வரை கனகசெந்திநாதன் நின்றார். பேராசிரியர் கணபதிப்பிள்ளை, வித்தியானந்தன் போன்றவர்கள் ஆதரித்தார்கள். பேராசிரியர் செல்வநாயகம் எங்களுக்கு எதிராக எதுவும் சொல்லவில்லை. இந்தக் காலகட்டத்தில் ஓர் இலக்கிய விழிப்புணர்வு ஏற்பட்டது. முந்திய எழுத்தாளர்களும் திரும்ப எழுதினார்கள். - வ.அ. இராசரத்தினம் போன்றவர்கள். அவர் முதலில் எங்களோடு சேர்ந்து நின்றார். பின்னர் படிப்படியாக எங்களோடு கோபித்துக்கொண்டு விலகினார். இந்த நேரத்தில் முற்போக்குடன் சார்ந்து

நின்ற படைப்பிலக்கிய எழுத்தாளர்களுடைய எழுத்துக்களை நியாயப்படுத்துவதும் அவர்களுக்கு ஊக்கம் கொடுப்பதுமான ஒரு நிலைமையை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். அந்தக்கட்டத்தில் எங்களுடைய போராட்டம் இந்த யதார்த்தவாத இலக்கியங்களைப் பேணுகின்ற அல்லது அவற்றைப்பற்றிப் பேசுகின்ற போராட்டமாக அமைந்தது. இந்த நேரத்தில் முதல்தடவையாக யாழ்ப்பாணச் சமூகத்தின் அதுவரை எழுதப்படாத விஷயங்கள் வெளிவந்தன. அதுவும் ஒரு முக்கியமான விஷயம். இந்த அம்சங்கள் காரணமாக பல எதிர்ப்புக்கள் வரத் தொடங்கின. இங்கேயுள்ள இந்தக் கருத்து நிலையை ஏற்காதவர்கள் இரண்டு பகுதியினராக இருந்தார்கள். ஒன்று மார்க்ஸியத்தை எதிர்ப்பவர்கள். இந்தப்பிரச்சனை இங்கு மாத்திரமல்ல தமிழகத்தில் இந்த எழுத்துக்களை எதிர்ப்பவர்களும் இவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். வெ. சாமிநாதன் போன்றவர்கள். 50களில் தோன்றிய எழுச்சி மார்க்ஸிய எழுச்சியாக இருந்தது. அந்த எழுச்சியோடு சேர்ந்து கொண்டவர்கள்- மணிக்கொடிக் காலத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் பிறகு தாங்கள் இதிலிருந்து புறம்பானவர்கள் என்பதைக் காட்டிக்கொண்டார்கள். சரஸ்வதி, சாந்திக்கு எழுதிய செல்லப்பா, க.நா.சு. போன்றவர்கள் எல்லோருக்கும் ‘எழுத்து’ அவர்களுடைய பத்திரிகையானது. ஒரு Polarisation - ஒரு துருவப்பாடு ஏற்பட்டது. அந்தத் துருவப்பாட்டின்போது நாங்கள் இந்த எழுத்தாளர் களுக்காக அதற்கும் மேலாக இந்த எழுத்துக்களுக்காக வாதிட்டோம். வெளிப் படையாகப் பேசினோம்.

பொன்னுத்துரையின் ‘வீ’ என்ற நூல் வந்தபோது, நான்போய்ப் பேசினேன். என்னுடைய பல தோழர்கள் பேசப் போகவேண்டாம் என்று தடுத்த போதும் விவேகானந்த சபையில் நடந்த அந்தக் கூட்டத்தில் நான்போய்ப் பேசினேன். சண்டை வந்தாலும் என்று எனது கட்சித் தோழர்கள் சிலர் எனக்காக அங்கு வந்திருந்தார்கள். பேசும்போது பொன்னுத்துரையின் எழுத்துக்களிலுள்ள சாதகமான அம்சங்கள் பற்றியும் பேசினேன். பாதகமான அம்சங்கள் பற்றியும் பேசினேன். இலக்கியநடை ஒன்று இருக்கிறது. அந்த இலக்கிய நடைத்திறனை வைத்துக் கொண்டு எதனைச் சித்தரிக்க வேண்டும் என்று நான் திட்டவட்டமாகக் கூறினேன். இந்த விவாதங்கள் வருகிற போதுதான் தளையசிங்கம் மேலுக்கு வந்தார். அப்போது ‘கலைச்செல்வி’ மிகமுக்கியமான பத்திரிகையாக இருந்தது. தேவன் போன்றவர்கள் அங்காலும் நாங்கள் இங்காலும் நின்றோம். ‘கலைச் செல்வி’ என்ன செய்ததென்றால், முற்போக்கு இலக்கியம் பற்றிய ஒரு விவாதத்தை ஆரம்பித்தது. எது முற்போக்கு இலக்கியம்? - கலைச்செல்வி கட்டுரைத்தொடரில் நான் முதலில் எழுதினேன். முற்போக்கு இலக்கியம் என்றால் இதுதான் என கட்டுரையில் விளக்கி, இது எங்களுக்கு

நாவலர் காட்டிய பாதை என அக்கட்டுரையை முடித்தேன். அதற்கெதிராக சோ.நடராசா ஒரு நீண்ட கட்டுரை எழுதினார். அக்கட்டுரைத் தொடரிலேதான் தளையசிங்கம் எழுதினார். அதில் மார்க்ஸியத்தை ஓரளவுக்கு ஏற்றும் ஓரளவுக்கு ஏற்காமலும் எழுதியிருந்தார். சோ.நடராசா முற்று முழுதாக எதிர்த்தார். சமஷ்டிக் கட்சியினரோடு எங்களுக்குப் பிரச்சனை. மற்றது ஏற்கனவே இருந்து வந்த அறிஞர்களோடு எங்களுக்குப் பிரச்சனை. இவ்வளவுதான் நடந்தது. இவர்களில் சிலர் முக்கியமான இலக்கியங்களை எழுதியவர்கள். உண்மையில், நாங்கள் எங்களுக்குள் யாராவது ஒருவரை இவர்தான் எழுத்தாளன் என்று சொல்லித் தூக்கியது கிடையாது. கவிதைத் துறையில் முருகையன் முக்கியமானவர். அங்கால் மஹாகவி. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால், எனக்கும் மஹாகவிக்கும் ஒரு நீண்டகாலத் தொடர்பு இருந்தது. நாங்கள் மகாகவியைப் புறக்கணித்து விட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால் தனிப்பட்ட முறையில் எனக்கு மஹாகவியுடன் பிரச்சினை எதுவும் இல்லை. 1965இல் எனது தகப்பனார் காலமானபோது, நான் மஹாகவியினுடைய கவிதையையும் வாங்கிப் போட்டேன். அந்தக் கவிதையின் இரண்டு வரிதான் 'சாதாரண மனிதனின் சரித்திரம்' எழுதுவதற்கு காரணமாக இருந்தது என்று நு.ஃமான், மஹாகவி பற்றிய தனது நூலில் எழுதியிருந்தார். ஆனால் சுதந்திரனில் நான் எழுதுகிறபோது, மஹாகவியினுடைய Sentimental Issue பற்றி நான் சொல்லியிருக்கிறேன். அதை மறுக்கவில்லை. மிகையுணர்வு காரணமாக யதார்த்தத்தைக் காணமுடியாத நிலைமை ஏற்பட்டால் அதுதான் Sentimentalism. அப்போதுதான் சிக்கல் ஏற்படுகிறது. Sentimentalism நியாயபூர்வமான சிந்தனைகளை மழுங்கடிக்கும். இந்தக் காரணத்தைத்தான் நான் கூறினேனேதவிர மஹாகவியின் கவிதைகள் கூடாதவை என்று நான் கூறவில்லை. கைலாசபதி சொன்னதாகவும் எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் நிச்சயமாக நான் சொல்லவில்லை.

நான் அடிக்கடி சொல்வதென்னவென்றால், முற்போக்கு எழுத்தாளர்களில் எல்லோருமே கெட்டிக்காரர் அல்ல. ஆனால் எங்களுக்குள் இருந்த கெட்டிக்காரன் இவர்களுக்குச் சமமான கெட்டிக்காரன். அல்லது இவர்களைவிட கொஞ்சம் மேலே உள்ளவன். அதுதான் எங்களுடைய வாதம். நாவல் இலக்கியத்தை எடுத்துக் கொண்டால் எழுதிய நாவல்களில் இளங்கீரன் மிகவும் சரளமாக எழுதினார். கணேசலிங்கம், தான் வளர்ந்த பிரதேசமாகிய உரும்பிராயை வைத்துக்கொண்டு நல்ல நாவல் எழுதினார். பிற்காலத்து கணேசலிங்கத்தினது நாவல்களின் வளர்ச்சி பற்றி தனியாக யோசிக்க வேண்டும். ஆரம்பத்தில் வந்ததெல்லாம் ரொம்ப நல்ல நாவல்கள். குறிப்பாக 'சடங்கு', 'நீண்ட பயணம்' போன்றவை. உரும்பிராயைச் சேர்ந்த

ஒரு மேல்தட்டு வேளாளக் குடும்பத்தினுடைய கஷ்டங்களையெல்லாம மிகவும் அழகாகக் காட்டுகிற நாவல். இந்த முறையில் வந்த எழுத்துக்களை நாங்கள் நியாயப்படுத்தினோம். மற்றவர்களுக்கு எதிராக என்று சொன்னால், மற்றவர்கள் யார்? அவர்களுடைய Ideologyக்கு எதிராகப் போனமே தவிர வேறில்லை.

எங்களுடைய எழுத்தாளர்களுக்குள்ளேயே நாங்கள் சிலரை மேலுக்குத் தள்ளவில்லை என்ற குறைபாடு உண்டு. அகஸ்தியருக்கு என்னுடன் நீண்டகாலக் கோபம். நான் ஒன்றும் அவரைப்பற்றி நல்லதாய் எழுதவில்லை என்று. அகஸ்தியர் என்னுடைய நெருங்கிய நண்பர், தோழர். எங்களிடையே நல்ல உறவு இருந்தது. ஆனால் ஒரு மட்டத்துக்கு மேல் அவரைப்பற்றி எழுத முடியவில்லை. ஏனென்றால் அகஸ்தியர் ஒரு Stylist அந்த Style கூடாது என்பதல்ல. ஆனால் அந்த Style லே முக்கியப் படக்கூடாது. Matterதான் முக்கியமாக வேண்டும். 'நீ' என்று எதோ எழுதினார். கொஞ்சம் வித்தியாசமான எழுத்தாளர். அதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம்.

என். எஸ். எம். இராமையாவை கைலாசபதி தினகரனில் அறிமுகப் படுத்தினார். எம்.எஸ். எம். இராமையா முதலில் ரேடியோவுக்குத்தான் நாடகம் எழுதினார். அப்போது நான் ரேடியோவில் நடித்துக் கொண்டிருந்தேன். அப்போது நாடக எழுத்தாளன் என்று ரேடியோவுக்கு வரும்போது, நான் கதைத்து, கைலாஸுக்குச் சொன்னேன், 'இப்படி ஒரு முக்கியமான ஆள் இருக்கிறார், அவரிடம் கதை வாங்கலாம்' என்று. அவர் ஆளைவரச் சொல்லு என்று சொல்லி, கதைத்தார். அப்படித்தான் 'ஒரு கூடைக் கொழுந்து' வந்தது.

ஒட்டு மொத்தமாக ஒன்று சொல்வேன், என்னவென்றால் நாங்கள் சிலபேரை வேணுமென்று தூக்கிவிட்டோம் என்பதல்ல. அவர்களின் தன்மைகளை எடுத்துக்காட்டினோம். சாதிமுறை பற்றி எழுதுகிறபோது, டானியல் எழுதுவதற்கும் ரகுநாதன் எழுதுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. டானியல், ஜீவா எழுதுகிறபோது அதில் ஒரு கோபம் இருக்கும். ரகுநாதன்-வடமராச்சியான், 'நிலவிலே பேசுவோம்' எழுதுகிறபோது அற்புதமாக இருக்கும். ஏனென்றால் வடமராச்சியில் அப்படித்தான் சாதிமுறை இருக்கிறது. வெளியில் காட்டிக்கொள்ள மாட்டார்கள் 'நைஸா'கத் தட்டிவிடுவார்கள். அப்போ, நாங்கள் ரகுநாதனைப் பெரிதாகச் சொன்னோம். டானியலுடைய 'தண்ணீர்' கதையை நான் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தேன். அது Sunday Observer இல் வந்தது. அப்போது ஏ

ஏ. ஜே. கனகரட்னா Sunday Observerஇல் ஆசிரியராக இருந்தார். ஒரு பகுதி இந்த மார்க்ஸியத்தை எதிர்ப்பவர்கள். இன்னொரு பகுதியினர் என்னவென்றால், ‘ உங்களுக்கு ஒன்றும் தெரியாது. மார்க்ஸியத்தில் எவ்வளவோ பெரிய வளர்ச்சியெல்லாம் வந்துவிட்டது. நீங்கள் பேசகிற மார்க்ஸியம் ரெம்பப் பழையது. ரெம்பப் பழைய ஒரு கட்சிக் கொள்கையான மார்க்ஸியம் என்று எதிர்த்து நின்றார்கள்- யேசுராசா போன்றவர்கள்- உங்களுக்கு இந்தப் புதிய விஷயங்கள் தெரியாது என்றார்கள். அவர்களுக்கும் நாங்கள் பதில் கூற வேண்டியிருந்தது. நாங்கள் வேணுமென்று யாரையும் தூக்கிப் பிடிக்கவில்லை. எல்லோரும் தோழர்கள். வேலை செய்கிறவர்கள். சேர்ந்து எழுதுகிறவர்கள். எங்களுக்குள் விமர்சகர்கள் எழுத்தாளர்கள் என்று வித்தியாசம் கிடையாது. பொதுவுடமைச் சித்தாந்தத்தின் அடிப்படையாக, வந்த ஒரு தோழமை இருந்தது. அந்த Comrade shipஐ நீங்கள் தவறாக எடுக்கக் கூடாது. யாழ்ப்பாணத்தில் நாங்கள் கூட்டம் போட்டபோது, சிவக்கொழுந்து மாஸ்டர், என்னிடம், ‘உங்களுடைய சங்கத்தில் சேரலாமா, நான் சேருகிறேன்’ என்று கேட்டார். அவருக்குப் பதில் சொல்வது கஷ்டமாக இருந்தது. Ideology இல்லாவிட்டால் அங்கத்தவராகச் சேர்ப்பதில்லை. கட்சிகளுக்குள் ஒரு தோழமை இருந்தது, அதேவேளை ஒரு பொதுப்படையான முன்னெட்டு நிலைமையும் இருந்தது. அதனாலேதான் லக்ஷ்மண ஐயர், நந்தி போன்றவர்கள் எல்லோரும் வந்தார்கள். இவை இருந்ததேதவிர, நாங்கள் மற்றவர்களைத் தாக்கியது இல்லை. அவர்களை எதிர்த்து எழுதியிருக் கிறோம். பொன்னுத்துரையுடைய எழுத்துப் போக்கைப்பற்றி- அவர் என்னதான் சொன்னாலும், எழுத்துப் போக்கைப்பற்றி எழுதியிருப்பேனே தவிர தனிப்பட்ட முறையில் நான் ஒரு காலமும் எதிர்க்கவில்லை. உண்மையில் நாங்கள் யாருக்கு எதிராக எழுதினோம்? யாரைத் தூக்கிவிட்டோம்? சொல்லுங்கள்.

60களின் பிற்பகுதியில், 70களில் ஒரு கட்டம் வருகிறது, என்ன வென்றால், பல இளம் எழுத்தாளர்கள் வந்து எங்களுடன் சேர்ந்து கொண்டார்கள். அந்த நேரத்தில் முற்போக்கு எழுத்தாளர்களிடையே நிச்சயமாகத் தரவேறுபாடு இருந்தது. இதுபற்றி நாங்கள் மிகவும் காரசாரமாக விவாதித்து இருக்கிறோம். முன்னுரைகள் கொடுக்கப்பட்டது போன்ற விடயங்களில் வேறுபாடு இருக்கலாம். ஆனால் அவர்களை மாத்திரம் தூக்கிவிட்டு இவர்களைத் தூக்கிவிடவில்லை என்ற கூற்றை நான் ஏற்கத் தயாராக இல்லை. நாங்கள் வெளிப்படையாக அந்தக் கருத்து நிலைப்பாட்டை வற்புறுத்தியதுண்டு. அது அந்தக்காலத்தின் தேவையாக இருந்தது.

முற்போக்கு எழுத்தாளர்களின் பிரச்சினை பின்னர், எப்படி வந்தது

என்றால், தமிழர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றி ஒரு கருத்துப்பரிமாறல் செய்வது நல்லதென பிரேம்ஜி ஞானசுந்தரம் ஒரு Session வைத்தார். முதல் மாநாட்டைத்தவிர பின்னர் நடந்த இரண்டு மூன்று மாநாட்டிலும் இலக்கியத் தன்மை குறைந்து தமிழர்களுடைய அரசியல் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்ற அந்த விடயத்தை முன்னெடுத்திருந்தார்கள். நாங்கள் கட்சி அங்கத்தவர்கள் அதற்குள் போகக் கூடாது என்ற கருத்தும் இருந்தது. நான் BMICH இல் நடந்த மாநாட்டுக்குப் போகவில்லை. எங்களுக்குள் முரண்பாடு இல்லாமல் இல்லை; நிறைய இருந்தது. நாங்கள் இலக்கிய விடயங்களில் ஒற்றுமையாக இருந்தபோதிலும், அரசியலில் அந்தப் போராட்டம் வேறுமாதிரி இருக்கவேண்டும் என நான் உணர்ந்தேன்.

முற்போக்கு சங்க வரலாறு எழுதினேன். அது ஒரு Magazine இல் வந்தது. அந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில், அந்தக் கட்டுரைக்கான தகவல்களை நான் யாரிடம் இருந்து பெற்றுக் கொண்டேன் எனக் குறிப்பிட்டிருந்தேன். அப்படிக் குறிப்பிடுவது எனக்கு Reserch Disipline காரணமாக வந்தது. கட்டுரை வெளியிடப்பட்டபோது அந்தப் பெயரை நீக்கிவிட்டார்கள். எனக்குக் கோபம் ஏற்பட்டது. ஆனால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எழுதியதும் ஒரு தோழர். அழித்ததும் ஒரு தோழர், ஞான சுந்தரம் ஒரு வருஷத்துக்குப்பிறகு 'பிழை நடந்து போச்சு' என்று என்னிடம் கூறினார். எங்களுக்குள் முரண்பாடு இல்லாமல் இல்லை. டானியல் ஆக்களுக்கும் ஜீவா ஆக்களுக்கும் பயங்கரச் சண்டை. மல்லிகையில் ஆரம்பகால எழுத்தாளர்களுடைய அட்டைப்படம் வந்தபோது, டானியலுடையது தான் கடைசி. தெணியான் இருக்காவிட்டால் கடைசிவரைக்கும் வந்திருக்காது. அந்தக் கட்டுரையை, 'ஆவேசவாதி' என்ற தலைப்பில் நான்தான் எழுதினேன். தெணியான்தான் எழுதுவித்து போடுவித்தார்.

ஆனால் 60கள் வரும்போது சைனா, ரஷ்யா என்று கட்சி உடைந்தது. அந்த நேரத்திலேகூட நாங்கள் இந்த எழுத்தாளர் சங்கத்தை உடைய விடவில்லை. கட்சி உடைந்துபோன பின்னரும்கூட எழுத்தாளர் சங்கத்தை உடைய விடவில்லை. நீர்வை பொன்னையன் அங்காலைதான் நின்றார். அவர் Chinese Embasy இல்தான் வேலை செய்தார். காண்கின்றபோது கதைத்துக் கொள்வோம். எச். எம். பி. முகைதீன் எங்களை விட்டுப் போனார். ஆனாலும் தொடர்ந்து வேலை செய்தோம். முரண்பாடுகள் இல்லாமல் இல்லை. அது காலத்தின் தேவை.

நாங்கள் 60கள் வரை ஒரே சுலோகத்தோடு நிற்கவில்லை. அது

படிப்படியாக மாறிக்கொண்டே வந்தது. பின்னர் 64,65,66 இன் பின்பு இரண்டு விடயங்கள் வந்தன. ஒன்று சீன கொம்யூனிஸம். ஏறத்தாழ எல்லா நல்ல எழுத்தாளர்களும் அங்குதான் இருந்தார்கள்.- எல்லோரும் ஷண் குறுப்தான். டானியல், நீர்வைப் பொன்னையன், இளங்கீரன் எச்.எம்.பி. முகைதீன் போன்றவர்கள். இந்தப்பக்கம் இருந்தவர்கள் மிகக் குறைவு - ஜீவாதான் ரஷ்யக் கொம்யூனிஸ்ட்டுகளின் பக்கம். அப்போ அந்நியோன்னியமான உறவு இருக்கவில்லை. அது உண்மை. அந்த அந்நியோன்னியமான உறவு குறைந்ததால் எழுத்தில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது. இது முக்கியமான கட்டம்.

மற்றது என்னவென்றால், - அது இப்போதுதான் தெரிகிறது, 61,64 களில் கட்சி தமிழ் சம்பந்தமாக எடுக்கிற நிலைப்பாடு. 72,73,75 வரை நாங்கள் உள்ளிருந்து அதனைச் சரிப்படுத்தப் பார்த்தோம். 83க்குப் பிறகுதான் அது பட்டென்று தெரியவந்தது. என்னவென்றால், எஸ்.எல்.எப்.பி.யுடன் சேர்ந்ததால், 66இல் தமிழ் சம்பந்தமான ஒரு எதிர்ப்புப் பிரச்சனையைக் கொண்டுவந்தது. அதற்குப்பிறகு ஒரு சிக்கலான நிலைமை ஏற்பட்டது. அந்தக் கட்டத்தில் இருந்து, எங்களுடைய இலக்கியத்தை எப்படிக் கொண்டு செல்வது என்பது பற்றி ஒரு தெளிவான, தீர்க்கமான, Ideology க்கலான ஒரு நிலைப்பாட்டை எடுக்கவில்லை. முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தமிழ் எழுத்தாளர்களைக் கொண்டிருந்தது. ‘ஜனதா லேகக பெரமுன’ பிரதானமாகச் சிங்கள எழுத்தாளர்களைக் கொண்டிருந்தது. நாங்கள் அங்கு சென்றோம், அவர்கள் இங்கு வந்தார்கள். நாங்கள் சேர்ந்து வேலை செய்தோம். ஆனால், 66க்குப் பின் எங்களால் அங்கால் போகமுடியவில்லை. நாங்கள் இலக்கிய ரீதியாக, ஆக்கப்படைப்பு ரீதியாக, இதைத்தான் எழுதவேண்டும் என்று சொல்கிற நிலையில் இருக்கவில்லை.

சமூக ஒடுக்கு முறைக்கு எதிராக நாங்கள் பேசினோம். அந்த ஒடுக்கு முறைக்கு எதிராக நாங்கள் உரையாடியபோது, அந்தக் காலகட்டத்தில் இந்த இனவாதத்திற்கு எதிராக நாங்கள் பேசவில்லை. அது பாரதிதாசன் சொன்ன இனவாதமாக இருக்கலாம் அல்லது நாரா நாச்சியப்பன் சொன்ன இனவாதமாக இருக்கலாம். அல்லது இலங்கையில் உள்ளதாக இருக்கலாம்.

இனப்பிரச்சனை முகிழ்கிறபோது, அந்தப் பிரச்சனையையும் இனவாத அடிப்படையிலேதான் பார்த்தோம். 83 இலிருந்து அது நிதர்சனமாக, கருத்து வித்தியாசங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் அது ஒரு இன ஒடுக்கு முறையாக மாறியது. இந்தக் காலகட்டத்தில், தமிழ் இளைஞர்களுக்கெதிரான போராட்டம் தமிழ் தீவிர வாதிகளுக்கு எதிரான

போராட்டம், தமிழ் மக்களுக்கு எதிரான போராட்டமாக மாற்றப்படுகிற பொழுது, எத்தகைய நிலையை நாம் எடுப்பது? கலை இலக்கியம் எதைச் செய்ய வேண்டும்? இவைபற்றிச் சிந்திக்கிறதுக்கு ஒரு வாய்ப்பு எங்களுக்கு இல்லாமல் போய்விட்டது. பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முனைவோம் என்று பார்த்தோமே தவிர அதைச் செய்ய வில்லை. அந்த ஒரு அங்கலாய்ப்புக் காரணமாக நான் ஞானாவை ரெம்ப மெச்சுகிறேன். அவர் இந்தப் பிரச்சினையை எழுத்தாளர் மட்டத்திலே தீர்க்கவேண்டும் என்று பாடுபட்டார். துரதிஷ்டவசமாக அரசியல் - காரணமாக அது நடைபெறவில்லை. சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், கட்சியிலிருந்து பிரிந்துபோன ஷண்முகதாசன் படிப்படியாகப் போய், ஒருகால கட்டத்தில் தமிழ் எழுச்சிக்கு எதிராக மிகக் கண்டிப்பாக நின்றவர்,- அதை வன்மையாகக் கண்டித்தவர், கடைசியில் - இறக்கிற காலத்தில் தமிழ்த் தீவிரவாதிகளின் போராட்டம் பிழையில்லை என்றும் IPKFக்கு எதிராகப் பெடியள் போராடுவது பிழையில்லையென்றும் எழுதியிருக்கிறார் என அறிந்தேன். எனக்கு நிச்சயமாகத் தெரியும், பிற்காலத்தில் அவர் தமிழ்த் தீவிரவாதத்தின் நியாயப்பாட்டை உணர்ந்திருந்தார். இந்தக் காரணம்தான் புதுவை, மூர்த்தி போன்றவர்கள் புலிகளிடத்துச் செல்வதற்குக் காரணமாக இருந்தது. இந்தப் புதிய சூழலில் இலக்கிய கர்த்தாவினுடைய பணியாது? இது பற்றிய திட்டவட்டமான கருத்து இல்லை.

முற்போக்கு எழுத்தாளர்களுடைய வளர்ச்சியில் பல்வேறு கட்டங்கள் உள்ளன. அந்தக் கட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வகையான எதிர்ப்புகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. அந்தக் கருத்துநிலை அடிப்படை என்பது, தேசிய இலக்கிய கோசத்தின் பின்னர் வந்த யதார்த்த வாத இலக்கியக் கோட்பாட்டுடன் சம்பந்தப்படுவதால், அது மார்க்ஸியத்தின் இலக்கியக் கொள்கை பற்றிய நிலைக்கு நம்மை இட்டுச் செல்லும். அப்படி வருகிறபோது, Idealogically we became Separate அந்த நேரத்தில் நாங்கள் அங்கால் உள்ளவர்களையும் இங்கால் உள்ளவர்களையும் இனங்காண வேண்டியிருந்தது. இப்படிச் சொல்வதால் எங்களுக்குள் முரண்பாடுகள் இல்லாமல் இல்லை; இருந்தன.

ஒரு முறை ரஷ்ய நாட்டு இலக்கியங்கள்பற்றி பெரிய வாதங்கள் நடைபெற்றதாம். இதேபோன்று, 'பிரச்சார இலக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றீர்கள். உங்களுடைய விமர்சனங்கள் எல்லாம் மோசமாக இருக்கின்றது' என்று பெரிய விவாதம் நடந்தது. அப்போது கம்யூனிச எழுத்தாளர்களுக்குச் சார்பாகப் போன Elya Ehrenburgh என்கின்ற ஒரு பிரபல நாவலாசிரியர் சொன்னார், 'கம்யூனிசம் பேசுகிறதால், Fools எங்களுக்குள் இல்லாமல் இல்லை. கெட்டிக்காரன், தரம் குறைந்தவன்

என்று இல்லாமல் இல்லை. உங்களிடம் இருக்கிறது போலத்தான் எங்களிடமும் இருக்கிறார்கள். நாங்கள் யாருடைய இலக்கியத்தைப்பற்றிப் பேசுகிறோமென்றால், எங்களுக்குள் உள்ள கெட்டிக்காரனுடைய இலக்கியத்தைப்பற்றியே பேசுகிறோம். அது ஏற்படுத்திய தாக்கத்தைப்பற்றிப் பேசுகிறோம் அதில் என்ன பிழை?

25 வருடங்களின் பின்னர், டானியல் தலித் இலக்கியத்தின் பிதாமகன் என்று கொண்டாடப்படவில்லையா? என்னதான் கணேசலிங்கத்தினுடைய பிற்காலத்திய எழுத்துக்களெல்லாம் இலக்கிய தரத்திற்கு வரவில்லை என்றாலும், ஆரம்பகாலத்து நாவல்களின் தரம் காரணமாக இன்றைக்கும் இந்தியாவில் கணேசலிங்கத்திற்கு இடம் இருக்கிறது இல்லையா. இவை தமிழ் நாவல் வரலாற்றில் முக்கியமானவையல்லவா. முருகையன் ஒரு Intelectual Poet. மஹாகவி - முருகையன் சண்டை வந்தாலும்கூட அது உண்மையில் சண்டை இல்லை. இரண்டு பேரும் தனிப்பட்டமுறையில் நல்ல நண்பர்கள். நான் மஹாகவியின் நண்பன். நீங்கள் சரியான முறையில் மஹாகவியை Analise பண்ணினால், மஹாகவியிடமும் இந்தக் குணம் இருக்கிறது. 'தேரும் திங்களும்' என்ற கவிதையில் 'மிச்சாக்கள் சாகலாமாடா?' என்று கேட்கிறான் மனிசன். நாங்கள் எங்களுக்குள் உள்ள திறமைசாலிகளைப்பற்றித்தான் பேசினோம். திறமைசாலிகள் என்று கருதியவர்களை முன்னுக்குத்தள்ளினோம். அது உண்மை. அதற்கு முக்கியமான காரணம் கைலாசபதி தினகரனில் இருந்தது. அந்தக்காலத்தில் இனங்காணப்பட்ட எழுத்தாளர்கள் யார்? திக்வல்லை கமால்.- நிச்சயமாக புதிய நல்ல விஷயங்களைக் கொண்டுவந்த எழுத்தாளர். அ.முத்துலிங்கம் அவர் கொம்யூனிஸ்ட் எழுத்தாளரே அல்ல. ஆனால் அற்புதமான அவதானிப்பு சக்தி கொண்ட, யாழ்ப்பாணத்து மண்ணை அப்படியேகொண்டு வருகிற ஒரு சிறுகதை எழுத்தாளர். பிறகு அவர் படித்து உத்தியோகம் பார்த்து எல்லாம் மறந்து போய், இப்போது மீண்டும் எழுதுகிறார். இப்போதும் நன்றாகத்தான் எழுதுகிறார். முத்துலிங்கத்தை Identify பண்ணியது பிழை என்று சொல்ல முடியமா? அந்தக்காலத்தில் புதிய எழுத்தாளர்களை நாங்கள் Identify பண்ணினோம் அது உண்மை. இங்குள்ள பல எழுத்தாளர்களுக்கு நாங்கள் அவர்களை நன்றாகச் சொல்லவில்லை என்று கோபம். அகஸ்தியருக்கு என்னுடன் நல்ல உறவு இல்லை. அப்போ, இவர்களைத்தான் நாங்கள் முன்னுக்குத் தள்ளினோம் அவர்களை முன்னுக்குத் தள்ளவில்லை என்பது எனது கண்ணோட்டத்தில் அது பிழையாகத் தெரியவில்லை. ஏனென்றால் என்னுடைய குறூப்பைப் பற்றித்தான் நான் பேசுவேன். அந்தக்காலத்தில் அப்படியான Politicsதானே இருந்தது. Politics of Politicsஐ சொல்லவில்லை Politics of Literatureஐ சொல்கிறேன். இலக்கியத்தின் அரசியலைச் சொல்கிறேன். அந்தக்கால

கட்டத்தில் நான் எழுத வேண்டிய தேவை ஏற்பட்டது. இன்னொரு கட்டம் வந்தபோது இந்திய எழுத்தாளர்களை நாங்கள் சாடியது போல இலங்கை எழுத்தாளர்களைச் சாடவில்லை. கைலாசபதி அகிலனையும், க.நா.சு. வையும் அடித்ததுபோல இலங்கை எழுத்தாளர்கள் யாரையாவது அடித்திருக்கிறோமா? அகிலனுக்கு என்ன அடி! அகிலன் அந்த அடியிலிருந்து எழும்பவே இல்லையே.

பொன்னுத்துரையின் விஷயத்திலே கூட பொன்னுத்துரை தான் விரும்பியது போல எழுதுவதற்கு நாங்கள் தடையாக இருக்கவில்லை. அவர் தனது ஆக்கத்திறனை வளர்த்துக் கொண்டிருக்க வேண்டிய அளவுக்கு அவர் தன்னை வளர்த்துக் கொள்ளவில்லை. எங்களைப்பற்றி எதிராக எழுதியதுதான் அவர் செய்த வேலை.

யாழ்ப்பாணத்தில் சண்டை நடந்தபோது முட்டை அடித்தார்கள். நான் முன்னுக்கு நின்றனான். ஈழத்துச் சோமு நின்றவர் - பிராமணன். சொக்கன் அப்போது எங்களோடு இருந்தவர் இப்போது இல்லை, நந்தி எங்களோடு இருந்தவர் பின்னர் இல்லை. அதற்காக நாங்கள் சொக்கனையும் நந்தியையும் சொல்லவில்லை. கைலாசபதிக்கு பரிசு கிடைத்த அதே வருடம் சொக்கனுடைய கதைக்கும் பரிசு கொடுத்தார்கள். கைலாசும் அதைச் சரி என்று சொன்னார். நாங்களும் அது சரி என்று செய்தோம். அந்தப் பாகுபாடு எங்களுக்கு இல்லை. முன்னுக்கு வருகிறவர்களை யார்யாரை கொண்டுவரமுடியுமோ கொண்டு வந்தோம். செம்பியன் செல்வனுக்கும் கைலாசபதிக்கும் இருந்த உறவை நீங்கள் யோசித்துப் பாருங்கள். கருத்துநிலை ரீதியாக ஒருத்தருக்கு ஒருத்தர் மிக எதிரானவர்கள். கைலாசபதியைபற்றி நீர் என்ன நினைக்கிறீர்? என்று செம்பியன் செல்வனைக் கேட்டுப்பாருங்கள். எனக்கு செம்பியன்செல்வன் மிக அண்மையிலேதான் இதனைச் சொன்னார். தனிப்பட்ட உறவுகள் வேறு. எழுத்து ரீதியாக எழுதினதுதான். அதுக்கு ஒன்றும் செய்ய முடியாது.

இவர்களுக்கு ஆக்க இலக்கியம் எழுதத் தெரியாது என்று சொன்னவர்களும் உண்டு. நாங்கள் எழுத்தாளர்கள் என்று 'நாண்டு' கொண்டு நிற்கவில்லை. கைலாசபதி ஒரு காலத்தில் சிறுகதை எழுதினார். என்னுடைய Creativity, Actingஇல் போனது. நான் ஒரு Creative Writer என்று சண்டைக்கு வரவில்லை. பிரச்சினை என்னவென்றால், நாங்கள் ஒரு குழுவினரைத்தான் ஆதரித்தோம் என்று சொன்னால் - இல்லை. Ideological Basisஐ நாங்கள், ஆதரித்தோம். ஆனால் அவர்களுக்குள்ளும் எழுத்துத் திறமை உள்ளவர்களை நாங்கள் கூடச் சொன்னோமே தவிர, எழுத்துத் திறமை இல்லாதவர்கள் எவரையும் நாங்கள் மேலுக்குத்

தள்ளவில்லை. முருகையனை மேலுக்குத்தள்ளிவிட்டீர்கள் மஹாகவியை முன்னுக்குத் தள்ளவில்லை என்று சொன்னார்கள். நாங்கள் மஹாகவியைப்பற்றிப் பேசாமல் இருந்திருக்கலாம். ஆனால் மஹாகவியை ஒரு மட்டமான கவி என்று நான் சொல்லவில்லை. ஈழத்து இலக்கிய வளர்ச்சிபற்றி எழுதியபோது, ஈழத்தின் தமிழ்க் கவிதை வளர்ச்சி என்ற கட்டுரையை நீங்கள் பார்க்கலாம் நான் மஹாகவியை எப்படிப் பார்க்கிறேன் என்று.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நியாயப்பாடு இருக்கும். முற்போக்கினுடைய தன்மை என்னவென்றால், கால கட்டங்கள் மாறுகிற போது, அந்தக் கட்டங்களின் மாறுகை Quantitative change makes Qualitative changes- இது மார்க்ஸியத்தின் அடிப்படை நிலை இரண்டு தேங்காய் இருக்கிறது -அது கறிக்குப் பயன்படுகிற முறைக்கும், பத்து தேங்காய் இருக்கிறபோது அது கறிக்குப் பயன்படுகிற முறைக்கும் வித்தியாசம் உண்டு. Quantitative change is also a Qualitative change. It brings about Qulitative change. நாங்கள் அந்த Quantitative changeஐ மறுதலித்தோம். அதற்கு அந்த Politicsவிடவில்லை. அதுதான் பிரச்சனை.
அதனால் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்ன செய்தது என்றால், கட்சி இங்காலை எப்படிப் பேசினாலும் அங்காலை எப்படிப் பேசினாலும்- தமிழ்மக்களுடைய உரிமைகளை எப்படி வென்றெடுப்பது என்று பத்து ஆலோசனைகளை வைத்துக்கொண்டு ஞானா மூன்று நான்கு கூட்டங்கள் நடத்தினார்.

72இல் செய்தோம் சரிவரவில்லை. 72இல் செய்தபோது நானும் குமாரசூரியரோடு சேர்ந்து, இலங்கை வானொலியில் “நான் ஒரு சம்பளம் இல்லாத உத்தியோகம்” பார்த்து இன்றைக்கு கூட இலங்கை வானொலிக்காரர்கள் திட்டுகிறார்கள். நாங்கள் யாருக்கு எதிராகக் கொடி கிழப்பினோமோ- திருமதி குலசிங்கம்- அவர் வந்து என்னுடன் கதைத்துவிட்டுச் சென்றார். யாருக்காகப் பேசினோமோ- நண்பர் இராஜசுந்தரம், அவர் எங்களைப்பற்றி நல்லாகச் சொல்ல வில்லை. யாரைக் கொண்டுவரவேண்டுமென்று நாங்கள் கஷ்டப்பட்டோமோ அவர் எங்களுக்கு எதிரி. அவர் ஒரு Wonderful man, Close friend. But he will not have a good word about me. இதுகள் எல்லாம் மனித இயல்புகள். இதுகளல்ல முக்கியம்.

74வரையில் நாங்களும் போராடினோம். நான் வீ. பொன்னம்பலத்தைக் கேட்டேன், ‘என்னப்பா, கொல்வினுடைய Constitutionஇல் ஒன்றையும் காணவில்லையே’ என்று. ‘போசாமல் இரு, அதெல்லாம் சரிவரும்’ என்றார். அப்போதுதான் ரஷ்யாவிற்குப் போய்வந்து, ‘தமிழ் செந்தமிழ்

ஆகிறது' என்று அங்குள்ள தமிழ்ப் பெடியள் இதில் ஆர்வமாக இருந்தது பற்றி இரண்டு கட்டுரைகள் மல்லிகையில் எழுதினேன். அதைப் பார்த்துவிட்டுத்தான் 'செந்தமிழர் இயக்கம்' எனக் கூறப்பட்டது. சிவசுப்பிரமணியம் பாரிய தூணாக வி. பொன்னம்பலத்துடன் நின்றார். பின்பு பொன்னம்பலம் கட்சிக்கு வெளியில் போனார். ஒரு கம்யூனிஸ்ட்டுக்கு உலகத்தில் வெகு மோசமானவன் யார் என்று கேட்டால் அது மாஜி கொம்யூனிஸ்ட் தான். அது அந்தக் கட்சியினுடைய கட்டுப்பாட்டினுடைய தாக்கம்.

இவையெல்லாம் நடந்து முடிந்தவை, 97 காலகட்டத்தில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஏதாவது செய்யலாமா என்பது பற்றி நீர்வை பொன்னையன், சமீம், ஈழத்துச் சோமு, நான் சேர்ந்து பேசினோம். ஜீவாவை வரச் சொன்னோம். ஜீவா வரவில்லை. நாங்கள் அந்தக் கூட்டத்தை நடத்த முடியவில்லை. அதன்பின்பு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இரண்டு கூட்டங்கள் நடத்தினோம். அதன்பிறகு நடத்த முடியவில்லை.

முற்போக்கு எழுத்தாளர் என்பது Ideologyயை பொறுத்த விடயம். அது பொதுவுடமையைத் தளமாகக் கொண்டது. அதற்குச் சார்பாக உள்ளவர்களை அது ஏற்றுக் கொள்ளும். அவர்களை வரவேற்கும். காலத்தின் தேவைகளுக்கேற்ப கோஷங்களை மாற்றிக் கொண்டு வரும். இந்தக் காலங்களின் தேவைகளுக்கு ஏற்ப கோஷங்கள் மாற்றப்படாமல் போனதுதான் அதற்கு ஏற்பட்ட பிரச்சனை. இன்றைக்கும் நாங்கள் இல்லாத ஒரு இளந்தலை முறை வந்து அதனை எடுத்துச் செய்வார்களேயானால், நான் அவர்களோடு நிற்பேன். துரதிஷ்டவசமாக நிலைமை மாறிவிட்டது.. என்னவென்றால் சிங்கள மக்களுக்குள்ளும் சிங்களத் தேசியம் பேசுகிற ஆட்கள், தமிழ் மக்களுக்குள் தமிழ் மார்க்ஸியம் பேசுகிறவர்கள். அந்தமாதிரியான நிலைமை வந்து விட்டது. நாங்கள் இனவாதத்திற்கு எதிராக இருந்தோம். இன ஒடுக்கு முறைக்கு எதிராக என்னசெய்வதென்று எங்களுக்குள் தெரியாமல் போய்விட்டது. இதுதான் எங்களுக்கு ஏற்பட்ட அவலம்.

❑ ❑ ❑

# 9

**தி.ஞா. : *அறுபதுகளில் முற்போக்கு, நற்போக்கு, மரபுப் போராட்டங்கள் நடந்தன. ஒரு கூட்டத்தில் முற்போக்காளர்கள் முட்டையெறிந்ததோடு, அவை முடிவுற்றதாக அறிகிறோம். இதுபற்றிய உங்களுடைய கருத்து என்ன?***

**கா.சி. :** அந்தக்காலத்தில் முற்போக்குவாதம் இருந்தது. மரபுவழிக்காரருக்கு எதிரான போராட்டமும் இருந்தது. பேராசிரியர் தில்லைநாதன் தினகரனில் ஆசிரியராக இருந்தபோது மரபுப்போராட்டம் பற்றிய கட்டுரைகளைப் பிரசுரித்துக்கொண்டிருந்தார். அதில் வந்த முதலாவது கட்டுரை என்னுடைய கட்டுரை. இளமுருகன், சொக்கலிங்கம், தேவன் போன்ற பலர் அதுபற்றி எழுதினார்கள். துரதிஷ்டவசமாக நண்பர் இளங்கீரன் போட்ட தொகுதியில் எனது கட்டுரை வரவில்லை.

மரபு என்னும்போது அதில் புதியவற்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். மரபில் மாற்றத்துக்கும் இடமுண்டு என்னும் வாதமும் நடந்தது. அதில் பண்டிதர்கள் ஒருபுறமாகவும், முற்போக்கு எழுத்தாளர்கள் மறுபுறமாகவும் விவாதங்களை முன்வைத்தனர். முற்போக்கை ஆதரித்தவர்களும் அதற்கு ஆதரவாக இருந்தார்கள். சொக்கலிங்கம் போன்றவர்கள் அதற்கு ஆதரவாக எழுதினார்கள். அப்போது அவையிரண்டும் இருந்தன.

நற்போக்கு என்பது, பொன்னுத்துரையால் கொண்டுவரப்பட்ட ஒரு கோஷம். சு.நடேசன் சாகித்திய மண்டலய கூட்டத்தில் பேசும்போது 'இலக்கியத்தை முற்போக்குப் பிற்போக்கு என்று பிரிக்காதீர்கள். இலக்கியம் நற்போக்காக இருந்தால் அதுவேபோதும்' என அவர் அழகாகச் சொன்னார்.

பொன்னுத்துரைக்கு எப்பொழுதும் சொல் விளையாட்டிலே ஒரு கவர்ச்சி உண்டு. அவர் அதனைப் பிடித்துக்கொண்டு 'நற்போக்கு இலக்கியம்' என்று முக்கியப்படுத்தினார். அது என்றைக்குமே ஒரு இலக்கிய இயக்கமாக இருந்ததில்லை. எது நற்போக்கு இலக்கியம் என அவர் வரைவிலக்கணம் கூறவுமில்லை. நான் சுவாரஸ்யமான ஒரு கேள்வி கேட்டேன். 'பொன்னுத்துரையின் இலக்கியங்கள் நற்போக்கு இலக்கியங்களா?' எனக் கேட்டேன். அவர், நற்போக்கு இலக்கியம் என்றது ஒரு விதண்டாவாதத்தின் தன்மை; பொன்னுத்துரைக்கே இயல்பாக உள்ள குணம். நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. நான் அவருக்காகக் கவலைப்படுவது என்னவென்றால், அவர் இப்படியான சண்டைகளில் மினக்கெட்டதால் தனது திறமைகளைச் சரியானமுறையில் பயன்படுத்தவில்லை. இதுதான் பொன்னுத்துரையைப் பற்றி நான் சொல்லக்கூடியது. A good stylist. ஆனால் மற்றச்சண்டைகளில் ஈடுபட்டதனால் தன்னுடைய திறமைகளைத் தானே மழுங்கடித்துக் கொண்டார்; பாவம்.

முட்டையடித்த விடயம், அது முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைப் பாதித்த ஒரு மிகப்பெரிய - எங்களுடைய சங்கத்தினால் செய்யப்பட்ட ஒரு மிக மோசமான காரியம். அதை நான் மறுக்க முடியாது. அது நடந்த சூழ்நிலையை நான் சொல்ல வேண்டும். 1963ஆம் ஆண்டு நான் திருமணம் முடித்திருந்த காலகட்டம். நான் முதல்நாள் பின்னேரம் யாழ்ப்பாணத்திற்குச் செல்லவில்லை. மறுநாள் நேராக இந்துக் கல்லூரிக்கு கூட்டம் நடந்த இடத்திற்குச் சென்றேன். கூட்டத்தில் ஆட்கள் எல்லோரும் நின்றார்கள். நான் பின்னுக்கு நின்று பார்த்துக் கொண்டிருந்தேன்.

பேராசிரியர் சதாசிவம்தான் இழிசினர் வழக்குப் பற்றித் தொடக்கியவர். அவர் விஷயம் விளங்காமல் இது 'இழிசினர் வழக்கு' என்று தொல்காப்பிய உரைகளில் வருவதைக் குறிப்பிட்டார். பண்டிதர்மார் எங்களைப்பற்றிப் பேசும்போது இது இழிசினர் வழக்கு என்று குறிப்பிட்டார்கள். 'இழிசினர்' என்று கூறும்போது ஒரு சாதிபற்றிய தொனிதெரிகிறதல்லவா? இதுபற்றி எழுதிய பண்டிதர் ஒருவர் சரியாக விளங்கிக்கொள்ளாமல் 'இழிசனர்' என்று எழுதிவிட்டார். இழிசினர் என்று சொன்னால் கீழ்நிலைக்குப் போனவர்கள் என்று கருத்து. இழிசனர் என்று சொன்னால் அது சாதியைத்தான் குறிக்கும். அதனை நாங்கள் பிடித்துக்கொண்டோம். அதற்கெதிரான பலமான கட்டுரைகள் எழுதப்பட்டன. இந்த விவாதத்தை துரதிஷ்டவசமாக சதாசிவம் முன்னெடுத்திருந்தார்.

அந்த நேரத்தில் சதாசிவம் சாகித்திய மண்டலயவில் முக்கியமான வராக இருந்தார். அவர் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார். சாள்ஸ் சில்வா என்றவரும் வந்திருந்தார். சு.நடேசபிள்ளையும் பேசினார். இந்த

சாகித்திய மண்டலத்தில் சமீமும் ஒரு அங்கத்தினராக இருந்தார். அவரும் அங்கு வந்திருந்தார். அவருக்கு அங்கு ஒரு இடமிருந்தது.

இழிசினர் என்று சொன்ன அந்தக் கோபம் அங்கே இருந்தது. இழிசினர்-இழிசனரா? அப்போ, அந்தக் கூட்டத்தில் ஏதாவது தப்பு ஏற்பட்டால் கூட்டத்தைக் குழப்புவதற்குத் தீர்மானித்திருந்தார்கள். அது உண்மை என்று நினைக்கிறேன். கூட்டத்தைக் குழப்பும்போது என்னமாதிரிக் குழப்புவது? கூட்டத்தில் பிரச்சினை எழுப்பி 'நீங்கள் இழிசனர் என்று பேசினீர்களா?' என்று கேட்கிற ஒரு தீர்மானம் இருந்தது. அதனை சாகித்திய மண்டல அங்கத்தினரான சமீம் கேட்பதாகவும் இருந்தது. வேறொருவரும் கேட்பதாக இருக்கவில்லை. இதற்குள், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திற்குள் இருந்த இளம் மட்டங்கள் - எனக்கு ஆட்களைத் தெரியும்; நான் பெயர் சொல்லவிரும்பவில்லை - முட்டை அடிப்பது என்று தீர்மானித்துவிட்டார்கள். உண்மையில் எங்களுக்கு இவை ஒன்றுமே தெரியாது. கைலாசபதியும் அப்போது யாழ்ப்பாணத்தில் நின்றவர், அவரும் வருவார் என்று நினைத்துக் கொண்டு நான் கூட்டத்திற்குச் சென்றேன். அவர் கூட்டத்தில் நிற்பார் என நான் நினைத்தேன்.

நடேசன் அற்புதமாகப் பேசினார். அப்போதுதான் 'நற்போக்கு' என்ற வசனத்தைப் பாவித்தார். அதன்பின்பு சதாசிவம் பேசத்தொடங்கினார். அப்போது சமீம் எழுந்து ஏதோ கேட்டார். கூட்டம் குழம்பியது. நான் கூட்டத்தின் நடுப்பகுதியில் இடையில் நின்றேன். எனக்கு நடந்தது எதுவும் புரியவில்லை. கூட்டம் குழம்பியவுடன் நான் சடாரென முன்னுக்குப் போனேன். சாள்ஸ் சில்வா கீழே விழுந்துபோனார். நான் அவரைத் தூக்கினேன். நடேசன் அருகிலே சட்டையில் முட்டை வழிய நின்றுகொண்டிருந்தார். சாள்ஸ் சில்வா சிங்களவர், ஏங்கிப்போனார். நான் அவருக்குத் தண்ணீர் கொடுத்து அழைத்துவந்து காரில் ஏற்றினேன். நான் சடாரென்று முன்னுக்குப் பாய்ந்து போனதால் அங்கு அந்த நேரத்தில் நான் முன்னுக்கு நின்றேன். எனக்கு மனது தாங்காமல்தான் பாய்ந்து போனேன். அதன்பின்னர் கூட்டம் கலைந்து எல்லோரும் போய்விட்டார்கள்.

அதன் பிறகு நாங்கள் எல்லோரும் வந்து ஆரியகுளத்தடியில் இருந்த சனசமூக நிலையத்தில் கூட்டம் கூடிப்பேசிப் போட்டுப் போனோம். அந்த நேரத்தில் அது ஒரு சாதிப்பிரச்சினையாக இருந்தது. அந்த நிலைக்கு அது போகாமல் தடுத்திருக்க வேண்டும்.

நிலைமை மாறியது. முற்போக்கு எழுத்தாளர்களோடு தொடர்பு வைத்திருந்த ஆதரவாளர்கள் பலர் ஒதுங்கிக் கொண்டார்கள். சொக்கலிங்கம் எங்களோடு இருந்தவர். அக்காலத்தில் கல்வித்

திணைக்களத்தில் உயரதிகாரியாக இருந்த சோமசுந்தரம், சொக்கலிங்கத்தைக் கொண்டுபோய் எங்கோ ஒரு கண்காணாத இடத்திற்கு மாற்றம் கொடுத்தார். பின்பு கஷ்டத்தின்பேரில் நந்தியைப் பிடித்து வேறொரு பாடசாலைக்கு மாற்றம் பெற்றார். முட்டை அடித்த விடயம் மிகப் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியது. முற்போக்கு இலக்கிய இயக்கம் யானை தன்னுடைய தலையிலே தானே மண்ணை அள்ளிப் போடுகிற மாதிரி தன்னைத்தானே மாசுபடுத்திக் கொண்டதற்கு முக்கிய காரணம் அந்த முட்டையடி. ஆனால் அதற்காக அவர்களை இழிசினர் என்று சொல்ல என்றும் விடவும் தயாராகயில்லை. முட்டையடித்தது என்பது நாங்கள் செய்த மிகப்பெரிய மோசமான தவறு. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை அது மோசமாகப் பாதித்தது. நிச்சயமாக அது ஒரு கறை. நான் ஒத்துக் கொள்கிறேன். அதன்பிறகு நாங்கள் எழும்பவேயில்லை.

**தி.ஞா. : *அந்தக்காலகட்டத்தில் முற்போக்கு எழுத்தாளர்கள் சண்டித்தனத்தைப் பாவித்தார்கள். அதற்குப் பயந்துதான் இந்தப் பண்டிதர்கள் எல்லோரும் ஒதுங்கிப்போனார்கள் என்றும் கூறப்படுகிறது.....!***

**கா.சி. :** இல்லை. அப்படியல்ல, சண்டித்தனம் பயன்படுத்தப்பட்டது அந்தக் கூட்டத்திலேயே தவிர மற்ற எந்த இடத்திலும் சண்டித்தனம் பயன்படுத்தப் படவில்லை. அது அந்த இடத்தில் நடந்ததற்குக் காரணம் அது சாகித்திய மண்டலவிழா, இழிசினர் வழக்குப் பற்றிய பிரசாரம் - சமீம் அதில் மெம்பர். நடேசன் பேசி முடிந்த பின்புதான் - சதாசிவம் பேசிய போதுதான் சமீம் கேள்வி கேட்டார். அதனாலேதான் அந்தப் பிரச்சினை வந்தது. இழிசனர் வழக்குச் சர்ச்சை நடந்த காலகட்டத்தில் செய்யப்பட்டவிடயமிது.

சண்டித்தனம் வேறெங்குங்காட்டப்படவில்லை என்பதற்கு உதாரணம் சொல்கிறேன். இளமுருகன் மரபுப்போராட்டம் பற்றி எங்களிடம் பேசினார். நான் 'அசையாத குட்டை நீரல்ல மரபு' என்று தினகரனில் கட்டுரை எழுதினேன். அதுதான் அதுபற்றிய எனது முதலாவது கட்டுரை. அதற்கு இளமுருகன் பதில் எழுதினார். பதில் முழுவதையும் தில்லைநாதனால் போடமுடியவில்லை. இளமுருகன் என்ன செய்தார் என்றால், எழுதிய முழுவதையும் ஒரு புத்தகமாகத் தொகுத்து 'செந்தமிழ் வழக்கு' என்ற பெயரில் வெளியிட்டார். இந்த மரபு விவாதம் பற்றி நாங்கள் பல இடங்களில் விவாதித்திருக்கிறோம். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு 'இளங்கதிர்' இதழில் மரபு பற்றி சதாசிவம், வித்தியானந்தன், கைலாசபதி ஆகியோர் கட்டுரைகள் எழுதினார்கள். நான் சொல்லும் முக்கியமான உதாரணம் என்னவெனில், வறுத்தலை விளானில் ஒரு கூட்டம் நடந்தது. சதாசிவத்திற்குச் சார்பாக இருந்த FXC நடராசா ஒருபுறமும், மறுபுறத்தில்

நானும் பேசினோம். அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் பிற்காலத்தில் இலக்கண வித்தகர் என அழைக்கப்பட்ட நமசிவாய தேசிகர். நான் முதலிலும் பின்னர் நடராசாவும் பேசினோம். தலைமைவகித்த நமசிவாய தேசிகர், ஈற்றில் நேர்மையான ஒரு விசயத்தை எடுத்துக்கூறினார். 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினான' என்று பேசினார். அப்போதுதான் அவரது நேர்மையை மெச்சினேன். இது நடந்தது 62, 63களில். 78இல் நான் யாழ். பல்கலைக்கழகத்திற்குப் போனேன். அதைத் தொடர்ந்து வந்தகாலத்தில், உள்ளூர் அறிஞர்களுக்குப் பட்டம் கொடுக்கவேண்டும் என்று கூறி, நமசிவாயதேசிகருக்கு 'இலக்கண வித்தகர்' பட்டம் கொடுக்க வேண்டுமென நான் வாதாடினேன். அப்போது நான் தமிழ்ப் பிரிவுத் தலைவராக இருந்தேன். கைலாசபதி பீடாதிபதியாக இருந்தார். பண்டிதர்மார் சண்டித்தனத்தால் ஒதுங்கினார்கள் என்பது நிச்சயமாக இல்லை. பேராசிரியர் கணபதிப்பிள்ளை பற்றி Work பண்ணிய போதுதான் அதன் தன்மை எனக்குப் பிடிபட்டது. என்னவென்றால் தமிழை ஒரு பாடமாகப் படிப்பிக்கின்ற முறைமை இருந்தது. உயர்தர வகுப்புக்கு - பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புக்குத் தமிழை அந்தக்காலத்தில் பண்டிதர்மார்தான் படிப்பித்தார்கள். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பாட அமைப்புக் காரணமாக இலக்கிய வரலாறு பற்றிய பாடப்புத்தகங்கள் வெளிவரத் தொடங்கின. இலக்கிய வரலாறு பற்றி அந்தப் பண்டித பரம்பரையினருக்கு அவ்வளவு தேர்ச்சியில்லை. இதன்காரணமாக, இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றை அவர்கள் படிப்பிக்க, இலக்கிய வரலாற்றை மற்றவர்கள் படிப்பிக்க வேண்டிய நிலைமை இருந்தது. ஒட்டுமொத்தமான, இலங்கை முழுவதற்கும் பொதுவான ஒரு தமிழ் tradition ஒன்றை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பிரதானமாகப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை கொண்டு வந்தார். அதற்கு உதவியாக பேராசிரியர் செல்வநாயகம், வித்தியானந்தன் ஆகியோர் இருந்தார்கள். பண்டிதர்மாருடைய படிப்பித்தல் முக்கியத்துவம் இதனால் குறைந்தது. இந்தப் பின்புலத்திலேதான் அவர்கள் எங்களைத் தாக்கினார்கள். அவர்கள் தனியாகக் கைலாசபதியையும், சிவத்தம்பியையும் தாக்கவில்லை. தனியாக டானியலையும் ஜீவாவையும் தாக்கவில்லை. அவர்கள் தாக்கியது கணபதிப்பிள்ளை- செல்வநாயகத்தின் படிப்பித்தல் முறைமையை. அதனாலேதான் இவர்கள் ஆடுகிறார்கள் என்று இளமுருகனே கூறினார். இளமுருகனின் செந்தமிழ் வழக்கு என்ற புத்தகத்தை எடுத்துப்பார்த்தீர்களானால் இது விளங்கும்.

அவர்களுக்கு வந்த பிரச்சினைஎன்னவென்றால் அதுகாலவரையில் எழுத்தாளர்களாக இருந்த இலங்கையர்கோன், வைத்திலிங்கம் ஆகியோர்

நவீன இலக்கியக்காரர்கள். அவர்கள் தங்களைப் பழைய இலக்கியக்காரர் என்று சொல்லவும் இல்லை. பண்டிதர்களும் அவர்களோடு சண்டைபோடவும் இல்லை. இவர்கள் எப்போது பேசினார்கள் என்றால், டானியலும் ஜீவாவும் தங்களுடைய பிரச்சினைகளை எழுதியபோதுதான். அப்போதுதான் இவர்களுக்குச் சிறுகதையே வேண்டாம் என்ற கோபம் வந்தது என நான் கருதுகிறேன். அதற்குள் ஒரு சமூகப்பிரச்சினை இருக்கிறது. அந்தச் சமூகப் பிரச்சினையை நாங்கள் மறுதலிக்க இயலாது. இந்த நேரத்தில், இதுவரை காலமும் இவர்களுக்குத்தான் தெரியும் என்றிருந்த தொல்காப்பிய உரைகளைப் பற்றி நாங்களும் கைவைத்துத் தொடங்கினோம் - 'காலமும் வழக்கும் திரிந்தவிடத்து திரிந்த வற்றிற்கேற்ப அமைத்துக்கொள்வதோர் முறைமை' எனப் பேராசிரியர் உரையில் சொல்லியிருக்கிறார். 'சேரிமொழியாற் செவ்விதிற் படுமே' - சேரிமொழி பயன்படுத்தலாம் - டானியலும் ஜீவாவும் அந்த மொழியில் கதை எழுதலாம் என்றோம். இவற்றை நாங்கள் சொல்லத்தொடங்கியபோது பண்டிதர் மார்களுக்கு, நாங்கள் முற்றிலும் தமிழ் தெரியாதவர்களல்லர் என்று தெரிய வந்தது. எல்லாப் பண்டிதர்மாரும் இவற்றை எதிர்க்கவில்லை. வேந்தனார் எதிர்க்கவில்லை, பொன். கிருஷ்ணபிள்ளை எதிர்க்கவில்லை.

பாவம் சதாசிவம், பேராதனையில் பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை, வித்தியானந்தன் ஆகியோருடன் இருந்த சண்டை இப்படி வந்து வெடித்தது. செல்வநாயகம் தனக்கு ஆதரவாக இருப்பார் என்று பார்த்தார். ஆனால் செல்வநாயகம் இந்த விடயத்தில் நிதானமாக இருந்தார். சதாசிவம் எவ்வளவோ கெட்டிக்காரனாக இருந்தபோதும் அவரைப்பற்றி இன்று பேசுவார் இல்லை. வித்தியர், கணபதிப்பிள்ளை, செல்வநாயகம் ஆகியோர் பேசப்படும் அளவிற்கு சதாசிவம் பேசப்படுவதில்லை.

பண்டிதர்மார் சண்டித்தனத்துக்குப் பயந்து ஒதுங்கினர் என்பதை நான் ஒத்துக்கொள்ளமாட்டேன்.

❑ ❑ ❑

# 10

***தி.ஞா. : முற்போக்கு இலக்கியத்தின் தூண்களாகத் தாங்களும் பேராசிரியர் கைலாசபதியும் கணிக்கப்பட்டவர்கள். ஆனால் இப்போது அதே முற்போக்கு வட்டாரத்திலிருந்து நீங்கள் முற்றிலும் மாறுபட்டிருப்பதாகவும் எதிர்த்திசையில் செல்வதாகவும் கூறப்படுகிறதே?***

**கா.சி. :** இந்தக் கேள்வி கேட்டதற்கு நன்றி. ஏனென்றால் என்னுடைய தற்போதைய நிலைப்பாட்டைப்பற்றி என்னால் இயன்றளவு சொல்லமுடியும். நான் முற்போக்கு விமர்சனம் பற்றிய பதில் சொன்னபோது, அதிலே இந்த Progressive movement என்று கருதப்படுகிற அந்தச் சித்தாந்தம் - It believes in social progress ஒன்றிலிருந்து ஒன்றுக்குப் போவது. Basically ஒரு Marxcist Ideology. வெளிப்படையாக Marxcist அல்லது Communist party என்று சொல்லாமல் Progressive என்று சொல்வது. இந்த tradition 1930 களிலிருந்தே இருக்கிறது. அது என்னவென்றால் ஒவ்வொரு கட்டத்திலும் புதிய புதிய பிரச்சினைகள் வருகிறபொழுது, அதை ஒரு முற்போக்குக் கண்ணோட்டத்தில் நோக்குபவர்கள் எவ்வாறு பார்க்கிறார்கள் என்று பார்ப்பது. இந்த கம்யூனிஸப் புரட்சிவாத நாடுகளில் இந்த மாதிரியான முற்போக்கு எழுத்து இயக்கங்கள் உள்ளன; தியேட்டர்கள்கூட உள்ளன. IPTA-Indian Progressive Theatre Association என ஒன்று இருந்தது. அது பிற்காலத்தில் இல்லாமல் போய்விட்டது. எங்களுக்கு வந்த பிரச்சினை என்னவென்றால் 1965-66 களிலிருந்து முற்போக்கு இலக்கியத்தில், முற்போக்கு என்பது ஈழத்தில் எவ்வாறு தொழிற்பட வேண்டும் என்பதுபற்றிய சில பிரச்சினைகள் தோன்றின. ஒன்று, கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. சண்முகதாஸின் தலைமையின் கீழ் ஒருபிரிவு. ஏறத்தாழ எழுத்தாளர்கள்

எல்லோரும் இந்தப் பிரிவுக்கே சென்றார்கள். இதன்பிறகு அந்தக் கட்டத்திலிருந்து நாங்கள் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் காண்பது அவசியம். நமக்குத் தெரிந்தவர்கள் அரசாங்கத்தில் இருந்தும் அது நடைபெறவில்லையே என்ற ஆதங்கத்தில் எமது செயலாளர் ஞானா அதனை ஒரு தேவ ஊழியமாகக் கொண்டு அதனைச் செய்ய முற்பட்டார். அது ஒரு நல்ல விஷயம். அதற்கும் இலக்கியத்திற்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்பது பற்றி எங்களுக்குள் கருத்துப்பரிமாறல்கள் நடந்தன. அந்தக் காலகட்டத்தில் என்னைப் பொறுத்தவரை நான் முற்போக்கு இலக்கிய இயக்க அங்கத்தவனாக இருந்ததிலிருந்து நான் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவனாகவும் பின்னர் சேர்ந்து கொண்டேன். கட்சியில் வேலை செய்தேன். இந்த விவாதங்களில் பங்குபற்றும்போது இந்தப் பிரச்சினைகள் வந்தன. அந்தக்காலகட்டத்தில் எங்களுக்குள் இடதுசாரிகள் 64இல் எடுத்த நிலைப் பாட்டிற்குப்பிறகு கட்சிகளுக்குள் ஏறத்தாழ ஒரு தமிழ்மொழிக்கு விரோதமான நிலைவருகிறது. எங்களுக்குள் சீன - ரஷ்யப் பிரிவுகள் ஏற்பட்டுப் போயின. குறிப்பாக ரஷ்யப்பக்கத்தில் இருந்தவர்களின் கண்ணோட்டத்திலேதான் நான் இதனைச் சொல்கிறேன்.

67-70 வரை நான் இலங்கையில் இருக்கவில்லை. வெளியே படிக்கச் சென்றுவிட்டேன். திரும்பி வந்தவுடன் 72இல் ஸ்ரீமாவின் கூட்டணி அரசாங்கம் வந்தது. அதிலே நாங்கள் முற்றுமுழுதாக நின்று வேலை செய்தோம். நான் இலங்கை வானொலியிலும் வேலை செய்தேன். குமாரசூரியர் மூலமாகச் செய்து கொண்டிருந்தோம். அவரது இல்லத்தில் நாங்கள் ஒவ்வொரு திங்கட்கிழமையும் சந்திப்போம். தமிழ் விஷயமாக என்ன செய்யவேண்டும். ஊடகங்களை எவ்வாறு பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கலந்துரையாடுவோம். அப்படி உரையாடும்போது காரசாரமான விவாதங்கள் ஏற்படும். வானொலியைக் கவனிக்கும்படி என்னையும் கொஞ்சப்பேரையும் கைலாசபதியையும் நியமித்தார்கள். பிறகு கைலாசபதி யாழ்ப்பாணம் சென்றுவிட்டார். கைலாசபதி அதில் அவ்வளவு ஈடுபாடாக இருக்கவில்லை. அதற்கு ஒரு காரணம் அவர் Chinese wing ஐச் சேர்ந்தவராவும் இருந்தது.

இப்படியாக நாங்கள் செயற்படும்போது, நாங்கள் வெறுமனே அரசியல் அதிகாரங்கள் எதுவுமில்லாமல் தமிழ் விடயங்களில் ஈடுபடுவது போதாது என்ற குறைபாடு வரத்தொடங்கியது. நாங்கள் அதனை எங்களுடைய மட்டத்திற்குள் பேசிக்கொண்டோம். அதற்குமேல் போகமுடியவில்லை.

பின்பு 76-77இல் அரசாங்கம் மாறியது. 78இல் நான் யாழ்ப்பாணத்திற்குச்

சென்றேன். கொழும்பில் இருக்கமுடியாமல் நான் வாங்கிய ஒரு காணியையும் விற்றுவிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஓகஸ்ட் 1978இல் இருந்து கடமையாற்றத் தொடங்கினேன்.

எண்பது, எண்பத்தொன்றில் எங்களுக்குப் பல புதிய பிரச்சினைகள் தோன்றின. இது சம்பந்தமாக எழுத்தாளர் சங்கம் என்ன நிலையை எடுக்கவேண்டும் என்பதுபற்றி, 'புதிய சவால்கள் புதிய பிரச்சினைகள்' என்ற தலைப்பில் மல்லிகையில் 81இலேயே நான் கட்டுரை ஒன்றை எழுதினேன். இது சம்பந்தமாக எழுத்தாளர் சங்கம் என்ன நிலைப்பாடு எடுக்கவேண்டும். இவற்றையெல்லாம் எமது இலக்கியத்திற்குள் கொண்டு வரவேண்டும். இது சம்பந்தமாக அந்தச் சூழலில் பின்னோக்கிப் பார்க்கிற ஒரு தேவையொன்று ஏற்பட்டது. அப்படிப் பார்த்தபோது நாங்கள் எந்த எந்த விடயங்களில் பிழைவிட்டோம் என்பதை Ideology ஆக நாங்கள் எங்கே பிழைவிட்டோம் என்று சிந்திக்கிறபோது, 82-83ஆம் ஆண்டில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் ஒரு மாநாடு நடந்தது. அதிலே நான் நிறைவுரை ஆற்றினேன். அந்தக் கூட்டத்தில் நான் பேசியபோது Realism பற்றிய பிரச்சினை எழுந்தது. நாங்கள் Socialist realism என்று பேசியிருக்கக்கூடாது, Critical realism என்றுதான் பேசியிருக்க வேண்டும் என்று கூறினேன். அப்படி நான் சொன்னதை ஒருவர், சிவத்தம்பி Socialist ஆக இருப்பதை விரும்பவில்லை. Socialism என்ற சொல்லைத் தூஷிக்கிறார் என்று பின்னர் இராமகிருஷ்ண மண்டபத்தில் பேசினாராம். அந்த அளவுக்குத் தெளிவு அவர்களிடமிருக்கவில்லை.

நான் இதுபற்றி 78-79களில் கோவையில் C.P.M. இன் முற்போக்கு எழுத்தாளர் மாநாட்டில் கூறியிருந்தேன். அப்போதே நான் Critical realism என்பதில் கவனஞ் செலுத்தவேண்டும் என்பது பற்றிப் பேசியிருந்தேன்.

இலங்கையில் 84இல் தமிழைப் பொறுத்தவரை போராட்டம் உக்கிரமடைந்தது. தமிழருக்கெதிரான ஒடுக்குமுறையாக அரச செயற்பாடுகள் இருந்தன. அந்த நேரத்திலேதான் ஆறாவது அரசியல் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அப்போதுதான் Citizen Committees கள் (பிரஜைகள் குழு) ஏற்படுத்தப்பட்டன. நான் வல்வெட்டித்துறைக்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டேன். நாங்கள் ஓடியாடித் திரிய வேண்டியிருந்தது. 'ஆமிகாம்' களுக்குப் போகவேண்டியிருந்தது. அகதி முகாம்களுக்குப் போகவேண்டியிருந்தது. பொலிசுக்கும் போக வேண்டியிருந்தது. கொழும்புக்கு வந்து அரசியல் தலைவர்களையும் காணவேண்டியிருந்தது. வெளிநாட்டுத் தூதரகங்களின் முக்கிய

அதிகாரிகளையும் சந்திக்க வேண்டியிருந்தது. அந்த நேரத்தில் இன அடையாளம் பற்றிய விடயம் இன ஒடுக்குமுறையாக மாறியது.

சமூக விஞ்ஞானிகள் சங்கத்துள் எங்களுக்குள் பேசுகிறபோது, இடதுசாரிக்கட்சிகள் தமிழ் சம்பந்தமாக விட்டபிழையாலேதான் தமிழரிடையே மார்க்ஸிஸமே இல்லாமல் போகிறது என்கிற நிலைப் பாட்டிற்கு வரவேண்டியிருந்தது. அதற்குள் இருந்த குமாரி ஜெயவர்தனா, நியூட்டன் குணசிங்க போன்றவர்களோடு மிகவன்மையாக நாங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டோம்.

இடதுசாரிக் கட்சிகள் தமிழுக்குச் சமமான உத்தியோக அந்தஸ்த்து வழங்கப்படவேண்டும் என்று கேட்டதை மாற்றிக்கொண்டது ஒரு மிகவும் தப்பான விடயம் என்பதை நான் அவர்களுடன் செய்த கலந்துரையாடல் மூலம் அறிந்து கொண்டேன்.

ஒன்று சொல்லவேண்டும், இந்த இளைஞர் இயக்கங்கள் எங்களை விரும்பிக் கூப்பிடவில்லை. வல்வெட்டித்துறையிலிருந்த இளைஞர் இயக்கங்களே எனக்குப் பல பிரச்சினைகள் கொடுத்திருக்கிறார்கள். ஒருமுறை நான் பஸ்ஸில் சென்றபோது, ஞானமூர்த்தி அப்பாவின் கடைசி மகன் - இயக்கத்திலிருந்தவர் என்னை ஏசினார். "உங்களாலேதான் இந்தச் சிங்களவர்கள் இந்தப் பகுதிக்குள் வந்திருக்கிறார்கள்" என்று ஏசினார். பின்னர் பஸ்ஸிலிருந்து இறங்கும் போது ஏசினதிற்கு மன்னிப்புக் கேட்டுவிட்டு இறங்கினார்.

'குமாரசூரியரோட சேர்ந்து திரியிறம். எங்களை வைத்திருப்பதா வேண்டாமா?' என்று கூட சில காலங்களில் கதைக்கப்பட்டதென்றும், அப்போது இயக்கத்திலேயுள்ள முக்கியமானவர்கள், அவர்களிலே கை வைக்கவேண்டாம் என்று சொன்னதாகவும் நான் பிற்காலத்திலே கேள்விப்பட்டேன். இயக்கங்கள் எங்களை விரும்பிக் கூப்பிடவில்லை. 94ஆம் ஆண்டு நான் பண்டாரநாயக்காவைத் தேசியத் தலைவர் என்ற சொன்னதற்காக எனக்குப் புலிகளோடு பெரிய கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அவர்கள், நான் இன்னொரு கருத்திலே கூறியதை பிழையாக விளங்கிக் கொண்டார்கள். அது அவர்களுடைய மேலிடம் வரைக்கும் சென்றுவிட்டதாம். இவற்றை நான் இப்பொழுது அப்பக்கம் மாறி விட்டதாகக் கூறுவதாக என்று எடுக்கவேண்டாம். அந்தக் காலத்தில் எனக்கு இருந்த உறவுகளெல்லாம் மார்க்ஸிஸ்ட்களாக இருந்தவர்கள். ஈ.பி.ஆர்.எல்.எப். இல் எனக்கு நெருங்கிய நண்பர்கள் இருந்தர்கள். ஈரோஸிலும் நெருங்கிய நண்பர்கள் இருந்தார்கள்.

இலக்கியத்தையே எழுதமுடியாமல் நாங்கள் கொப்பி மட்டையில்

எழுதவேண்டிய காலம் ஏற்பட்டது. அந்தக்காலத்தில் எதைப்பற்றி எழுதவேண்டும் என்ற கேள்வியை நான் கேட்டேன். இந்தக்காலகட்டத்தில் நாங்கள் சில விஷயங்களை மீள்நோக்கிச் செய்து ஒரு புதிய வகையில், மக்கள் சம்பந்தமாக சில நடைமுறைகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்கிற கொள்கை வரத்தொடங்கியது.

இந்த நிலைமையை இரண்டாவது மூன்றாவது தலைமுறையில் உள்ள முற்போக்கு எழுத்தாளர்கள் பதிவுசெய்யவேண்டி வந்துவிட்டது. சாந்தன் பதிவு செய்தார், தெணியான் பதிவுசெய்தார். என்னுடைய பிரதானமான நிலைப்பாடு என்னவென்றால் பொதுவுடமைக் கட்சி இந்த முடிவை எடுத்திருக்கக் கூடாது.

சமீபத்தில் ஜனாதிபதியின் ஊடகச் செயலாளர் சொன்னார், ‘இடதுசாரிக் கட்சிகளுக்கு இப்பொழுது மக்களிடையே செல்வாக்கு இல்லாமல் போய்விட்டதால் நாங்கள் ஜே.வி.பி.யுடன் சேருகிறோம்’ என்று.

இது ஏன் வந்தது? இந்த நாட்டிலுள்ள மார்க்சிஸ்ட்களுடைய அரசியல் செயற்பாடுகளின் தோல்வி காரணமாக இந்த நாட்டில் சிங்கள அரசாங்கம் - தமிழ் எதிர்ப்பு என்று வந்துவிட்டது. முன்பெல்லாம் அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சிகளில் இருப்பவர்கள் மார்க்சிஸ்ட்டுகள்தான். முன்பு எதிர்க்கட்சியில் முக்கியமானவர்களாக இருந்தவர்கள் கெனமன், என்.எம்.பெரேரா, கொல்வின் போன்றவர்கள்தான். நாங்கள் அரசாங்கத்தோடு சேர்ந்து மொழிக்கொள்கையை மாற்றியதால் ஏற்பட்ட விளைவு என்னவெனில் அதன்பிறகு பாராளுமன்றம் சிங்களம், தமிழ் என்று பிரிந்ததுதான். 77ல் J. R. பிரதமராக, அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி முதல்வரானார் (Leder of the Oppersition).

மார்க்ஸிய அரசியல் செயற்பாடுகளில் ஏற்பட்ட தோல்வி காரணமாக இந்த நாடு முற்று முழுதாகச் சிங்கள அரசாங்கம் - தமிழ் எதிர்ப்பு என்று வந்துவிட்டது. அதன்பிறகு நான் தொடர்ந்து கட்சியிலிருக்கவில்லை.

இந்த இன ஒடுக்குமுறைக்கு எதிராக நாங்கள் என்ன செய்வது, எங்களது இலக்கியம் எவ்வாறு இருக்கவேண்டும்?

நான் கேட்பது என்னவென்றால், எண்பதுகள் இந்த நாட்டின் வரலாற்றில் ஒரு பிரிகோடு. அந்தக் காலகட்டத்திற்கு முற்போக்கு இலக்கியம் தனக்கெனப் போட்ட பாதை யாது? இதற்கு நாங்கள் தமிழ் நாட்டைப் பிரதிபண்ண இயலாது. ரஷ்யாவைக் பிரதிபண்ண இயலாது. சீனாவைப்

பிரதிபண்ண இயலாது. உங்களது நிலைப்பாடு என்ன?

இதனாலேதான் என்னைக் குற்றம் சொல்கிறார்கள். நான் இங்கே ஒன்று அங்கே ஒன்று சொல்கிறேன் என்கிறார்கள். நான் எதிரான மனிதன் என்கிறார்கள்.

கடந்த கட்சி மாநாட்டில், 1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் வந்தபோது பி.கந்தையா எதிர்த்துப்பேசிய பேச்சினைத்தான் இப்போது கட்சியின் 40வது கட்சிக் கொங்கிரசில் கொள்கையாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படியானால் இதனை ஏன் 64ஆம் ஆண்டில் விட்டீர்கள்? இதற்குத் தோழர்கள் சொல்லும் பதில் என்ன?

புரட்சி என்பது பெரிய விடயம். Parliamentary politics ஆல் தான் நாங்கள் கெட்டோம். ஆகையால் நாங்கள் திரும்பவும் அதற்குள் போகவேண்டாம்.

ஆனபடியால்தான் முற்போக்கு இலக்கியத்தின் அடுத்தகட்டம், 50களில் வகுத்ததுபோல, 60களில் வகுத்ததுபோல ஈழத்தில் இலக்கியத்தில் யதார்த்தத்திற்கு வந்ததுபோல நாங்கள் இந்த அரசியல் யதார்த்தத்தைப் பற்றியும் பேசவேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லவேண்டிய நிலை இருந்தது; அவ்வளவுதான்.

இந்த வருடம் கலை பண்பாட்டு ஒன்று கூடலில் யாழ்ப்பாணத்தில் நான் கூறியது உங்களுக்குத் தெரியும். இந்த இனவிடுதலைப் போராட்டம் ஒரு முக்கியமானது. இது மானிட விடுதலையை நோக்கிய போராட்டம். தமிழர் போராட்டம் எல்லாக்காலத்திலும் மானிட விடுதலையை நோக்கிய போராட்டமாக இருக்கவில்லை. சமூக ஒடுக்குமுறைக்குப் பழக்கப்பட்டது, இன ஒடுக்கு முறைக்கெதிராக வந்தது. இது ஒரு Struggle என்றுஞ் சொன்னேன்.

அந்தப்பேச்சு என்னுடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான பேச்சு. நான் மாறியதற்கான தத்துவார்த்த நியாயங்கள் எல்லாம் அதில் இருக்கின்றன. என்னை மாறிவிட்டதாகக் கூறுபவர்கள் தயவுசெய்து நான் முன்னர் குறிப்பிட்ட 'புதிய சவால்கள் புதிய பிரச்சினைகள்' என்ற கட்டுரையையும் கலை பண்பாட்டு ஒன்றுகூடலில் வாசித்த கட்டுரையையும் எடுத்து வாசித்துப் பார்க்கவேண்டும். அப்போது விளங்கும்.

நான் இந்த அநாதைக் குழந்தைகள், விதவைகள், இடிபட்ட வீடுகள்

எல்லாவற்றையும் கண்டவன். தாண்டிக்குளத்திற்குள்ளால், கொம்படிக்குள்ளால் மாதாமாதம் போய் வந்தவன். நான் அவற்றை மறக்கமுடியாது. அதற்காக நான் இனவிரோதம் கொண்டவனல்ல. நான் இப்போதும் கூறுகிறேன், சிங்கள மக்களோடு நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகள் போதாது. நான் அதனை அந்தப் பேச்சிலும் கூறினேன்.

ஆனால் ஒன்று, கட்சிக் கொள்கையென்று இருப்பவர்களுக்கு அவர்கள் என்னை எதிர்ப்பதில் ஒரு நியாயப்பாட்டை நான் காண்கிறேன்.

கருத்தினை கருத்தினால் எதிர்த்தால் பரவாயில்லை. ஆனால் சிலர் கீழ்த்தரமாக என்னைத் தாக்குவது, விமர்சிப்பது சரியல்ல; மனதிற்கு வேதனை தருகிற விடயம்.

யாழ்ப்பாணத்தில் சாதிப் போராட்டம் நடந்தது. அதனை நாங்கள் வென்றுவிட்டோம். இன்றைக்கு யாழ்ப்பாணத்தில் பூவரசங்கிளையில் தேத்தண்ணீர்க் கோப்பை தொங்குவதில்லை. எழுத்தாளர்கள் இடத்தில் எந்தச் சாதி வேறுபாடுமில்லை. அதற்காக சாதி போய்விட்டது என்று நான் கூறவில்லை. சாதி இருக்கு. சாதிக்கொடுமையிருக்கு. அது எனக்கு எதிராகவே பயன்படுத்தப்பட்டிருக்கு. ஆனால் இந்தநேரத்தில் நான் அதற்குப் போராடத் தயாராக இல்லை. இன ஒடுக்குமுறையிலிருந்து விடுபடுவதுதான் முக்கியம்.

நான் இந்த நேரத்தில் டானியலை மெச்சுகிறேன். ஒரு முறை எழுதுமட்டுவாள் சந்தியில் சாதிச்சண்டை நடந்தபோது, ஒருத்தன் பிள்ளைகள் கொண்டுசென்ற புத்தகங்களைப் பறித்து எரித்துவிட்டான். நான் மறுநாள் டானியலைப் பார்க்கப் போயிருந்தேன். அப்போது கூறினார், “யாழ்ப்பாணத்து நூல்நிலையம் எரிந்தது என்னைப் பொறுத்தவரை இந்தப்பிள்ளைகளின் புத்தகங்களை எரித்ததற்குச் சமமானது”. டானியலில் எத்தனையோ கூடாத குணங்கள் இருக்கலாம். ஆனால் அவர் கூறிய அந்தக்கருத்து இருக்கிறதே, அமர வாக்கியங்களில் ஒன்று.

நாங்கள்தான் பேசினோம், ‘இலக்கியம் என்பது வெறும் அழகியலல்ல, சமூக இருப்பு என்று’. இன்று சமூகஇருப்பு என்ன?

நான் இன்று முற்போக்குக்கு எதிர் என்று நான் என்னைக் கருதவில்லை. ஆனால் முற்போக்கு இலக்கியம் இந்தக் காலகட்டத்திற்கு இலங்கைத் தமிழருக்கு என்ன தரவுகளை முன்வைக்கிறது? எத்தகைய

அணுகுமுறையை முன் வைக்கிறது. எவ்வாறு இந்தப் பிரச்சனையைப் பார்க்கவேண்டும் என்று சொல்கிறது. ஒரு நண்பர் என்னிடம் கூறினார், நீங்கள்தானே இதனைச் சொல்லவேண்டும் என்று. நாங்கள் அதனைச் செய்யவில்லை. கட்சி அரசியல் வேறு மார்க்ஸிஸம் வேறு. நாங்கள் கட்சி அரசியலையே மார்க்ஸியம் என்று பிடித்துக்கொண்டு நின்றோம். இதுதான் என்னுடைய அபிப்பிராயம். இப்பொழுது உள்ள நிலையில் இந்தக் காலகட்டத்தின் தேவைகளின்படி முற்போக்குக் கலை இலக்கியத்தின் பணி யாது என்பதை வரைவிலக்கணம் செய்துகொள்ள வேண்டும். நாட்டின் இன்றைய சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள சமூக அரசியல் பொருளாதாரப் பண்பாட்டு மாற்றங்கள் யாவற்றையும் உள்வாங்கி மார்க்ஸிஸ்டுகள் இந்தத் தீர்மானத்தை எடுத்தல்வேண்டும். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் 50-60கால வரலாற்றின் பொழுது கருத்துருவாக்கமும் கலை இலக்கிய ஆக்கமும் விமர்சனங்களும் சமாந்தரமாகச் சென்றன. அந்த வேளையில் எமது எழுத்தின் பணி என்ன என்பதனை வரையறுத்துக் கூறிக் கொண்டே வந்தோம். இந்த மாறிய சூழலில் முற்போக்குச் சிந்தனை எவ்வாறு தொழிற்பட வேண்டும் என்பது பற்றி நாம் இங்கு தெட்டத்தெளிவாக இருத்தல் வேண்டும்.

1984இல் என்று நம்புகிறேன். கைலாசபதி நினைவாக நான் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரையில் வந்த ஒரு கருத்தினை இங்கு மீள வலியுறுத்த விரும்புகிறேன். அது இதுதான்:-

முற்போக்கு இலக்கியம் என்பது உண்மையில் மார்க்ஸிய இலக்கிய தோன்றுதலுக்கான ஒரு வழிநடத்தும் கட்டம் - தொடக்கக்கட்டமே முற்போக்கு இலக்கியத்தின் நிறைவு மார்க்ஸிய இலக்கியம்தான். நாம் முற்போக்கு வாதமென்று தொடர்ந்து பேசிக்கொண்டு இருந்தோமே தவிர ஒரு உண்மையான மார்க்ஸிஸ இலக்கியக்கட்டத்திற்கு வந்துசேரவில்லை. கேரளத்தில் இவ்வாறு நடைபெறவில்லை. அங்கு அவர்கள் முற்றிலும் மார்க்ஸிய நிலைப்பட்ட நிறுவக அமைப்பாகவே தொழிற்பட்டார்கள். அந்த மண்ணில், அந்தக்காலகட்டத்தில் அந்த மார்க்ஸிய நோக்கு எத்தகைய முறையில் வெளிக்கிளம்பும் என்ற தெளிவு தகழி சிவசங்கரப் பிள்ளைக்கு இருந்தது. வைக்கம் பஷீருக்கு இருந்தது. அவர்களுடைய ‘மாத்துரு பூமி’ பத்திரிகைகளில் பல இளம் எழுத்தாளர்கள் எழுதினார்கள். ஆனால் நாங்களோ அந்த நிலையை அடையமுடியவில்லை. இந்த நாட்டில் மார்க்ஸியம் நிறுவனமயப்படுத்தப்பட்ட முறையினால் அது இல்லாமல் போயிற்று. உண்மையில் இத்தகைய ஒரு கருத்துநிலைப் பரிதவிப்பு சிங்கள மொழி வழி தமிழ்மொழி வழி கல்வி கற்றுவந்த இளைஞர்களிடையே

காணப்பட்டது. ஜே.வி.பி. சிங்கள மார்க்ஸியம் பேசிற்று. நமது தமிழ் இயக்கங்கள் இரண்டொன்று தமிழ் மார்க்ஸியம் பேசின. அந்த வேளையில் ஏற்கனவே செல்வாக்குப் பெற்றிருந்த மார்க்ஸிய நிறுவனங்களுக்கு ஒரு பணியிருந்தது. மார்க்ஸிய சிந்தனை முறைமையைச் சரியாக வழிநடத்தி யிருக்க வேண்டும். இன ஒடுக்குமுறை, அரச பயங்கரவாதம் என்பன தெரியப்பட்டவுடன் அவற்றுக்கெதிராகப் போராடியிருக்க வேண்டும். அத்தகைய போராட்டத்தை இளைஞர் இயக்கங்கள் எதிர்பார்த்தன. அவை கிடைக்கவில்லை.

இப்படியான ஒரு ஒட்டுமொத்தச் சூழலின் பின்புலத்திலேயே தமிழ் மக்களிடையே இன்று முற்போக்குவாதம் எதைச் சாதிக்கவேண்டும் என்ற விவாதம், தெளிவு ஏற்படவேண்டும். National Question, Liberation என்பவை மார்க்ஸிய சிந்தனை வரவினால் புடமிடப்பட்டவை. லெனினால் விளக்கப்பட்டவை, பிரபல்யப்படுத்தப்பட்டவை. அவை நம்முடைய கோஷங்கள். ஆனால் நாம் நடந்து கொண்ட முறைமையில் நாமே அவற்றை எதிர்க்கோஷங்களென்று கருதுகின்றோம். இத்தகைய ஒரு கருத்துநிலைச் சூழலிலேயே இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பற்றிய எனது விமர்சனங்களை முன்வைத்து வந்துள்ளேன். இவற்றை மல்லிகையில் எழுதிய 'புதிய சவால்கள் - புதிய பிரச்சினைகள்' என்ற கட்டுரை காலத்திலிருந்தே (1981) சொல்லி வருகிறேன். நான் இதுவரை கூறியவை எனது நிலைப்பாட்டை விளக்கப்போதுமானவை எனக் கருதுகிறேன்.

❑ ❑ ❑

# 11

***தி. ஞா. : ஞானம் கலை இலக்கியப் பண்ணை 17-03-04 அன்று வரதருக்கு நடத்திய பாராட்டு விழாவில் சிறப்புரை வழங்கிய நீங்கள், மறுமலர்ச்சி காலத்திலேயே ஈழத்து இலக்கியம், மண்வாசனை போன்ற எண்ணக்கருக்கள் இலக்கியத்திலே தோன்றிவிட்டன எனக் கூறினீர்கள். இக்கூற்று முற்போக்காளர்கள்தான் இவற்றிற்கு வித்திட்டார்கள் என்ற உங்களது முன்னைய நிலைப்பாட்டிற்கு முரணாக இருக்கிறதே!***

**கா. சி. :** உண்மையில் இது ஓர் இலக்கிய வரலாற்று அறிவு சம்பந்தமான பிரச்சினையாக நான் கருதுகிறேன். 1954, 55இல் புத்தூக்கம் பெற்று, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் அணி கொழும்பில் செயற்படத் தொடங்கியபொழுது அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில், மட்டக்களப்பில், மலையகத்தில், முஸ்லிம் பிரதேசங்களில் ஒரு புதிய இலக்கியத் தலைமுறையினர் தோன்றியிருந்தனர். அதாவது இலவசக்கல்வி ஒரு புறமாகவும் சுய மொழிக்கல்வி இன்னொரு புறமாகவும் தொழிற்பட, மேல்வந்த ஒரு இளைஞர் குழாமொன்று இலங்கையில் படிப்படியாக மேலே வருகிறது. இந்தக் கட்டத்திலேதான் இலங்கை முழுவதற்குமான ஈழத்து இலக்கியம் என்ற கோட்பாடு - இந்தியாவிலிருந்து இலங்கை இலக்கியத்தைப் பிரித்துப்பார்ப்பதற்கு நாவலர் காலத்தில் அல்லது அதற்குச் சற்றுப்பின்னர் ஈழத்து இலக்கியம் என்று பயன் படுத்தப்பட்ட அந்த நிலைப்பாடு, இப்பொழுது ஈழத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் வருகின்ற ஒட்டுமொத்தமான இலக்கியங்களின் வெளிப்பாடு என்ற கருத்திலே வரத்தொடங்குகிறது. அந்தக்கட்டத்திலே, யாழ்ப்பாணத் திலிருந்து சாதிப்பிரச்சினை சம்பந்தமாக, மட்டக்களப்பிலிருந்து பித்தன் போன்றவர்கள் இன்னொரு நிலையாக, வன்னிப் பிரதேசத்திலிருந்து, சற்றுப்பிந்தி

மலையகத்திலிருந்து, தென்னிலங்கையிலிருந்து என ஈழத்தின் தமிழ் பேசும் எல்லாப் பிரதேசங்களில் இருந்தும் எழுதத்தொடங்குகிறார்கள். அந்தக் காலகட்டத்தில் நாங்கள் ‘மண் வாசனை’ என்று எதனைக் கருதினோமென்றால், அந்தப் பிரதேசத்தினது வாழ்க்கையினைச் சொல்லுகின்ற தளமாகக் கொண்ட கதைகள் - வெறுமனே அந்தப்பிர தேசத்தில் வழங்குகின்ற சொற்களை எழுதினால் அது மண்வாசனை ஆகாது. உண்மையில் மண்வாசனை எப்போ வருமென்றால், அந்தப் பிரச்சனை அந்த மண்ணுக்குள்ளால் வரவேண்டும். - அப்போது அந்தக் காலகட்டத்தில் அதனை மண்வாசனை என முனைப்புப்படுத்தி - அது ஈழத்து இலக்கியத்தின் மண்வாசனை என்று சொன்னோம். இந்த இடத்தில் ‘ஈழத்து இலக்கியத்தின் மண்வாசனை’ என்ற தொடர்கள் பற்றிய தெளிவுவேண்டும். முதலாவது, ஈழத்து - என்பது இந்தியாவில் இருந்து பிரித்து நோக்கப்படுகிறது மாத்திரமல்லாமல், இலங்கையில் உள்ள தமிழ் பேசுகின்ற பல்வேறு பிரதேசங்கள், பல்வேறு கூறுகளுடன் வெளிப்படுகின்ற ஒருமைப்பாடான வெளிப்பாடு. இரண்டாவதாக, அந்த அந்தப் பிரதேசங்களில் உள்ள பிரச்சனைகளை எழுதுவது. இவ்வாறு எழுதப்பட்டுவந்தாலும்கூட உண்மையில் நாங்கள் அந்தக் காலகட்டத்தில் இந்த முற்போக்கு இலக்கியத்திற்கு முன்னர் இருந்த இலக்கியப் போக்குகள்பற்றி - குறிப்பாக நவீன இலக்கியப் போக்குகள் பற்றிய ஒரு வரலாற்றுத் தெளிவு இருந்ததாகச் சொல்லமுடியாது. நாங்கள் ஒட்டுமொத்தமாக எவற்றைப் பேசினோமென்றால், இலங்கையர்கோன், வைத்திலிங்கம் போன்றவர்களின் வரவு என்பதனைப் பற்றிப்பேசினோம், ஈழகேசரியை மையப்படுத்திப் பேசினோம். அதேவேளையில் அந்த ஈழகேசரியைத் தொடர்ந்து வருகின்ற தினகரன், வீரகேசரியைப் பேசினோம். இவற்றைப்பற்றிப் பேசினோமே தவிர இந்த ‘மறுமலர்ச்சி’ இயக்கத்தைப் பற்றியும், கணேஷினுடைய ‘பாரதி’ பற்றியும் ஒரு மேலோட்டமான அறிவுதான் நமக்கு இருந்தது. உண்மையில் அந்தக்காலகட்டத்தில் அந்த அளவில் நாங்கள் இருந்தோமே தவிர, இதில் மிக ஆழமாக உற்று நோக்கவில்லை. அந்தக் கால கட்டத்தில், ஏற்கனவே இந்த மறுமலர்ச்சியுடன் தொடர்புள்ள வரதரோ அல்லது சொக்கன் போன்றவர்களோ உண்மையில் அந்தக் காலகட்ட இலக்கிய முயற்சிகளை அதிகம் மிகைப்படுத்தவில்லை. அதைப்பற்றி எழுதவும் இல்லை. நண்பர் சொக்கனோடு பேசுகின்றபோது அந்த வளர்ச்சியைப் பற்றி அவர் என்னிடம் பலதடவை சொல்லியிருக்கிறார். மற்றது, அந்தக்காலகட்டத்தில் முக்கியமாக இருந்தது இன்னுமொன்று. என்னவென்றால், இந்த முற்போக்கு இலக்கியத்தின் வளர்ச்சிகாரணமாக, சமூகநோக்கில் பிற்போக்குத்தன மானவர்கள் பலர் இந்தப் புதிய இலக்கிய வகைகளை எதிர்க்கத்தொடங்க அந்த மறுமலர்ச்சிக் காலத்தவர்களும் அந்த எதிர்ப்புக்கெதிராக எங்களுடன் சேர்ந்துகொண்டார்கள். ஒட்டுமொத்தமாக இந்த மறுமலர்ச்சி பற்றிய, அதனுடைய ஆழ அகலம்

பற்றிய - அது எங்கே இருக்கிறது, எத்தகைய கதைகள் வந்தன, என்னமாதிரி வந்தன என்கின்ற விஷயங்கள் தெரியாமல் இருந்தன. அதை ஒத்துக்கொள்ள வேண்டும் - இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்த மறுமலர்ச்சி பற்றிப் பேசிக் கொண்டிருந்தோமே தவிர, அதைப்பற்றி ஆழமான வேலைகளை நாங்கள் ஒருவரும் செய்யவில்லை. உண்மையில் பல்கலைக்கழக மட்டங்களில் நாங்கள் போயிருக்கவேண்டும். ஆனால் அந்த மட்டங்களில் போவதற்கும் உண்மையான சில கஷ்டங்கள் இருந்தன. என்னவென்றால், அந்த இதழ்கள் கிடைப்பது கஷ்டமாக இருந்தது. மயிலங்கூடல் போன்றவர்களிடம் இருந்தால்தான் எடுக்கலாம். மற்றவர்கள் தரமாட்டார்கள். இல்லாவிடில் எடுக்கவியலாது. இந்தக் கட்டத்திலேதான் செங்கை ஆழியான் - தான் நாவல் எழுதுகின்ற அந்த வேகத்தோடு அல்லது அந்த வேகத்துக்குச் சமமான ஒரு கடப்பாட்டு உணர்வோடு இந்த மறுமலர்ச்சிக் கதைகள் என்கிறவற்றை வெளியிலே கொணர்ந்தார். அவற்றை வாசித்த பொழுது நான் ஒரு புதிய உலகத்துக்குள் போகக்கூடியதாக இருந்தது. பாரதி என்ற சஞ்சிகையை கணேஷ் கொண்டுவந்தபொழுது, அந்த சஞ்சிகை ஒரு சமதர்மநோக்குடைய - கம்யூனிச சித்தாந்தநோக்குடைய ஒரு முன்னோடிப் பத்திரிகை என்பது ஏற்கனவே தெரியவந்தது. நாங்கள் அதைப்பற்றி கணேஷினுடைய விழாக்களிலே விரிவாகப் பேசியிருக்கிறோம். ஏறத்தாழ இந்த இரண்டும் ஒரே நேரத்தில் நடைபெறுகிறன. ஆனால் கணேஷினுடைய பாரதி தனி ஒருவரின் பத்திரிகை இயக்கமாக, இந்தியர், இலங்கையரை முற்போக்குக் கோட்பாட்டில் இணைத்துப் பேசுகின்றதும், தமிழில் இந்த இலக்கியத்தின் வளர்ச்சி வேண்டுமென்று எடுத்துக் கூறுவதாகவுமுள்ளது. பாரதி என்னும் பெயரே இந்த நோக்கைக் காட்டுகிறது. இது ஜனரஞ்சகமாகப் போனது என்றும் சொல்லமுடியாது. ஆனால் செங்கை ஆழியான் கொண்டு வந்த தொகுப்பைப் பார்த்தபொழுது - மறுமலர்ச்சிச் சஞ்சிகைகளில் ஒவ்வொருவரும் எழுதிய கதைகளைப் பார்த்தபொழுது - முக்கியமாகப் பெரியசாமி என்பவரின் கதையைப் பார்த்தபோது - அவர் ஓர் ஆசிரியர்- உண்மையில் அந்தப் பிரதேசங்களைப்பற்றி எழுதுகின்ற தன்மை காணப்படுகிறது. அ. வே. முருகானந்தம் போன்றவர்கள், இவர்கள் எல்லோரும் அந்தப் பிரதேசங்களிலுள்ள பிரச்சனைகளைப் பற்றி எழுத வேண்டும் என்ற நோக்குடன் எழுதுகின்றதன்மை- அந்தப் போக்கின் தொடக்கம் முளை விடுகின்ற தன்மை இந்த மறுமலர்ச்சிக்கால எழுத்தில் இருக்கிறது என்பதனை நாங்கள் கண்டோம். அதன் பின்னர்தான் இதனை நான் சற்று ஆழமாகப் பார்க்கத் தொடங்கினேன் என்று சொல்லலாம். எனக்கு முன்னர் இருந்த மிகப் பிரதான விடயம் என்னவென்றால், எங்களிடம் ஏற்கனவே இருந்த தரவு. ஈழகேசரி யாழ்ப்பாணத்தில் ஒரு மைல்கல்லாக அமைகிறது. முப்பதுகளில் வருகிறது. சிவபாதசுந்தரம் அதனைப்பற்றி மிகவும் சிறப்பாகச் சொல்கிறார். பொன்னையாவின் பங்களிப்புப் பற்றி நிறையப் பேசுகிறார்கள். ஈழகேசரி தமிழகத்திற்கும் இலங்கைக்கும்

ஒருபாலமாக இருந்தது. ஏறத்தாழ அந்தக் காலகட்டத்தில் இலங்கையர்கோன், வைத்திலிங்கம் போன்றோர் எழுதுகிறார்கள். அவர்களுடைய கதைகள் கலைமகளில் பிரசுரமாகின்றன என்ற இந்தத் தகவல்கள் எல்லாம் வருகின்றபொழுது, ஒரு கேள்வி பிறக்கின்றது. மறுமலர்ச்சி என்ற சஞ்சிகை - அதுவும் யாழ்ப்பாணத்திலிருந்து இவ்வளவு சாதனைகள் செய்ததாகச் சொல்லப்படுகின்ற ஈழகேசரி 'ஜே ஜே' என்று ஓடுகின்றபோது, ஏன் தோன்றிற்று? இதனைத் தோற்றுவிக்க விரும்பியவர்கள் யார்? என்கின்ற கேள்விகள் எனக்கு முக்கியமாயின. அப்பொழுதுதான் தெரிந்தது, நவீன இலக்கியம் வருவது மாத்திரமல்ல - சிறுகதை, நாவல் வருவது மாத்திரமல்ல - நாவல்கள் ஏற்கனவே வரத் தொடங்கிவிட்டன. 'நொறுங்குண்ட இதயம்' நல்ல நாவல். நாவல் வடிவிலே எழுதப்பட்ட அல்லது நாவலின் தன்மைகளைக் கொண்டு எழுதப்பட்டவை போய், உண்மையிலே ஒரு நல்ல நாவல். எந்தமட்டத்தில் பார்த்தாலும் ஒரு நல்ல நாவலாக இருப்பது நொறுங்குண்ட இதயம். அந்த மாதிரியான நாவல்கள் வரத்தொடங்கியதன் பின்னர் - அது உண்மையிலே ஒரு யாழ்ப்பாணக் குடும்பத்தில்- அதாவது நவீனமயப்பாட்டுக்குள் வருகின்ற, கிறீஸ்த்தவத்தின் வழியாக வருகின்ற ஒரு குடும்ப - கிராமச் சூழலில் வருகின்ற ஒரு வரலாற்றை அதன் ஆசிரியர் எழுதியுள்ளார். இந்தப் பின்புலத்தில் 1940 களின் தொடக்கத்தில் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் இந்த யாழ்ப்பாணத்து மண்ணினுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல விரும்புகிறார்கள். அது ஒரு முக்கியமான விடயம். அதிலும் பார்க்க முக்கியம் என்னவென்றால், இந்த மறுமலர்ச்சிக் குழுவினர் என்று சொல்லப்படுபவர்கள் யார்? - வரதர், பஞ்சாட்சரசர்மா, நாவற்குழியூர் நடராஜன், சோ. தியாகராசா, சரவணமுத்து - இவர்கள் எல்லோரும் தமது எழுத்தின் தொடக்கத்துக்கான உந்துதலை ஆங்கிலக்கல்வி வழி பெற்றவர்களல்ல. இந்த மறுமலர்ச்சி என்ற சொல்லுக்கு அந்தக் காலகட்டத்தில் - நாற்பதுகளில் ஒரு முக்கியமான அரசியல் சமூகப் பின்புலம் இருக்கிறது. பாரதியை மதிக்கிறவர்கள், பாரதிகாட்டிய வழியில் நவீன தமிழ் இலக்கியத்தை வளர்த்துச் செல்ல விரும்புகின்றவர்கள் - அந்த எண்ணமுள்ள அறிஞர்கள்தான் தமிழில் மறுமலர்ச்சி என்ற பதத்தைப் பிரயோகித்தார்கள். வையாபுரிப்பிள்ளையின் ஒரு கட்டுரைத் தொகுதிக்குப் பெயர் தமிழின் மறுமலர்ச்சி. முன்னர் இருந்த மலர்ச்சியை மீண்டும் கொண்டு வருதல். அந்த மலர்ச்சியை நவீன வடிவங்களில் கொண்டுவருதல். புதிய தேவைகளுக்கேற்பக் கொண்டு வருதல். தமிழ் மீட்பு வாதம் அல்ல. முந்தியிருந்த பெருமைகளைச் சொல்கின்றவாதம் அல்ல. உண்மையில் திராவிடக் கருத்து நிலை என்ற Ideology யிலிருந்து வேறுபட்டு ஒரு மீட்பு வாதமாக இல்லாமல், நவீன அடிப்படையில், நவீனத் தேவைகளுக்காகத் தமிழைப் பயன்படுத்துவதாகிய ஒரு இயக்கம் இது. இதனை யார் செய்கிறார்கள்?- இந்த விடயம் எனக்கு மிக

முக்கியமாகப்படுகிறது.

***தி. ஞா. : இவர்களைப் பண்டித வர்க்கத்தினர் என்று சொல்லலாமா?***

**கா. சி. :** பண்டிதர்கள் இருக்கிறார்கள். பஞ்சாட்சரசர்மா பண்டிதர். எல்லாப் பண்டிதர்களையும் சொல்லமுடியாது. இது ஒரு முக்கியமான இடத்தை உடைக்கிறது. பிற்காலத்தில் பண்டிதர்கள் என்றால் பழமையுடன்தான் நிற்கவேண்டும் என்று சொல்லும் நிலைமையை இல்லாமல் செய்தவர்கள் இரண்டு பண்டிதர்மார். ஒருவர் பஞ்சாட்சர சர்மா மற்றவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை. ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஏற்பட்ட மிகத்துக்ககரமான சம்பவங்களிலொன்று பண்டிதமணியை முற்றுமுழுதான பழமைவாதியாகக் கூறுவது. அவருடைய 'தம்பியர் இருவர்' போன்ற கட்டுரை, சிவகாமியின் சபதத்தைப் பற்றி வரும் கட்டுரைகள் எல்லாவற்றையும் பார்த்தீர்களானால் தெரியும் - அவர் சிறுகதை வடிவில் பல விடயங்களைச் சொல்லியிருக்கிறார். அவருடைய நடை முற்றிலும் நவீனமான தமிழ்நடை. சொல்லும் உத்திகளும் நவீனமானவை. அந்தக் காலகட்டத்தில் ஒரு பண்டிதர் நவீன தமிழ் இலக்கியத்திற்கு வருவது பிரச்சினையான விடயமாகக் கருதப்படவில்லை. எப்பொழுது பிரச்சனையான விடயமாகக் கருதப்பட்டதென்றால், 61இல் மரபுப் போராட்டம் வந்தபோது. 'அசையாத குட்டை நீரல்ல மரபு' என்று நான் எழுதிய போது - இளமுருகனுக்கு எதிராக எழுதியபோது, அந்தச் சண்டையில் பண்டிதர்கள் ஒரு புறமும் மறுபுறத்தில் புதிய எழுத்தாளர்களும் நின்றார்கள். அந்தக்காலகட்டத்தில் நிச்சயமாக பண்டிதர்கள் ஒரு புறத்தில் மாத்திரம் நிற்கவில்லை. அவர்கள் தமிழை மிக விரிவாகப்பார்க்கின்ற ஒரு தன்மை இருந்தது. பஞ்சாட்சர சர்மா சமஸ்கிருதம் தெரிந்தவர். சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், நாவற்குழியூர் நடராஜன் இந்த மறுமலர்ச்சிக் காலத்தில் அவர்களோடு சேர்ந்த ஒருவர். அவர்களுடைய இலக்கிய முன்னெடுப்புக்கு அவர் உதவியுள்ளார். அதே நாவற்குழியூர் நடராஜன் பின்னர் ஏற்பட்ட நிலைமைகள் காரணமாக முற்போக்குக்கு எதிராக மாறினார். அண்மையில் நான் பார்ப்பது என்னவென்றால், இது முற்போக்கினுடைய முக்கியத்தைக் குறைப்பதாக நண்பர்கள் நினைக்கக்கூடாது. நான் ஒரு இலக்கிய வரலாற்று ஆசிரியர் என்றவகையில் பார்க்கிறேன். எனக்குள்ள பிரச்சினை என்ன வென்றால், இந்த முற்போக்கு இலக்கியத் தளத்திற்குத் தளமாக - காலாக அமைந்தது என்ன? அதற்குக் கீழே இருந்த பசளை என்ன? அடித்தளமென்ன? இந்தப் பிரச்சனையை 61இல் ஒரு ஆழமான இலக்கியப் பிரச்சினையாக நாங்கள் பார்க்கவில்லை. ஒரு இலக்கிய வரலாற்று ஆசிரியன் என்ற வகையில், ஒரு ஆய்வாளன் என்ற வகையில் எனக்கு ஒரு கடமை இருக்கிறது - என்ன வென்றால், இந்த முற்போக்கு இயக்கம் இவ்வளவு மிகச் செழிப்பாகத் தொடங்கி வளர்வதற்குக் காரணமாக

இருந்தது என்னவென்றால், ஏற்கனவே இருந்த ஒரு சூழல். அந்தச் சூழல் மறுமலர்ச்சி இயக்கத்தினால் ஏற்படுத்தப்பட்டது. அது ஈழகேசரிக்குள்ளால் வரவில்லை. இதுதான் முக்கியம். ஒரு காலத்தை மீள் கண்டுபிடிப்புச் செய்துள்ளோம். எவ்வாறு சோழர் காலத்தில் வாழ்ந்த நாதமுனி, நம்பியாண்டார்நம்பி மூலமாக நாங்கள் பல்லவர் காலத்துப் பக்தி இலக்கியங்களை மீள் கண்டுபிடிப்புச் செய்தோமோ அதேபோல இந்த முற்போக்கு இலக்கிய வரலாற்றை எழுதி முடித்ததன் பின்னர் நாங்கள் அதற்கு முன்னர் உள்ள மறுமலர்ச்சிக் காலகட்டம் எவ்வாறு வந்தது, எவ்வாறு வளர்ந்தது என்பதைப் பார்க்கிறோம். நான் இப்போது ஈழத்துத் தமிழ் இலக்கியம், வரலாறு பற்றி எழுதிக் கொண்டிருக்கிறேன். முன்னர் ஈழத்தில் தமிழ் இலக்கியம் என்றுதான் எனது கட்டுரைத் தொகுப்புக்குப் பெயர் வைத்திருந்தேன். ஈழத்துத்தமிழ் இலக்கியம் என்று சொல்லும்போது எதைக் கருதுகிறேன் என்றால், தமிழ் இலக்கியம் இலங்கையில் - இலங்கைத் தன்மையுடையதாக எவ்வாறு வளர்கிறது. கடந்த ஐந்தாறு மாதமாக இதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன். கவிதை வளர்ச்சியை எடுத்துக்கொண்டால், ஈழத்துக் கவிதை மரபு என்று ஒன்றை நாங்கள் இனங்காட்டலாமா? அப்படி இனங்காட்டுவதானால் யார் யார் அதில் மைல்கற்கள்? எந்த எந்தப் போக்கு அதில்மைல்கற்கள்? ஒட்டு மொத்தமான தமிழ்ச் சிறுகதை வரலாறு இருக்கிறது. அதில் ஈழத்துச் சிறுகதை என்ன என்ன கட்டங்களைக் கொண்டுவருகிறது? அப்படிப் பார்க்கும் போது, செங்கை ஆழியானின் இந்தப் புத்தகத்தின் பிறகு, இலங்கையர்கோன் வைத்திலிங்கம் ஆட்களுடன் தொடங்கி, பின் வரதர்போன்றோரைச் சொல்லி, பின்னர் ஜீவா, டானியல், ரகுநாதன் என்று வருவதற்கு முதல் - இந்த வரதர் ஆட்களைச் சொல்கிறபொழுது மறுமலர்ச்சி இயக்கத்தைக் கொஞ்சம் ஆழமாகப் பார்க்கவேண்டியுள்ளது. அந்த நேரத்தில்தான் ஈழத்தின் தன்மைகளைக் கொண்டு இலக்கியம் வளருகின்ற ஒரு தன்மையின் தொடக்கத்தைக் காண்கிறோம். ஒரு வரலாற்று ஆசிரியன் என்ற வகையில் இது ஒரு முக்கியமான விடயமாக எனக்குப்படுகிறது. இரண்டாவதாக இது ஆங்கிலப் பயில்வின் மூலமாக வராமல், தமிழ் கற்றலின் மூலம் வந்தவர்கள் ஊடாகவே இந்த நவீனப் போக்கு, இந்த நவீனப்பார்வை, இந்த நவீனத்துக்கான முனைப்பு வருவதென்பது மிக மிக முக்கியமான விடயம். ஏனென்றால் ஏறத்தாள இதேகாலப் பகுதியில் கிழக்கு மாகாணத்திலும் தமிழ் தெரிந்த ஒரு தமிழ் இளைஞர் இயக்கம் ஒன்று வருகிறது. அது யாழ்ப்பாணத்தில் எடுத்ததுபோல மறுமலர்ச்சி என்ற வடிவத்தை எடுக்க வில்லை. அந்த வரலாறு இன்னும் சரியாக எழுதப்படவில்லை. அந்தக் காலகட்டத்தில் கிழக்கில் எஸ். டி. சிவநாயகம், கமலநாதன், ராஜதுரை போன்றவர்கள் எல்லோரும் வருகிறார்கள். சமஷ்டிக்கட்சிக்கு முதலில் இருந்த பேச்சாளர்கள் எல்லோரும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால்

அங்குள்ள நிலைமைகள் காரணமாக அது ஒரு திராவிடக் கருத்து நிலையோடு வருகிறது. பகுத்தறிவுவாதம் முதலியவை வருகின்றன. அதற்குள்ளால் வந்தவர்தான் காசி ஆனந்தன். பாரதிதாசனிடம் போய்விடுகிறார். அதிலிருந்து விடுபட்டு நின்றவர்கள் நீலாவணன் போன்றவர்கள்.

இந்த மறுமலர்ச்சி சஞ்சிகையின் வருகையும், மறுமலர்ச்சியின் போக்கும் எனக்கு ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டமாகப் படுகிறது. இதனை நாங்கள் முன்னர் அழுத்திச் சொல்லவில்லை. ஆனால் இப்போதுள்ள நிலையில் பல்கலைக்கழகத்தில் செய்யவேண்டிய ஒரு ஆராய்ச்சிக்கான முழுத்தளத்தையும் செங்கை ஆழியான் செய்திருக்கிறார். இது சம்மந்தமாக யோகராசா போன்றவர்கள் பேசியிருக்கிறார்கள். தரவுகளுக்கு மேலேசென்று ஆழமாகப் பார்த்ததனால் இந்த வளர்ச்சி வந்தது. இப்படிச் சொல்வதன் மூலம் முற்போக்கு இலக்கியத்தினுடைய முக்கியத்துவத்தை நான் எந்தவகையிலும் குறைக்கவில்லை. மறுமலர்ச்சி என்கின்ற இயக்கம் யாழ்ப்பாணச் சூழலில் இலக்கிய ஜனநாயகத்தக்கான ஒரு விதையைத் தூவுகிறது. அதை வளர்க்க முனைகிறது. அந்த இலக்கிய ஜனநாயகத்தின் வழியாகத்தான் முற்போக்கு இலக்கிய இயக்கம் சமூக ஜனநாயகத்தைப் பேசுகிறது. மிக வன்மையாகப் பேசுகிறது. முற்போக்கு இலக்கியத்தை நான் குறைப்பதாகவோ அல்லது அதனுடைய முனைப்பைக் குறைப்பதாகவோ கருதக்கூடாது. ஆனால் இந்த வரலாற்றில் இந்த மறுமலர்ச்சி என்கிற கட்டம் மிக முக்கியமானது. ஏன் வரதரும் சொக்கனும் எங்களோடு நின்றார்கள், அங்கால் போகவில்லை? முற்போக்காளர்கள் கூட்டத்தில் முட்டை அடித்த பின்பு, சொக்கனுக்கு இடமாற்றம் வந்தது. அந்தக் கஷ்டங்களோடும் அவர்கள் எங்களோடு நின்றார்கள். காரணம் அவர்கள் மறுமலர்ச்சி இயக்கத்தோடும் சம்பந்தப்பட்டவர்கள். இதனைத் துரதிஷ்டவசமாக அவர்கள் சொல்லவில்லை. நாங்கள் பார்க்கிறபோது எங்களுக்குத் தெரிகிறது. அந்த அளவில் மறுமலர்ச்சி இயக்கம் எங்களுடைய வளர்ச்சிக் கட்டங்களில் மிக முக்கியமானது. எங்களுடைய ஈழத்தின் நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் அது ஒரு பிரதானகட்டம்.

❑ ❑ ❑

# 12

***தி.ஞா. : நீங்கள் நாடகத்துறை சம்பந்தமான பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளீர்கள். அந்த அநுபவங்கள் உங்களது ஆளுமை வளர்ச்சிக்கு எவ்வாறு துணைபுரிந்துள்ளன?***

**கா.சி. :** உண்மையில் இலக்கியத்தில் நான் ஈடுபடுவதற்கு முன்னர் எனது ஈடுபாடுகள் நாடகத் துறையிலேதான் இருந்தன. பின்னர்தான் படிப்படியாக இலக்கியத்துறைக்கு வந்தேன். இன்றுள்ள தலைமுறையினர் பெரும்பாலோர் என்னை ஒரு இலக்கியத்துறை ஆய்வாளன் அல்லது விமர்சகராகத்தான் அறிவார்கள். ஆனால் நாடகத்துறை சம்பந்தமான தொடர்புகள், ஈடுபாடுகள் வரலாற்றுச் செயற்பாடுகளோடு உள்ள ஈடுபாடுகள் பலவுள்ளன. என்னுடைய நாடகத்துறை ஈடுபாடுகளைத் தொகுத்துக்கூறுவது நல்லது என நினைக்கிறேன்.

முதலாவது ஒரு நடிகனாக நாடகத்துறையில் எனது ஈடுபாடுகள்.

இரண்டாவது ஒரு நெறியாளனாக நான் நெறிப்படுத்திய நாடகங்கள், நண்பர்களோடு சேர்ந்து நெறிப்படுத்திய நாடகங்கள், கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு நெறிப்படுத்திய நாடகங்கள் - இது இரண்டாவது அம்சம்.

மூன்றாவது அம்சம், 1956 முதல் பேராசிரியர் வித்தியானந்தன் கலைக்கழகத் தமிழ்நாடகக்குழுவின் தலைவராக இருந்தகாலம் முழுவதும் 66ஆம் ஆண்டுவரை நான் அக்குழுவின் செயலாளராகக் கடமையாற்றி வந்திருக்கிறேன். செயலாளராகக் கடமையாற்றியதன் காரணமாக அவரது

நாடகப்பணிகளிலே அவருக்குத் துணையாக நின்றதும், அவர் சில விடயங்களில் முழுக்கவனத்தைச் செலுத்த நான் சில விடயங்களில் முழுக்கவனத்தைச் செலத்துகிற சில பண்புகளும் இருந்தன. அதன்பின்னர் 72தொடக்கம் 75வரை நானே இலங்கைக் கலைக்கழகக் குழுவின் தலைவராக இருந்தேன் - பேராசிரியர் வித்தியானந்தன் ஓய்வு பெற்றபின்னர்.

நான்காவது, பேராசிரியர் வித்தியானந்தன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இந்தக் கலைக்கழக நடவடிக்கைகள் ஊடாக வந்த நாட்டுக்கூத்து மீள்கண்டுபிடிப்பினை ஒரு செவ்வையான நாடக வடிவமாக ஆக்கி அளிக்கை செய்வதற்கு அதோடு ஈடுபட்டிருந்தமை அல்லது அதற்கு ஏதோவொருவகையில் உதவியாக இருந்தமை அதுவும் ஒரு முக்கியமான விடயம் என்று நம்புகிறேன். ஏன் என்றால் இன்று பின்னோக்கிப் பார்க்கிறபோது அது ஒரு முக்கியமான விடயமாகப்படுகிறது. அந்தவடிவத்தில் நாங்கள் ஏற்படுத்திய மாற்றங்கள் அல்லது அந்த வடிவத்தை இப்போதுள்ள ஒரு Proscenium theatre க்கு ஆக அமைக்கிறபோது ஏற்பட்ட மாற்றங்கள் - இவையெல்லாம் சரியா? எந்த முறையில் அவை பயன்பெற்றன? - இப்போது அவை பற்றிய ஒரு வாத விவாதங்கள் இருக்கின்றபடியினால் அதனைப்பற்றிப் பேசுவது முக்கியமெனக் கருதுகிறேன்.

இதைவிட என்னுடைய பங்கென்று சொல்லக்கூடியது நாடகத்தை ஒரு கற்கைநெறியாக, ஒரு Curricular course ஆகப் படிப்பித்ததும், படிப்பிப்பதற்கான பாடவிதான ஒழுங்கமைப்புகளைச் செய்ததும் - இது இரண்டு நிலையில் செய்யப்பட்டது. ஒன்று Drama diploma course. அடுத்தது யாழ்ப்பாணத்தில் நாடகத்தை ஒரு Theatre ஆகப் படிப்பித்தது. அதிலே பலர் எனக்கு உதவி செய்தார்கள்.

அதன் பிறகு பல்கலைக்கழக நாடகம் மூலமாக நாங்கள் வளர்த்தெடுத்த நாடகம் பற்றிய ஆராய்ச்சி. Drama, Theatre சம்பந்தமான எனது சொந்த முயற்சிகளும் எனது மாணவர்கள் மூலமாக செய்யப்பட்ட முக்கியமான ஆராய்ச்சிகளும்.

முதலில் நடிகனாக இருந்தது என்பது, நான் எஸ்.எஸ்.சி. சித்தி யடைந்துவிட்டு 1948 - 1949இல் கொழும்பு ஸாஹிராவில் படிப்பதற்கு வந்தேன். அப்பொழுதுதான் நான் வானொலி நாடக நடிகனாக மாறினேன். இந்த வானொலி நாடக நடிகனாக நான் நடித்தபொழுது இரண்டு துறைகள் என்னுள் முக்கியத்துவம் பெற்றன. முதலாவது, சானா - சண்முகநாதனோடு சேர்ந்து வானொலி நாடகங்களில் நடித்தது. வானொலி நாடகங்களில் நடிப்பது என்பது சில முக்கியமான பண்புகளைக் கொண்டது. அதாவது

குரலாலேயே எல்லாவற்றையும் காட்டவேண்டும். அந்த நடிப்பு முறையிலே நான் இரண்டு வகையான நடிப்புமுறைகளில் ஈடுபட்டேன். ஒன்று, யாழ்ப்பாணப் பாத்திரங்களைச் சித்திரித்தல். இரண்டாவது குணசித்திரப் பாத்திரங்களைச் செய்தல் - அது செந்தமிழிலும் வரும், பேச்சுத் தமிழிலும் வரும். இந்த நடை முறையில் நான் தொழிற்பட்டிருக்கும் வேளையில் வீ.என்.பாலசுப்பிரமணியமும், எம்.எஸ்.இரத்தினமும் என்னை இலங்கையர் கோன் எழுதிய 'விதானையார் வீட்டில்' நாடகத்தில் நடிக்கும்படி கூறினார்கள் - இது இலங்கையர்கோனைக் கேட்டு நடந்தது. நான் விதானையாராக நடித்தேன். இது நான் பல்கலைக் கழகத்தில் படிக்கிற காலத்திலேயே நடந்த ஒரு விசயம். ஒவ்வொரு சனிக்கிழமையும் இந்த நாடகம் ஏழு மணிதொடக்கம் ஏழு பதினைந்து மணிவரை நடக்கும். உண்மையில் இந்த வானொலி தொடர்நாடக முறைமைகளில் காலத்தால் முந்தியதும் அக்காலத்தில் பல இரசிகர்களைக் கொண்டிருந்ததும் இந்த 'விதானையார் வீட்டில்' நாடகம். அது வீ.என்.பி. தயாரித்தது. எம்.எஸ்.இரத்தினம் அதற்கு உதவிசெய்தார். அதில் சுந்தரலிங்கம், சரவணமுத்து மாமா, பரிமளாதேவி விவேகானந்தா, செல்லத்தம்பி போன்ற பலர் நடித்தார்கள். அந்தத் தலைமுறையினர் பலர் என்னை விதானை யாராகத்தான் அறிந்திருந்தனர். என்னை அவர்கள் எல்லோரும் 'அப்பு' என்றுதான் அழைப்பார்கள் - இளைப்பாறிய விதானையார். உண்மையில் மிக அண்மைக்காலம் வரை சுந்தரலிங்கம் என்னை 'அப்பு' என்றுதான் அழைப்பார். மயில்வாகனம், பரராசசிங்கம், செந்தில்மணி மயில்வாகனம் போன்ற குறிப்பிட்ட தலைமுறையில் என்னுடன் சேர்ந்தவர்கள் எல்லோரும் என்னை 'அப்பு' என்றுதான் சொல்வார்கள். யாழ்ப்பாணத்து வாழ்க்கையினுடைய மரபுகள் எல்லாவற்றையும் காட்டுகின்ற ஒரு பாத்திரமாக அதில்நான் நடித்தேன். பின்னர் 'லண்டன் கந்தையா' தொடங்கிய காலத்திலும் நான் சானாவோடு சேர்ந்து நடித்தேன். முதல் நான்கு ஐந்து வாரங்களில் நான் நடித்தேன். பின்னர் லண்டன் கந்தையா தனியானதொரு வடிவத்தை எடுத்தது. வானொலி நாடகம் என்னுடைய ஆளுமைக்கு மிகவும் உதவியது. ஆரம்பகாலத்தில் நான் ஒரு வானொலி நடிகனாகவே இருந்தேன்.

வானொலி நாடக நடிகனாக இருந்துகொண்டு வருவதினூடாக நான் படிப்படியாக ஒரு மேடை நடிகனாக மாறினேன். சானாவோடு முதலில் திருகோணமலையில் நடித்தேன். பின்னர் கொழும்பில் இருந்த குழுவைச் சேர்ந்தவர்கள் - சுந்தரலிங்கம், செந்தில்மணி, நான் சேர்ந்து சிறிய நாடகங்களை - Humorous episode களை நடித்தோம். யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி பழைய மாணவர்சங்கத்தில் அப்போது முக்கியஸ்தர்களாக இருந்த ஏ.ஆர். ஆர். தம்பிராசா, வி.எஸ்.நடராசன் போன்றவர்களோடு சேர்ந்து சுந்தாவுடைய தூண்டுதலினால் நாடகங்களை நடிக்கத் தொடங்கினோம். அது மிகவும் சுவாரஸ்யமான விடயம். 1956இல் Sinhala

only சட்டம் வந்தபொழுது நாங்கள் Bachelors only என்ற நாடகத்தை நடித்தோம். அந்த நாடகம் இருபத்தைந்து - முப்பது தடவைகள் நடைபெற்றது. எப்படி 'சிங்களம் மட்டும்' சட்டம் வந்ததோ அதேபோன்று இலங்கையில் Bachelors only என்று ஒரு சட்டமும் வந்ததாக நாடகத்தை அமைத்தோம். சிங்கப்பூரில் இருந்து இங்கு கலியாணம் செய்யவந்த ஒரு பையன் இங்கு வந்து இறங்கியதும் திடீரென Bachelors only சட்டம் வந்துவிட்டது. அதனால் கல்யாணம் தடைப்பட்டுப் போனது. அப்போது அதிலே ஒரு வசனம் வரும் Reasonable use of Tamil இருப்பதுபோல இந்தக் கலியாண விஷயத்திலும் ஒரு Reasonable use இருக்கமுடியாதா என்றெல்லாம் கேட்பார்கள். அந்தமாதிரியான நாடகங்கள் கொழும்பிலே பெரிய வரவேற்பைப் பெற்றன.

எனது நடிப்புத்துறையில் மிக முக்கியமான கட்டம், வானொலிக்கு மேலாக, அதன் தொடர்ச்சியாக அமைந்தது - நான் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்க நாடகங்களில் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்களில் நடித்தது. நாங்கள் கண்டிக்குச் சென்றபோது 52,53இல் 'உடையார் மிடுக்கு' கண்டி திருத்துவக் கல்லூரியில் நடந்தது. அந்தக் காலகட்டத்தில் பல்கலைக்கழகத்தில் நாடக ஆற்றுகைக்காக ஒரு குழு இருந்தது. கைலாசபதி, பரமோதயம், சிவகுருநாதன், சிவப்பிரகாசம், மட்டக்களப்பு தியாகராசா இப்படியாகப் பலர் இருந்தோம். அதனைப்பயன் படுத்தி வித்தியானந்தன் இந்த நாடகங்களை கொழும்பு, திருகோணமலை, கண்டி, யாழ்ப்பாணம் என எல்லா இடங்களுக்கும் கொண்டுசென்றார். முதலாவது 'உடையார் மிடுக்கு' கண்டி திருத்துவக் கல்லூரியில் நடித்ததோடு நின்றுவிட்டது. 'தவறான எண்ணம்' இலங்கையில் ஏறத்தாழ எல்லா இடங்களிலும் நடந்தது. அதன்பிறகு புதிய நாடகம் ஒன்றை பேராசிரியர் கணபதிப்பிள்ளை சொல்லச்சொல்ல நான் எழுதினேன். 'சுந்தரம் எங்கே?' என்ற நாடகம். 1955இல் அந்த நாடகத்தை நடித்தோம்.

1956இல் அவர் எழுதிய 'துரோகிகள்' என்ற நாடகம் மிகப்பிரமாதமானது. அது தமிழரின் விடுதலைப் போராட்டம் பற்றியது. அதில் 'புலிநாடு', 'புலிப் போராட்டம்' என்றெல்லாம் வசனங்கள் வருகின்றன. அந்த நாடகத்தில், ஒரு இளைஞர் குழாம் தமிழர்களுடைய போராட்டத்திற்காக - வெளியே தெரியாத மறைவுநிலையில் தங்களுடைய காரியங்களைச் செய்கின்ற - தங்களுடைய செய்திகளை அனுப்புகின்ற - போருக்குத் தயாராகின்ற - குறிப்பாக வன்முறைக்குத் தயாராகின்ற ஒரு இயக்கம் பற்றிய கதை. 1956இல் அதனை அவர் சொல்லச் சொல்ல எழுதிய வாய்ப்பு கைலாசபதிக்கும் எனக்கும் இருந்தது. அப்போது நான் பல்கலைக்கழகத்தைவிட்டு வெளியே வந்துவிட்டேன். கைலாஸ் அப்போது

தமிழ் விசேடதுறை இறுதியாண்டில் இருந்தார். நான் ஸாஹிராவில் படிப்பிக்கத் தொடங்கிவிட்டேன். சனி ஞாயிறுகளில் பேராதனைக்குச் செல்வேன். சிலவேளைகளில் பேராசிரியர் கொழும்பு வருவார். இப்படியாக அந்த நாடகம் எழுதி முடிக்கப்பட்டது. அதில் மட்டக்களப்பு மேயராக இருந்த தியாகராஜா நடித்தார். குணரத்தினம் என்றொருவரும் நடித்தார். முதற் தடவையாக பல்கலைக்கழகத்திற்கு வெளியே இருந்துகொண்டு பல்கலைக்கழக நாடகம் ஒன்றிலே நடித்தது நான்தான். அந்நாடகம் பெரிய வரவேற்பைப் பெற்ற நாடகம். உண்மையில் ஒரு நாடக நடிகனாக இலங்கை மட்டத்தில் எனக்கு ஒரு பெயர் வந்ததற்குக் காரணம் பல்கலைக்கழக மட்டத்தில் நான் பெற்ற நாடக அனுபவங்கள்தான். கைலாசபதியும் நடித்தார். ஜபார் என்ற ஒரு முஸ்லிம் பையன் மிகவும் பிரமாதமாக நடித்தான்.

நடிகனாக இருப்பதென்பது ஒரு மனிதனாக இருக்கவிரும்புகிறவனுக்கு எவ்வாறு உதவுகிறது என்பதை நான் இந்த இடத்தில் கூறவேண்டும். நடிகனாக இருப்பதினுடைய முக்கியத்துவத்தைக் கூறவேண்டும். நடிகனாக இருப்பதென்பது என்ன? - இன்னொருவருடைய உணர்ச்சிகளை இன்னொருவனாக நான் காட்டுவது. நான் இன்னொருவனுடைய உணர்ச்சிகளை - நான் என்னை மறக்காமல் எனது நிலைக்குள் நின்றுகொண்டு - இன்னொருவனுடைய உணர்ச்சிகளுக்குள் சென்று அதனைச் சித்திரிக்கின்ற முயற்சி. இதுதான் அடிப்படையில் நடிப்பு என்று சொல்லப்படுவது. இதனை நான் செய்கிறபொழுது, நான் மற்றவர்களுடைய கருத்துக்களை - மற்றவர்களுடைய உணர்ச்சிகளை - மற்றவர்கள் உலகத்தைப் பார்க்கிற முறைமையை நான் காட்டுகிறேன். நடிப்பென்பது நானே அதாக மாறுவதல்ல. சிவத்தம்பி அருணாசலமாக நடிக்கிறபொழுது இந்த அருணாசலம் அந்தக்கட்டத்தில் என்ன செய்வார் என்பது சிவத்தம்பிக்கு நன்றாகத் தெரியவேண்டும். அப்படிச் செய்கிறபொழுது அருணாசலத்தை நான் காட்டவேண்டும். அதாவது சிவத்தம்பி முன்னுக்கு வராமல் அருணாசலம் முன்னுக்கு வர வேண்டும். இது எப்போது சாத்தியமாகு மென்றால் எனக்கு அருணாசலம் எப்படியிருப்பார். அவரது உணர்வுகள் எப்படி இருக்கும் என்பது தெரியவேண்டும். **நடிப்பு என்பது உணர்வுகளை அறிந்து கொள்வது. மனிதர்களை உணர்ந்து கொள்ளுதல். அவர்களைப் புரிந்து கொள்ளுதல். அதாவது நீங்கள் நாடகத்தில் ஈடுபட்டால் இரண்டு அம்சங்கள் முக்கியமாக இருக்கும். ஒன்று இந்த உணர்வுகளைச் சித்திரிப்பது. மற்றது நாடகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகிபாகம் உண்டு. அது சிறிதாகவோ அல்லது பெரிதாகவோ இருக்கலாம். சிறிது பெரிது என்று நாங்கள் பார்க்க இயலாது. அதனை நாங்கள் செய்யவேண்டும். இவை வாழ்க்கை பற்றிய விளக்கத்திற்கு மிகவும் உதவக்கூடியவை.**

என்னோடு நடிப்புத்துறையில் ஈடுபட்டிருந்த நண்பர்களை, பல அற்புதமான கலைஞர்களை என்னால் இன்றும் மறக்க முடியவில்லை. வானொலித்துறையில் பலர் நடித்தார்கள். பிலோமினா சுலமன் என்ற பெண் மிகமிக நுண்ணியதான உணர்வுகளைச் சித்திரிக்கின்ற நடிகை. அவரைப் போன்ற சிறந்த நடிகையை நான் காணவில்லை. அந்தக் கால கட்டத்திலேதான் இராஜேஸ்வரி சண்முகமும் நடித்தார். ஆண் நடிகர்களுள் என்னுடன் மிக நெருக்கமாக இருந்தவர் ரொசாரியோ பீரிஸ். அவருக்குச் சினிமாவைப் பற்றி அதிகம் தெரிந்திருந்தது. சினிமா பற்றிய அடிப்படை ஆர்வம் என்னுள் ஏற்படுவதற்கு ரொசாரியோ ஒரு காரணமாக இருந்தார். நானும் அவரும் சேர்ந்து 'ரொசி' என்ற பெயரில் சினிமா விசயங்களை எழுதுவோம். ரொசி என்பது ரொசாரியோ - சிவத்தம்பி என்பதைக் குறிக்கும். சுந்தரலிங்கம் மிகவும் முக்கியமானவர். கொட்டாஞ் சேனையில் உள்ள பல நண்பர்களை நான் அறிவதற்கான வாய்ப்பு - அவர்களுடன் நடிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. ஐபார் ஒரு நல்ல நடிகர். கைலாசபதியும் நடிப்பிலே ஆர்வம் கொண்டிருப்பவர். சிவகுருநாதன் நன்றாகப் பாடுவார். எங்களுடன் நடித்த பெண்கள் பலர் நல்ல குடும்பஸ்திரிகளாக வாழ்ந்தவர்கள் நல்ல வாழ்க்கையை நடத்தி யிருக்கிறார்கள் - Eg. சச்சிதானந்தீஸ்வரி போன்றவர்கள். இவர் மிக முக்கியமான நடிகையாய் இருந்தவர்.

பின்னர் நான் படிப்படியாக நாடகங்களை நெறிப்படுத்தத் தொடங்கினேன். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அக்காலத்தில் நாடகங்களை நெறிப்படுத்துகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. முதலில் சரவணமுத்துமாமா செய்தார். பின்னர் கே.எஸ். நடராசா செய்தார். பின்னர் மூன்று நான்கு வருடங்கள் அதனைச் செய்யும் வாய்ப்பு எனது கைகளுக்கு வந்தது. அந்தநேரத்தில் அ.ந.கந்தசாமி எழுதிய 'மதமாற்றம்' என்ற நாடகத்தை நான் தயாரித்தேன். அதன் பின்பு முத்துலிங்கத்தின் ஒரு நாடகம். பின்னர் சொக்கன் எழுதிய நாடகம் என மூன்று நாடகங்களை நெறிப்படுத்தினேன். அவை மூன்றும் அக்காலகட்டத்தில் மிகமுக்கியமான நாடகங்களாக விளங்கின. மதமாற்றம் ஒரு அற்புதமான நாடகம். ஒரு கத்தோலிக்கப்பையனும் ஒரு இந்துப்பெண்ணும் காதலிக்கிறார்கள். மதப்பிரச்சினை ஏற்பட்டு பெண் கன்னியாஸ்திரியாக மாறுவாள். பையன் சாமியாராக மாறுவான். அதனால் கலியாணம் நடக்காமல் தடைப்பட்டுப் போகிறது. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அந்த நாடகத்தைப் பார்த்துவிட்டு, 'இப்படியான நாடகங்கள் தமிழர் மத்தியிலே மிக அவசியம்' எனக் கடிதம் எழுதியிருந்தார். அந்த நாடகத்தினூடாக நான் தெரிந்துகொண்ட தென்னவென்றால் **ஒரு நாடக நெறியாளர் என்பவர் பார்வையாளருக்கு வாழ்க்கை பற்றிய ஒரு காட்சியை அளித்தல் -Presenting a slice of life அதனைப் பார்ப்பவருக்கு அவரது மனதில் அதுவரை காலமும்**

**தெரியாமல் இருந்த ஏதோவொரு விசயம் பளிச்சென்று தெரிய வேண்டும். இது பொதுவில் ஒரு கலையின் பண்பு. கலை அறிவைத் தருவதல்ல. அது அறிகையைத் தருவது. It doesn't teach - it provides cognition. பார்ப்பவருக்கு அவரோடு சம்பந்தப்பட்ட இன்னொரு விசயம் திடீரென்று வெளிச்சத்திற்கு வருவதுபோல் இருக்கும். அவ்வளவு காலமும் விளங்காதது விளங்கிய மாதிரி இருக்கும். அதுதான் அந்த Cognition. வாழ்க்கையைப் பற்றிய ஒரு தெளிவு ஏற்படும். இது கலை எல்லாவற்றுக்கும் பொதுவானது. இதில் நாடகம் முக்கியமானது.** இது தயாரிப்பின் மூலம் நான் அறிந்து கொண்டது. இன்னொருவிடயம் என்னவென்றால், ஒரு நெறியாளனுக்கு அந்தக் கலைப்படைப்பைப் பற்றிய ஒட்டுமொத்தமான பார்வை இருக்கிறவேளையில் அதனை அவர் தனியாகச் செய்வதில்லை. நடிகர்கள் வேண்டும், ஒரு இசையமைப்பாளர் வேண்டும், ஒளியமைப்பாளர் வேண்டும், ஒரு காட்சியமைப்பாளர் வேண்டும். எனவே இவற்றையெல்லாம் சேர்த்துச் செயற்படவேண்டும். அதுவொரு பெரிய விடயம். அந்தச் சவால் மிகப்பெரிய சவால். 'மதமாற்றம்' இதனை எனக்குக் கற்றுத் தந்தது. அதனை எனது வாழ்க்கையில் மறக்கமுடியாது.

தினகரன் கலைவிழாவில் நாங்கள் 'கம்பன்' என்ற நாடகத்தைப் போட்டோம். அதை நான் எழுதினேன். அது பெரியதோல்வியில் முடிந்தது. அதையும் நான் இங்கு சொல்லத்தான் வேண்டும். வானொலியில் நடித்ததனால் குரலுக்குள்ளால் பாவத்தைக் கொண்டுவருவதென்பது முக்கியம். குரலுக்குள்ளால் பாவம் வருவதென்பது உடலுக்குள்ளால் வருவது. இந்த மாதிரியான ஒரு நடிப்புமுறையில் பயிற்றப்படுகின்ற தன்மையொன்று ஏற்பட்டது.

அடுத்தது, இலங்கையின் நாடக வரலாற்றில் ஒரு முக்கியமான விடயம், இலங்கைக் கலைக்கழகம் 'தமிழ் நாடகக்குழு' என 1952-53இல் ஏற்படுத்தியது. முதலில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அதன் தலைவராக இருந்தார். அதிலே சண்முகநாதன் இருந்தார். நடராசா இருந்தார். வித்தியானந்தனும் அதிலே அங்கத்தவராக இருந்தார். 1956இல் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு, ஒரு கலாசார அமைச்சு நியமிக்கப்பட்டு அதனூடாக வந்த ஒரு அமைப்பினூடாக இந்த நாடகக்குழு வந்தது. இந்த நாடகக்குழு மிகவும் முக்கியமானது. ஏனென்றால், 1956இல்தான் பேராசிரியர் சரத்சந்திர 'மனமே'யை மேடையேற்றினார். அது 'நாடகம' என்ற தமிழ்க்கூத்து வடிவத்தை எடுத்து பல்கலைக்கழகத்தில் அற்புதமான கலை வடிவமாக ஆக்கியிருந்தது. அந்தக்காலத்தில் நான் படித்துக் கொண்டிருந்தேன். அதில் நடித்தவர்கள், சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் எனது நண்பர்கள். வித்தியானந்தன் சரத்சந்திரவுடைய சக விரிவுரையாளர். ஜூபால்

குணவர்த்தன, ஏ. ஜே. குணவர்த்தன, கலபதி இவர்கள் எல்லோரும் - அந்தத் தலைமுறையில் உள்ளவர்கள். எல்லோரும் எனது நண்பர்கள். இதனால் தமிழ் நாடகம் - சிங்கள நாடகம் பற்றிய ஒரு Interaction ஒன்று இருந்தது. அது மிகமுக்கியமானது. இந்தக் கலைக்கழகத் தமிழ் நாடகக்குழு வந்தவுடன் பேராசிரியர் வித்தியானந்தன் அதன் தலைவராக இருந்தார். சண்முகசுந்தரம், சோ.நடராசா, கே.எஸ்.நடராசா இவர்கள் அந்தக் குழுவில் இருந்தார்கள். அந்தக் குழுவுக்கு நான் செயலாளராக நியமிக்கப்பட்டேன். பேராசிரியர் வித்தியானந்தன் நாட்டுக்கூத்தினை மீட்டெடுப்பதற்காகக் கிராமம் கிராமமாகச் செல்கிறபோது, அந்த நடவடிக்கையில் அவர் கவனஞ் செலுத்தியபோது, குழுவின் விடயங்களைப் பற்றிப் பேசுவதும் அலுவலக விடயங்களைக் கவனிப்பதும் அவரது பொறுப்பில் இருந்தன. நவீன நாடகங்களை நடத்துவதும், நாடக விழாக்களை நடத்துவதும் என்னுடைய பொறுப்பாக இருந்தன. அந்தக் காலகட்டத்தில் கொழும்பில் கொட்டாஞ்சேனையில் இருந்த நாடகக் குழுக்கள் ஒரு அந்தஸ்து இல்லாமல் அவர்கள் தங்கள்பாட்டுக்கு நாடகங்களைப் போட்டுக்கொண்டிருந்தார்கள். ராஜேந்திரா என்று ஒரு பெரிய மாஸ்டர் இருந்தார். அவர்கள் அக்காலத்தில் திரைப்படங்களைப் பின்பற்றி நாடகங்களை நடித்துக் கொண்டிருந்தார்கள். வானொலி நாடகங்களும் நடித்துக் கொண்டிருந்தார்கள். கலைச் செல்வன், சிரில் இப்படியாக அங்கு பலர் நாடகங்களைப் போட்டுக் கொண்டிருந்தார்கள். இவற்றோடு யாழ்ப்பாணத்தில் கலையரசு சொர்ணலிங்கம், அரசையா, கிருஷ்ணாழ்வார் போன்றவர்கள் நாடகங்கள் போட்டுக்கொண்டிருந்தார்கள். மன்னாரிலும் நாடகங்கள் நடந்துகொண்டிருந்தன. இவற்றையெல்லாம் கொண்டு வந்து நாடக விழாவில் அரங்கேற்றுவது - அவற்றுக்குப் பொறுப்பாக நான் செயற்பட்டேன். மிகவும் சுவாரசியமான விடயம், முதலாவது நாடக விழாவிற்கு ஆமர்வீதியில் இருந்து நாடகம் பார்க்கவந்த குழுவினர் மாட்டு வண்டியிலேதான் வந்தார்கள். 'லயனல் வென்ற்' தியேட்டரில் நாடகம் நடந்தது. 'லயனல் வென்ற்' உயர்ரக Art galary. அவர்கள் வந்த மாட்டுவண்டிற் சில்லு அங்குள்ள புற்தரையை உழுதுவிட்டிருந்தது. மாடுகள் சாணிபோட்டு அந்த இடங்களையெல்லாம் பழுதாக்கிவிட்டது. அடுத்தநாள் நான் அங்கு சென்றபோது அவர்கள் என்னை ஏசத் தொடங்கிவிட்டார்கள். இப்படியெல்லாம் கஷ்டப்பட்டோம். ஆனாலும் சந்தோசம். அதற்குள்ளால் பல நடிகர்கள் படிப்படியாக வளர்ந்து வந்தார்கள். 1974இல் நாங்கள் சிங்களத்தோடு சேர்ந்து தேசிய நாடகவிழா நடத்தியபோது, கலைச்செல்வன் போன்றவர்களுடைய 'சிறுக்கியும் பொறுக்கியும்' நாடகம் அகில இலங்கைப் பரிசு பெற்றது. அந்த வரலாறுகள் சரியான முறையில் பதிவு செய்யப்படவில்லை. அவற்றோடு சம்பந்தப்பட்டதில் எனக்கும் மிகவும்

சந்தோசம்.

நாடகப் போட்டிகள் நடத்தினோம். சொக்கனுடைய நாடகம், தேவனுடைய நாடகம், அலங்காரரூபன் என்னும் கூத்து நாடகம் ஆகியவற்றை அச்சிட்டோம். வித்தியானந்தன் செல்லும் இடங்களுக்கெல்லாம் நானும் சென்றதால் அவர் மூலமாகப் பலரைத் தெரியவந்தது. சொர்ணலிங்கம் அப்போது யாழ்ப்பாணத்தில் மட்டும் நாடகம் நடித்துக்கொண்டிருந்தார். அவரை நாங்கள் கொழும்புக்குக் கொண்டு வந்து கலையரசுப் பட்டம் அளிப்பதற்கு பின்னின்று உழைத்தோம். அதன்பின்னர் அவர் மிகவும் பிரபல்யம் பெற்றார். அதே போன்று வைரமுத்துவின் மயானகாண்டம் நடிப்பைப் பிரபல்யப்படுத்தினோம். அவரது நடிப்பை நாங்கள் மீள்கண்டுபிடிப்புச் செய்தோம். அது வித்தியானந்தனுடைய, சண்முகசுந்தரத்துடைய முக்கியமான செயற்பாடுகள். அதில் ஏதோவொரு வகையில் நானும் பங்குபற்றியிருக்கிறேன் என்பதில் சந்தோசம்.

வெறுமனே நாட்டுக் கூத்துக்களை மட்டும் மீட்டெடுப்பதல்ல. வெவ்வேறு துறைகளில் செயற்பட்டோம். முக்கியமென்னவென்றால், கலைக்கழகம் நாடகம் பற்றிய ஒரு பொதுவான உணர்வை மக்களிடையே ஏற்பட்டுத்திற்று. அதுவும் இந்த மட்டக்களப்பு நாடக வடிவம் அல்லது கூத்து வடிவமென்பது எங்களுடைய பாரம் பரியமான கலைவடிவம் என்கின்ற கருத்தினை பாடசாலை மட்டங்களில் இருந்து ஏற்படுத்தி அதனூடாக அதனை வளர்த்தெடுத்ததில் கலைக்கழகத்திற்கு முக்கியமான பங்குண்டு. அன்றைய காலகட்டத்தில் இலங்கைத் தமிழருக்குரிய கலை வடிவம் கூத்துத்தான் என்பது இனங்காணப்படாமல் இருந்தது. ஆனால் இன்று எந்தவொரு தமிழ்த் தினவிழாவிலும் ஒரு நாட்டுக்கூத்து மரபில் உள்ள நாடகம் போடாமல் விடப்படுவதில்லை. இதுவொரு முக்கியமான விசயம்.

1972இல் இருந்து 76வரையில் நான் இலங்கைக் கலைக்கழக தமிழ் நாடகக் குழுவின் தலைவராக இருந்தபோது வன்னியில் ஒரு கலைவிழா நடத்தினோம் - 'வன்னிவளநாட்டுக் கலைவிழா' என்பது அதன் பெயர். வன்னியில் உள்ள அத்தனை கலைவடிவங்களையும் பதிவுசெய்தோம். அவைதான் இன்று இலங்கை வானொலியில் இருக்கின்றன. அதே 74இல்தான் முதற்தடவையாக ஒரே மேடையில் லும்பினி தியேட்டரில், ஒரு நாளைக்கு தமிழ் நாடகம், மறுநாளுக்கு சிங்கள நாடகம் எனத் தேசிய நாடகவிழா நடத்தினோம். ஒட்டுமொத்தமான பரிசளிப்பில் எங்களுடைய நாடகங்கள் பரிசு பெற்றன. அதிலேதான் சுந்தாவுடைய 'அபஸ்வரமும்' மற்றது 'சிறுக்கியும் பொறுக்கியும்' போன்ற நாடகங்களும் இடம்பெற்றன. இதற்குக் காரணம் சிங்களத் துறையில் இருந்த நாடகக் கலைஞர்கள் எல்லோரும் எங்களுடைய நண்பர்களாக இருந்தனர். பேராசிரியர் சரத்சந்திர

மிகப்பெரிய மனிதர். அவர் என்னைக் குறிப்பிடும்போது My student என்று கூறமாட்டார் - My friend என்றுதான் கூறுவார். நாங்கள் கலைக்கழகத்தில் நிறையவே தொழிற்பட்டோம். நாடகம் பற்றிய ஒரு ஒட்டுமொத்தமான பாடசாலைமட்ட, மக்கள்மட்ட உணருகைக்கு இந்த நடவடிக்கைகள் பெரிதும் உதவின. இதில் வித்தியானந்தனுடைய பங்கு மிகப்பெரியது.

இவற்றைவிட, எனக்கு முக்கியமானதாய்ப்படுவது என்னவென்றால், நாடகத்தை ஒரு கற்கை நெறியாக ஆக்கியதில் ஏதோவொரு வகையில் பங்கு கொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்கு இருந்தமையாகும்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை நாடகங்களை எழுதினார். நாடகத்தை வலுவுள்ள வடிவமாக்கினார். பேராசிரியர் வித்தியானந்தன் எமது நாட்டுக்கூத்துப் பாரம்பரியங்களை மீளக் கண்டுபிடித்தார். அந்தப் படிநிலையில் அவர்களுடைய ஆசியோடு, அதனை இன்னொரு கட்டத்திற்குக் கொண்டு போகிற ஒரு பெருவாய்ப்பு எனக்குக் கிடைத்ததையிட்டு நான் சந்தோசப்படுகிறேன். அது என்னவென்றால் நாடகத்தை ஒரு கற்கைநெறியாக்கியது.

கற்கைநெறியாக்கியது இரண்டு நிலைகளில் நடந்தது. முதலாவதாக 75,76களில் கொழும்புப் பல்கலைக்கழகக் கல்விப் பீடத்திற்கான Post graduate diploma in education க்கு Drama and theatre ஒரு பாடமாகியது. அதைச் செய்தது தம்மஜாகொட என்பவர் முன்நின்றார். அவர் ஒரு நடிகர். சிங்கள நாடகத்துறையில் ஒரு முக்கியமானவர். அவர் இதனைச் செய்கிறபோது பல்கலைக் கழகத்திலிருந்த ஏ.ஜே. குணவர்த்தனவின் உதவியைப் பெற்று சிங்கள நாடகத்துக்கு வேண்டியவற்றைச் செய்தார். ஏ.ஜே. என்னைத் தமிழ் நாடகத்திற்கு இழுத்துவிட்டார். தமிழ் Drama diploma course ஐ நாங்கள் ஒரு வருடம் நடத்தினோம். அதிலே பங்கு பற்றியவர்கள்தான், சண்முகலிங்கம், சுந்தரலிங்கம், சிவானந்தன், திருமதி. இராமலிங்கம், திருச்செந்தூரன், காரை. சுந்தரம்பிள்ளை, தாஸிஸியஸ், திருச்செல்வம், கவிஞர் கந்தவனம் ஆகியோர். முதற் தடவையாக உயர் Post graduate level இல் நாடகம் பற்றிய வரன்முறையான கல்வி இடம்பெற்றது. நாடகத்தினுடைய நடிப்பு அம்சம், நாடகத் தயாரிப்பு அம்சம் இவைபற்றியெல்லாம் படிப்பித்தது இலங்கையின் மிகப்பெரிய சிங்கள நாடகத்துறைப் பேராசிரியர்கள், கலைஞர்கள், விற்பன்னர்கள் ஆகியோர் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். பெயரளவில் ஒரு வருடக் கற்கைநெறி என்றாலும் உண்மையில் அது 18 மாதங்களுக்கு மேலே நீடித்தது. மேக்கப் படிப்பித்தது, தியசேன. நடிப்புப் படிப்பித்தது ஹென்றி ஜெயசேன, காமினி பொன்சேகா. இசை படிப்பித்தது அமரதேவ. History of drama -

western drama and Indian drama இவற்றை நான் படிப்பித்தேன். எனக்கொரு சந்தோசம், இலங்கைத் தமிழ் நாடகவரலாறு பற்றிப் படிப்பிக்கும்படி பேராசிரியர் வித்தியானந்தனிடம் நான் கேட்டபோது அவர் உடனே வந்துசெய்தார். நான் தமிழ் நாடகம் பற்றி சிங்கள மாணவர்களுக்கு விரிவுரை செய்தேன். ஏ.ஜே.குணவர்த்தன சிங்கள நாடகங்கள் பற்றித் தமிழ் மாணவர்களுக்குச் செய்தார்.

அடுத்தகட்டம் 1984இல் நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறைக்குத் தலைவராக ஆனபோது, நுண்கலை இரசனையும் வரலாறும், நாடகம் ஆகிய பாடங்களைத் தொடங்கினோம். இரண்டாவது கட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதற்தடவையாக Theatre as an undergraduate course ஐ தமிழ் மொழியில் செய்தோம். அப்போது சிங்களத்துக்குக்கூடச் செய்யப்படவில்லை. 98,99வரை சிங்களத்துக்குச் செய்யப்படவில்லை. பின்பு எங்களுடைய பாடத்திட்டங்களை எடுத்துத்தான் அவர்கள் செய்தார்கள். தமிழ்நாட்டில் நாடகம் எம்.ஏ.க்கு இருக்கிறதே தவிர First degree க்கு இல்லை.

1978இல் Diploma நாடகக் கற்கைநெறியை நாங்கள் முடித்தவுடன், தம்மஜாகொட நாடகத்தை க.பொ.த.உயர்தரத்துக்கு ஒரு பாடமாக்கினார். அதற்குக் கேள்விகள் தயாரிக்க வேண்டியிருந்தது. அதில் மூன்று கேள்விப் பேப்பர்கள் அடங்கும். ஒன்று Theory ஒன்று History மற்றது Practical. அதனைக் குழந்தை சண்முகலிங்கமும் நானும் செய்தோம். குழந்தை சண்முகலிங்கம் யாழ்ப்பாணத்திற்குச் சென்று நாடக அரங்கக் கல்லூரியைத் தொடங்கினார். அதன் மூலமாக அங்கு ஏற்கனவே நாடகங்கள் செய்து கொண்டிருந்த ஏ.ரி.பொன்னுத்துரை, அரசையா போன்றவர்களையும் சேர்த்துக்கொண்டார். அங்குள்ள பாடசாலைகளிலும் சிறிய சிறிய நாடகங்களைச் செய்தார். 1979இல் தான் முதலில் உயர்தர வகுப்புச் சோதனைக்கு நாடகம் ஒரு பாடமாக வந்தது. அப்போது மூன்றே மூன்று பேர்தான் அந்தச் சோதனையை எடுத்தார்கள். ஆனால் இன்று 1500பேர்வரை நாடகத்தை கா.பொ.த. உயர் தரத்துக்குப் பாடமாக எடுக்கும் நிலை வளர்ந்துள்ளது. இதற்கென்றே விசேடமான ஒரு Intake பல்கலைக்கழகத்தில் மாணவர் சேர்ப்பு வருமளவுக்கு அது வளர்ந்துள்ளது.

உயர்வகுப்புக்குப் படிப்பித்ததால் அது பள்ளிக்கூடங்களுக்குப் பரவியது. அதிஷ்டவசமாக என்னிடம் தமிழ் நாடகம் இறுதியாண்டில் விசேடதுறையில் படித்த பலர் அந்தப் பாடத்தைக் கற்பிக்கத் தொடங்கினார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் திருமதி சிவலிங்கராஜா, அம்மன்கிளி ஆகியோர். அதனால் ஒரு Educational theatre ஒன்று வரத்தொடங்கியது. 84இல்

நாங்கள் Undergraduate course தொடங்கினோம். அதன்பிறகு நாடகம் சிறப்புப் பாடத் துறையாகத் தொடங்கினோம். அதனால் மாணவர்கள் நாடகம் சிறப்புத்துறை செய்து, நாடக விரிவுரையாளர்களாக, N.G.O. களில் மிகமுக்கியமான பணிகளைச் செய்கின்றவர்களாக வளர்ந்துள்ளார்கள். இது விடயத்தில் சண்முகலிங்கத்திற்குப் பெரும்பங்குண்டு. சண்முகலிங்கம் தனது சொந்த நட்டத்திற்குள்ளும் இந்த வேலையைச் செய்தார். நாடகத்தின்பால் அவருக்கிருந்த ஆர்வம் காரணமாக இதனைச் செய்தார். சண்முகலிங்கம் இல்லாதிருந்தால் நான் இதனைச் செய்திருக்க முடியாது. அதனை நான் ஒத்துக்கொள்ள வேண்டும். இதனைவிட சண்முகலிங்கத்திற்கு ஒரு தனிப்பெயர் உண்டு. அது பேராசிரியர் கணபதிப்பிள்ளைக்குப் பிறகு இலங்கையின் மிக முக்கியமான தமிழ் நாடகங்களை அளித்தார் என்பது. எனது அபிப்பிராயத்தின்படி இலங்கையின் ஒட்டுமொத்தமான நாடக வரலாற்றில் சண்முகலிங்கத்திற்கு ஓர் இடம் உண்டு. நாடகாசிரியர், நாடகங்களை நெறிப்படுத்தியவர் என்ற வகையில் மட்டுமல்லாது நாடகக்கற்கை நெறியை Organize ஒழுங்கமைப்புச் செய்ய உதவியவர் என்ற வகையிலும் அவருக்கொரு இடமுண்டு.

எனக்கு ஒரு திருப்தியென்னவென்றால், எங்களுடைய ஆசிரியர்கள் விட்ட இடத்திலிருந்து அதனை நாங்கள் எடுத்துக் கல்வித்துறையாக்கியது. கல்வித் துறையாக்குவதில் ஒரு சிக்கலிருக்கிறது. என்னவென்றால், அதுவொரு பாடமாகிவிடும். அது கலைத்துறையாக இல்லாது போகலாம். அந்த ஆபத்து இருக்கிறது. இருந்தாலும், ஒரு மேல்மட்டத்தில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் நாடகத்துறை பயிற்றுவதாக ஒரு பெயர் வந்துவிட்டது.

❑ ❑ ❑

# 13

***தி.ஞா. : நாடகத்துறை சம்பந்தமான உங்களது ஏனைய தொழிற்பாடுகள் யாவை?***

**கா.சி. :** நாடகத்துறை சம்பந்தமான எனது கடைசித்தொழிற்பாடு நாடகம் பற்றிய ஆய்வு தொடர்பானது. என்னுடைய PhD ஆய்வு Drama in ancient Tamil society தான். அது சுவாரசியமானது. பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம் பற்றி ஆய்வு செய்தபோது, நாடகம் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன, ஆனால் நாடகங்கள் இல்லை. அதுபோய் எனது ஆராய்ச்சித்துறையை ஒரு சமூக வரலாற்றுத்துறைக்குக் கொண்டு சென்றது. அதேவேளை, நாடகம் பற்றிய விடயங்கள் சம்பந்தமாக ஒரு தெளிவு ஏற்பட்டது. இந்தத்தெளிவு இல்லாமல் மாணவர்களுக்குப் படிப்பிக்க இயலாது. ரதிதரன் என்ற மாணவன் இப்போது ஹைதரபாத்தில் நாடகம் பற்றிப் படிக்கிறார். அவர் ஆரம்பத்தில் என்னிடம் வந்து கூறினார், நாடகம் படிப்பதுபற்றி எல்லோரும் எங்களைப் பகிடி பண்ணுகிறார்கள். அதனால் நாடகம் ஏன் படிக்கவேண்டும் என்பதுபற்றி ஒரு கருத்தரங்கு வைக்கும்படி என்னிடம் கூறினார். அதனால் 'கற்கைநெறியாக அரங்கு' என்று ஒரு கருத்தரங்கு செய்தோம். அது ஒரு சிறிய புத்தகமாகவும் வெளிவந்திருக்கிறது. இந்தத்துறை பற்றிய ஒரு முக்கியமான புத்தகம் அது. இந்தியாவில் அதுதான் ஒரேயொரு புத்தகம் - NCBH போட்டது. நாடகத்தை ஏன் படிப்பிக்கவேண்டும்? அது எவ்வாறு மனித அறிவுக்கு உதவுகிறது என்பது முக்கியம். "மனித வாழ்க்கை எப்போதும் முரண்பாடுகளின் மோதுகைகளைக் கொண்டது. அந்த முரண்நிலைகளை - அந்த மோதுகைகளைச் சித்திரிப்பது நாடகம் என்கின்ற கலைவடிவம் தான்". வாழ்க்கையின் முரண்நிலைகளை அந்தப் பாத்திரங்கள் மூலமாகவே

அந்த மோதுகைகளைக் காட்டுவதென்கிறார் அரிஸ்டோட்டில். அவர் சொல்வார், Agon, conflict இவைதான் நாடகத்தின் உயிர் நாடிகள். வாழ்க்கையை ஒரு முரண்நிலை விடயமாகப் பார்ப்பதென்பது நாடகத்தின் அடிப்படையான அம்சம். இது எங்கேயிருந்து வருவதென்றால் சமயச் சடங்குகளின் அடியாகவருவது. Drama என்ற சொல் Dromenon என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. Dromenon என்றால் - The thing done - செய்யப்பட்டது. என்ன செய்யப்பட்டது? - சடங்கு செய்யப்பட்டது - சடங்கினடியாக வந்தது. இதை நான் படித்தது தொம்சனிடம். அந்தத் துறையில் அவர் உலகப் பிரசித்தி பெற்றவர். அவருக்குத் தமிழ்நாடகம் தெரியாது. ஆனால் கிரேக்க நாடகங்கள் தெரியும். அந்த ஒளியில் நான் தமிழிலே உள்ளவற்றைப் பார்க்கக்கூடியதாக இருந்தது. இன்று நாங்கள் நாடகத்தை வைத்துக் கொண்டு மக்களுடைய மனதை அறிய விரும்புவது மாத்திரமல்ல, பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளைக்கூட நாங்கள் மாற்றமுடியும்.

ஜேம்ஸ்சன் என்பவர் இங்கு வந்து Applied theatre என யாழ்ப்பாணத்தில் Theatre workshop நடத்தினார். அப்போது எங்களுடைய மாணவர்களுக்கு அவையெல்லாம் ஏற்கனவே தெரிந்தவையாக இருந்தன. அதையிட்டு அவர் பெரும் ஆச்சரியமடைந்தார். மௌனகுரு எமது Department க்கு வந்தார். அவரை நாங்கள் முதலில் நுண்கலைத்துறைக்கு விரிவுரையாளராக எடுத்தோம். பின்பு நாடகத்துறை விரிவுரையாளராக அவருக்குப் பதவிஉயர்வு கிடைத்தது. அவர் மட்டக்களப்புக்குச் சென்றபின்பு அங்கு பல்கலைக்கழகத்தில் நாடகத்தை ஒரு பாடமாக்கினார். நாடக ஆராய்ச்சிகளை நான் செய்தது மாத்திரமல்ல, பல்கலைக்கழகம் மூலமாக ஒரு சிலர் தங்களுடைய ஆராய்ச்சிகளை என்னோடு சேர்ந்து செய்தார்கள். மௌனகுருவின் PhD ஐ முதலில் கைலாசபதிதான் பார்த்தார். கைலாஸ் காலமான பின்னர் அந்த மேற்பார்வைப் பணியை நான் ஏற்க வேண்டுமெனப் பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்தது. நான் அதில் பெரிய மாற்றங்கள் செய்யவில்லை. அது புத்தகமாக வந்துள்ளது.

அதற்கு முன்னர், தனது ஆய்வுப் பணியை வித்தியானந்தனுடன் தொடங்கிய காரை. சுந்தரம்பிள்ளை, வடஇலங்கை நாட்டார் கூத்துமரபு பற்றி ஆய்வு செய்தார். அவரும் என்னுடன் சேர்ந்து வேலை செய்தார். முற்றிலும் அரங்கவியல் கண்ணோட்டத்துடன் அதனைச் செய்தார். அதுவும் ஒரு நல்ல நூலாக வந்தது. மற்றது சிதம்பரநாதன் எம்.ஏ.க்கு ‘சமூக மாற்றத்திற்கான அரங்கு’ என்ற நூலை எழுதினார். அண்மையில் ‘பெண்ணிய அரங்கு’ என்ற ஆய்வினை ஜெயரஞ்சினி என்ற பெண் எம்.பில்.க்குச் செய்தார். அது எல்லோராலும் வரவேற்கப்பட்டது.

இந்தியாவிலும் அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. நாடகம் பற்றிய ஒரு ஆய்வினை வளர்த்தெடுப்பதற்கான ஒரு தளத்தை நிறுவுவதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது ஒரு பெரிய விடயம். அப்படிச் சொல்கிறபோது நான் சொல்கிற, அல்லது நான் கண்டுபிடிக்கிற ஆராய்ச்சிகளைத்தான் ஏற்க வேண்டுமென்பதல்ல. இந்தத்தளத்தில் நின்றுகொண்டு இவர்கள் செய்த ஆராய்ச்சி பிழை என்று சொல்வதைக்கூட நான் சந்தோசமாக ஏற்றுக்கொள்வேன். அறிவு எவரோடும் நிற்பதல்ல, அறிவு வளர்ந்துகொண்டே போகும். அந்த அறிவு வளர்ச்சியின்போது முன்பு கண்டுபிடித்ததில் சில குறைபாடுகள் காணப்படலாம். அந்தக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படலாம். அவைகள் வேண்டும். இன்னொரு கட்டத்திற்கு நாங்கள் செல்லவேண்டும். நான் அடிக்கடி சொல்வதொன்று - "நான் என்னுடைய ஆசிரியரின் தோள்மேல் நின்று பார்க்கிறேன். அதன் காரணமாக என்னுடைய ஆசிரியருக்குத் தெரியாத பல விடயங்கள் என்கண்ணுக்குப்பட்டன. என்னுடைய மாணவர்கள் எனது தோள்களிலே நின்று பார்க்கிறார்கள். என்னுடைய கண்களுக்குப்படாதவை அவர்களுக்குப படும்". பல்கலைக் கழகத்தில் படிப்பிப்பது அந்த மாதிரித்தான். என்னுடைய சீடன் என்று சொல்ல முடியாது. அப்படிச்சொல்வது முட்டாள்தனம். அவனுக்கும் எனக்கும் வயது வித்தியாசமே தவிர, அறிவு வித்தியாசம் இல்லை. சிலவேளை அவன் என்னிலும் பார்க்க அந்தத்துறையில் ஒரு பெரிய கெட்டிக்காரனாக இருப்பான். பல்கலைக் கழகத்தில் எனது மாணவன் எனக்கூறிக்கொண்டு இரண்டாம் வகுப்பில் நடத்துவதுபோல அவர்களை நடத்தக்கூடாது. நான் அப்படி நடத்துவதில்லை.

இவற்றையெல்லாம் விட இன்னொன்றை நான் கூறவேண்டும். நாட்டுக்கூத்து மரபை மீள்கண்டு பிடிப்புச்செய்து அதனை இன்றைய அரங்க வடிவமாக்கிய ஒரு முயற்சியில் பேராசிரியர் வித்தியானந்தன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அதில் ஈடுபட்டிருந்தபொழுது அவருக்கு அந்தப்பணியில் உதவி செய்வதற்கான ஒரு வாய்ப்பு எனக்குக்கிட்டியது. அது ஒரு முக்கியமான விடயம். ஏனென்றால், இந்தக் கூத்து வடிவத்தை நாங்கள் மீள்கண்டுபிடிப்புச் செய்தபோது அது இருந்தநிலை, அந்தச் சமூக மக்கள் எந்தளவுக்குப் பின்தள்ளப்பட்டிருந்தார்களோ, அந்தப் பின்தள்ளுகைகளோடு அவர்களுடைய கலை வடிவமும் பின்தள்ளுகைக்கு உட்பட்டிருந்தது. 1956இல் 'மனமே' நாடகம் போடப்பட்டது. அப்போது அவர்கள் சொன்னார்கள், இந்த யாதார்த்த நாடக மரபெல்லாம் வேண்டாம். லூடோவைக்கினுடைய அந்த நாடகமரபையெல்லாம் விட்டுவிட்டு ஒரு Indigenous theatre ஐ சரத்சந்திர கண்டுபிடித்தார். சிங்கள மக்களைப் பொறுத்தவரை 1956 என்பது பண்டாரநாயக்க மாத்திரம் வந்த காலமல்ல.

சரத்சந்திரவின் நாடகமும் வந்தது. ஒட்டுமொத்தமான ஒரு சிங்கள எழுச்சி இருந்தது. அது கலையிலும் தெரிந்தது. எங்களுடைய தமிழ்த்தேசியம் எவ்வாறு நாங்கள் சிங்களத்தினுடைய தாக்கங்களுக்கு முகங்கொடுத்து அதனூடாக எங்களுடைய அடையாளத்தை வளர்த்துக்கொண்டோமோ அதே மாதிரித்தான் கலைத்துறையிலும் எங்களுடைய ஈழத்து அடையாளங்களை நாங்கள் வளர்த்துக்கொள்வதற்கு இது உதவுகிறது. ஆனால் அரசியலில் எதிர்முகமாகப் பண்ணினோம். கலைவடிவத்தில் அவர்களோடு இணைந்து செய்தோம். ஏனென்றால் அதனைச் செய்தவர்களெல்லோரும் பெரிய மனிதர்கள். சரத்சந்திர ஒரு காலத்திலாவது தமிழ் நாடகத்தைக் குறைத்தோ அல்லது தமிழ் நாடகத்தின் மூல வளத்தைக் குறைத்தோ பேசியது கிடையாது. சிறப்பாகத்தான் சொல்வார். அவற்றைப்பற்றி அவர் அறியவிரும்பினார்.

இந்தச் சூழலில் பாடசாலை நிலையில், நாடகப் போட்டி நிகழ்த்தி அதில் முக்கிய இடம்பெற்ற சிறந்த ஆட்டக்காரர்களாக அடையாளங் காணப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு மாணவர்குழாம் பல்கலைக் கழகத்திற்கு வந்தார்கள். அதிலே மௌனகுரு ஒரு முக்கியமானவர். மௌனகுரு ஒரு அற்புதமான ஆட்டக்காரர். உடல்வாகு, ஆட்டம் அவரிடம் சிறப்பாக அமைந்திருந்தன. 'அரிச்சுனன் தபசு' நாடகத்தை 57 இல் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நாங்கள் போட்டியை ஒழுங்கு செய்தபோது மௌனகுரு ஆடினார். அப்போது வித்தியரும் நாங்களும் காரில் திரும்பிவந்தபோது, வந்தாறுமூலைக்குப் போய் அங்குள்ள அதிபர் சவரிமுத்துவைக் கண்டு அவரைப் பாராட்டிவிட்டுவந்தோம். மௌனகுரு மாத்திரமல்ல, பேரின்பநாயகம் என்றொரு பையன் சல்லியனுக்கு நடித்தவர். 'கர்ணன் போரில்' பிரமாதமாக ஆடினார். அவருடைய ஆட்டங்கள் மிகவும் தீர்மானத்துடன் வரும். கனகரத்தினம் என்பவரும் சிறப்பான ஆட்டக்காரர். இப்படி ஆட்டத்தில் கெட்டிக்காரர்கள் பலர் வந்தார்கள். பள்ளிக்கூடங்களில் 1956இல் போட்ட விதை - உயர் வகுப்பில் அப்போது படித்தவர்கள் 1961 இல் பல்கலைக்கழகத்திற்கு வந்தார்கள். அவர்களை வைத்துக் கொண்டு வித்தியானந்தன் தொடங்கினார். முதலாவது கர்ணன் போர். இரண்டாவது நொண்டிநாடகம். மூன்றாவது இராவணேசன். அதன்பிறகு வாலிவதை செய்தார்கள். நான் அதிலே சம்பந்தப் படவில்லை; வெளிநாடு சென்றுவிட்டேன். கைலாசபதி அங்கு விரிவுரையாளராகினார். அந்த மீள்கண்டுபிடிப்பில் உள்ள ஆக்கப்பாடு மிக முக்கியமானது. வித்தியானந் தனிடம் உள்ள மிகச்சிறந்த பண்பு என்ன வென்றால், 'அதனை அவன்கண் விடல்' என்று திருக்குறளில் சொல்வதுபோல, ஒருவனால் முடியும் என

அவர் நினைத்தால் அவனிடம் அதனை விட்டுவிடுவார். இந்தக் கட்டத்தில் நாடகத்தை நாங்கள் எங்களுடைய கலை வலுமிக்க ஒரு படைப்பாகக் காட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது. முதலில் நாங்கள் கர்ணன்போர் நாடகத்தைப் போடத்தீர்மானித்தோம். கர்ணன்போரைத் தீர்மானித்ததற்குக் காரணம் கர்ணனுடைய வாழ்க்கையில் ஒரு துன்பியல் தன்மை இருந்தது - ஒரு அவலம் இருந்தது. எங்களுக்கு முதற்சவாலாக இருந்ததென்னவென்றால், ஆட்டம் என்பது வெறுமனே டான்ஸ் அல்ல. இந்த ஆட்டம் நடிப்புக்கான ஒரு உத்தி. கூத்து கிராமங்களில் நடிக்கப்படும்போது அவர்கள் கூத்தின் ஆட்டத்தை ஆட்டமாகவே பார்த்தார்கள். ஆட்டம் என்பது Dramatic qualities ஐக் கொண்டு வருவதற்கான ஒரு stepping. அதற்குள் மறைந்திருக்கின்ற Drama வை வெளிக்கொணரவேண்டும். அதை எப்படிச் செய்வது? அதைக் கொண்டு வருவதற்கான வாய்ப்புள்ள திறனுள்ள இளைஞர்கள் - நாங்கள் சொல்வதை யெல்லாம் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு அற்புதமான அண்ணாவியார் வந்தாறுமூலை செல்லையா - விசயம் தெரிந்தவர். தன்னுடைய கலையினுடைய வரையறைகளைக் கடந்துபோகாமல் அதற்குள் நெகிழ்ச்சியாக இருக்கக் கூடியவர். இவர்களை வைத்துக் கொண்டு நாம் அவற்றைச்செய்தோம். நாங்கள் முதலில், இன்னும் சில இசைக் கருவிகளைப் பயன்படுத்த விரும்பினோம். அதிஷ்டவசமாக அளவெட்டிச் சிதம்பரப்பிள்ளையின் பங்களிப்பைப் பெறக்கூடியதாக இருந்தது. அவர் காவடி ஆட்டங்களுக்குப் பாட்டுப்பாடுவார். உடுக்கு அடிப்பார். சிரட்டையில் அடித்து வாசிப்பார். சிதம்பரப்பிள்ளை மேடைக்கு வந்துநின்று தலையை ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்து - பாகவதர் கட்டோடு சிரித்துக்கொண்டு பாட்டுப்பாடி உடுக்கு அடிக்கும்போது, அது மத்தளத்துக்கு ஒரு Anti position. சண்டை நடக்கிறதுபோலவே இருக்கும். குதிரை ஓடுவதற்கு - தவில் அடிக்கும்போது விரலுக்கு அணியும் உபகரணத்தை மாட்டிக்கொண்டு சிரட்டையில் அவர் அடிப்பாரானால், 'கொறக் கொறக்' என்றொரு சத்தம் வரும். அது குதிரை ஓடுகிற மாதிரியே இருக்கும். அதோடு சரத்சந்திராவைப் பின்பற்றி ஒரு 'கோரஸ்'ஐ வைத்துக்கொண்டோம். இன்று பின்னோக்கிப் பார்க்கும்போது உண்மையில் நாங்கள் 'கோரஸ்' வைத்திருக்கக்கூடாது. 'கோரஸ்' கிரேக்க நாடகங்களுக்கு உரியது; அதுவும் ஒரு காலகட்டத்திற்கு மாத்திரமுரியது. நாங்கள் பக்கப்பாட்டு பாடுகிறவர்களைக் 'கோரஸ்' ஆக நினைத்துக் கொண்டு செய்தோம். நாங்கள் அவர்களை பக்கப் பாட்டுக்காரர்களாகவே வைத்திருக்கலாம். 'கோரஸ்' ஆக வைத்திருக்கத் தேவையில்லை என நினைக்கிறேன். அது இப்போது ஒரு வாய்பாடாகவே வந்துவிட்டது. 'கோரஸ்' இல்லாமலே இருந்திருக்கலாம் என்று எனக்கு இப்போது தோன்றுகிறது.

ஆட்டம் என்பது ஒரு நடிப்புமுறை. சண்டை நடக்கும்போது நடிகர்கள்

முன்னுக்கு வந்து பின்னுக்குப் போவார்கள். பக்கவாட்டில் செல்வார்கள். நாங்கள் அதைப் பார்த்துவிட்டு ஒருவருக்கொருவர் சண்டை செய்கிறமாதிரி ஒருவரை ஒருவர் பார்த்து ஆடமுடியுமா என நடிகர்களிடம் கேட்டோம். பேரின்பநாயகமும் மௌனகுருவும் மிக அற்புதமாக ஆடினார்கள். இப்படியாக படிப்படியாக அந்த ஆட்டத்திற்குள் இருக்கிற நாடகத்தை வெளியே கொண்டு வருவதற்கான ஒரு வாய்ப்பு இருந்தது.

சில பெண்பிள்ளைகள் வந்து சேர்ந்தார்கள். முன்பு ஆண்களுக்கு அரிதாரம் பூசி, பின்னலைக் கட்டி, அவனை ஆம்பிளை என்பதை மறைக்கமுடியாமல் நடந்த கூத்துநிலை மாறி, பெண் பிள்ளைகள் அழகான காஞ்சிபுரம் சேலையைக் கட்டிக் கொண்டு - பரதநாட்டியம் தெரிந்தவர்கள், அந்த அடியோடு முன்னுக்குப் பின்னுக்குப் போய்வரும் லளிதமே பிரமாதமாக இருக்கும். இந்தமாதிரிச் செய்தவுடன் 'கர்ணன் போர்' மிகவும் வெற்றியாக அமைந்தது.

அடுத்தது 'நொண்டி' நாடகம். ஆட்டக்காத்திரத்தைப் பொறுத்த வரையில் அது முக்கியமானதல்ல. ஆனால் அது ஒரு சமூகஅங்கதம். அதனுடைய ஓட்டம் வேகமாக இருக்கும்.

நெடுக, இந்த நாட்டுக்கூத்து மரபுக்குள் நாங்கள் தொடர்ந்தும் நிற்பதா என்ற பிரச்சினை வந்தது. 'மனமே'யில் ஒரு பழைய கதையைச் செய்த சரத்சந்திர 'சிங்கபாகுவில்' ஒரு கதையை எடுத்து He discussed it - ஒரு சம்பவத்தை இரண்டு மூன்று கண்ணோட்டங்களில் பார்க்கிறமுறை.

கைலாசபதிக்கும் எனக்கும் கம்பராமாயணத்தின் நாடகத்தன்மையில் பெரிய விருப்பு இருந்தது. கம்பனுடைய Dramatic qualities - அதனுடைய தன்மையை மிகவிரிவாக எங்களோடு கதைத்தவர் எழுத்தாள நண்பர் தொ.மோ.சி.ரகுநாதன். எங்களுடைய வளர்ச்சியில் அவருக்கு முக்கியமான பங்குண்டு. ரகுநாதன், புதுமைப்பித்தன் வழியாக கம்பனுடைய ஒரு பெரிய ரசிகன். நாங்கள் இராவணனுடன் உள்ள போரினை முக்கியப்படுத்தி நாடகம் எழுத நினைத்தோம். மௌனகுருவின் உள்ளே ஒரு கவிஞன் இருக்கிறான். அதனைப் பயன்படுத்தி நாங்கள் இது இப்படியிருந்தால் நல்லாக இருக்கும் என்றுகூற, அவர் அதனைப் பாட்டிலே போடுவார். ஆட்டத்தோடு உள்ள பாடல்களை அவர் எழுதினார். இப்படி உருவாகியதுதான் இராவணேசன். இராவணேசனுடைய ஆட்டங்கள் எல்லாம் மிகவும் பிரமாதமாக அமைந்தன.

கூத்தின் புத்தாக்கத்திற்கும் நவீன ஆக்கத்துக்கும் இவைகளெல்லாம் ஒரு எல்லைக்கல்லாகவும் உதாரணங்களாகவும் கொள்ளப்பட்டன.

அதன்பிறகு பள்ளிக்கூடங்களில் ஆடப்படும் கூத்துக்களுக்கு இவைதான் உதாரணமாகின.

***தி.ஞா.: இப்போது ஒரு வலுவான விமர்சனம் இருக்கிறது. கிராம நிலையில், கிராம மக்களிடையே ஒரு குறிப்பிட்ட சமூகப் பயன்பாட்டுக்கு, தொழிற்பாட்டுக்கு உதவிபண்ணிய நாடகத்தை, அவர்களிடமிருந்து பிய்த்தெடுத்து அதை அவர்களுக்கு அந்நியமான ஒரு கலை வடிவமாக்கியது சரியா என ஒரு வினா இப்பொழுது எழுப்பப்படுகிறது. இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?***

**கா.சி. :** இது சரியா பிழையா என்பதல்ல முக்கியம். நாங்கள் என்ன செய்தோம் - எங்களுக்கு என்ன idea இருந்தது என்பதுதான் முக்கியம். எங்களுக்கு அந்தக் காலகட்டத்தில் இருந்த மிகப்பிரதானமான நோக்கம் என்னவென்றால், ஈழத்துத் தமிழ் கூத்துக்கலையின் ஊடாக வருகின்ற ஒரு கலைவடிவம் எங்களுக்கான ஒரு கலைவடிவமாக இருக்கிறது. அந்தக் கலைவடிவம் பற்றிய பிரக்ஞை இல்லாதிருந்தது மாத்திரமல்லாமல் அந்தக் கலை வடிவத்துக்கு ஒரு சமூகப் பின்னடைவு இருந்தது. அந்தச் சமூகப் பின்னடைவிலிருந்து அதனை மீட்டெடுத்து அதனை ஒரு பொதுப்படையான கலைவடிவமாக்க வேண்டிய தேவை இருந்தது. அது ஒரு காலத்தின் தேவை. இந்த மக்களுக்கு இந்தவடிவத்தைப் பற்றிய ஒரு பிரக்ஞை ஏற்படுத்துவதுதான் எங்களுக்கிருந்த சவாலாக இருந்ததே தவிர, இந்தக் கூத்தை நாங்கள் அவர்களிடமிருந்து பறித்து இன்னொருவரிடம் கொடுப்பது போன்ற உணர்வு எங்களுக்கு இருக்கவே இல்லை. சம்பந்தப்பட்ட வர்களுக்கும் இருக்கவில்லை. இந்த விடயத்தை அக்காலகட்டத்தில் எப்படிப்பார்த்தோம் என்றால், சமூகப் பின்னடைவாகப் போய் அதன் காரணமாகக் கவனிக்கபடாமல் இருந்த ஒரு கலைவடிவத்தை மக்களுடையதாக்குவதற்கான ஒரு நடவடிக்கையாக நாங்கள் பார்த்தோம். இனி, அவர்களுடைய என்ன பயன்பாடுகளுக்கு இருந்தது என்று சொன்னால் அந்தக் கலை வடிவத்தின் முக்கியத்துவத்தை உணரக்கூடிய நிலையில் அவர்கள் இருக்கவில்லை. அது ஒன்று. மற்றது ஒரு சமூகப் பின்னடைவோடு அது சம்பந்தப்பட்டிருந்தது. மட்டக்களப்பில் அந்தப் பிரச்சினை இருக்கவில்லை; உயர்சாதிக்காரன் கூத்தாடுவான். யாழ்ப்பாணத்தில் கூத்தாடுவது யார்? - ஒடுக்கப்பட்ட மக்கள்.

ஆங்கில காலனித்துவத் தாக்கம் காரணமாக ஒவ்வொரு பிரதேச மாநிலங்களில் கலைவடிவங்கள் மேலுக்குக் கொண்டுவரப்பட - தமிழகத்தில் அல்லது சென்னையில் பிராமணருக்கு இருந்த ஒரு புலமை அல்லது புத்திஜீவித மேலாண்மை காரணமாக அவர்கள் பரதநாட்டியத்தை மேலுக்குக் கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டுவரும்போது அவர்கள்

அதனை அந்த அந்தக் குடும்பங்களோடு - சம்பந்தப்பட்டவர்களோடு அவர்கள் வழியாக எடுத்து நவீன மயப்படுத்தினார்கள். பாலசரஸ்வதியின் குடும்பம் என்ன என்பது எங்களுக்குத் தெரியும். வழுவூர் இராமையா பிள்ளையின் பெயர் வழுவூர் பவானியம்மாள் இராமையாபிள்ளைதான். இப்படியாக இருந்ததை ஒரு உயர்மட்டக் கலையாக, எல்லோருக்கும் தெரிந்த கலையாக பெரியஇடத்துப் பிள்ளைகள், பிராமண வீட்டுப் பிள்ளைகள் எல்லோரும் ஆடத் தொடங்கினார்கள். அதை வைத்துக் கொண்டே கலாஷேத்திரம் நடத்தப்படுகிறது. அந்தக் கலைவடிவத்தை அதன் பின்னணியில் இருந்து எடுக்கக்கூடாது என்று விட்டிருந்தால், பரதநாட்டியம் வேண்டும் என்பதற்காக தாசி முறையும் வேண்டும் என்று சொல்லும் முறைதான் ஏற்பட்டிருக்கும்.

மார்க்ஸியத்தில் உள்ள அடிப்படையான விசயம் என்னவென்றால், Historical materialism - historical dynamics - இயங்கசைவு - அதாவது அந்தக்கால கட்டத்தில் தேவைப்படும். இன்றைக்கு ஜனநாயக உணர்வு வந்து, எல்லா மக்களும் சமமென்ற ஜனநாயகமுறையில் இந்த மக்கள் தங்கள் கலை வடிவத்தைப் பார்க்கிறதுக்கும் 1950களில் அந்த மாதிரியான உணர்வு இல்லாமல் தங்களுடைய பின்னடைவின் உதாரணமாகக் கூத்தைப் பார்க்கிற தன்மை இருந்த காலகட்டத்தில் இது செய்யப்பட்டது. அண்ணாவி செல்லையா பெனியன் போட்டுக் கொண்டு மேடையில் ஏறியதற்கே அப்படிச்செய்யலாமா என்று கேட்டகாலம். அந்தமாதிரியான காலகட்டத்தில் இருந்து அதனை எடுக்கவேண்டிய தேவை இருந்தது. அந்தக்காலகட்டத்தில் எடுக்காமல் விட்டிருந்தால் இந்த ஜனநாயக மயப்பட்ட நிலையில் ஏறத்தாழ 40 வருடங்களுக்குப் பிறகு இன்றைக்கு உள்ள வடிவத்தில் நாடகத்தை எடுத்திருக்க இயலாது. எங்களுடைய சமுதாயம் ஒரு Hierarchy சமுதாயம். மட்டக்களப்பில்தான் உயர்சாதி மக்கள் ஆடினார்களே தவிர மற்ற இடங்களில் அல்ல.

பறை வாத்தியத்திற்கு நடந்ததை மறந்துவிடமுடியாது. இன்றைக்கு மட்டக்களப்பிலேகூடப் பறைமேளக்கூத்தைச் சரியானமுறையிலே ஆடமுடியாமல் இருக்கிறது. இன்றைக்கு யாழ்ப்பாணத்தினுடைய மிகப்பெரிய பாரம்பரியம் பறையரோடு இல்லாமல் போகிறது. ஆனால் அதை அவர்கள் தமது நிரந்தரமான சாதியடையாளமாக வைத்துக் கொள்வதிலும் அவர்களுக்கு ஒரு ஜனநாயகப் பிரச்சினை இருக்கிறது.

இன்றுகூட நாதஸ்வரம், தவில் போன்ற வாத்தியங்கள் வயலின் வீணை மாதிரி எல்லோராலும் பயிலப்படுவதில்லை.

எடுத்தது சரியா பிழையா என்பதல்ல வாதம். எடுத்ததினால் அந்த

நாடகத்திற்கு ஒரு பாரிய பாதிப்பு ஏற்பட்டது என்பதல்ல வாதம். எடுக்கவேண்டிய தேவையிருந்தது. இதில் இன்னொரு பிரச்சினை என்னவென்றால், அந்த நிலையில் அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதுபற்றிய அந்த நிலை நின்று பார்க்கிற ஆய்வுகள் வேண்டும். கூத்தினுடைய மீளுருவாக்கம் அல்லது கூத்தினுடைய நவீன மயப்பாடு என்பது நடந்த வரலாற்றுப் பின்புலம், அதனுடைய கலைக்கொள்கை சம்பந்தமான வரலாற்றுப்பின்புலம் இவைகளைப் பற்றி நான் சொன்னேன். அதிலே எனது தொழிற்பாடுகள் எவ்வாறு இருந்தன என்பதைப் பற்றி மிகக் குறைந்தபட்சமான தரவுகளைச் சொன்னேன். இவையெல்லாம் எங்களோடு நின்றுவிடுவதில்லை. நாங்கள் விட்டதன் பின்னர் மௌனகுரு அதனை எடுத்துக் கூத்திலே புதிய விசயங்களைச் சேர்த்திருக்கிறார். அதன்பின்பு கூத்துவடிவத்தை நவீன நாடகங்களுடைய ஒரு உத்தியாக தாசீசியஸ், சுந்தரலிங்கம் போன்றோர் பயன்படுத்தினார்கள். அப்படியாகப் போய் இன்று அது 'மண்சுமந்த மேனியரி'ல் இன்னொரு வடிவத்தை எடுத்திருக்கிறது. இன்னொரு விசயம் என்னவென்றால் கூத்துப்போன்ற மக்கள் நிலையில், அதுவும் காலனித்துவங்கள் காரணமாக, சாதியமைப்பு காரணமாக ஒரு ஒதுங்கல் நிலைப்பட்ட மக்களிடையே அந்தக் கலைவடிவங்கள் இருக்கிற பொழுது அந்தக் கலைவடிவத்தினுடைய வரலாற்றை, நிலையை அந்த Situation ஐ அவர்கள் இருக்கிற நிலையில் சொல்லமுடியாது. ஏனென்றால் அவர்களுடைய வறுமை நிலையும் அதற்குள் சேர்ந்துவிடும். அதுபற்றிய ஒரு நல்ல ஆய்வு எங்களுக்கு வேண்டும். ஜெயராமன் என்பவர் காமன்கூத்து மலையகத்தினரிடையே என்ன Role play பண்ணியிருக்கிறது என்று ஆய்வு செய்திருக்கிறார். அதுபோல எங்களுக்கு எவரும் செய்யவில்லை. இப்பொழுதுதான் நாடக வடிவங்கள் இவை இவை என்பதைக் கண்டு பிடித்திருக்கிறோம். எங்களுக்கிருக்கிற பிரச்சினைகள் காரணமாக நாங்கள் அதனைப் பயன்படுத்தி அதனை ஒரு சமூகத்தொடர்பாக்கி, அதனை ஒரு அரசியல்தொடர்பாக்கி மண்சுமந்த மேனியர் போன்ற நாடகங்களைக் கொண்டு வந்தோம். சண்முகலிங்கத்தின் நாடகங்களைக் கொண்டு வந்தோம். அதுமாத்திரமல்லாமல் இப்போது சிகிச்சை முறையான அரங்காக சிதம்பரநாதன் மாற்றுவதற்கு முனைகிறார். அது சம்பந்தமான வாதவிவாதங்கள் இருக்கின்றன. இந்த ஒட்டு மொத்தமான பின்புலத்தில், நடந்தது சரி என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் இதை மக்களுடைய பொதுவான பிரக்ஞைக்குள் கொண்டு வந்ததென்பது முக்கியமான விசயம். அதனாலேதான் இன்று தமிழ்த்தினம் என்று சொல்லுகிறபோது நாட்டுக்கூத்துப்போடுவது முக்கியமாயிற்று. இன்று கூத்தாடுகிறபிள்ளை என்பது ஒரு அசாதாரண பிள்ளையல்ல. 1957ஆம் ஆண்டு மௌனகுரு பாடசாலையால் வந்து 'அரிச்சுனன் தபசு' நாடகம்

போட்டபோது அந்தச் சந்தர்ப்பத்திலேதான் பல்வேறு சாதிகளைக் கொண்ட பாடசாலை மாணவர்கள் ஒரு கூத்தில் நடிக்கிறதாக இருந்தது. அதுவரையில் ஒரு கூத்து ஆடினால் எல்லோரும் அந்தச் சாதிக்காரர்களாகவே இருப்பர். ஏன் என்றால் எங்களுடைய சமுதாயத்தில் ஒரு Community art also becomes a cast art. ஒருமுறை சி.சுந்தரலிங்கத்தின் மகன் சத்தியலிங்கம் ஒரு மேடையில் நடனத்துக்குப் பாட்டுப்பாடினார். அந்தவேளையில் நாங்கள் அங்கு சென்றிருந்தோம். நட்டுவாங்கம் பற்றிப் பேசப்பட்டது. அப்போது ஜி. சண்முகானந்தம் எங்களிடம் நக்கலாகக் கூறினார், “சுந்தரலிங்கத்தின் மகன் செய்தால் நட்டுவாங்கம் - நாங்கள் செய்தால் நட்டுவர்” என்று. நட்டுவர் என்பது சாதியைக் குறிக்கும். நட்டுவரிலிருந்துதான் நட்டுவாங்கம் வந்தது. நட்டுவர் நட்டுவனார் ஆகி, பிறகு நட்டுவாங்கம் எனவந்தது. நட்டுவாங்கம் என்று வரும்போது ஆள் முக்கியம் இல்லை. நட்டுவனார் என்றால் ஆள் முக்கியம். இந்தப் Process ஒன்று எங்களுடைய கலை வளர்ச்சியில் இருக்கிறது. இன்றைக்கு இந்தச் சாதி ஏற்றத்தாழ்வுகள் இல்லாத நிலையிலேயே நாங்கள் இதனைப் பேசுகிறோம் - சந்தோசம். நாங்கள் சிலவேளை பிழைகள் விட்டிருக்கலாம். அந்தப் பிழைகளைத் திருத்தவேண்டியது அடுத்துவருகின்ற சந்ததியின் கையிலேதான் இருக்கிறது. தமிழகத்திலே நடந்த ஒரு முக்கியமான விசயம் என்னவென்றால் இந்தப் பிரித்தானிய காலனித்துவத்துக்கெதிரான ஒரு ஒட்டு மொத்தமான மக்கள் எழுச்சியின் பொழுது அந்த அந்தப் பிரதேசத்தினுடைய மக்கள் நிலைப்பட்ட கலைவடிவங்கள்தான் முன்னுக்கு வந்தன. கதகளி, யக்சகான, ஒடிசி இவையெல்லாம் வந்தன. தமிழ் நாட்டிலே வந்தது பரதநாட்டியமும் கர்நாடகசங்கீதமும்தான். அங்கே தெருக்கூத்து வந்திருந்தால் பிரச்சினை இருந்திருக்காது. தெருக்கூத்தில் தி.மு.க. கூடக் கைவைக்கவில்லை. தி.மு.க. கைவைத்த நாடகம் ஒரு Urban theatre - ஒரு Discussion theatre. அது அண்ணாத்துரைக்கு இருந்த அறிவு காரணமாக வந்தது. எங்களுக்கு இந்தப் பிரச்சினை இங்கும் இருந்தது. இதனாலேதான் மிக அண்மைக்காலம் வரையில் கூத்துவேறு, நாடகம் வேறு என இருந்தது. எல்லாக் கிராமங்களிலும் இருந்தது.

மீட்டுருவாக்கத்தில் ஈடுபட்டதன் காரணமாக சிலவற்றைச் செய்யக் கூடியதாக இருந்தது. அவற்றுக்கான நியாயப்பாட்டையும் நான் சொன்னேன். ஒட்டுமொத்தமாகச் சொல்லும்பொழுது ஒரு நடிகனாக, ஒரு நெறியாளனாக, கலைக்கழகத்தினுடைய நாடகத்துறை - குறிப்பாக நகர் நிலைப்பட்ட விடயங்களைச் செய்கின்ற ஒருவராக, நான் தலைவராக இருந்தகாலத்தில் செய்த பணிகள், கலைக்கழக நாடகங்களில் பேராசிரியர் வித்தியானந்தன் செய்த நாடகக் கூத்து மீட்டெடுப்புமரபில் சம்பந்தப்பட்ட முறை, நாடகத்தை ஒரு கற்கை நெறியாக்குவதில் செய்த பங்களிப்பு என நான் நாடகத்திலே

இத்துறைகளில் தொழிற்பட்டிருக்கிறேன். இதிலே சந்தோசம் என்னவென்றால் இவற்றுக்கூடாக இந்நாட்டினுடைய எங்களுடைய காலத்து நாடக வளர்ச்சியின் சில முடிச்சுகள் அங்கு வருகின்றன. சொர்ணலிங்கத்தோடு, எம்.வி. கிருஷ்ணஆள்வாரோடு உள்ள தொடர்புகள், இராவணன் கந்தன் அண்ணை என்று சொல்லப்படுகிற எங்களுடைய தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த ஒருவரோடு இருந்த உறவுகள், வைரமுத்துவோடு இருந்த உறவுகள் இவைகளெல்லாவற்றுக்கும் ஊடாகவும் இந்த நாடகத்துக்கூடாகவும் வரமுடிந்தது. இறுதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகத்தை ஒரு வரன்முறையான பாடமாக்கிற அந்த ஒரு பெருவாய்ப்பு சண்முகலிங்கத்தின் உதவியோடு எனக்குக் கிடைத்தது. இவையெல்லாம் ஒரு வரலாற்றின் தேவைகளை - காலகட்டத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்தவர்களாக நாங்கள் பார்க்கப்படவேண்டுமே தவிர எங்களுடைய தொண்டுகள், பங்களிப்புகள் என்று பார்ப்பது சரியல்ல.

❑ ❑ ❑

பிற்குறிப்பு :

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நாங்கள் படித்த காலத்தில் சக மாணவர்களுள் ஒருவராக இருந்தவர் இன்று அமெரிக்க நியூயோர்க் நகரப் பல்கலைக்கழகத்தில் மிக்க சிறப்புள்ள சமூகவியற் பேராசிரியரான சித்தார்த்தன் பேரின்பநாயகம் ஆவார். இவர் ஹன்டி பேரின்பநாயகத்தின் மூத்த மகன். திருவாட்டி செல்வி திருச்சந்திரனின் தமையன்.

“ஞானத்தில்” நாடகம் பற்றிய எனது நேர்காணல் அவர் இலங்கையில் நின்ற பொழுது வெளி வந்தது. இதனை வாசித்த அவர் எனது நாடக அனுபவங்களைப் பற்றிய தரவுகளில், நான் பேராதனையில் படித்த காலத்தில் நடித்த ஓர் ஆங்கில நாடகம் பற்றி நினைவூட்டினார். அந்த நாடகம் பிரதானமாக ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களது Dransoc எனும் நாடகக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அது தென்னமரிக்க வாழ்க்கை பற்றிய ஒரு நாடகம். மற்றைய நடிகர்கள் ஆங்கிலத்துறையைச் சார்ந்தவர்கள். அந்த நாடகத்திற்கு பரிசு கிடைக்கவில்லையெனினும் அது முக்கியமாக பேசப்பட்ட ஒரு ஆற்றுகையாகும். நாடகம் முடிந்ததன் பின்னர் எனது நண்பர்கள் சிலர் அது பற்றி என்னைக் கிண்டலாக வாழ்த்தியதுண்டு. ஆனால் உண்மையில் நான் அதனை மிகப்பெரிய விடயமாக மனதிலே கொள்ளவில்லை. மேலும் ஒன்று அந்த ஆங்கில மாணவர்கள் தங்களது நட்புக் குழுவில் (Kultur Group) ஒருவனாக என்னை கற்பனை செய்து

கொள்ளவே இல்லை.

ஏறத்தாழ 50 வருடங்களின் பின்னர் (2004ல்) நீ ஏன் அதனை சேர்க்கவில்லையென சித்தார்த்தன் கேட்ட பொழுது உண்மையில் கிண்டல் செய்கிறானா என்ற எண்ணமே எனக்கு மேலோங்கி நின்றது. அதனை வாய்விட்டே சொன்னேன்.

எனது எடுகோளை வலுவாக மறுதலித்த சித்தார்த்தன் அது அப்பொழுது தங்கள் மட்டத்திலுள் பேசப்பட்டதாக கூறினார். இதுபோன்ற என்னுள் சுயபிரக்ஞையை ஏற்படுத்திய, தூண்டிவிட்ட நிகழ்ச்சிகள் பலவற்றை நான் இங்கு குறிப்பிடவில்லை.

நேர்காணல் சுயகுறிப்புக்கள் என்பவை என்னைப் பற்றிய தரவுகளாக இருப்பதிலும் பார்க்க என் மூலம் நான் அறிந்து கொண்ட உலகப் பொது அனுபவங்களாக இருக்க வேண்டும் என்பது எனது ஆழ் மனதின் கருத்து.

நான் எனக்கு முக்கியப்படும் அளவுக்கு மற்றவர்களுக்கு என்றுமே முக்கியமானவனாக மாட்டேன் என்ற உண்மையை மறந்துவிடக்கூடாது என்று கருதுகிறேன்.

73வது வயதில் இந்த உணர்வே எனது மனதில் மேலோங்கி நிற்கிறது.

★★★

நான் முன்பு நாடகம் பற்றிச் சொன்னபோது, இந்தியத் தொடர்புகள் பற்றிக் கூறவேண்டியது தவறிவிட்டது. அதில் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் தமிழகத்தில் எனக்கு தமிழ் நாடகம் சம்பந்தமான தொடர்புகள் உண்டு. பேராசிரியர் ராமானுஜம், ராமசாமி, தேசிய நாடகப் பள்ளியில் உள்ள ராஜேந்திரன், பாண்டிச்சேரியில் இருக்கும் குணசேகரன் போன்ற பலருடன் உத்தியோக ரீதியாக எனக்குப் பழக்கம் உண்டு. ராம்நரசன், ஏ. எஸ். ராமன் போன்றவர்கள் எனக்குத் தெரிந்தவர்கள். பத்மா சுப்பிரமணியத்தினுடைய ஒரு மகாநாட்டில் கூத்தும் நடனமும் பற்றிப் பேசுமாறு என்னைக் கேட்டிருந்தார்கள். எங்களுடைய வளர்ச்சிகளை அவர்கள் நன்கு பார்க்கிறார்கள். அதனுடைய பல அம்சங்களை அவர்கள் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். இதில் முக்கியம்என்னவென்றால், நாடகத்துறையைச் சேர்ந்த ஒருவருடைய பணிகள் இலங்கையில் அதிகம் தெரியாமல் இருக்கிறது. இளைய பத்மநாதன் என்கிற பத்தண்ணாவின் பணிதான் அது. தமிழகத்தில் அண்மைக்கால நாடக வளர்ச்சி பற்றி எழுதுகிறபோது, நாடக வளர்ச்சி பற்றிய கண்ணோட்டங்களை விரிவடையச் செய்ததில் பத்தண்ணாவுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. பேராசிரியர் அரசு அவரது மனைவி மங்கை ஆகியோரது பலகலை அரங்குக்கு பத்தண்ணா செய்த பங்களிப்பும் அதனால் அவர்கள் பெற்ற பலனும் மிகமுக்கியமானவை. 'தீனிப்போர்' என்ற நாடகம் முக்கியமானது. இலங்கையில் 'கந்தன் கருணை' என்ற நாடகத்தில் பத்தண்ணா சம்பந்தப்பட்டிருந்தார். அவர் நெல்லியடியைச் சேர்ந்தவர். நாடகத் துறையில், அவர் பற்றிய ஒரு நல்ல குறிப்பு இன்னும் இலங்கையில் சொல்லப்படவில்லை. அது கட்டாயம் சொல்லப்பட வேண்டும். எனக்கு ஒரு சந்தோஷம் என்னவென்றால், பத்தண்ணாவும் அரசுவும் சந்திப்பதற்கு நான்தான் காரணமாக இருந்தேன் என்று அரசு சொல்லிக் கொள்வார். அந்தவகையில், சந்தோஷம்.

# 14

***தி.ஞா. : வெகுஜன ஊடகங்களின் பாதிப்பு முனைப்புப் பெற்றிருக்கும் இக்காலகட்டத்தில் ஒரு காத்திரமான எழுத்தாளன் எவ்வாறு தனது எழுத்துப்பணியை முன்னெடுக்கலாம் என்பதைச் சற்று விரிவாகக் கூறுங்கள்?***

**கா.சி. :** உண்மையில் நீங்கள் கேட்கிற கேள்வி, ஆங்கிலத்திலே சொல்வார்கள் Ice berg என்று. வடதுருவத்திலும் தென்துருவத்திலும் உள்ள ஆறுகள் எல்லாம் பனிக்கட்டியாக மாறிவிடும். மேலே ஒரு சின்னத் துண்டுதான் தெரியும். அந்தத் துண்டைப் பார்த்தால் ஒரு சிறிய பனிமலையாகத் தெரியும். உண்மை அப்படியல்ல. கீழே போனால் கடலே உறைந்து பனிக்கட்டியாக மாறியிருப்பதைப் பார்க்கலாம். நீங்கள் என்னைக் கேட்ட கேள்வி அந்த Ice berg உடைய நுனியைப் போன்றது. இன்றைய உலகினுடைய நடைமுறையை நாம் பார்க்கிறபொழுது எங்களுடைய பண்பாட்டு நிலை முற்றாக ஊடகங்களின் செல்வாக்கிற்கு உட்படுவதைக் காண்கிறோம். அந்த ஊடகங்களை ஏதோ ஒரு வகையில் தொற்றிக் கொண்டுதான் நாங்கள் உலகத்தையே தரிசிக்கின்றோம். அவற்றின் மூலம்தான் உணருகிறோம். We feel, We sence, We see the out side through the media. இந்த மூன்றுமே மீடியா மூலம்தான் நடைபெறுகிறது. ஆனால் இந்த மீடியா என்பது எங்களுக்கென்று தனியாக வருவதில்லை. எங்களுக்கு மாத்திரம் உள்ளது அல்ல. இந்த Mass media ஒட்டு மொத்தமாக எல்லோருக்கும் பொதுவானது. அதற்குள்ளேதான் எங்களுடைய தேவைகளும் வருகின்றன. இந்த Mass media என்பது இந்த யுகத்தினுடைய ஒரு வெளிப்பாடு. அது Print மீடியத்தில் வரும். Electronic மீடியாவில் வரும். தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள்,

இப்பொழுது ஓரளவுக்கு Computer க்குள்ளாலும் அது வரத்தொடங்கிவிட்டது. இந்த வெகுஜன ஊடகங்கள் ஒரு திரளுக்காகச் செய்யப்படுபவை. மக்களைத் திரள் நிலையாகப் பார்ப்பவை. தனியொருவருக்காக இல்லாமல் மனிதர்களை அவரவர்களுக்கான தேவைகளுக்கான ஓர் அடிப்படையாகப் பார்த்து நடைபெறும் ஒரு தொடர்பாடல்தான் இந்த Mass media. Mass என்பதற்கு திரள்நிலை தான் நேரடி மொழிபெயர்ப்பு. இதனூடாக எங்களுக்கு ஒரு Mass Culture வருகிறது. இந்த Mass Culture இன் தன்மை என்ன? நாங்கள் பாவிக்கின்ற உடுப்புகள், நாங்கள் பாவிக்கின்ற பொருட்கள், எங்களுடைய கலைகள் இவற்றையெல்லாம் பார்க்கிறபொழுது, அதற்குள் தமிழ்நாட்டுக்குரியது தமிழ்நாடாகவும், சிங்களத்துக்குரியது சிங்களப் பகுதியிலும், குஜராத்திற்குரியது குஜராத்துக்கு உரியது போலவும் அது தெரிந்தாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்பொழுது உலகப் பொதுவான சில விஷயங்கள் இருக்கும். இங்கு உங்களுக்குச் சங்கர் மகாதேவன் பாடுவது போல இருக்கும். ஆனால் உலகப் பொதுவாக மைக்கல் ஜாக்சன் போலவும் இருக்கும். உண்மையில் நீங்கள் பார்ப்பீர்களானால், இந்த மைக்கல் ஜாக்சனுடைய அவதார வடிவங்கள்தான் மற்றவர்கள். அந்தந்தப் பண்பாட்டுக்கேற்ப மைக்கல் ஜாக்சன் வருவார். அந்தந்தப் பண்பாட்டுக்கேற்ப லூ லூ வருவார், Beatles வருவார். இது ரஷ்யா சைனாவைக்கூடப் பாதித்துவிட்டது. உண்மையில் காரணம் என்னவென்றால் முதலாளித்துவத்தின் உலகப் பொதுவான வளர்ச்சி. அந்த முதலாளித்துவம் ஒரு Market Culture ஐ ஏற்படுத்தியிருக்கிறது. அதாவது உலக முதலாளித்துவம் பண்ட உற்பத்தியைச் செய்ய, அந்தப் பண்ட உற்பத்தியின் விற்பனை முக்கியத் துவம் பெற, அந்தச் சந்தைப்படுத்தலைத் தளமாகக்கொண்டு இயங்க, இந்த Globalaisation என்று நாங்கள் பேசிக் கொண்டிருப்பதன் இன்னொரு பரிமாணம், இந்த Market Culture - சந்தைப்படுத்தல் நிலைமை - Market Economy. இந்த Market Economy யினுடைய ஒரு பிரதான அம்சம் Consumer culture. இதிலிருந்து நாங்கள் தப்ப முடியாது. ஆனால் அதேவேளையில் இந்தப் பண்பு அந்தந்தப் பிரதேசத்துக்குரிய பண்பாகவும் வரும். அதனுடன் இணைந்துகொண்டு வரும். இது நடக்கும்பொழுது இதற்கு முன்னர் அல்லது இதனுடன் சேர்ந்து இன்னொரு விஷயமும் நடந்து இருக்கிறது. குறிப்பாகக் காலனித்துவத்தை அனுபவித்த நாடுகளில் உண்மையில் இந்த அரசியல் மாற்றங்கள் ஏற்பட்ட பொழுதுதான் ஒரு ஜனநாயகப்படுகை ஏற்பட்டது. Democratization ஏற்பட்டது. அதுகால வரையில் பேசப்படாதவர்கள், அதுகால வரையில் எழுதப்படாதவை கலை இலக்கியத்துக்குள் வருகின்ற நிலைமை ஏற்பட்டது. முந்திய எழுத்தாளர்கள் வேறு, முந்தி எழுதப்படுபவை வேறு. இப்பொழுது எழுதப்படுவதெல்லாம் வேறு. எங்களுக்குரிய பிரச்சனை

என்னவென்றால், தமிழ் அல்லது இந்திய மொழிகள் அல்லது தென்னாசிய மொழிகள் அல்லது ஆபிரிக்கமொழிகள் என்று வருகிறபொழுது அரசியல் சமூக மாற்றங்கள் காரணமாக ஒரு ஜனநாயகமயப்படுகை, ஒரு அரசியல் மயப்படுகை இவையெல்லாம் ஏற்பட்டு எழுத்துக்கு ஒரு பரந்துபட்ட முக்கியத்துவம் ஏற்படுகின்ற காலகட்டத்தில் அரசியல் போராட்டங்கள், சமூகப் போராட்டங்கள் காரணமாக அந்த எழுத்துக்களுக்கு ஒரு வலுவந்து, அந்த எழுத்துக்கள் சிலவிடயங்களுக்குக் காலாக இருந்த அந்தநிலை ஏற்பட்டுக்கொண்டு போகிற அந்தத் தடத்தில் இப்பொழுது இந்த Mass culture வருகிறது. நீங்கள் இதனைப் பார்க்கிறதானால், தமிழகத்து அல்லது இந்திய அநுபவம் சிறந்த அநுபவமாக இருக்கும். இந்தியாவில் வந்த சஞ்சிகைகள் எல்லாமே சுதந்திரப் போராட்டத்தின் பின் வந்தன. வியாபார நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு நடத்தப்பட்ட ஆனந்தவிகடன் கூட இந்தச் சுதந்திரக் கட்டுக்கோப்புக்குள்ளேதான் நின்றது. சுதந்திரம் கிடைத்தபின்பு என்னமாதிரி என்று தெரியாது. இது ஒரு முக்கியமான பிரச்சனை. நான் அடிக்கடி சொல்வது போன்று, அந்த நிலைமைக்குப் பிறகு வந்ததுதான் குமுதம். அதுக்கு ஒரு Political Goal இல்லை. அது அரசியல் குறிப்புகளைச் சொல்லும். அது அரசியல் அவதானிப்புகளைச் சொல்லும். ஆனால் அது அரசியலுக்காகப்பாடுபடுவது அல்ல. ஆனந்தவிகடன், கல்கி, கலைமகள், பிரசண்டவிகடன், மணிக்கொடி இவையெல்லாம் அப்படியல்ல. இந்திய சுதந்திரப் போராட்டம், காங்கிரஸ், காந்தி என இவையெல்லாம் வரும். இங்கால் சிறுகதை வளர்ச்சி அங்கால் தாயின் மணிக்கொடிபாரீர். Political Goal இருந்தது. இப்போது அது இல்லை. இந்தச் சந்தைப்பண்பாட்டால் படிப்படியாக மாறிவிட்டது. எங்களுக்கு ஒரு இருதலைக்கொள்ளி எறும்பு நிலைமை ஏற்படுகிறது. அதாவது எங்களுடைய பண்பாட்டு ஜனநாயக மேம்பாடு வருகிறது. அரசியல் மயப்பாடு வருகிறது. அதேவேளையில் நவீன மயப்பாடும் வருகிறது. ஒரு புதிய முறைமை வருகிறது. இது தொடங்கி வளர்ந்துகொண்டு போகிற அந்தக்கட்டத்தில் இந்த Market capitalism, இந்த Market Economy ஓர் உலகச் சந்தைக்குப் போகிறதன்மை, அதற்கு உதவுகிற Mass culture வருகிறது. இந்த Mass culture உடைய தன்மை மிக நுண்ணியதாக இங்கு ஆராயப்படவில்லை. அது என்னமாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பற்றி, இந்த முரண்பாட்டைப்பற்றி நாங்கள் இன்னும் சரியாக ஆராயவில்லை. அது இலங்கையைப் பொறுத்த வரையில் பெரும் பிரச்சனையான விடயமாக எங்களுக்கு இருக்கிறது. மற்றைய நாடுகளில் என்ன நடந்தது என்று பார்க்கிற பொழுது, தெளிவாகத் தெரிவது என்னவென்றால், எழுத்து - இதற்குப் பிறகு இலக்கியம் என்கின்ற பேச்சுக்கே இடமில்லை. writings தான். எழுத்துத்தான். அது வருகிறபோது மூன்று நான்கு Stages இல் - படிமுறைகளில் வரும். ஒன்று சகலரும் வாசிப்பது. அந்த வாசிப்பிற்காக

எழுதுவது. அந்த வாசிப்பைப் பயன்படுத்தி வியாபாரத்தை, அந்தச் சந்தைப் பொருளாதாரத்தை மேற்கொண்டு போவது. அது ஒரு வகையான நிலை. அதற்கும் பார்க்கச் சற்று மேலானது அந்த வாசிப்பினூடாக ஓர் அறிவினை வழங்குவது. அது கொஞ்சம் Educative ஆனது. ஓர் அறிவுப்போதனை அதற்குள் இருக்கும். மற்றது இந்த Media technology வந்ததினால் அந்த அந்தத் துறையினர் தாங்கள் தாங்கள் Specialized ஆன ஒரு தொகுதியாக வருகின்ற தன்மை ஒன்று உண்டாகின்றது. இதன்காரணமாக காத்திரமான இலக்கியம், காத்திரமான கலை இவற்றைப் பற்றிப் பேசுபவர்கள் தொகுதிவாரியாக Clusters ஆக பூங்கொத்துகள்போல கொத்தணிகளாக இருப்பார்கள். அது ஒரு Minority culture. எங்களுக்கு இப்பொழுதுதான் இந்தப் பிரச்சனை வருகிறதே தவிர இங்கிலாந்தில் இவையெல்லாம் 40, 50 களிலேயே வந்துவிட்டன. இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்தவுடனேயே வந்துவிட்டது. அங்கே Majour critisism அதுகள் எல்லாம் இன்னொருவகையாக இருந்தன. ஆனால் பொதுவான நாவல்கள் துப்பறியும் கதைகள், சாதாரண கதைகள், பிள்ளைகள் வாசிப்பதற்கான கதைகள் போன்றவை அவற்றைப்பற்றி எழுதப்படுபவை எல்லாம் பிறிதாக இருக்கும்.

எங்களுக்கு வந்த பிரச்சனை என்னவென்றால், எந்தக் கலைமகள் எங்களது நவீன இலக்கிய வளர்ச்சிக்கு காரணமாக இருந்ததோ அந்தக் கலைமகள் இன்று வெறுமனே வாசிப்புக்காக வரத்தொடங்கிவிட்டது. எந்தக் கல்கி, ஆனந்த விகடன் அந்த வளர்சிக்குக் காரணமாக இருந்தனவோ அவை வேறு விதமான எழுத்துக்களைத் தரத்தொடங்கி விட்டன. எழுத்தாளனுடைய பகுதி என்ன, அவனுடைய வகிபாகம் என்னவென்று நீங்கள் கேட்கிறீர்கள். உண்மையில் இவையெல்லாம் மாறிவிட்டன. இந்நிலையில் Specialized ஆக அவரவர்களே அந்தத் தன்மைக்கு ஏற்றவகையில் ஒருங்குசேருகிற ஒரு தன்மை ஏற்படுகின்றது. அது எங்களுக்கும் ஏற்பட்டுவிட்டது. இதனாலேதான் இந்தச் சிற்றிதழ்கள் இலக்கியச் சஞ்சிகைகள் இலக்கியத்துக்கு மாத்திரம் சேவை செய்ய முயல்கின்றன. உங்களுடைய 'ஞானம்' இதற்கு நல்ல உதாரணம். இது யாருக்குக் Cater பண்ணுகிறதென்றால் அந்த வட்டத்திற்குக் Cater பண்ணுகிறது. அந்த வட்டத்திற்கு வெளியில் ஞானம் என்றால் யாரென்று கேட்பார்கள். ஒரு சாதாரண சராசரியான வீட்டுக்கு ஞானம் சஞ்சிகை சென்றால், அந்த ஞானம் பற்றிய ஈடுபாடு உள்ளவர்கள் அந்த வீட்டில் ஓரிருவர்தான் இருப்பார்கள். எல்லோருக்கும் ஞானம் பற்றித் தெரியாமல் இருக்கும். அது அவர்களுக்குத் தேவையானது அல்ல. தினக்குரல் வீரகேசரியை எடுத்துக் கொண்டால், அதற்குள் எல்லோருக்கும் தேவையான எல்லாம் இருக்கும். இந்த நிலைமை எங்களுக்கு வந்ததன் பிறகும் எங்களுக்குச் சிற்றிதழ்களின் வளர்ச்சிகளெல்லாம் வந்து

கொண்டிருக்கின்றன. சில சிற்றிதழ்கள் அங்காலும் இல்லாமல் இங்காலும் இல்லாமல் இருப்பதும் உண்டு. கோமல் சுவாமிநாதன் போன்றவர்கள் கெட்டித்தனமாக அந்த இலக்கிய சஞ்சிகையை ஓர் அகன்ற தளத்திற்குக் கொண்டு சென்றார்கள். அந்த அகன்ற தளத்திற்குச் சென்றபோதும் அது இலக்கியம் பற்றிப் பேசுகிறதாகவும் இருக்கும். அல்லது குமுதம் போன்று Popular ஆன விஷயங்களைச் சொல்லிவிட்டு தீராநதியில் இலக்கியம்பற்றி எழுதுகிறார்கள். குமுதத்துக்குள்ளேயே Specialization இருக்கிறது. அந்த Specializationக்கு உள்ளேயே நீங்கள் இந்த Mass culture இன் தன்மையைப் பார்க்கலாம். சோதிடத்துக்கு ஒன்று, கோயில் கும்பிடுவதற்கு ஒன்று, யந்திரங்கள், ஆஞ்சநேயரை வணங்குவது எப்படி, விஷ்ணுவை வணங்குவது எப்படி என்றெல்லாம் வரும். குமுதத்தில் சினிமா பற்றிய கிசுகிசுக்கள் வரும். எந்தெந்தக் கோயில்களில் என்னென்ன இருக்கின்றன என்றெல்லாம் வரும். பக்தி சஞ்சிகையில் வரும். இவை யாவற்றிற்கும் முதலீடு ஒன்றுதான். ஒரே கொம்பனி இப்படிப் பல்வேறு முறைகளில் Specialize பண்ணுகிறது. இந்த நிலையில் எழுத்தாளன் என்பவன் எல்லாவற்றிற்கும் பொதுவானவனாக இருப்பான் என்று தொடர்ந்து நாங்கள் நம்புவதுதான் பிழை. அது எல்லோருக்கும் புரியப்போவதும் இல்லை. எங்களைப் போன்ற அரசியல் நிலைமை உள்ள நாடுகளில் இதுவொரு மிகப்பெரிய பிரச்சனை. இன்னும் எங்களுக்கு வெகுஜனப் போராட்டங்களை மக்கள் போராட்டங்களை நடத்தவேண்டிய தேவைகள் உள்ள நாங்கள் இந்த வெகுஜனப் பண்பாட்டை எவ்வாறு ஊடறுப்பதற்கு முகம் கொடுப்பது என்பதைப்பற்றி மிக ஆழமாகப் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. ஏனென்றால் இந்தக் Global capitalism உடைய உலகப் பொதுவான பூகோள மயமாக்கும் முதலாளித் துவத்தினுடைய ஓர் அம்சம் என்னவென்றால் அது பூகோளமாகுதல் அகல அகல, விரிய விரிய இன்னுமொன்று நடைபெறுகிறது. என்னவென்றால் அந்தந்தப் பண்பாடுகள் பற்றிய சிரத்தையும் கூடிக்கொண்டே போகிறது. அது அடையாளத்துக்கானது. உலகப் பொதுவான சண்டையும் நடக்கும். சேபியாவிலும் இனச்சண்டை நடக்கும். உலகப் பொதுவான சண்டையும் நடக்கும் பாலஸ்தீனத்திலும் சண்டைநடக்கும். உலகப் பொதுவான பிரச்சனைகள் இருக்கும் சிங்களம், தமிழ், குஜராத்தி, மலையாளம், என்கிற அடையாளங்களும் வரும். இப்போது உள்ள முரண்பாடு என்னவென்றால், உலகப் பொதுவானது அதற்கிடையில் இந்த Cultural Identity. இது இரண்டுக்கு மிடையில் எவ்வாறு இணக்கம் காணுவது? இது மிகவும் ஆழமான பிரச்சனை. தமிழகத்தில் இதனை இலகுவாகக் கண்டுபிடித்து விட்டார்கள். எப்படியென்றால் Serious writings எல்லாம் ஒரு புறத்திலே ஒதுங்கி விடுதல். அதுவும் எவ்வளவு Serious எவ்வளவு Serious இல்லை என்று கோடு கீறமுடியாது. ஜெயகாந்தன் serious

இலிருந்து ஒருபடி விலகினார். அதனால் அவர் பாதிக்கப்பட்டார் என்று சிலர் கூறினார்கள். இல்லையில்லை அவர் இந்தச் Serious ஐ சனங்களுக்குக் கொண்டு சென்றார் என்றார்கள். அந்த Popular level ஆக இருந்தவர்கள் இதற்குள்ளே வந்தார்களோ என்று பார்த்தால் மிகமிகக் குறைவு. பாலகுமாரன் நல்ல எழுத்தாளனாக இருந்து Popular ஆக மாறி திரும்பவும் பழைய நிலைக்கு வருவதற்கு அவரால் முடியவில்லை. இதிலே, இது கறுப்பு இது வெள்ளை என்று சொல்லமுடியாது. கோடு போடமுடியாது. ஆனால் மேலோட்டமாகப் பார்க்கும்போது இந்த வேறுபாடு எங்களுக்குக் காணப்படுகிறது. எழுத்தாளன் இதற்கு என்ன செய்யவேண்டுமென்றால் இரண்டு விஷயங்களை மனதிற் கொள்ளவேண்டும். எழுத்தாளனுக்கு ஒரு Ideology தேவை. அவனுடைய கருத்துநிலை என்ன? நான் ஏன் எழுதுகிறேன்? என்னுடைய எழுத்தினுடைய பயன்பாடு என்ன? நான் ஏன் எழுதாமல் இருக்க முடியாது உள்ளது? என்னுடைய எழுத்தினுடைய இலக்கு என்ன? அதனால் வரப் போகிற சேமலாபங்கள், தேட்டங்கள் என்ன? என்பதைப் பற்றிய ஒரு தெளிவு அவனுக்கு அவசியம். அதனைத்தான் கருத்துநிலை என்கிறோம். அது வந்துவிட்டால் அதற்கேற்ற முறையில் எழுதவேண்டிய முறைமை உண்டு. காதலைப்பற்றி எழுதலாம், ஆனால் கிளுகிளுப்பை ஊட்டுவதற்காகக் காதலைப்பற்றி எழுதமுடியாது. மனிதப் பிரச்சனைகளை எடுத்து ஆராய்வதற்காக காதலைப்பற்றி எழுதலாம். அப்படி எழுதுகிறபோது கூட மிகக்கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் மற்றைய ஊடகங்களோடு சேர்த்துப் பார்க்கிறபோது இதற்குரிய இடமென்ன? உதாரணமாக தொலைக்காட்சியில் பலரும் தொடர் நாடகங்களைப் பார்க்கிறார்கள். யார் யார் பத்துவருடங்களுக்கு முன்னர் ஆனந்தவிகடன் கல்கியில் உள்ள தொடர்கதைகளை வாராவாரம் விழுந்தடித்து வாசித்தார்களோ அவர்கள் இன்று தினமும் இந்தத் தொலைக்காட்சி நாடகங்களைப் பார்க்கிறார்கள். ஊடகம் மாறிவிட்டது. நாங்கள் வாழ்க்கையைப் பார்க்கிற முறைமையும் மாறிவிட்டது. இந்தத் தொலைக்காட்சித் தொடர்கள் எங்களுடைய வாழ்க்கையில் ஒரு சமகால உண்மையைக் காட்டுகின்றன. என்னவென்றால் வாழ்க்கையை முழுமையாகப் பார்க்கிற தன்மையை நாங்கள் படிப்படியாக இழந்துகொண்டு வருகின்றோம். நாங்கள் வாழ்க்கையைக் காட்சிகள் காட்சிகளாகச் சம்பவம் சம்பவமாகப் பார்க்கிறோம். அத்தோடு சேர்ந்து நாங்கள் போகிறோமே தவிர அது ஏன் அப்படிப் போகிறது என்பதைப் பார்ப்பதில்லை. உதாரணமாக 'அண்ணாமலை' தொலைக்காட்சி நாடகத்தை எடுத்துக் கொண்டால், அது நாவலாக இருந்தால் அதனை ஒருவரும் வாசிக்கமாட்டார்கள். ஏனென்றால் அண்ணாமலையின் கதை தொடங்கியது எங்கேயோ. அது இப்போது போவது எங்கேயோ. தொலைக்காட்சி ஊடகத்தில் உள்ள ஒரு குணம் என்னவென்றால், அதனை முறுக்கி ஒரு சனலில் விட்டுவிட்டு

அதிலே என்ன வருகிறதோ அதனை நாங்கள் பார்த்துக் கொண்டிருப்போம். We just watch it. இரண்டு நிமிடங்கள் பார்த்த பின்னர் ஏன் அதனை மாற்றுவான் அப்படியே இருக்கட்டுமன் என்று விட்டு விடுவோம். That is psychology of television. என்னுடைய மகள் வேறுமாதிரிச் செய்வாள். விளம்பரங்கள் வரும்போது அவை தேவையற்றவை என்று சொல்லி சனல்களை மாற்றி மாற்றி நான்கு நாடகங்களை ஒரேதடவையில் பார்ப்பாள். நாடகம் பார்ப்பதானால் ஒருநாடகத்தை அல்லவா பார்க்க வேண்டும். இதில் முக்கியம் என்னவென்றால் Patern is the same. இதற்குள் ஒரு Serious ஆன ஒன்று வரவேண்டுமானால் எப்படிவரும்? இது என்னவென்றால் வாழ்க்கையை அப்படிக் காட்டிவிட்டு ஒரு ஓரத்துக்குக் கொண்டுவந்து விட்டுவிடுதல். இன்றைய வாழ்க்கையே அப்படித்தான். இன்றைய வாழ்க்கை துண்டாடப்பட்ட Fragmented life. உதாரணமாக நீங்கள் ஒரு தனிவீட்டில் அதற்குரிய காணியோடு இருக்கிற அந்த வாழ்க்கை இருக்கிறது. ஆனால் தொடர் மாடிகளில் இருக்கும்போது வேறு விதமான வாழ்க்கை. தொடர் மாடிக்குள் நீங்கள் இருக்கிறீர்கள். அது உங்களுடைய வீடுதான். ஆனால் கதவைத் திறந்தவுடன் அந்தத் தொடர்மாடி உங்களுடைய வீடல்ல. இந்த Sence of privacy and sence of Publicness அதற்குள் நான் எங்கே இருக்கிறேன் என்ற நிலைமை இருக்கிறதல்லவா. இது வாழ்க்கை முழுவதிலும் தெரியும். Culture முழுவதிலேயும் தெரியும். இதனை நாங்கள் நிறுத்தவியலாது.

அதிஷ்டவசமாக எங்களுக்கு 60களில், 70களில், இருந்த அரசியல் போக்கு அதற்கான எழுத்துக்களுடைய திசைமுகம் பற்றிய ஒரு விமர்சனம் இருந்தது. இப்போது அது இல்லை. இப்பொழுது அப்படிச் செய்யவியலாது. அது சிங்களத்திலும் இல்லை. குஜராத்திக்கும் இல்லை. மிகவும் Strong ஆக வளர்ந்த மலையாளத்திலே கூட இல்லை. ஏனென்றால் Mass Culture உடைய தாக்கம் அப்படி. மிக நல்ல படங்கள் வருகிற மலையாளத்திலே இப்பொழுது மிகவும் மோசமான செக்ஸ் படங்கள் வருகின்றன. மூன்றாவது உலக நாடுகளில் குறிப்பாகக் காலனித்துவ நாடுகளில் Mass culture ஏற்படுத்தியுள்ள தாக்கம் இது. இதற்கு நாங்கள் முகம் கொடுக்கிறபொழுது காத்திரமான இலக்கியம் ஒரு புறமாகவும், காத்திரம் அல்லாதவை வெறும் வாசிப்புக்கானவை ஒன்றாகவும், இடைநடுவில் உள்ளவற்றை ஒரு வகையாகவும் பார்க்கவேண்டும். இதைப்பற்றிய ஒரு கவனம், இதைப்பற்றிய ஒரு வழிநடத்துகை கட்டாயமாகத் தேவை. ஆனால் அப்படியான ஒரு வழிநடத்துகையை இன்றைக்குள்ள பத்திரிகை அமைப்பு தாங்காது. வீரகேசரி, தினகரனை எடுத்துக் கொண்டீர்களானால் இந்த வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளின் வரலாறு தான் எங்களுடைய ஈழத்து இலக்கிய வரலாறு. ஆனால் கடந்த

பத்து வருடகால வரலாற்றை எழுத முற்படுகிறவருக்கு எண்பதுகளுக்குப் பிற்பாடு வருகிற இலக்கிய வரலாற்றை எழுதுகிறவர் ஞாயிறு தினகரனையும் ஞாயிறு வீரகேசரியையும் வைத்து எழுத இயலாது. ஏனென்றால், அரசியல் மாற்றங்கள் கொழும்பை மையமாகக் கொண்டது என்பது ஒரு புறம். மற்றது அவை Mass culture இன் பாதிப்புகளுக்கு ஆளாகிவிட்டன. இவை பற்றிய ஆராய்ச்சிகள் எதுவும் நடைபெறவில்லை. இந்த வளர்ச்சிகளை மாணவர்கள் விளங்கிக் கொள்கிற முறைமையில் எங்களுடைய கற்பித்தல் முறைகளும் சரியாக அமையவில்லை. அதுவும் ஒரு சிக்கல். இரசனை முறை மாறி விட்டது, பார்க்கிறமுறை மாறிவிட்டது. இதன்காரணமாக இலக்கியத்தை எவ்வாறு அணுக வேண்டும் என்கிற கற்பித்தல் முறைமைகளில் குறிப்பாக இலக்கிய விமர்சன முறைமைகளில் சில மாற்றங்கள் ஏற்பட வேண்டும். துரதிஷ்டவசமாக அவை இன்னும் எற்படவில்லை.

நான் நம்புகிறேன், நாங்கள் இப்போது Mass culture க்குள் இருக்கிறோம். நாங்கள் எழுதுவதில் Message சம்பந்தமான சிக்கல்கள் இருக்கின்றன என்ற அந்தப் பிரச்சனையை நாங்கள் உணருகிறதிலேயே எங்களுக்கு ஒரு சந்தோஷம். நாங்கள் உணர்ந்து கொள்கிறோம் என்ற சந்தோஷம். மார்க்ஸியச் சொற்களைப் பயன்படுத்திச் சொல்வதானால், இப்போது மேலோங்கி இருப்பது பொது மக்களால் நிறைய வாசிக்கப்படுகிற இலக்கியமே தவிர ஒரு மக்கள் இலக்கியம் அல்ல. It is not peoples' literature. It is populist literature. சனவிருப்பமான இலக்கியமே தவிர மக்கள் இலக்கியம் அல்ல. இப்போது அது Mass இலக்கியமாக மாறிவிட்டது. People என்பது மக்களுடைய அரசியல் சமூக Identity உடன்தான் அந்தச் சொல் வருகிறது. என்று மார்க்ஸ் சொல்லியிருக்கிறார். இப்போது இருப்பது Mass தான்.

நீங்கள் குமுதம், ஆனந்த விகடனில் வரும் சிறுகதைகளைப் பாருங்கள். வெகு சுவாரஸ்யமாக இருக்கும். சிறுசிறு கதைகளாக அவை யாரையும் குறிப்பதில்லை. வாசிக்கும்போது ஒரு சந்தோஷம். அவ்வளவுதான். இந்த நிலைமை வந்துவிட்டது. இது தவிர்க்க முடியாதது. இதனை எவ்வாறு புரிந்துகொள்வது என்பதுதான் பிரச்சனை. இங்கிலாந்து அமெரிக்காவில் இது பிரச்சினையல்ல. இங்குதான் பிரச்சனை. ஏனென்றால் சுதந்திரகாலத்தில் எழுதியவர்கள், அரசியல் போராட்ட காலத்திலே எழுதியவர்கள் இப்போது இந்த வெகுஜனப் பத்திரிகைகளுக்கு எழுதுகிற முறையில் வித்தியாசம் இருக்கிறது. அந்த வெகுஜனப் பத்திரிகைகளுக்கூடாகப் போராடுகிறபோது இருக்கிறது. இதனால், இது பற்றி எவ்வாறு கணிப்பீடு செய்வது, மதிப்பீடு செய்வது பற்றிய பிரச்சனை

எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. உண்மையில் நீங்கள் உங்களது ஞானம் போன்ற இலக்கிய சஞ்சிகையில் இந்த விஷயம் பற்றி விமர்சனக் கட்டுரைகளைப் பலரையும்கொண்டு எழுதுவித்தால் பிரயோசனமாக இருக்கும். இன்றைய இலக்கியச் சந்தைகளினுடைய தன்மைகள் என்ன? இலக்கு வாசகர் யார்? அந்தமாதிரியான கேள்விகளை எழுப்பவேண்டும். இதில் எல்லோரும் பங்குபற்றுகிற முறையிலே செய்யவேண்டும். ஏனென்றால், என்னுடைய அபிப்பிராயப்படி இது இனிமேலும் உணரப்படாமல் போகலாம். உண்மையில் இது எங்களுடைய கற்பித்தல் முறையிலே வந்து மாணவர்களுக்குப் போகிறபோதுதான் அது சரியானமுறையில் வரும்.

மற்றது எழுத்தாளன் தான் எழுதியதைப் புத்தகமாகப் போட்டு விடுவதற்கு ஆசைப்படுகிறானே தவிர அந்தப் புத்தகம் எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்பதைப்பற்றிச் சிந்திப்பதில்லை. இதிலே இன்னொரு விஷயம் இருக்கிறது. இலக்கிய உற்பத்திக்கான தொழில்நுட்பம் மாறிவிட்டது. யாரும் விரும்பினால் ஒரு புத்தகம் போடலாம். D.T.Pயில் புத்தகம் போடுவது பெரிய கஷ்டமில்லை. ஒரு நூறு அல்லது நூற்றைம்பது பிரதிகளைப் போட்டு நண்பர்களுக்கு அனுப்பிவிட்டு சந்தோஷம் அடையலாம். Book என்கிற Concept இன்று Devalued ஆகிறது. வித்தியாசப்படுகிறது. இந்த மாற்றங்கள் எல்லாவற்றையும் நாங்கள் நோக்கவேண்டும்.

இந்த விடயங்கள் பற்றி மேற்கு நாடுகளிலே பலர் ஆராய்ந் திருக்கிறார்கள். தமிழகத்திலே இந்த ஆய்வு ஒரு நுட்பமான முறையைப்பெறவில்லை. ஈழத்திலே அந்த வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால் தொடர்ந்தும் சமூக அரசியல் போராட்டங்கள் இன்னும் எங்களுக்கு இருக்கின்றன. அந்த அரசியல் போராட்டங்களோடு இதனை நாங்கள் சேர்த்துப் பார்க்கவேண்டும்.

இலங்கையில் தமிழ் எழுத்துக்கள் சம்பந்தமாக படிப்படியாக ஏற்பட்டுவருகிற நிலைப்பாட்டைப் பாருங்கள். பத்து வருடங்களுக்கு முதல் வந்த எழுத்துக்கள் எழுத்தாளர்கள் எழுதியவை. தங்களை எழுத்தாளர்களாக இனங்கண்டவர்களே எழுதியவை. அண்மைக் காலத்தினுடைய கண்டு பிடிப்புகளான ரஞ்சகுமார் அல்லது திருக்கோவிலூர் யுவன் போன்றவர்கள் எழுதுகிறார்கள். புதுக்கவிஞர்கள் பலர் வந்திருக்கிறார்கள். எழுத்தினுடைய நேர்மையைப் பார்க்கிறதுக்குப் பொதுவான எழுத்துலகத்துக்குள் மாத்திரமல்லாமல், பலர் போராளிகளாக இருக்கிறார்கள். இதிலும் பெண்கள் கூடுதலாக இருக்கிறார்கள்.

எழுத்தினுடைய நேர்மை, அது போகிற தன்மை போன்றவற்றிற்கெல்லாம் எழுத்தின் தன்மை மிகவும் Specialized ஆகிக்கொண்டு வருகிறது. இப்போது வருகின்ற கவிதைகள் பலவற்றில் அல்லது பெரும்பாலான நாவல்களில் போராட்டம் ஒரு பின்புலமாகத்ததான் வருகிறது. அம்புலி என்கிற பெண்ணுடைய கவிதைத்தொகுதியில் அந்தப் பெண்ணினுடைய இருப்பு - துவக்கையும் பிடித்துக்கொண்டு அந்த இடத்தில் இருக்கும்போது, தான் ஒரு பெண் என்று உணரும்போது அவளுக்கு ஏற்படும் உணர்வுகள்தான் எத்தகையன என்பது தெரிகிறது. இப்பொழுது எழுத்தாளர் என்பவர் யார்? அவள் அல்லது அவன் யார்? அந்த எழுத்தாளரது அநுபவங்கள் என்ன? இவற்றை நாங்கள் வெறுமனே தூக்கியெறிய இயலாது. அங்கு வந்திருக்கிற கவிதைகள் எல்லாவற்றையும் வெறும் பிரச்சாரம் என்று தூக்கியெறிய இயலாது. நான் ஒரு விமர்சகனாக நின்று பார்க்கிறேன். இதற்குச் சார்பாக வருவதையும் எதிராக வருவதையும் நான் சொல்கிறேன். அந்த அநுபவத்தினுடைய உண்மைத்தன்மை நேர்மை பேணப்படவேண்டும். அவற்றை யார் யார் உணர முடிகிறது, யார் யாரால் உணர முடியவில்லை என்பது முக்கியமானது. Mass cluture இல் முக்கியத்துவம் என்னவென்றால் அது எல்லோருக்கும் விளங்குகிறமாதிரி, எல்லாரையும் தொடுகிறமாதிரி இருக்கும். இதற்கு நல்ல உதாரணம், சினிமாக் கவிதைகள். வரைவிலக்கணத்தின்படி சினிமாவில் வருவது கவிதையாக இருக்கமுடியாது. அது ஒரு குறிப்பிட்ட Situation னுக்காக எழுதப்படுகிற விஷயம். இருப்பினும் அது எல்லோருக்கும் பொதுவான அநுபவங்களைச் சொல்வதுபோல் இருக்கும். ஆனால் அது மேலோட்ட மானதுதான். ஆழமாகப் போவதில்லை. அநுபவம் இல்லாமல் எழுதவியலாது. Mass cluture க்குள் போவதென்பது, சிங்களத்தில் சொல்வதுபோல் 'பொலொங் கத்தாவ' போல சும்மா அதனைச் செய்யவியலாது. துரதிஷ்டவசமாக இந்த பொலொங்கத்தாவவுக்குத் தமிழ்ப்பதம் இல்லை. பொலங்கத்தாவ என்பது Calf love என்று ஆங்கிலத்தில் சொல்வதைப் போன்றது. விடலைக் காதல். ஓர் இளைஞன் யுவதிக்கு இடையே அவர்களுக்கு மாத்திரம் தெரிந்த விடயங்களைப் பாட்டாகப் போட்டவுடன் அதனை எல்லோரும் கேட்கிறார்களே என்ற உணர்வேயில்லாமல் நாங்களும் கேட்கிறோம். Mass cluture என்ன செய்கிறதென்றால் அது ஒரு பொதுப்படையான தன்மையை ஏற்படுத்துகிறது. எங்களுடைய அந்தரங்கங்களை இல்லாமல் செய்கிறது. அது எங்களுடைய மனித ஆளுமைகளை அரித்துக் கொண்டுவருகிறது. ஒரு Mass cluture எழுத்தாளனாக இருப்பதென்பது இலேசுப்பட்ட காரியமல்ல. அதுக்கொரு திறமைவேண்டும். ஏனெனில் அவனது எழுத்தை வாசித்து முடித்தவுடன், வாசகனுக்கு தான் ஏதோ வாழ்க்கையைப் பற்றி வாசித்தமாதிரி இருக்கவும் வேண்டும். ஆனால்

அந்த வாசிப்பு வாசகனை ஆழமாகவும் பாதிக்கவுங் கூடாது. ஆழமாகப்பாதிக்குமென்றால் அவன் அதனை வாசிக்கமாட்டான். நீங்கள் சமீபத்தில் அவுஸ்திரேலியாவுக்குப் போகிறபோது பார்த்திருப்பீர்கள். எத்தனையோ பேர் சிங்கப்பூரில் ஒரு நாவலை வாங்கி வாசித்துவிட்டு சிட்னியில் இறங்கும்போது அதனை இருக்கையிலேயே விட்டுவிட்டுப் போவார்கள். ஒரு காலத்தில் நான் இப்படி விடப்பட்ட நாவல்களை எடுத்து எனது பையில் போட்டுக் கொண்டு வருவது வழக்கம். இதைப்பார்த்து என்மனைவி என்னை ஏசுவார். ஆனால் இப்போது நானும் சிலவேளைகளில் நாவல்களை அப்படி வாசித்துவிட்டு இருக்கையிலேயே விட்டுவிட்டு இறங்கிவிடுறேன். வாசிப்பு மரபு மாறிவிட்டது. இதுகளைப் பற்றி ஆழமான ஒரு ஆய்வு தமிழுக்கு இன்னும் வரவில்லை. இதனாலேதான் எழுத்தாளனை ஒரு பெரிய Personality ஆக, பழைய புலவனுக்குரிய ஒரு Personality உடன் இணைத்துப் பார்க்கிறோம். இப்போது எழுத்தாளனே மாறிவிட்டான். அவனுடைய சந்தை மாறிவிட்டது. அவனுடைய நோக்கு மாறிவிட்டது. ஆனால் அதேவேளையில் எங்களுடைய நாடு இருக்கிற நிலையில் இந்தப் பின்காலனித்துவ சமூகம் இருக்கிறவரையில் எங்களுக்குப் பிரச்சினைகளும் இருக்கும். இதற்குள் இதனை எப்படி Balance பண்ணுவதென்பதுதான் பிரச்சினை. பிரான்ஸ், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் எழுதுகிறவர்களுக்கு அந்தப்பிரிவு மிகவும் சுலபமானது. அங்காலும் இங்காலும் போகலாம். நடுவிலே ஒரு கோடுபோடலாம். அதாவது இது populist literature என்றும் இது Serious literature என்றும் பிரிகோடு போடலாம். ஆனால் இங்கு எங்களுக்கு ஒரு கோடுகீற இயலாது. எங்களுடைய politics மாறவில்லை. எங்கள் சமூகம் மாறவில்லை. அதனாலேதான் இந்தச் சோகம் எங்களுக்கு ஏற்பட்டது. ஒருபக்கத்திலே Mass cluture வந்துகொண்டே இருக்கிறது. இன்னொரு பக்கத்திலே எங்களுடைய வாழ்க்கை மாறாது இருக்கிறது. தமிழ் சினிமாவைப் பாருங்கள். அது மாற்றம் அடைந்து வருகிறது. Title தமிழிலே போடுவதில்லையே. Youth cluture க்கு அவர்கள் Cater பண்ணி தமிழிலே Title போடுவதில்லை. இந்த Mass cluture பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி வைத்திருக்கிறது என்பதை நாங்கள் விளங்கிக் கொள்ளவேண்டும். அது ஒரேநேரத்தில் இப்படியான கதைகளையும் தரும்; ஒரு கோயில் இயந்திரத்தையும் போட்டுத்தரும். இதனைச் சரியாகப் புரியவில்லை என்றால் பிரச்சினைதான். எழுத்தாளன் ஒரு மாறாத Personality என்று நினைக்காதீர்கள். அவன் மாறிவிட்டான். அவனது எழுத்து மாறிவிட்டது. எல்லாமே மாறிவிட்டன.

தி.ஞா.: **அப்படியானால் விமர்சகர்களுடைய பார்வையிலும் இத்தகைய அம்சங்களை உள்வாங்கிய தன்மை இருக்க வேண்டுமல்லவா? அப்படி**

**இருக்கிறதா?**

**கா.சி. :** துரஷ்டவசமாக இந்த நடைமுறைகள் எல்லாவற்றையும் விளங்கிக் கொண்டதற்கான அல்லது இவற்றைத் தமிழ் நிலைப்படுத்தி ஆராய்வதற்கான விமர்சனங்கள் எதுவும் அண்மையில் வந்ததாக எனக்குத் தெரியவில்லை; வந்திருக்கலாம். காலச்சுவடு போன்ற சஞ்சிகைகளிலே வந்ததோ தெரியாது. ஆனால் இந்த மாதிரியான ஒரு விமர்சன முறைமை வராமல் இவற்றை நாங்கள் புரிந்துகொள்ள இலயாது. Post modernism என்று சொல்லுகிறோம். அது முடிந்து வெகுகாலமாகிறது. Post modernism is dead. நாங்கள் அதிலேதான் நின்றுகொண்டு பார்க்கிறோமே தவிர இந்த மாற்றங்களுக்கூடாகத்தான் இதனைப் பார்க்கவேண்டும் என்ற நிலைமைக்கு நாங்கள் வரவில்லை. நீங்கள் கேட்ட கேள்வி ரெம்ப ஆழமான கேள்வி. Ice burg என்று நான் ஆரம்பத்தில் கூறியதுபோல அந்தப் பனிக்கட்டி அப்படியே இருக்கிறது. நாங்கள் அதை உணரவில்லை. Ice berg இல் உள்ள தன்மை என்னவென்றால் கடலிலே போகிறவர்களுக்குத்தான் அது தெரியும். மேலே தெரிகிறமுனைதானே அது என்ற நினைத்து பாரிய கப்பல்கள் போய் அதிலே மோதி உடைந்துபோன சந்தர்ப்பங்களும் உள்ளன. இந்த Mass cluture என்ற Ice berg இல் எங்களுடைய வாழ்க்கை என்கிற கப்பல் உடைகிறதற்கான ஆபத்து உண்டு. அது பற்றிய ஒரு தெளிவினை, எடுத்துக்கொடுக்க வேண்டிய தேவை நிச்சயமாக இன்றைய விமர்சகர்களுக்கு உண்டு.

❑ ❑ ❑

# 15

***தி.ஞா. : பொது வாழ்க்கையில் நீங்கள் செய்த பங்களிப்பு, கலை இலக்கிய உலகில் உங்களுடைய ஆளுமை வளர்ச்சிக்கு எவ்வாறு உதவியது?***

**கா.சி. :** நான் சிறுவயதிலிருந்து அரசியலில் ஆர்வம் கொண்டவன். மார்க்ஸியத்தில் ஆர்வம் கொண்டவன். மார்க்ஸியத்தில் ஆர்வம் கொள்வது என்பது அரசியலில் ஆர்வம் கொள்வதற்கு ஒரு வாயிலாக அமைகின்ற ஒரு விடயம். மார்க்ஸிய இலக்கியம் முற்போக்கு இலக்கியத் தடங்கள் காரணமாக நான் கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்து தொழிற்பட்டிருக்கிறேன். கட்சி அங்கத்தவனாக இருக்கும் அளவுக்குத் தொழிற்பட்டிருக்கின்றேன். அந்த அம்சங்களையெல்லாம் என்னுடைய பொது வாழ்க்கையின் அம்சமென்று கொள்ளக்கூடாது. ஏனென்றால் அது என்னுடைய கருத்துநிலை சம்பந்தமான விடயங்கள். அது எனக்கு நான் விதித்துக் கொள்கின்ற ஒரு Discipline என்றுகூடச் சொல்லலாம். எனவே அந்த Discipline படி பல காரியங்களை அரசியல் நிலையிலே பார்த்துக் கொண்டு வந்தேன். கால ஓட்டம் மாறுவதும் அந்த ஓட்டங்களுக்கு ஏற்ப சமூக அரசியல் பார்வைகள் மாறவேண்டும் என்பதும்கூட மார்க்ஸியத்தினுடைய ஓர் அடிப்படையான தன்மை. எனவே அந்த மார்க்ஸியக் கண்ணோட்டத்தில் ஆழமாகப் போகப் போக மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை நான் பார்த்து என்னுடைய கண்ணோட்டங்களில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளேன். இது ஒரு புறம் இருக்க, இந்த அரசியல் ஈடுபாடுகள் 1956 இலிருந்து 1965வரையும் ஒரு தன்மையினதாகவும் 1970இல் இருந்து 1982 வரை இன்னொரு தன்மையினதாகவும் என்னுடைய வாழ்க்கையிலேயே அமைந்ததுண்டு. 1956 தொடக்கம் 1967, 68 வரையில் நான் சாஹிராக்

கல்லூரி ஆசிரியனாகவும் பாராளுமன்றத்தின் சமநேர மொழி பெயர்ப்பாளனாகவும் வித்தியோதயாவில் உதவி விரிவுரையாளனாகவும் இருந்தேன். அந்தக் காலகட்டத்தில் நான் ஒரு ஒட்டு மொத்தமான, கொம்யூனிஸ்ட் கட்சியின் பொது நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டிருந்தேன். 72 இன் பின்னர் குறிப்பாக நண்பர் ஞானாவினுடைய உந்துதல், அவருடைய வேண்டுதல், அவருடன் இணைந்து தொழிற்பட்டமை காரணமாக இலக்கியத்தோடு மட்டும் நில்லாமல் அதற்கு மேலேயும் போய் இலக்கியம் சார்ந்த துறைகளில், அரசியல் கொள்கைகளை வளர்ப்பதற்கு குறிப்பாக ஒலிபரப்புத்துறையில் வளர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தேன். ஞானா ஓர் அற்புதமான நண்பர். நான் அவருடைய நட்பையும் அவருடைய நல்ல குணங்களையும் என்றும் மதிப்பவன். 78 இல் நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றேன். அங்குள்ள நிலைமைகளைப் பார்க்கின்றபோது நிலைமை சற்று வித்தியாசமாக இருந்தது. இருந்தாலும் நான் தொடர்ந்தும் பொதுவுடைமைக் கட்சிக் கண்ணோட்டத்துடனேயே வாழ்ந்து கொண்டிருந்தேன். 82 இன் பின்னர் நிலைமை சற்று மாறுகிறது. குறிப்பாக 83 இலிருந்து இலங்கையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் 83 இல் அவர்கள் இலங்கையின் மற்றப் பகுதிகளிலிருந்து வடகிழக்கிற்கு அனுப்பப்பட்டார்களே தவிர, வடகிழக்கில் அவர்களது இருப்புக்குப் பிரச்சனை ஏற்படத் தொடங்கியது 84 இலேதான் அது ஒரு முக்கியமான அம்சம். 84இல் இருந்து அங்குள்ள இளைஞர் எழுச்சிகள் காரணமாக வடகிழக்கிலுள்ள சாதாரண மக்களுடைய வாழ்க்கைக்கான அச்சுறுத்தல்கள் பல ஏற்பட்டன. அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டு தமிழ் எம். பி. க்களுக்குப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இல்லாத ஒரு நிலைமை ஏற்பட்டது. அதனை ஆறாவது சட்ட மூலத்திருத்தம் என்று சொல்லுவார்கள். அதன் பிறகு ஓர் இடைவெளி, வெற்றுநிலை ஏற்பட்டது. இதற்காகச் சிலர் 'பிரஜைக் குழு' என்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தினார்கள். அது முதலிலே யாழ்ப்பாணத்திலேதான் ஏற்பட்டது. நான் 83,84 இலே கேம்பிறிட்ஜ்க்குச் சென்றுவிட்டு திரும்பி வந்தபோது இந்தப் பிரஜைகள் குழுக்கள் யாழ்ப்பாணத்தில் எல்லாப் பகுதிகளிலும் ஏற்பட்டிருந்தன. வல்வெட்டித்துறையில் ஒரு பிரஜைகள் குழு தோற்றுவிக்கப்பட வேண்டும் எனவும் அதற்கு நான் தலைமை தாங்க வேண்டும் எனவும் அங்குள்ள ஊரவர்கள் விரும்பினார்கள். அதனை நான் மறுக்கமுடியாத நிலையில் ஏற்றுக் கொண்டேன். அதன்பின்பு யாழ்ப்பாணத்திலுள்ள பிரஜைகள் குழுவோடு தொடர்புகள் கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டது. அப்போது ஆர். பாலசுப்பிரமணியம், அருமைநாயகம் போன்றவர்களோடு மிக நெருங்கிய உறவு ஏற்பட்டது. பாலா மிக நல்ல மனிதர். அற்புதமான மனிதர். அருமைநாயகம் எதற்கும் படபடப்பில்லாமல் எதனையும் ஆறுதலாகப் பார்க்கின்ற

தன்மையுள்ளவர். இவர்களோடு சேர்ந்து வேலை செய்யவேண்டிய ஒரு தேவை ஏற்பட்டது. இந்தப் பிரஜைகள் குழு என்பது அக்காலத்தில் உள்ளூர் மட்டத்திலேயோ அல்லது மத்திய அரசு மட்டத்திலேயோ தமிழ் மக்களுக்கு எந்தவிதமான பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில், மக்கள்படுகின்ற கஷ்டங்களை எடுத்துச் சொல்வதற்கு ஏற்படுத்தப்பட்ட அமைப்பு, அக்காலத்தில் அரசாங்க அதிபருக்குக் கூட ஓர் உத்தியோக பூர்வமான ஒரு நிறுவன அமைப்பு இருக்கவில்லை. குறிப்பாகப் படைகளுக்குப் பொறுப்பாகவுள்ள தளபதியிடம் அல்லது ஆணைக்கு உரியவரிடம் சென்று இன்ன இன்ன இடங்களில் பிரச்சனைகள் இருக்கின்றன என்று சொல்லவேண்டிய தேவை இருந்தது. அந்த நேரத்தில் வல்வெட்டித்துறைப் பகுதிக் கடற்கரை ஓரம் மிகமிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. அப்போது பருத்தித்துறையில் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கமும் வல்வெட்டித்துறையில் நானும் இருந்தோம். அப்போது கிழக்கிலும்பல பிரச்சனைகள் தோன்றியபோது பிரஜைகள் குழு ஒன்றியம் ஒன்றினைத் தோற்றுவிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. பாலசுப்பிரமணியம்தான் அதனை முன்னின்று செய்தார். அவ்வாறு செய்தபொழுது, அந்தப் பிரஜைகள் குழுவின் ஒன்றியத்திற்கு என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். அந்த நிலையில் நாங்கள் யாழ்ப்பாணத்திற்குள்ளே மாத்திரமல்லாமல், மட்டக்களப்புக்குச் சென்று அங்குள்ளவர்களோடு பேசி நிலைமைகளை ஆமிக்காரருக்குச் சொல்வதுடன் அரசமட்டத்திலும் எடுத்துச் சொல்லவேண்டிய நிலைமை இருந்தது. 86 வரையில் அந்த நிலைமை இருந்தது. இந்தக் காலகட்டம் மிகவும் முக்கியமான காலகட்டம் ஏனென்றால் அப்போதுதான் போர் மிகமோசமாக வளர்ந்து, அரசாங்கம் ஒரு யுத்தத்தை எதிர் நோக்குகின்ற நிலைமைக்கு வந்திருந்தது. உள்ளூர் யுத்தம் என அதனை ஏற்கவேண்டிய நிலைமை அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. இதனுடைய ஒரு வெளிப்பாடுதான் 1985 இல் நடந்த திம்பு மகாநாடு. இந்தக் காலகட்டத்திலேதான் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று செய்து அதற்கென உள்ளூரில் உள்ளவர்களைக் கொண்டே ஒரு கண்காணிப்புக் குழு ஒன்றை நியமித்திருந்தார்கள். அது ஆறேழு மாதங்கள்தான் தொழிற்பட்டது. திம்பு மகாநாட்டிற்குச் சற்று முன்னர்தான் அதனைச் செய்திருந்தார்கள். அதிலே பிரஜைகள் குழுவில் அங்கத்துவம் வகிக்கின்றவர்கள் என்றவகையில், திருகோணமலை இந்துக் கல்லூரியில் முன்பு அதிபராக இருந்த, திரு. சிவபாலனும் நானும் தெரிவு செய்யப்பட்டோம். இதனை ஏற்பதா விடுவதா என்பது பற்றியெல்லாம் சிக்கல்கள் இருந்தன. ஆனால் அந்தக் காலகட்டத்தில் பிரஜைகளினுடைய தேவைகள் குறித்தும் இளைஞர் இயக்கங்களுடன் நாங்கள் தொடர்பு வைத்திருந்தோம். இவர்கள், இதனை நாங்கள் ஏற்பதே சரியென்று கூறினார்கள். இந்தப் பிரஜைகள்குழு மட்டத்தில் என்னுடைய மக்கட் பொதுநிலை நடவடிக்கைகள்

மிகமுக்கியமானவை என்று கருதுகின்றேன். ஒன்று படையினரால் இழைக்கப்படும் குற்றங்களுக்கு ஏதாவது ஒரு மாற்றுவழி காணவேண்டும் என்று அவர்களுடைய தளபதிகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய தேவையிருந்தது. குறிப்பாக ஆட்கள் காணாமல் போகும்போது படையினரிடம் சென்று அவர்களிடம் காணாமல் போனவர்கள் பற்றிக் கேட்க வேண்டியிருந்தது. அது நெருடலான பிரச்சனையாகச் சிலவேளைகளில் இருக்கும். நாங்கள் நடந்து போகும்போது கைகளை உயர்த்தியபடி அரை மைல் தூரம் செல்லவேண்டியிருக்கும். அந்த முறையிலேதான் பாதுகாப்பு நிலை ஆமிக்காம்ப்பில் இருக்கும். அது மிகவும் Tension க்கு உரிய விடயம். மற்றது கொழும்புக்கு நாங்கள் சென்று அங்குள்ள உயர்மட்ட அரசியல் தலைவர்களைச் சந்தித்து சில விடயங்களைச் சொல்ல வேண்டியிருந்தது. அதற்கு நான், பாலா, அருமைநாயகம், குணரட்ணம் போன்றவர்கள் அந்தக் குழுவிலே இருந்தோம். நாங்கள் பிரேமதாஸ, ஜே. ஆர். ஜயவர்த்தனா போன்றவர்களைச் சந்தித்தோம். லலித் அத்துலத்முதலியைச் சந்திக்கவில்லை. இடதுசாரிக் கட்சியில் உள்ளவர்கள், S. L. M. P. யில் உள்ளவர்கள் ஆகியோரையும் சந்தித்தோம். பிரேமதாஸாவைச் சந்தித்தபோது அவர் சொன்னார், இது சம்பந்தமாக நீங்கள் கட்டாயம் ஜே. ஆர். ஜயவர்த்தனாவைச் சந்திக்க வேண்டும் என்று. அதற்கு அவர் ஒழுங்கு செய்தும் தந்தார். நாங்கள் ஜே. ஆரைச் சந்தித்தபோது லலித்தும்கூட இருந்தார். ஜே. ஆர். கேட்டார் "நீங்கள் ஏன் லலித் மூலம் வரவில்லை. இவர்தானே இதற்குப் பொறுப்பான அமைச்சர்" என்று. அது ஒரு மிக இக்கட்டானநிலை. அந்தக் கட்டத்திலே அந்தக் கூட்டம் உடைந்து விடுமோ என்ற பயம் எங்களுக்கு ஏற்பட்டது. நான் அப்போது, "நீங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதி: மக்கள் தெரிவின் மூலம் வந்த ஜனாதிபதி; எனவே இந்த நாட்டின் வாக்காளர்கள் என்ற முறையில் எங்களுக்கு நேரடியாக உங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய உரிமை உண்டு என்ற அடிப்படையிலேதான் வந்துள்ளோம். அந்த உரிமை எங்களுக்கு இல்லையென்று தாங்கள் கருதுவதானால் எங்களால் எதுவும் செய்யமுடியாது" என்று சொன்னேன். அந்தக் கட்டத்திலே எனக்குச் சைவ சித்தாந்தத்திலே சொல்லப்படுகின்ற ஒரு கருத்து நினைவில் வந்தது. அதாவது பல்வேறு தெய்வங்கள் இருந்தாலும் பெருந் தெய்வமாகச் சிவபெருமான் இருக்கிறார் என்ற கருத்தினை மனதிலே வைத்துக் கொண்டு சொன்னேன். நிச்சயமாக என்னுடைய மார்க்ஸிய நண்பர்கள் இதனைத் தவறாக விளங்கப் போகிறார்கள்: பரவாயில்லை. இப்படி நான் கூறியபோது ஜே. ஆர். அதனை ஏற்றுக் கொண்டார். பல காரியங்களைச் செய்வதாகக் கூறினார். யாழ்ப்பாணத்தில் மக்கள்படுகின்ற கஷ்டங்களை கொழும்பிலே சென்று சொல்வதாகிய அந்தக் கருமம் ஒரு மிக முக்கியமான மைல் கல்லாக அமைந்தது. அந்தக் கட்டத்தில் எங்களுக்குப் பின்புலமாக நின்று ஆலோசனைகளைத் தந்தவர்களில்

நீதியரசர் மாணிக்கவாசகர் ஒருவர். எங்களுடைய பல்கலைக்கழக வேந்தராக அவர் இருந்தவர். இதனை அடுத்து இரண்டாவது கட்டமாக முக்கியத்துவம் பெறுவது, நான் கண்காணிப்புக் குழுவில் அங்கத்துவம் வகித்ததாகும். அது மிகவும் நெருடலான பிரச்சனை. அந்தக் கண்காணிப்புக்குழு, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பல இடங்களுக்கும் சென்று முறைப்பாடுகளைக் கேட்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் இந்தக் குழுவுக்கு உதவுவதற்கென அவர்கள் Attorney General Department இல் இருந்து ஒரு வழக்கறிஞரையும் அனுப்பியிருந்தார்கள். அவர் சிலவேளைகளில் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பார். நாங்கள் மக்களுடைய துன்பங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டிய நிலைமை இருக்கின்ற சூழலில் ஒரு விஷயம் தெரிந்த சட்டத்தரணி அதனைத் திசை திருப்புகின்ற நிலைமை ஏற்படுகின்றபோது அதற்கு முகம் கொடுப்பது எங்களுக்கு மிகவும் பெரும் பிரச்சனையாக இருந்தது. ஏன் அப்படியான சூழலில் எங்களுடைய கடைமைகள் மிகமிக நெருடலாக இருந்தன. இறுதியாக நாங்கள் அதிலிருந்து இராஜினாமாச் செய்வதென்று தீர்மானித்தோம். அதன்பிறகு அக்குழு இயங்கவில்லை. அந்த இராஜினாமாக் கடிதத்தில் நான் குறிப்பிட்டிருந்தேன். "இந்தக் கண்காணிப்புக்குழு இலங்கையர்களைக் கொண்ட ஒரு கண்காணிப்புக்குழு. இதன் பின்னர் இப்படியான இலங்கையர் மட்டத்திலே பார்த்துத் தீர்ப்பதற்கான ஒரு வாய்ப்புக்கிட்டுமோ தெரியவில்லை. நாங்கள் இதனைச் சரியாகச் செய்யவில்லை என்ற பயம் எனக்கு ஏற்படுகிறது. இதனால் இலங்கையிலுள்ள புத்திஜீவிகள் தங்களுடைய கடமையில் தவறுகிறார்களோ என்ற பயம் இருக்கிறது." அந்த அனுபவம் ஒரு மிகப் பெரிய அனுபவம். ஒன்று மக்கள்படுகின்ற கஷ்டங்களை நேரிலே பார்ப்பது. மகன் உயிரோடு இருக்கின்றான் என்று தாய் நம்பிக்கொண்டு இருப்பாள். ஆனால் எங்களுக்குத் தெரியும் அவன் உயிரோடு இல்லையென்று. ஆனால் அதேவேளையில் அதனை ஒரு சட்டமூலமான முறைப்பாடாகக் கொண்டு போனால், அதனை ஒரு வழக்குப்போல எடுத்து, மறுதலித்து அந்த முறைப்பாட்டைக் கொண்டு செல்கிறவரைக் கேலிக்கிடமாக்கி அவர் பொய் சொல்கிறார் என்ற நிலைமை ஏற்படுத்துகிற சூழல் ஒன்று இருந்தது. இதற்கு முகம் கொடுப்பது உண்மையில் மிகமிகக் கஷ்டமான சவாலாக இருந்தது. படுகிறகஷ்டம் ஒருபுறம் இருக்கும்போது அதனை நாங்கள் வேண்டுமென்று சிருஷ்டித்துக் கூறுகிறோம் என்று சொல்லும்போது அது பெரிய உளரீதியான தாக்கமாக இருக்கும். அரசு இயந்திரம் எவ்வாறு தொழிற்படுகிறது. அது எவ்வாறு தொழிற்படும் என்கிற நிலைமை எங்களுக்குத் தெரியவந்தது. அவற்றைப் பற்றி நாங்கள் மிக வன்மையாக எடுத்துக் கூறியிருக்கிறோம். அதாவது அந்தத் துன்பங்களை அந்தக் கஷ்டங்களைப் பார்த்ததன் பின்னர் அப்படியான கஷ்டங்கள் இலங்கையில் இல்லையென்றோ அல்லது

இலங்கை அரசு என்ற நிலையில் அந்த நிறுவனம் மக்களின் தொல்லைகளை எவ்வாறு பார்க்கின்றது என்ற விடயமோ மனதைப் பெரிதும் தாக்கிய விடயம். இது நிச்சயமாக என்னுடைய இலக்கியம், நான் மற்றவற்றைப் பார்க்கின்ற தன்மை போன்றவற்றிலே பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அந்தக் காலகட்டத்திலேதான் நாங்கள் சமூக விஞ்ஞானிகள் சங்கத்தைத் தொடங்கியிருந்தோம். சிங்கள நண்பர்கள் சாள்ஸ் அபயசேகர, நியூட்டன் குணசிங்க, குமாரி ஜயவர்த்தனா, லால் ஜயவர்த்தனா போன்றவர்கள் இந்த விடயத்துக்கு நாங்கள் எவ்வாறு முகம் கொடுக்க வேண்டும் என்று சொல்வார்கள். அவர்களுடைய உதவி எங்களுக்குப் பெரிதாக இருந்தது. இன்னுமொன்று கொழும்பில் வந்து பேசுவதன் காரணமாக யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பிரதேசங்களில் நடக்கும் விடயங்களை எடுத்துக் கூறுவதற்கு அந்தப் பிரதேசத்தைச் சார்ந்தவர்கள் என்கின்ற வகையில் இங்குள்ள வெளிநாட்டுத் தூதரங்களுடன் எங்களுக்குத் தொடர்புகள் ஏற்பட்டன. அதில் இந்தியத் தூதரகத் தொடர்பு மிக முக்கியமானது என்று நான் கருதுகிறேன். யாழ்ப்பாணத்தில் அப்போது நான்கு இளைஞர் இயக்கங்கள் இருந்தன. அவற்றோடு நாங்கள் யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு முன்னரும் சந்திப்போம். அதற்குப் பிறகும் கொழும்பு நிலைமைகளைக் கூறவும் சந்திப்போம். இவை பிரஜைகள் குழு மட்டத்திலே எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள். பிரஜைகள் குழுவில் வேலை செய்யும்போது நாட்டு நிலைப்பட்ட அனுபவம் ஒருபுறம் இருக்க நெருங்கியவர்களிடமிருந்து, உங்களுக்கு எந்தநேரம் அவர்களுடைய விருப்பு வெறுப்புக்களினால் பிரச்சனைகள் வரும் என்பதையும் காணவேண்டிய ஒரு ஆள்நிலைப்பட்ட அனுபவம் ஏற்பட்டது. அதனால் நான் இராஜினாமாச் செய்தேன்.

இதனால் ஒட்டுமொத்தமாக ஓர் அரசியல் பார்வைக்குள் நான் என்னையறியாமல் ஒருவனாகிவிட்டேன் என்று நம்புகிறேன். என்னுடைய நண்பர்கள் சிலர் அதுபற்றி மிகவும் சுவாரஸ்யமாகக் குறிப்பிடுவார்கள். சேனக பண்டாரநாயக்கா என்னை எப்போதும் ஒரு வரலாற்று ஆராய்ச்சியாளனாகத்தான் பார்ப்பார். அவர் ஒருமுறை, "வரலாற்று ஆராய்ச்சியாளர்களே வரலாற்றின் பக்கங்களில் வருவது பார்ப்பதற்குச் சந்தோஷமாக இருக்கிறது. கவனமாக இருங்கள்" எனக் குறிப்பிட்டு ஒரு கடிதம் எழுதியிருந்தார். பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் சோதிடத்தில் நம்பிக்கை கொண்டவர். அவர் ஒருமுறை சொன்னார், "சிவத்தம்பி கவனமாக இரு. நீ இந்தக்காலங்களில் நெருப்புக்குள் உலாவுவாய்" என்று. நான் அதற்குச் சொன்னேன். "நீங்கள் சொல்வது உண்மை. நான் நெருப்புக்குப் பக்கத்தால் தான் போய்வருகிறேன்" என்று. அவர் ஒரு தகப்பன் மாதிரி அவர் சொன்னது இப்போதும் ஞாபகத்தில் இருக்கிறது.

பொதுப்பணியிலே மிக முக்கியமாக நான் கருதுவது, இந்தியத் தூதரகத் தொடர்புகள் காரணமாக, இந்திய மட்டத்தில் பெரும் உத்தியோகத்தர்களைச் சந்தித்து எமது நிலைப்பாடுகளைச் சொல்லக்கூடியதாக இருந்தது. அந்த நிலையில் நாங்கள் பண்டாரி, வெங்கடேஸ்வரன் பார்த்தசாரதி போன்ற பெரிய உத்தியோகத்தர்களைச் சந்திக்கக் கூடியதாக இருந்தது. கொழும்பிலே அவர்களைச் சந்தித்துச் செல்வோம். இக்கட்டான நிலைமைகளில் இந்தியாவுக்குச் சென்றும் சொல்லியிருக்கிறோம். அதுவும் ஒரு முக்கியமான அனுபவம். இலக்கியம் சார்ந்த ஒரு விடயத்தைச் சொல்லவேண்டும். பார்த்தசாரதியிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவர் சொன்னார், "நீங்கள் இப்படிச் செய்வது சரியல்ல. சிங்களமக்கள் கொலை செய்யப்படுவது சரியல்ல"' என்று. அப்போது நான் கூறினேன், வல்வெட்டித்துறையில் எழுபத்திரண்டு பேர் கொலை செய்யப்பட்ட பின்பே இவை நடந்தன. இப்படியான கொலைகள் நடப்பதைத் தமிழ் மக்கள் விரும்புவதில்லை. அதற்கு உதாரணமாக அண்மையில் ஓர் இளைஞன் ஒரு கவிதை எழுதியிருக்கிறார். **"இந்தக் கைகளை எந்தக் கங்கையில் கழுவ"** என்றொரு வரி அதில் வருகிறது. இளவாலை விஜேந்திரன் என்பவர் அதை எழுதியிருக்கிறார் என்று கூறினேன். உடனே பார்த்தசாரதி தமது மலையாள நண்பர் தாமோதரனை அழைத்து, நான் கூறுவதைக் கேட்கும்படி சொன்னார். எனக்கு அப்போதுதான் தெரியும் பார்த்தசாரதி ஒரு பாரதி பக்தன் என்பது. இந்த அனுபவங்களும் கிடைத்தன.

இந்தக் காலகட்டத்தில் அமெரிக்க தூதராலயங்கள் சேர்ந்து தென்கிழக்கு ஆசிய இலக்கியங்கள் பற்றிப் பேசுவதற்குக் கராச்சியிலே ஒரு கூட்டம் கூட்டியிருந்தார்கள். அதிலே இலங்கைத் தமிழ் இலக்கியம் பற்றி நான் பேசினேன். கராச்சியிலுள்ள பாகிஸ்தானியர்கள் இலங்கைத் தமிழர் போராட்டம் பற்றி அதிகம் தெரியாதவர்கள். ஆனால் தமிழர் களுடைய நிலைப்பாடு பற்றி - இந்தியப் பொது அமைப்பினுள் தமிழர்கள் தனித்துவத்தைக் கோருகின்றவர்கள் என்பது அங்கு தெரியும். இவைபற்றி அவர்கள் கேட்டார்கள். இவைகள் எல்லாம் இலக்கியத்தையும் பாதிப்பவைதான். இலக்கியப் பார்வை ஆழப்படுத்துவதற்குரிய விஷயங்கள்தான். ஆனால் இவற்றின் மூலம் மனித அனுபவத்தைப் பெறக்கூடியதாக இருந்தது. நாங்கள் எவற்றைப் பேசவேண்டும். எப்படிப் பேசவேண்டும்? நாங்கள் சொல்லவேண்டியவற்றை அவர்களுக்கு உடனே சொல்லவும் வேண்டும். அவர்கள் கேட்கக்கூடிய முறையிலே சொல்லவும் வேண்டும். பின்போடாமல் சொல்லவும் வேண்டும். எல்லாவற்றிலும் முக்கியம், மூன்று நான்கு பேர் சென்றால் ஒருவரே எல்லாவற்றையும் பேசாமல் ஒவ்வொருவரும் தனித்தனியாக ஒவ்வொரு விடயத்தைக்

கூறவேண்டும். ஒருவர் இணைப்பாளராக இயங்கலாம். அந்தமாதிரியான ஒரு நடைமுறையைக்கூட நாங்கள் பயிலக்கூடியதாக இருந்தது. இன்னுமொன்று எந்தக் கடிதத்தையும் எழுதும்போதும் நீண்ட கடிதமாக எழுதாமல் ஒரு பக்கத்தில் எழுதிவிட்டு ஏனையவற்றைப் பின்னிணைப்பாகப் போட்டு, இந்தப் பின்னிணைப்பில் இந்த விடயங்களைக் கூறியிருக்கிறோம் என்று குறிப்பிட வேண்டும். இப்படிச் செய்வது ஒரு முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

இவற்றைவிட, மனித இன்னல்களைக் கண்டதும் அவற்றால் ஏற்பட்ட துன்பங்களும் சொல்லிமாளாது. தங்களுடைய பிள்ளை இறக்கவில்லை என்று சொல்வார்கள். ஆமிக்காரர் தாங்கள் ஒன்றும் செய்யவில்லை என்பார்கள். ஆனால் எங்களுக்குத் தெரியும் ஆமிக்காரர்கள் இதனைச் செய்திருப்பார்கள் என்பது. இப்படியான சம்பவங்கள் ஒன்று இரண்டல்ல. ஒருமுறை பிரஜைகள் குழுவுக்கு யார் யாரைப் பிடித்து வைத்திருக் கிறார்கள் என்ற பெயர்களைக் கூறுவதாகச் சொன்னார்கள். பின்னர், தளபதியாக இருந்தவர் கூறினார். “நாங்கள் கூறப் போகும் பெயர்களை நீங்கள் இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும். வெளிவிடக்கூடாது” என்றார். அப்போது நான் எழுந்து கூறினேன் “ ஒரு ஏழைத்தாய் என்னுடைய மகனின் பெயர் அதிலே இருந்ததா என்று கேட்டால் நான் அதற்குப் பொய் சொல்லமுடியாது. ஆனபடியால் நான் வெளியே போகிறேன். நீங்கள் சொல்லுங்கள்” என்றேன். அதன் பிறகு அந்தத் தளபதி அந்தப் பெயர்களை வாசிக்கவே இல்லை. இப்படிப் பல மனித நிலைகள் - மனிதப் பிரச்சனைகள் ஏற்பட்டன. அந்த Tension மிகத் தாக்கமானது.

86 இல் நான் அந்தக் குழுவிலிருந்து இராஜினாமாச் செய்த பின்னர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் இயங்கிக் கொண்டிருந்தது. அதில் நானும் இடம்பெற வேண்டுமென்று அப்போது அதன் தலைவராக இருந்த விஸ்வலிங்கம் என்னைக் கேட்டுக் கொண்டார். பார்ப்போம் என்று கூறிவைத்தேன். ஆனால் திடீரென்று விஸ்வலிங்கம் ஐயா காலமாகி விட்டார். அந்தத் தலைவர் பதவியை நான் ஏற்கவேண்டும் என்று பலரும் கேட்டுக் கொண்டார்கள். நான் சம்மதித்து ஏற்றுக் கொண்டேன். அந்த நிறுவனத்தில் இருவர் மிக முக்கியமான இடத்தை வகித்தார்கள். ஒருவர் கந்தசாமி. மற்றவர் ஜேம்ஸ் பத்திநாதர் என்கின்ற கத்தோலிக்க அடிகளார். வடகிழக்கினுடைய மிகப் பிரதானமான, அரச சார்பற்ற நிதி வழங்கும் ஸ்தாபனமாக அது விளங்கியது. அதிலே இருந்தபோது, பலரது துன்பங்களை நேரிலே காணக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. விதவைகள், குழந்தைகள், மனைவியை இழந்தவர்கள் ஆகியோரின் கஷ்டங்களை அறியக்கூடியதாக இருந்தது. நாங்கள் நொறாட், சீடா

போன்ற நிறுவனங்கள் மூலம் பணத்தைக் கொழும்பில் இருந்து பெறுவோம். சமாதான ஒப்பந்தம் வந்தவுடன் இங்குவந்த கந்தசாமி திடீரெனக் காணாமற் போய்விட்டார். அது பெரிய பிரச்சனையாகி விட்டது. அந்தக் காலகட்டத்தில் நான் எதிர்நோக்கிய மிகப்பெரிய சவாலாக அது அமைந்தது. அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்துக்கும் கந்தசாமியின் மறைவுக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று அப்போது பலர் பேசிக்கொண்டார்கள். இன்றும் பலர் அந்த நம்பிக்கையில் இருக்கிறார்கள். அதிர்ஷ்டவசமாக தினமுரசு பத்திரிகையில் ரமேஷ் எழுதிய கட்டுரைகள் மூலம் அது சம்பந்தமான நிலைமை இரண்டு வருடத்துக்குப் பின்பே தெரியவந்தது. ஜூன் மாதத்தில் அவர் காணாமல் போனார். செப்டெம்பர் மாதத்தில் நானும் கணபதிப்பிள்ளையும் கொழும்புக்குச் சென்றபோது அரசு சார்பற்ற நிறுவனங்களின் கூட்டமொன்றில் ஏறத்தாழ, எங்களைக் குறுக்குவிசாரணை செய்தார்கள். இந்தியன் ஆமிக்காரர்கள் கூட கந்தசாமி எப்படி இறந்தார் என்று எங்களை விசாரணை செய்தார்கள். அவர்கள் தெளிவான பதிலைப் பெறும்வரை எங்களை விடவில்லை. இவையெல்லாம் எனது தனிப்பட்ட ஆளுமைமீது பல தாக்கங்களை ஏற்படுத்தின என்று சொல்லவேண்டும்.

அப்போது கொழும்புக்கு வந்து திரும்புவது மிகவும் கஷ்டமான பயணமாக இருக்கும். மாதத்தில் ஒரு தடவை கிளாலிக்குள்ளால் கஷ்டப்பட்டு வரவேண்டியிருந்தது. திரும்பி வருவதும் போவதும் சோதனைச் சாவடிகளுக்குள் வருவதும் கஷ்டமான பிரயாணமாக இருந்தது. யாழ்ப்பாணத்திலுள்ள கஷ்டங்களை இங்கு வந்து சொல்கிறபோது நாங்கள் அங்கு நடப்பவற்றையெல்லாம் நியாயப்படுத்துவதாக ஒரு குரல் படிப்படியாக எழுந்தது. யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் செய்யும் விஷயங்களை நாங்கள் வெளியால் சொல்வதில்லை என்ற குற்றச்சாட்டுகள் வரத்தொடங்கின. நாங்கள் விளங்கப்படுத்தினாலும் அவர்கள் நம்பவில்லை. குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு வரும்போது அரச சார்பற்ற நிறுவனங்கள் எடுக்கின்ற நிலைப்பாட்டிற்கும் அவை கொழும்புக்கு வந்தால் எடுக்கும் நிலைப்பாட்டிற்கும் பெருத்த வேறுபாடு இருக்கும். நாங்கள் கொழும்புக்கு வந்தால் ஒரு குற்றவாளிக் கூண்டில் நிற்பதுபோன்று இருக்கும். சில நிறுவனங்கள் இதற்கு விதிவிலக்காக இருந்தன. நொறாட், சீடா போன்ற நிறுவனங்கள் அப்படிச் செய்யவில்லை. படிப்படியான ஒரு எதிர்க்குரல் எங்களுக்கு எதிராக ஏற்பட்டு ஒரு முக்கியமான கட்டத்தை எய்தியது. 95 ஆம் ஆண்டு நான் யாழ்ப்பாணத்து அரச சார்பற்ற நிறுவனங்களில் பிரதிநிதியாகக் கொழும்பு வந்து இங்குள்ள அரசசார்பற்ற நிறுவனங்களில் மன்றத்தில் மக்களின் கஷ்டங்களைக் கூறவேண்டும் என்று சொல்லியபோது, என்னைப் பேச இடங்கொடுக்கக் கூடாது என்று தடுத்தார்கள். நான் ஒளிவு மறைவாகத் தீவிரவாத இளைஞர்களுக்காகப் பேசுகிறேன்

என்றார்கள். இப்படியாக வாக்குவாதப்பட்டபோது அங்கிருந்த ஒரு பொலிஸ்காரர் வந்து இங்கு நீங்கள் இருப்பது பிழை. நீங்கள் போய்விடுங்கள் என்றார். அன்று என்னை அடித்திருப்பார்கள். நல்ல காலமாக ஒரு "ஓட்டோ" வந்தது அதில் நான் ஏறி வந்துவிட்டேன்.

நாங்கள் தமிழ் மக்களுடைய எல்லாவிடயங்களையும் சொல்வதில்லை என்ற எதிர்ப்புக்குரல் ஒன்று வந்தது. அதனால் சிங்கள நண்பர்களிடையே எனக்கிருந்த இடம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இவையெல்லாம் தனிப்பட்ட ஆளுமைகளைப் பலமாகப் பாதிக்கிற விடயங்கள். இவை ஏதோ ஒரு வகையில் என்னைத் தாக்குகின்றன. நான் நானாக இருக்கிற தன்மை காரணமாக நான் வகிக்கின்ற பதவி நிலையும்கூட அதனால் பாதிக்கப்படுகிறது. பல நண்பர்கள் எனக்கு எதிராகச் சொல்கிற குற்றச்சாட்டு, சிவத்தம்பி அங்கே ஒன்றைச் சொல்வார் இங்கேயொன்றைச் சொல்வார் என்பது. சிவத்தம்பி எந்த எந்த இடத்திற்கு எது எது தேவையோ அதைத்தான் சொல்வாரே தவிர மனைவியிடம் பேசுவதை மகளிடம் சொல்லமாட்டார். மகளிடம் பேசவேண்டியதை மாணவரிடம் சொல்லமாட்டார். மாணவரிடம் சொல்வதைத் துணைவேந்தரிடம் சொல்ல மாட்டார். அந்த அந்த இடத்திலேதான் அதையதைச் சொல்ல வேண்டும். ஆனால் எந்த இடத்திலும் பொய் சொல்லக்கூடாது. இது ஒரு அடிப்படையான விஷயம் நான் எனது நண்பர்களிடம் சொல்லியிருக்கிறேன் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் காரணமாக இனி எனக்கு 'ஆச்சரியம்' என்ற ஒரு சொல்லுக்கு இடமில்லை என்று. குறிப்பாகக் கந்தசாமி பற்றிய குற்றச்சாட்டு வந்தபோது, நான் அதிலிருந்து விடுபட்டபொழுது நான் எனது நண்பர்களுக்குச் சொன்னேன், "ஒரு மனிதனுக்கு எதிராக எதுவும் சொல்லப்படலாம், எதுவும் செய்யப்படலாம் ஆச்சரியம் இல்லை" என்று.

❑ ❑ ❑

# 16

***தி.ஞா. : இலக்கியகாரன் என்ற நிலையில் பொது வாழ்க்கையில் நீங்கள் செய்த பங்களிப்பு எந்த வகையில் உங்களைப் பாதித்தது என்று கூறுங்கள்?***

**கா.சி. :** எனக்கு ஏற்கனவே நாடகத்துறையில், இலக்கியத்துறையில் இருந்த ஆர்வம், விமர்சனத்துறையில் இருந்த ஈடுபாடு ஆகியன இவற்றால் மேலும் ஆழப்படுகின்றன. நான் ஒவ்வொரு மனிதனையும் ஒவ்வொரு பாத்திரமாகப் பார்க்கின்றேன். அல்லது பாத்திரங்கள் ஒவ்வொன்றையும் அவரவர்க்குரிய மனித நிலையில் நின்று பார்க்கிறேன். ‘அவன் இங்கே ஒன்று சொல்கிறான், அங்கே ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறது. அவனைப் பொறுத்தவரையில் அது சரிபோல இருக்கிறது. ஏன் அவன் அப்படிப் பார்க்கிறான்? இப்படி அவன் சொல்கிறபோது, அவன் எனக்கு எதிராகச் சொல்கிறானே என்பதற்காக அவனுடைய திறமையை இல்லை என்று சொல்லக்கூடாது: ஏசக் கூடாது. அவன் தன்னுடைய திறமையினால் உண்மையை மாற்றுகிறான். அவனுடைய திறமைக்கு நான் முகம் கொடுக்க வேண்டியவனாகின்றேன். இந்த மாதிரியான ஆழமான முறையிலே நடவடிக்கைகளைப் பார்க்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. எல்லாமே வெறும் புத்தகங்கள் அல்ல, படைப்புக்கள் அல்ல. அவற்றிற்குப் பின்னால் மனிதன் இருக்கிறான். அவனுடைய சமூக அனுபவம் இருக்கிறது. அந்தச் சமூக அனுபவம் எப்படி ஏற்படுகிறது என்று பார்க்கவேண்டும். எல்லாவற்றிற்கும் வாய்ப்பாடுகளை வைத்துக்கொண்டு பார்க்க இயலாது. உண்மையில் பொது விதிகளைத்தான் வைத்துக்கொண்டு அது எப்படி இங்கே வேலை செய்கிறது, அங்கே வேலை செய்யவில்லை என்று பார்க்க வேண்டுமே தவிர, வாய்ப்பாடுகளை வைத்துக்கொண்டு

பார்க்கக்கூடாது. இது எனக்கு மாத்திரமல்ல. இந்தத் துறையிலே ஈடுபட்ட பலருக்கும் ஏற்பட்டிருக்கிறது. மார்க்ஸிய எழுத்தாளர்கள் பலருக்கும் ஏற்பட்டிருக்கின்றது.

பண்பாட்டின் முக்கியத்துவத்தையும் நான் இந்தக் காலகட்டத்திலே கூறவேண்டும். Cultural studies என்ற துறை வளர்ந்து கொண்டு வந்திருக்கிறது. ஆனால் எங்களுடைய பண்பாட்டில் இந்தத் துன்பங்கள் எல்லாம் உள்வாங்கப்படுகிறது. நாங்கள் எவ்வாறு அதனைப் பார்க்கிறோம் என்கிற விஷயம் மிக முக்கியமானது. நான் என்னுடைய பண்பாட்டை அனுதாபத்துடன் பார்க்க முடியவில்லை என்றால், நான் மனிதர்களுடைய சஞ்சலங்களைப் புரிந்து கொள்வதனால் என்னுடைய பண்பாட்டினுடைய உந்துதல்களைப் பற்றிய ஒரு தெளிவு எனக்கு வேண்டும். அவர்களுடைய அடிப்படை வாழ்க்கை பற்றிய தெளிவு எனக்கு வேண்டும்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் நான் வேலை செய்தபோது ஒரு தடவை ஐம்பதினாயிரம் ரூபாயைத் தொலைத்து விட்டேன். அந்தத் தாக்கத்திலிருந்து நான் விடுபட முடியவில்லை. அங்கு என்னை அதிகமாக விமர்சிக்கின்றவர்தான் சொன்னார், “பேராசிரியரை நீங்கள் இந்த இக்கட்டிலிருந்து நீக்கவேண்டும்” என்று. இதிலிருந்து தான் மனிதர் யார் என்று தெரியவருகிறது. இதெல்லாம் மறக்க முடியாத உதாரணங்கள். அதே வேளையில் பிறிகேடியர் காலோன் சொன்னார் “நீங்கள் இந்த நிறுவனத்தின் காரை உங்களது பாவனைக்கு வைத்துக் கொள்வதற் காகத்தான் கந்தசாமியை இல்லாமற் செய்து விட்டீர்கள்” என்று. நான் ஏங்கிப் போனேன். நான் நம்புகிறேன் அவர் என்னைச் சீண்டுவதற்காகச் சொல்லியிருப்பார். இப்படிப் பல அனுபவங்கள். சில நண்பர் சொன்னார்கள் உனது வாழ்க்கையை இதற்குள் வீணடிக்கிறாய் என்று. இப்படி நடக்கும்போது நான் சிங்கப்பூருக்குச் சென்றிருந்தேன். அங்கு சென்று ‘காலச்சுவடு’ சஞ்சிகையைப் பார்த்தபோது தமிழகத்திலே இருந்த வளர்ச்சிகள் எல்லாம் தெரிந்தன. நான் 84 முதல் 90 வரை அந்தத் தொடர்புகளே இல்லாமல் இருந்து விட்டேன் என்பது அப்போதுதான் தெரியவந்தது.

பொது வாழ்க்கையில் நான் பெற்ற அனுபவங்களில் முக்கியமானவை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திலே வேலை செய்தபோது ஏற்பட்டவை. 95 இல் தேசிய கல்வி நிறுவகத்தில் ஒன்பது மாதங்கள் ஓர் ஆலோசகராக நான் நியமிக்கப்பட்டேன். பி.பி.சி. யில் சிங்கள சேவையில் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது என்று கேட்டார்கள். நான் நடப்பவற்றைக் கூறினேன். அப்போது அவர்கள்

இதற்கு என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள். நான் சொன்னேன் "மே யுத்தே நவத்தண்டோன" இந்த யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்று சொன்னேன். இது ஒரு வெள்ளிக்கிழமை சொல்லப்பட்டது. திங்கள் காலை நான் தேசிய கல்வி நிறுவகத்துக்குச் சென்றேன். அன்றுதான் பல்கலைக்கழக உபவேந்தர் துரைராஜா நீர்வேலியில் ஓர் கட்டிடம் அமைத்தது கண்டு பிடிக்கப்பட்டது என்று லங்காதீப பத்திரிகையிலே செய்தி வெளிவந்திருந்தது. அங்கு சென்ற சிறிது நேரத்தில் ஒரு செய்தியை டொக்டர் உடகம நண்பர் சோமசுந்தரத்துக்குச் சொன்னார். "அங்குள்ள தொழிற்சங்கத்தலைவர்கள் சொல்கிறார்கள், இங்கும் ஒரு யாழ்ப்பாணத்துப் பேராசிரியர் வருகிறார். அவர் சென்ற வெள்ளிக்கிழமை இந்த யுத்தத்தை நிறுத்தவேண்டும் என்று சொன்னவர். அப்படியானவர் இங்கு வருவது எங்களுக்கு விருப்பமில்லை இந்தக் கட்டிடங்களுக்கும் ஆபத்து" என்று. இப்படிச் சொன்னவுடன் நான் டொக்டரிடம் சென்று, எனக்கு நடக்க முடியாது நான் போவதற்கு ஒரு வாகனம் ஒழுங்குசெய்து தாருங்கள் என்று கேட்டேன். அரைமணிநேரம் கழித்து ஒரு வான் வந்தது. வான்சாரதி ஒரு வயரைப் பிடுங்கிவிட்டு ஒரு முக்கியமான இடத்தில் நின்று வானை ஸ்ராட் செய்வது போலப் பாசாங்கு செய்தான். அதனை நான் கவனித்துவிட்டு அந்தவயர் கழன்று இருக்கிறது என்று கூறினேன். அவன் உடனே இறங்கிப் பக்கத்தில் இருந்த கடைக்குள் சென்றான். அந்தக் கடைக்குள் இருந்தவர்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது நல்லகாலம் ஒரு 'ஓட்டோ' வந்தது. நான் உடனே அதில் ஏறி, நுகேகொடைக்கு வந்து, பயத்தில் வேறு ஒரு ஓட்டோவுக்கு மாறி வீடு வந்து சேர்ந்தேன். அதன்பிறகு நான் ஒருமாதம் தேசிய கல்வி நிறுவனத்துக்குப் போகவேயில்லை. இந்த அனுபவம் என்னைத் தாக்கிய மிகப் பெரிய அனுபவங்களில் ஒன்று. அதிலிருந்து விடுபடுவது எனக்குக் கஷ்டமாக இருந்தது. அந்தக் கணம் எனக்கு, நான் 82 இலிருந்து ஈடுபட்டு வந்த வேலைகளினுடைய முத்தாய்ப்புக் கணம்போல இருந்தது. அன்றிலிருந்து நான், இந்த நாட்டிலிருக்கும் தமிழர்களுக்கு குழும அடிப்படையில் அவர்களது உரிமைகள் அரசியல் ரீதியாக ஊர்ஜிதப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறு சிங்கள மக்களுடைய குழும உரிமைகள் மொழிமூலம் அவர்களது மதத்திற்குக் கொடுக்கப்பட்ட இடங்கள் மூலமும் ஆட்சி யாப்பில் இடம் பெற்றுள்ளதோ அதேபோல, ஆட்சி யாப்பில் தமிழர் களுடைய முஸ்லீம்களுடைய குழும உரிமைகள் ஊர்ஜிதப்படுத்தப்பட வேண்டும் என்பதை உணர்ந்தேன். இப்படி நான் கூறுவது எந்த வகையிலும் மார்க்ஸிஸத்துக்கு எதிரான அல்ல. இது ஒரு பண்பாட்டு அடையாளப் பிரச்சனை. பொது வாழ்க்கை என்பது சாதாரண பல்கலைக்கழகப் பேராசிரியருக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு அல்ல. எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்புக்கள் என்னுடைய ஆளுமை

வளர்ச்சிக்கு திசைமுகத்திற்கு நிட்சயமாக உதவியுள்ளன. அதன் பிறகு நான் சற்று ஒதுங்கி எனது பல்கலைக்கழக விஷயங்களில் படிப்படியாக ஈடுபாடு கொண்டு வேலை செய்யத் தொடங்கினேன்.

இவற்றின் மூலம் நான் ஒன்றைக் கற்றுக் கொண்டேன். எந்த அளவுக்கு நாங்கள் கொடுக்கப்போகிறோமோ அந்த அளவுக்குத்தான் நாங்கள் பெறுகிறோம். எனக்கு வாழ்கையில் கிடைப்பது நான் வாழ்க்கையில் கொடுப்பதற்குச் சமமானது. அதற்குள் ஒரு விகிதாசாரம் இருக்கிறது என்று நான் நம்புகிறேன். எந்த அளவுக்கு நான் மனம் வைத்துக் கொடுக்கிறேனோ அந்த அளவுக்குத்தான் எனக்குக் கிடைக்கும், இது என்னுடைய வாழ்க்கையினூடாக நான் படித்த உண்மையாகும். இப்படிப்பார்க்கும்போது எல்லாம் சேர்ந்துதான் மனிதன் உருவாகிறான். ஏதோ ஒரு வகையில் எல்லாரும் எங்களைப் பாதிக்கிறார்கள். மார்க்ஸ் சொல்வார், மனிதனுடைய பிரக்ஞை என்பது அவனுடைய சமூக இருப்பினால் தீர்மானிக்கப்படுகிறது' என்று ஒட்டுமொத்தமாக எல்லாம் சேர்ந்துதான் நான். வாழ்க்கை என்பது இயங்கசைவு கொண்டது. அந்த இயங்கசைவினூடாக ஒரு விதி ஒன்று தொழிற்படும். சடப்பொருளாக இருப்பதுகூட சக்தியாக மாறும். அது ஒரு முக்கியமான தளம்.

வாழ்க்கையில் நான் பெற்ற அனுபவங்கள் எல்லாவற்றையும் பார்க்கும் பொழுது, இவையெல்லாம் ஏற்படுத்திய ஒட்டுமொத்தமான தாக்கம்தான் நான். ஏன் நான் மாறினேன் அல்லது ஏன் நான் மாறவில்லை என்றால் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள்தான் இதற்குக் காரணம். சில நண்பர்கள் கடுமையாக விமர்சிப்பார்கள். சில நண்பர்கள் நான் முன்பு இருந்த நிலையிலிருந்து விடுபட்டதற்காகச் சிலாகித்துச் சொல்பவர்களும் இருப்பார்கள். நான் சொல்வது என்னவென்றால் மனிதனைப் புரிந்து கொள்ளப் பாருங்கள். அது இலக்கியக்காரனுக்கு, கலைஞனுக்கு அடிப்படையான தேவை. நான் மீண்டும் சொல்லுகிறேன், படைப்பாளியாகச் சொல்லுகிறேன், ஒரு சமூகப்பொது மனிதனாகச் சொல்லுகிறேன். நாங்கள் சமூகத்துக்கு எவ்வளவைக் கொடுக்கிறோமோ' அவ்வளவைத்தான் நாங்கள் பெற்றுக் கொள்ளமுடியும்.

*(நிறைவு பெறுகிறது)*

❑ ❑ ❑